# *Volume - 8*

# தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து

**(The Feast of the true sayings of God)**

**இயேசுவோடே கூடப் பந்தியிருந்தவர்களில் ஒருவன் இவைகளைக் கேட்ட பொழுது, அவரை நோக்கி: தேவனுடைய ராஜ்யத்தில் போஜனம் பண்ணுகிறவன் பாக்கியவான் என்றான்.** Luk_14:15,

THE SCRIPTURE FEAST MINISTRIES

**REV: PAUL BENJAMIN**
FOUNDER AND AUTHOR

**REGD OFFICE:**
NO:104, EXTN 7 , MAHA LAKSHMI NAGAR, NANDIVARAM,
GUDUVANCHERY, KANCHIPURAM DIST CHENNAI 603 202 .
TAMIL NADU, SOUTH INDIA .

Mobile : + 91 94456 35860

Email : info@scripturefeast.net, www: scripturefeast.net

**FOREWORD**

**PASTOR : A. THOMAS RAJ**

PRESIDENT, APOSTOLIC CHRISTIAN ASSEMBLY

# தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து
## (The Feast of the true sayings of God)

1. பரிசுத்த வேதாகமத்தின் அடிப்படையிலானவைகள்
2. பல ஆங்கில பதிப்பு வேதாகமத்துடன் ஒப்பிடக்கூடியவைகள்
3. தேவ நாமத்துடன் பல தேவ தரிசனங்கள் ஒருங்கிணைக்கப் பட்டவைகள்.
4. பெரிய மதங்களையும் அதன் உட்பிரிவுகளையும் உள்ளடக் கியவைகள்.
5. வேதத்தின் அடிப்படை உபதேசங்களை அஸ்திபாரமாகக் கொண்டவைகள்
6. மெய்யான தேவ ஞானத்தை எளிமையாக கற்றுக் கொள்ளும் வழி முறைகள்.
7. தேவனால் முன் குறிக்கப்பட்டவர்களுக்கு ஜெயங்கொள்ளு வதற்காக தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து.
8. வேதாகம மையக்கருத்துக்கள் அதன் இணையான தேவ வார்த்தைகளுடன் இரண்டறக் கலப்பவைகள்.




@ One among the 1000 generation
The Bride in 1000 years kingdom

# பொருளடக்கம்

## தலைப்பு எட்டு

## தேவனுடைய வெளிப்பாடுகளின் நீதியின் உபதேசங்கள்


* மதிப்புரை / Foreword

* முன்னுரை

* ஆசிரியர் உரை

**அத்தியாயம் ஒன்று**

1-1 மனசாட்சியினால் நியாயப்பிரமாணம்

1-2 விசுவாசத்தினால் தேவனுடைய நீதியின் பிரமாணம்

1-3 விசுவாசத்தினால் நீதியின் பிரமாணத்தை அடைய முடியாதவர்கள், சீயோனிலிருக்கிற மூலைக்கல்லில் இடறிவிழுகிறார்கள்.

**அத்தியாயம் இரண்டு**

2-1 தேவனுடைய வீட்டிலே நடைபெறும் முதலாம் நியாயத் தீர்ப்பை நிறைவேற்றுவதற்காக 1,44,000 ஆண்பிள்ளைகள் தங்களுடைய நெற்றியிலே தேவனுடைய ஏழு முத்திரை அடையளங்களை பெற்றுக் கொள்ளுதல்.

2-2 தேவனுடைய ஏழு முத்திரைகளுக்கு விரோதமாக எழும்பும் துன்மார்கன், தங்கள் நெற்றியிலும் வலது கையிலும் மிருகத்தின் முத்திரை அடையாளங்களை பெற்றுக்கொண்டு தேவனுடைய வீட்டிலே நடைபெறும் நியாயத்தீர்ப்பில் பங்கடையும் வழிமுறைகள்.

## அத்தியாயம் மூன்று

3-0 ஸ்திரியாகிய சபையிலிருந்து 1.44.000 ஆண்பிள்ளைகள் தேவ முத்திரையின் ஏழு அடையாளங்களை பெற்றுகொள்ளுவதால் வெளிப்படுதல் / ஆண்பிள்ளைகளின் பிறப்பு.

## அத்தியாயம் நான்கு

4-1 ஆண்பிள்ளைகள் கற்றுகொண்ட சீயோனின் புதிய பாடல்கள்

4-2 ஆண்பிள்ளைகள் கற்றுகொண்ட சீயோனின் முதலாவது புதிய பாட்டு

4-3 ஆண்பிள்ளைகள் கற்றுகொண்ட சீயோனின் இரண்டாவது புதிய பாட்டு

4-4 ஆண்பிள்ளைகள் கற்றுகொண்ட சீயோனின் மூன்றாவது புதிய பாட்டு / ஆட்டுக்குட்டி யானவரின் பாட்டு

## அத்தியாயம் ஐந்து

5-1 மகா பாபிலோன் மாநகர வேசியினுடைய புலம்பலின் பாடல்கள்

5-2 தேவமுத்திரைகளுக்கு விரோதமாக எழும்பும் துன்மார்கனுக்கு வரும் உடன்படிக்கையின் சாபங்கள் - ஒன்று

5-3 தேவமுத்திரைகளுக்கு விரோதமாக எழும்பும் துன்மார்கனுக்கு வரும் உடன்படிக்கையின் சாபங்கள் - இரண்டு

5-4 தேவமுத்திரைகளுக்கு விரோதமாக எழும்பும் துன்மார்கனுக்கு வரும் உடன்படிக்கையின் சாபங்கள் - மூன்று

## அத்தியாயம் ஆறு

6-1 இரண்டு சாட்சிகளின் ஊழிய அழைப்பு

6-2 இரண்டு சாட்சிகளின் ஊழிய அழைப்பை தேவனால் முன் குறிக்கப்பட்ட 1,44,000 ஆண்பிள்ளைகள் கைப்பற்றும் வழிமுறைகள்.

6-3 இரண்டு சாட்சிகளின் ஊழிய அழைப்பை பெற்றுக்கொண்ட வர்கள் ஆசரிக்கிற மூன்று பிரதான பண்டிகைகள்

6-4 ஊழிய அழைப்பை பெற்றுக் கொண்டவர்களின் குணாதிசயங் களை குத்து விளக்கின் குணாதியங்களோடு ஒப்பிட்டு அறிந்து கொள்ளுதல்

6-5 ஊழிய அழைப்பை பெற்றுக் கொண்டவர்களின் குணாதி சயங்களை முன்மாரி, பின்மாரி மழையின் குணாதிசயங்களோடு ஒப்பிட்டு அறிந்து கொள்ளுதல்.

6-6 ஊழிய அழைப்பை பெற்றுக் கொண்டவர்கள் தெளிவாக பேசு வதற்கு தடையாக வருகிற சில விசேஷமான காரணங்கள்.

## அத்தியாயம் ஏழு

7-0 இரண்டு சாட்சிகளின் ஊழிய அழைப்பின் மூலம் 1.44.000 ஆண்பிள்ளைகள், ஜனங்களை கர்த்தருக்கு ஆராதனை செய்ய ஆயத்தப்படுத்தும் ஊழியத்தை நிறைவேற்றுதல்

## அத்தியாயம் எட்டு

8-0 இரண்டு சாட்சிகளின் ஊழிய அழைப்பின் மூலம் 1.44.000 ஆண்பிள்ளைகள், ஜனங்களை கர்த்தருடைய இரண்டாம் வருகைக்கு வழியை ஆயத்தம் பண்ணும் ஊழியத்தை நிறை வேற்றுதல்

முடிவுரை

# மதிப்புரை / Foreword

*JESUS NEVER FAILS*
*"TO MAKE READY A PEOPLE PREPARED FOR THE LORD"*

## APOSTOLIC CHRISTIAN ASSEMBLY

'Speak evil no man (Titus 3:2)' (Regd.No. 80 of 1957) 'Follow peace with all men (Heb. 12.14)'

**Founder : Pastor G. SUNDRAM** **Chief Pastor : M.K.SAM SUNDARAM**

**Pastor . A. THOMASRAJ** President
**G.SUKUMAR SAMUEL** Hon.secretary
**K.R. SELWIN** Treasurer

*The grass withers, the flower fades,*
*But the word of our God stands forever. " Isa. 40:8*

The Word of God is blameless, faultless, without defect, deserving no censure. And the Word of God has to be Preached to all People. All over the Earth with conviction and clarity for the edification of the hearers.

Careful study and meditation of the Scriptures when undertaken with the grace of God depending on the Holy Spirit's guidance will bring hidden truths to light.

The work and efforts of Bro. Paul Benjamin in this regard is commendable. I appreciate his passionate toil in the Lord's Kingdom. My prayers are that his teaching and writing will profit and prepare many for the coming of our Lord and savior Jesus Christ. Amen.

Pastor A. Thomasraj
President
Apostolic Christian Assembly

No. 26. Shanmugarayan Street, Purasawalkam, Chennai – 600 007. ☎ : 26622775/ 26635583
Email :- info@acapryaerhouse.org, Web site : www. acaprayerhouse.org

# முன்னுரை

மனிதன் மாம்ச சரீரத்தில் வாழ்வதற்கு அவனுக்கு காற்று, தண்ணீர், போஜனம், வஸ்திரம், குடியிருப்பு எப்படி ஒவ்வொருவருக்கும் அடிப்படை முக்கியமான தேவைகளோ; அது போலவே ஆவிக்குரிய மனிதன் வாழ்வதற்கு இந்த ஐந்து அடிப்படை தேவைகள் ஆவிக்குரிய நிலையில் தேவனுடைய வார்த்தைகளின் மூலம் மிக முக்கியமானது. இவைகளை உள்ளான ஆவிக்குரிய மனிதனின் ஐந்து ஆவிக்குரிய அடிப்படை தேவைகளை; புறம்பான மனிதனின் ஐந்து அடிப்படை தேவைகளோடு ஒப்பிட்டு கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

| மாம்ச சரீரத்தின் தேவைகள் | | ஆவிக்குரிய சரீரத்தின் தேவைகள் |
|---|---|---|
| ஜீவ சுவாசம் | 1 | பரிசுத்த ஆவி |
| தண்ணீர் | 2 | நித்திய ஜீவத்தண்ணீர் |
| போஜனம் | 3 | நித்திய ஜீவ வார்த்தைகளின் போஜனம் |
| வஸ்திரம் | 4 | நீதியின் வஸ்திரம் |
| குடியிருப்பு | 5 | பரலோக வாசஸ்தலம் |

இவைகளை உட்கொள்ளும் அளவு அவரவர் தன்மைக்கேற்றபடி மாறுபடுகிறது. இந்த ஐந்து தேவைகள் குறையும்போதோ, அல்லது தேவைப்படும் போதோ, சரீரமானது இவைகளை பூர்த்தி செய்ய முயற்சி செய்து போராடுகிறது. எப்படி மாம்ச சரீரம் தன்னுடைய தேவைகளை பூர்த்தி செய்ய முயற்சி செய்து போராடுகிறதோ, அது போலவே ஆவிக்குரிய சரீரமும் இவைகளை ஆவிக்குரிய நிலையில் அவரவர் தன்மைக்கேற்றபடி பூர்த்தி செய்ய முயற்சி செய்து போராடுகிறது.

மனச்சாட்சியை தேவன் மனிதனுக்கு கொடுத்து அதன் மூலம் எப்பொழுது வேண்டுமானாலும் அவன் தேவனுடன் ஆவியில் தொடர்பு கொண்டு தன்னுடைய ஆத்துமாவின் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளலாம், மேலும் இவைகளுக்காக மனச்சாட்சியில்

அறிவு, புத்தி, ஞானம் இவைகளை தேவன் மனிதனுக்கு அளவில்லாமல் கொடுத்திருக்கிறார். ஒருவன் தன் ஆத்துமாவின் தேவைகளை சந்திக்கும்படி நீண்ட தூரம் பயணம் செய்யவோ அல்லது மிக கடினமாக வேலை செய்யவோ தேவையில்லை. Rom_2:11-16

ஆத்துமாக்களின் பிதாவாகிய தேவன் மனிதனுக்கு மிக அருகிலும் மிக எளிமையாகவும் தன் ஆத்துமாவின் தேவைகளை சந்திக்கும்படி தேவ வார்த்தைகளை தேவன் நமது இருதயத்திற்கும் வாய்க்கும் சமீபமாக வைத்திருக்கிறார். Rom_10:5-10, Deu_30:11-14, Jer_23:23-24, Act_17:24-28,Rom_1:19-20

மனச்சாட்சியில் தேவனுடைய வார்த்தைகளை ஏற்றுக்கொள்வது பொதுவான இரட்சிப்பு, மேலும் இயேசு கிறிஸ்துவின் விசுவாச வார்த்தைகளுடன் உடன்படிக்கை செய்து இரட்சிப்பை ஏற்றுக்கொள்வது விசேஷ இரட்சிப்பு. 2Pe_1:1, Jud_1:3, Eph_1:1, 1Pe_1:1, Tit_1:1,

**விசேஷ இரட்சிப்பின் ஆவிக்குரிய நிலமைகள்**

1. ஜலத்தினால் மறுபடியும் பிறப்பு :-
தேவனுடைய வார்த்தைகளினால் மனம் மறுரூபம் அடைந்து தேவனுடைய இராஜ்ஜியத்தை விசுவாசக் கண்களால் பார்ப்பது. Joh_3:3

2. ஆவியினால் மறுபடியும் பிறப்பு :-
தேவனுடைய வார்த்தைகளினாலும் பரிசுத்த ஆவியினாலும் மனம் மறுரூபம் அடைந்து தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள்ளே விசுவாசக் கண்களால் பிரவேசிப்பது. Joh_3:5,

3. மறுபடியும் பிறந்தவர்களுக்கு களங்கமில்லாத ஞானப்பால்:- 1Pe_2:2-3, மறுபடியும் பிறந்தவர்கள் ஆவிக்குரிய காரியங்களில் வளர்ச்சியடைய கிறிஸ்துவைப் பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்கள்.

4. பலமான ஆகாரம் :- Heb_5:12-14, தீமையை வெறுத்து, நன் மையை அறிந்து கொள்ளும் அறிவில் பூரண வளர்ச்சியடைந்து நீதியின் வசனத்தை பகுத்தறியும் ஞானத்தை அடைதல்.

5. பரலோக இராஜ்ஜியத்தின் இரகசியங்கள் :- Mat_13:10-15, உவமைகளின் இரகசியங்களை அறிந்து கொள்ளுவதினால் தேவ னுடைய இராஜ்ஜியத்தில் தேவன் தங்களுக்கு பகிர்ந்து கொடுக்கிற தேவ சித் தத்தை / பங்களிப்பை அறிந்து கொள்ளுதல்.

6. தங்களுடைய விசுவாச உடன்படிக்கையில் நிலைத்திருந்து முன் னேறும் போது அவர்கள் பரலோக இராஜ்ஜியத்தில் தேவனுடைய சித் தத்தையும் அதன் விசுவாச அளவுப் பிரமாணத்தையும் அறிந்து கொண்டு தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுதல் Rev_3:20-22

7. ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்து :- Rev_19:1-9 இயேசு கிறிஸ்து, இராஜாவாக முடிசூடப்படும் பட்டாபிஷேக விழா வில் கலந்து கொண்டு தேவனுடைய சத்தியமான வசனங்களை விருந்தாக புசித்து, தேவனுடைய இராஜ்ஜியத்தின் ஆட்சியின் பதவியை பரிசாகப்பெற்று, அல்லேலூயா என்று கெம்பீர சத்தத்தோடு ஆரவாரம் செய்து தேவனை மகிமைப்படுத்துதல்.

8. மரணத்தை ஜெயமாக விழுங்குதல் :- 1Co_15:50-54, 1Co_11:23-30, Joh_6:27-28 தேவனுடைய சத்தியமான நித்திய ஜீவ வசனங்களின் அறிவில் மறு ரூபமடைந்து அதன் கிரியைகளின் மூலம் அழிவுள்ளது அழியாமை யையும் சாவுள்ளது சாவாமையும் தரித்துக் கொள்ளும் போது மரணம் ஜெயமாக விழுங்கப்படும்.
பொதுவான இரட்சிப்பும் மற்றும் விசேஷ இரட்சிப்பின் வளர்ச்சிப் படிகளும் மிக எளிமையான முறையில் தேவனுடைய சத்தியமான வசனங்களைக் கொண்டு புரிந்து கொள் ளும் அளவிற்கு விவரிக்கப்பட்டுள்ளது. தேவனுடைய கிருபை யினால் இந்த தேவனுடைய சத்தியமான வசனங்களின் விருந்தை பல ஆங்கில மொழிப் பதிப்பு வேதாகமங்களுடனும் மற்றும் அவரவர்

சொந்த தாய்மொழி வேதாகமங்களுடனும் ஒப்பிட்டுப் பார்த்து உணர்ந்து கொள்ளும் அளவிற்கு விவரிக்கப்பட்டுள்ளது. இந்த தீர்க்க தரிசன வசனங்களின்படி ஜலத்தினால் சமுத்திரம் நிறைந்திருப்பது போல பூமி கர்த்தரைக் குறித்து அறிகிற அறிவால் நிறைந்திருக்கும் என கர்த்தருக்குள் விசுவாசிக்கிறேன். Hab_2:14, Isa_11:9

இந்த தீர்க்க தரிசன வசனத்தின் படி இந்த வசனங்களை வாசிக்கிறவன், கேட்கிறவன் இதில் எழுதியுள்ளவற்றை கைக்கொள்கிறவன் பாக்கியவான். இந்த தீர்க்க தரிசன வசனத்தின்படி ஏற்கனவே உங் களுக்கு அறிவிக்கப்பட்ட தேவனுடைய சத்தியமான வசனங்களைக் கொண்டே மீண்டும் இவைகள் இப்பொழுது; பத்து தேவனுடைய வார்த்தைகளின் தலைப்புக்களின் மூலம் விவரிக்கப்பட்டு, உங்களுக்கு அறிவிக் கப்பட்டு வருகிறது. Rev_1:3. 1Pe_1:10-13

இந்த தீர்க்கதரிசன வசனத்தின்படி பொதுவான இரட்சிப்பைக் குறித்து கருத்தாய் எழுதும்போது, பரிசுத்தவான்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்தைக்குறித்து எழுதுவது நலமாக கண்டது இந்த தீர்க்க தரிசன வசனத்தின்படி தங்களது பெயர் பூமியில் எழுதப்படாமலும், ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்ட பெயர் அழிக்கப்படாமலும், ஞாபக புஸ்தகத்தில் பெயர் எழுதப்படும் படியாகவும் இவைகளை மீண்டும் ஞாபகப் படுத்திக்கொள்வோம் ஆமென்.
Jud_1:3, Jer_17:13,Exo_32:33, Psa_69:28, Mal_3:16,

# ஆசிரியர் உரை

மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் இராஜாவாக வெளிப் படப்போகிற இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு எங்களின் அன்பின் வாழ்த்துக்கள்.

இயேசு கிறிஸ்துவின் நாமத்தின் மேல் உள்ள விசுவாசத்தில் தங்களுடைய முழு நம்பிக்கையையும் வைத்து, அவருடன் விசுவாச உடன்படிக்கை செய்து, அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களையும் இரட்சகராகிய இயேசுகிறிஸ்து அவர் இராஜாவாக முடிசூட்டப்படும் தன்னுடைய பட்டாபிஷேக விழாவிற்கு அழைத்து அவர்களுக்கு தேவனுடைய சத்தியமான வார்த்தைகளை விருந்தாகக் கொடுத்து, அவர்களின் கிரியை களின்படி பிரதிபலனை பரிசாக அளிக்கிறார்.

இந்த நற்செய்தியை தேவனுடைய தரிசனமாகவும், அழைப் பிதழாகவும் எழுதி அனுப்பி இதன் பயனாக தேவனால் முன் குறிக் கப்பட்ட பரிசுத்தவான்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு உத்தமமான ஜனத்தை கர்த்தருக்கு ஆயத்தப்படுத்தும் ஊழியத்தை செய்கிறவர்களாக, இந்த தலைமுறையில் எழும்பும்படி நாங்கள் தரிசனம் நிறைவேற ஜெபத்துடன் ஊழியம் செய்து கொண்டு வருகிறோம். தேவ வார்த்தைகளை கண்டு, கேட்டு, உணர்ந்து கொண்டபடியால்; தேவன் எனக்கு பகிர்ந்த விசுவாச அளவின்படி தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக மனம் புதிதாகிற தினாலே ஆவியில் மறுரூபம் அடைந்து தேவ தரிசனத்தைப் பெற்றேன்.

**தரிசனம் :-** கர்த்தர் எனக்கு பிரதியுத்திரமாக : நீ தரிசனத்தை எழுதி, அதை கடந்தோடுகிறவன் வாசிக்கும்படி பலகையிலே தீர்க்க மாக வரை.

**எழுத்தின்படி பொருள் :-** காகிதம், தோல்சுருள், கற்பலகை உலோகத்தினாலான பலகை இவைகளில் தேவ தரிசரினத்தை எழுதி அறிவிப்பது.

**ஆவியின்படி பொருள் :-** தேவ வார்த்தைகளை வாசிப்பது, கேட்பது, ஆலோசனையாக ஏற்றுக்கொள்வது, விசேஷ பயிற்சிகளி னால் உணர்ந்து கொள்ளுவது ஆகியவற்றின் மூலம் சதையாகிய இருதயப்பலகையின் மேல் தேவ தரிசனத்தை எழுதி அறிவிப்பது.

**ஞான அர்த்தத்தின்படி பொருள் :-** கணினியின் கடந்தோடு கிற திரையில் தரிசனத்தை வாசிக்கும்படி கணினியின் விசைப்பலகை யிலே தரிசனத்தை எழுதி அறிவிப்பது.

தரிசனத்தை மிக சுருக்கமாகவும், வெளிப்படையாகவும், வேதத்தில் உள்ளபடி அவரவர் கேட்டறியும் அளவிற்கேற்றபடி எழுதி, அவைகளை எழுத்தின்படி, ஆவியின் படி, ஞான அர்த்தத்தின்படி ஆகிய மூன்று வழிகளிலும் தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்தில் பங்கடையும்படி அழைப் பிதழ்களை அனுப்பும் இந்த ஊழியத்திற்காக தேவைகள் அநேகம் உண்டு.

இப்படிப்பட்ட பல கிருபை வரங்கள், ஊழியதரிசனங்கள் மற்றும் பல ஆசீர்வாதங்கள், தேவனுடைய சித்தத்தின்படி கிறிஸ்து வின் அவயவங்களான நமக்கு தேவ ஆவியானவர் பகிர்ந்து கொடுத் திருக்கிறார்.

கிறிஸ்துவாகிய தலையைப் பற்றிக்கொண்டு கிறிஸ்துவின் அவயவமான எங்கள் ஊழியம் அதன் முழு பெலத்துடன் பொரு ளாதார ஆசீர்வாதங்களை பெற்று செயல்பட முயற்சி செய்து பாடு பட்டுக் கொண்டிருக்கிறது. மற்ற கிறிஸ்துவின் அவயவங்களான நீங்களும் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்து கொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர் போல எங்களுக்கு உதவி செய்யும்படி வேண்டிக் கொள்கிறோம்.

தேவன் பகிர்ந்து கொடுத்த சித்தத்தை நிறைவேற்றும்படி கிறிஸ்துவின் அவயங்களை இசைவாகக்கூட்டி இணைக்கப்பட்டு ஒவ்வொரு அவயவமும் தன் தன் அளவிற்குத்தக்கதாக கிரியைகளை செய்யும் போது; அது அன்பினாலே தனக்கு பக்தி விருத்தி உண்டாகு வதற்கேதுவான முழு சரீர வளர்ச்சியை உண்டாக்குகிறது. இப்படி ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறை வேற்றி தேவ ஆசீர்வாதங்களை சுதந்தரிப்போம்.

அல்லேலூயா, ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்
உங்கள் சகோதரன்

# தலைப்பு எட்டு

# தேவனுடைய வெளிப்பாடுகளின் நீதியின் உபதேசங்கள்

## (The Word of righteousness of God's Revelation)

**பலமான ஆகாரமாகிய நீதியின் வசனமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சி செய்யும் ஞானேந்திரியங்களையுடைவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும்.** Heb_5:12-14,

### அத்தியாயம் ஒன்று

1-1 மனசாட்சியினால் நியாயப்பிரமாணம்

1-2 விசுவாசத்தினால் தேவனுடைய நீதியின் பிரமாணம்

1-3 விசுவாசத்தினால் நீதியின் பிரமாணத்தை அடைய முடியாதவர் கள், சீயோனிலிருக்கிற மூலைக்கல்லில் இடறிவிழுகிறார்கள்.

## அத்தியாயம் ஒன்று

### 1-1 மனசாட்சியினால் நியாயப்பிரமாணம்

1. நியாயப்பிரமாணம் இல்லாமலிருந்தபோது மனிதனின் சரீர அவயவங்களில் பாவப்பிரமாணம்.

2. நியாயப்பிரமாண நீதியின் ஆரம்பம்

3. நியாயப்பிரமாணத்தின் உபதேசங்கள் / பிரமாணங்கள்

4. நியாயப்பிரமாணத்தின் ஊழியங்கள்

5. நியாயப்பிரமாண நீதியில் நிலைத்திருப்பவர்கள்.

6. நியாயப்பிரமாண நீதியில் நிலைத்திருக்காதவர்கள்

7. நியாயப்பிரமாண நீதியின் முடிவு

## 1. நியாயப்பிரமாணம் இல்லாமலிருந்தபோது மனிதனின் சரீர அவயவங்களில் பாவப்பிரமாணம்:-

நியாயப்பிரமாணமாகிய மனதின் / மனசாட்சியின் பிரமாணத்திற்கு விரோதமாக சரீர அவயவங்களில் இருக்கிற பாவப்பிரமாணம் மனிதனை சிறையாக்கிக்கொள்ளுகிறது அல்லது அடிமைப் படுத்துகிறது. **Rom_7:14-25**,

மாம்ச சிந்தை ஆவி ஆத்துமாவில் மரணத்தை ஏற்படுத்து கிறது மற்றும் தேவனுடைய நியாப்பிரமாணத்திற்கு கீழ்படியாமலும், கீழ்படிய கூடாமலும் இருக்கிறது. **Rom_8:5-8**

நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின் படியே நடந்து, நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப்போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம். **Eph_2:1-3**,

## 2. நியாயபிரமாண நீதியின் ஆரம்பம்:-

நியாயப்பிரமாணத்தின் கிரியைகள் வெளிப்படாமல் இருந் தாலும் அவர்களுடைய மனச்சாட்சியும் கூடச்சாட்சியிடுகிறதினாலும், குற்றமுண்டு குற்றமில்லையென்று அவர்களுடைய சிந்தனைகள் ஒன்றையொன்று தீர்க்கிறதினாலும், நியாயப்பிரமாணத்திற்கேற்ற கிரியைகள் தங்கள் இருதயங்களில் எழுதியிருக்கிறதென்று காண்பிக் கிறார்கள். Rom_2:14-16, Rom_13:5, 1Jo_3:20-22, Deu_30:11-20,

## 3. நியாயப்பிரமாணத்தின் உபதேசங்கள் / பிரமாணங்கள்:-

சீனாய் மலையிலுண்டான ஏற்பாடு Gal_4:21-31,

நியாயபிரமாணம் பாவிகளுக்கு கொடுக்கப்பட்டது 1Ti_1:9-11

தேவனுடைய கட்டளைகளையும் நியாயங்களையும், ஓய்வு நாளையும் பரிசுத்தக் குலைச்சலாக்கினபடியால்; நன்மைக்கேதுவல் லாத கட்டளைகளையும் ஜீவனுக்கேதுவல்லாத நியாயங்களையும் / பாவிகளின் பிரமாணத்தை வனாந்தரத்திலே தேவன் அவர்களுக்கு கொடுத்தார். Eze_20:19-25,

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்திலிருந்து புறப்படுதவற்கு முன்பு தேவனுக்கும், மனிதனுக்கும் மத்தியில் அடையாளமாக கொடுக்கப் பட்ட முதல் அடையாளம்; பஸ்கா பண்டிகையின் நியமங்கள் இது யூதர்களின் பிரதான முதல் பண்டிகை **Exo_12:1-15**, **Exo_12:16-27**,

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்திலிருந்து புறப்பட்ட பிறகு தேவனுக்கும், மனிதனுக்கும் மத்தியில் அடையாளமாக கொடுக்கப் பட்ட இரண்டாம் அடையாளம் ஓய்வுநாள் பிரமாணங்கள்; இந்த இரண்டு அடையாளங்களை கொடுத்த பிறகு சீனாய் மலையிலே தேவன் நியாயப்பிரமாணத்தை கொடுத்தார். **Exo_16:1-10**, **Exo 16:11-20**, **Exo_16:21-35**,

### 4. நியாயப்பிரமாணத்தின் ஊழியங்கள்:-

உண்டாக்கப்பட்ட எல்லா அதிகாரங்களும் தேவனால் நியமிக் கப்பட்டிருக்கிறது. இந்த உலகத்தின் அரசாங்க அதிகாரிகளும் நியாயப்பிரமாணத்தின் அதிகாரங்களையுடைய தேவனுடைய ஊழியக்காரர்களாக இருக்கிறார்கள் **Rom_13:1-10**,

தாங்கள் சொல்லுகிறது இன்னதென்றும், தாங்கள் சாதிக் கிறது இன்னதென்றும் அறியாதிருந்தும் / தாங்கள் பிரசங்கிக்கிறது இன்னதென்றும், தாங்கள் எந்த வகையான ஊழிய அழைப்பை பெற்றிருக்கிறார்கள் என்பதை அறியாதிருந்தும் நியாயப்பிரமாண போதகராயிருக்க விரும்புகிறார்கள். **1Ti_1:7,Rom_2:17-27**

நியாயபிரமாணத்தின் ஊழியங்கள் மரணத்தை கொடுக்கும் / ஆக்கினிதீர்ப்பை கொடுக்கும் ஊழியங்கள் **2Co_3:7-16**

### 5. நியாயப்பிரமாண நீதியில் நிலைத்திருப்பவர்கள் :

நியாயப்பிரமாணத்தை கைக்கொண்டு அவைகளால் ஆவியில் பிழைப்பவர்கள் **Gal_3:12**, **Rom_2:11-13**, **Rom_3:19-20**, **Exo_20:10-13**, **Rom_10:5**, **Lev_18:1-5**, **Deu_8:3**, **Mat_4:4**, **Luk_4:4**,

நியாயப்பிரமாணத்தை கைக்கொண்டு, அவைகளால் ஆவியில் பிழைப்பவர்கள். **Rom_2:13**, **Rom_3:20**, **Gal_2:16**, **Gal_3:11**, **Gal_5:4**, **Rom_9:30-33**, **Phi_3:4-11**

பாவிகளின் பிரமாணமாகிய நியாயப்பிரமாண உபதேசத்தை உலக அரசாங்க அதிகாரிகளும் மற்றும் உலகத்தில் உருவான எல்லா மதங்களும் தங்களுடைய அடிப்படை பிரமாணங்கலாகவே பின்பற்று கிறது.

எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப் படியக்கடவன்; ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமு மில்லை; உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப் பட்டிருக்கிறது. பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினால் வருகிறபடியால், எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியை களினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை. எனவே நியாயப்பிரமாண நீதியினால் மனிதன் தேவனுக்கு முன்பாக நீதிமான் அல்ல, **Job_25:1-6**, **Job_15:1-16**, **Mat_6:1**, **Mat_6:5**, **Mat_6:16**, **Luk_16:15**, **Joh_12:43**, **Isa_2:6**

**நியாயப்பிரமாண நீதியை பின்பற்றுகின்றவர்களின் முடிவு :-** முதலாம் மரணமாகிய பாதாளத்தின் வல்லமைகளை ஜெயம் கொள்ளமுடியாமல் தேவனால் தங்களுக்கு சரீரத்தில் கிடைத்த தேவனுடைய ரூபமும், சாயலும், நஷ்டமடைந்து மிருகத்தின் சாயலையும் ரூபத்தையும் பெற்று, இரண்டாம் மரணமாகிய அக்கினி நரகத்திலிருந்து விடுதலையாக்கப்படுவார்கள்.

இந்த பொதுவான இரட்சிப்பினால் ஆவி, ஆத்துமா அக்கினி நரகத்திலிருந்து விடுதலையாக்கப்படும் / இரட்சிக்கப்படும் ஆனால் இயேசு கிறிஸ்துவின் விசேஷ இரட்சிப்பின் மூலம் கிடைத்த தேவனுடைய ரூபமும் சாயலும் நஷ்டமடைந்து மிருகத்தின் ரூபமும் சாயலும் கொடுக்கப்படும். **1Co_5:1-5**, **1Co_15:35-42**, **Psa_49:10**, **Job_14:19-22**, **Job_18:1-21**, **1Pe_4:5-6**, **Rth_2:20**,

### 6. நியாயப்பிரமாண நீதியில் நிலைத்திருக்காதவர்கள்:-

நியாயப்பிரமாணத்தை கைக்கொள்ளாதவர்கள் சபிக்கப்பட்டவர்கள். **Deu_11:26-32**, **Deu_30:11-20**, **Dan_9:11-14**, **Rom_3:8-19**, **Gal_3:10-12**,

சபையின் உபதேசத்தின் மூலம் ஆவியில் மறுபடியும் பிறந்தவர்கள் தேவனுக்கு முன்பாக நீதிமான்கள் அல்ல, கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளை பின்பற்றி மரணம் உண்டாவதற்கு காரணமாக கிரியைகளிலிருந்து மனந்திரும்பாமல், ஸ்திரீயாகிய சபையின் உபதேசத்தின் மூலம் மனந்திரும்புகிறவர்கள் தேவனுக்கு முன்பாக நிதிமானாக இருப்பது எப்படி?

**Job_15:1-35**, **Job_25:4**, **Job_39:1-8**, **Pro_1:10-19**, **Pro_2:1-22**, **Pro_5:1-23**, **Pro_6:23-35**, **Pro_7:1-27**, **Pro_9:13-18**, **Isa_4:1**, **Isa_3:12**, **Rev_18:1-24**, **Job_15:14**,

சபையின் உபதேசத்தின் மூலம் ஆவியில் மறுபடியும் பிறந்த வர்கள் தேவனுக்கு முன்பாக நீதிமான்களாகக் காட்டுகிறார்கள் / விரும்புகிறார்கள் / மகிமையைத் தேடுகிறார்கள். எனவே இவர்கள் மனுஷர்களுக்கு முன்பாகவும் நிதிமான்கள் அல்ல, தேவனுக்கு முன்பாகவும் நிதிமான்கள் அல்ல; பிசாசுகளுக்கும், அவனுடைய தூதர் களுக்கும் ஆயத்தமாக்கப்பட்ட அக்கினி நரகத்திற்கு பாத்திரவான் களாகக் கூடிய அக்கிரமக் கிரியைகளே இவர்களிடத்தில் காணப் படுகிறது.

### 7. நியாயப்பிரமாணத்தின் முடிவு கிறிஸ்து :-

விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மை கிறிஸ்துவினிடத்தில் வழி நடத்துகிற உபாத்தியாய் / பள்ளி ஆசிரியராக இருக்கிறது. **Gal_3:22-26**,

தங்கள் இருதயத்தில் எழுதப்பட்ட நியாயத்தீர்ப்பின் கிரியைகளை நன்மை, தீமை இன்னதென்று பயிற்சியினால், பகுத்தறியத் தக்கதாக முயற்சி செய்யும் ஞானேந்திரியங்களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கு பலமான ஆகாரமாகிய கிறிஸ்துவின் நீதியின் வசனத்தை அறிந்து கொள்ள நியாயப்பிரமாணம் ஒரு பள்ளி ஆசிரியரைப்போல விசுவாசத்திற்கு வழி நடத்துகிறது. **Rom_2:14-15**, .**Heb_5:12-14**,

நியாயப்பிரமாணத்திற்கும், வாக்குதத்ததின் மூலம் வருகிற விசுவாச நீதிப்பிரமாணத்திற்கும் உள்ள இடைவெளியின் காலம் 430 வருடங்கள். **Gal_3:14-18**,

கிறிஸ்து பாதாளத்தின் வல்லமைகளை ஜெயங்கொண்டபடியால் நியாயபிரமாணத்தின் நீதியை நிறைவேற்றுகிறார். **Act_2:27**, **Psa_16:10**, **Psa_30:3**, **Psa_49:15**, **Psa_86:13**, **Mat_16:18**, **Rev_1:18**, **Act_2:31**, **Hos_13:14**, **1Sa_2:6**, **Eph_4:1-10**,

நியாயப்பிரமாணம், சீர்திருத்தல் உண்டாகும் காலம் வரைக்கும் நடந்தேறும்படி கட்டளையிடப்பட்ட போஜனபானங்களும், பலவித ஸ்நானங்களும், சரீரத்திற்கேற்ற சடங்குகளுமேயல்லாமல் வேறல்ல. இவைகள் சரீரத்தின் ஆசரிப்பு முறையின் ஒழுங்குகள் **Heb_9:8-10**, **Col_2:13-23**,

முதல் கூடாரமாகிய சரீரத்தில் வெளிப்படும் நன்மை தீமைகளின் கிரியைகளை, எப்படி இரண்டாம் கூடாரமாகிய இருதயத்தில் தேவ நீதியை நிறைவேற்ற முடியும், என்பதை விவரித்து சரீரத்திற்கும், இருதயத்திற்கும், முதல் கூடாரத்திற்கும் இரண்டாம் கூடாரத்திற்கும் உள்ள நியாயபிரமாணத்தையும், தீர்க்க தரிசனங்களையும் இயேசு கிறிஸ்து நிறைவேற்றுகிறார். **Rom_8:1-10**,

**உதாரணம் :-** பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; நியாயபிரமாணத்தை உங்களுக்கு கொடுத்தவராகிய நானே அதை நிறைவேற்றுவதற்காக வந்திருக்கிறேன் (மலைப்பிரசங்கம்)

**அத்தியாயம் ஒன்று**

**1-2 விசுவாசத்தினால் தேவனுடைய நீதியின் பிரமாணம்**

1. கிறிஸ்துவின் விசுவாசம் இல்லாமலிருந்தபோது மனிதனின் சரீர அவயவங்களில் பாவப்பிரமாணம்

2. கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கையின் ஆரம்பம்

3. கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கையின் பிரமாணம்

4. கிறிஸ்துவின் விசுவாச உடனப்டிக்கையின் ஊழியங்கள்

5. கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கையில் நிலைத்திருந்து விசுவாசத்திலிருந்து விசுவாசத்திற்கு முன்னேரிச் செல்லுவது

6. கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கையில் நிலைத்திருக்காதவர்கள்

7. கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கையின் முடிவு

**1. கிறிஸ்துவின் விசுவாசம் இல்லாமலிருந்தபோது மனிதனின் சரீர அவயவங்களில் பாவப்பிரமாணம்:-**

நியாயப்பிரமாணமாகிய மனதின் பிரமாணத்திற்கும் / மனசாட்சியின் பிரமாணத்திற்கும் விரோதமாக சரீர அவயவங்களில் இருக்கிற பாவப்பிரமாணம் மனிதனை சிறையாக்கிக் கொள்ளுகிறது அல்லது அடிமைப்படுத்துகிறது. **Rom_7:14-25,**

மாம்ச சிந்தை ஆவி ஆத்துமாவில் மரணத்தை ஏற்படுத்து கிறது மற்றும் தேவனுடைய நியாயப்பிரமாணத்திற்கு கீழ்படியாம லும், கீழ்படியக்கூடாமலும் இருக்கிறது. **Rom_8:5-8**

நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின் படியே நடந்து, நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப் போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம். **Eph_2:1-3**,

**2-0 கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கையின் ஆரம்பம்:-**

கிரியைகளில்லாமல் விசுவாசத்தினால் நீதிமான் / கிறிஸ்து வின் விசுவாச வார்த்தைகள் ஒருவனுடைய வாய்க்கும், இருதயத்திற் கும் சமீபமாகயிருந்தால் மட்டும், ஒருவன் கிரியைகளில்லாமல் தேவ னாலே நீதிமானென்றெண்ணப்படுகிறான்,

**3-0 கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கையின் பிரமாணம்:-**

இவைகளை இரண்டாம் தலைப்பு தேவனுடைய வெளிப்பாடுகளில் மூல உபதேசங்கள் (THE FIRST PRINCIPLES OF GOD'S REVELATION) 4-3-3-2 இயேசு கிறிஸ்துவினுடைய விசுவாசத்தின் சுவிஷேசம் என்ற தலைப்பின் கீழ் பார்க்கவும்.

**4-0 கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கையின் ஊழியங்கள்:-**

1. கிறிஸ்துவின் ஆரோக்கியமான உபதேசத்தின் ஊழியங்கள்

2. இயேசு கிறிஸ்துவின் மகிமையின் சுவிசேஷத்தின் ஊழியங்கள்

3. ஒப்புரவாகுதலின் உபதேசத்தின் ஊழியங்கள்

4. கிறிஸ்துவின் உபதேசத்தின் ஊழியங்கள்

5. ஆவிக்குரிய ஊழியங்கள்

6. நீதியைக் கொடுக்கும் ஊழியங்கள் **2Co_3:7-12**, **2Co_4:1-7**,

7. ஒப்புரவாகுதலின் ஊழியங்கள் **2Co_5:18-20**, **Rom_5:10-11**,

**5-0 கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கையில் நிலைத் திருந்து விசுவாசத்திலிருந்து விசுவாசத்திற்கு முன்னேறிச் செல் லுவது :-**

*5-1 கிறிஸ்துவின் விசுவாச வார்த்தை உனக்குச் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறது:-* **Rom_10:5-10, Deu_30:10-14,**

கிறிஸ்துவின் விசுவாச வார்த்தைகள் உன் வாயிலும், இருதயத்தில் சமீபமாயிருந்து அறிக்கையிடுகிறது / வியாகுலப் படுகிறது / பெரு மூச்சுவிட்டழுகிறது **Eze_9:4**, **2Pe_2:6-**

*5-2 கிறிஸ்துவின் விசுவாச வார்த்தை நீதியின் வார்த்தையாக உருமாறுகிறது :-*

கிறிஸ்துவின் விசுவாச வார்த்தைகள் நன்மை, தீமைகளை இருதயத்தில் பகுத்தறிகிறதினால் அந்த வார்த்தை நீதியின் வார்த்தையாக உருமாறி விசுவாசத்திலிருந்து மேலும் விசுவாசத்திற்கு முன்னேறுகிறது. **Heb_5:12-14**,

*5-3 கிறிஸ்துவின் விசுவாசப்பிரமாணம் நீதியின் பிரமாணமாக முன்னேறுகிறது :-*

கிறிஸ்துவின் விசுவாச வார்த்தை நீதியின் வார்த்தைக்கு முன்னேறுகிறபடியால்; கிறிஸ்துவின் விசுவாசப்பிரமாணம் நீதியின் பிரமாணத்திற்கு முன்னேறுகிறது **Rom_1:16-18**, ,**Rom_12:6-8**, **Hab_2:1-4**,

*5-4 நீதியின் பிரமாணத்திலிருந்து தங்களுடைய விசுவாச அளவுப்பிரமாணத்திற்கு முன்னேறுகிறது :-*

நீதியின் பிரமாணத்தில் தங்களுடைய விசுவாச அளவுப் பிரமாணத்தை உணர்ந்து கொண்டு; தேவன் தங்களுக்கு பகிர்ந்து

கொடுத்த தேவனுடைய சித்தத்தை அறிந்து கொண்டு, விசுவாசத்திலிருந்து மேலும் விசுவாசத்திற்கு முன்னேறுவது. **Rom_12:1-6,**

*5-5 தேவன் தங்களுக்கு பகிர்ந்து கொடுத்த விசுவாச அளவுப்பிரமாணத்திலிருந்து அவைகளின் கிரியைகளுக்கு முன்னேறுவது :-*

நீதியின் பிரமாணத்தில் தேவன் தங்களுக்கு பகிர்ந்து கொடுத்த விசுவாச அளவுப் பிரமாணத்திலிருந்து தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்காக மேலும் அவைகளின் கிரியைகளுக்கு முன்னேறி விசுவாசத்தை பூரணப்படுத்துவது **Rom_12:1-6,**

*5-6 கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கையிலிருந்து தேவனுடைய ஊழியர் உடன்படிக்கைக்கு முன்னேறுவது:-*

தேவனுடைய வார்த்தைகளுடன் விசுவாச உடன்படிக்கை செய்து அவருடைய பிள்ளைகளாக மாறினவர்கள் விசுவாசத்திலிருந்து மேலும் விசுவாசத்திற்கு முன்னேறுகிறார்கள். **Rom_1:16-18, ,Rom_12:6-8,**

*5-7 விசுவாசத்திலிருந்து மேலும் கிரியைகளுக்கு முன்னேறுவது:-*

விசுவாசத்திலிருந்து தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்காக தேவனுடன் ஊழியர் உடன்படிக்கை செய்து தேவனுடைய பிரதிநிதியாக முன்னேறுகிறார்கள் **Mal_2:18,, Rom_12:6-8,**

*5-8 நியாயப்பிரமாணமும், தீர்க்கதரிசனங்களும் சாட்சியிடுகிற தேவ நீதியின் வார்த்தைகளுடையை உவமைகளின் பொருளை அறிந்து கொள்ள முன்னேறுவது:-*

நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களும் ஒன்றையொன்று சாட்சியிட்டு இயேசு கிறிஸ்துவின் விசுவாசத்தினால் பலிக்கும் தேவ நீதியை வெளிப்படுத்துகிறது. **Rom_3:20-22,**

இயேசு கிறிஸ்து நியாயப்பிரமாணத்தையும் தீர்க்கதரிசனங்களையும் நிறைவேற்றுவதின் மூலம் கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளை, உவமைகள் மூலமாக பரலோக இராஜ்ஜியத்தின் இரகசியங்களாக வெளிப்படுத்தப்படுத்தப்படுகிறது. **Mat_5:17-18**, **Mat_7:12**, **Mat_22:35**, **Mat_11:13**, **Luk_16:16**,

5-9 இயேசு கிறிஸ்துவின் ஆவி, ஆத்துமாவில் / இருதயத்தில் நியாயப்பிரமாணமும், தீர்க்கதரிசனங்களும் ஒன்றையொன்று சந்தித்து சாட்சியிட்டபடியால் நியாயப்பிரமாணம் தீர்க்கதரிசனங்கள் ஆகியவற்றின் நிறைவேறுதலான கிறிஸ்துவின் விசுவாச வார்த்தைகள் / தேவநீதியின் வார்த்தைகள் மறைபொருளாக / உவமைகளாக கிறிஸ்துவின் வாயிலிருந்து வெளிப்பட்டது அல்லது புறப்பட்டது. **Mat_5:17-20**,

5-10 இயேசு கிறிஸ்துவின் விசுவாச வார்தைகள் மூலம் வெளிப்பட்ட தேவ நீதியின் சத்தியமான வசனங்களில் உள்ள மறை பொருளை ஒருவன் அறிந்து கொள்ளவும் / உணர்ந்து கொள்ளவும் விரும்பினால், அவர்களின் இருதயத்தில் மீண்டும் நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களும் ஒன்றையொன்று சந்தித்து சாட்சியிட வேண்டும், அப்பொழுது உவமைகளினால் மறைக்கப்பட்ட சத்தியமான மறைபொருள் அவர்களுக்கு மட்டும் வெளிப்படுத்தப்படும் **1Co_2:5-10**,**Isa_64:4-5**,

5-11 வேதத்தில் உவமைகளாக சொல்லப்பட்ட தேவனுடைய வார்த்தைகளை, கிறிஸ்துவை பின்பற்றின சீஷர்கள் இருளிலே / அறியாமையினால் மற்றவர்கள் தெளிவாக புரிந்து கொள்ளமுடியாத வகையில் சொன்னார்கள் ஆனால் கிறிஸ்துவின் விசுவாச வார்த்தைகளின் படி வெளிப்படாத மறைபொருளுமில்லை, அறியப்படாத இரகசியமுமில்லை. **Luk_12:1-3**,**Mat_10:26-27**,

5-12 உவமைகளாக சொல்லப்பட்ட தேவனுடைய வார்த்தைகளின் மறைபொருளை சுரமண்டலத்தின் மேல் வெளிப்படுத்துவேன் என்ற தீர்க்கதரிசன வசனத்தின்படி ஆவிக்குரிய சுரமண்டலமாகிய இருதயத்தில் / ஆவி, ஆத்துமாவில் உவமைகளின் மறை

பொருளை தியானிக்கும்போது உவமையின் பொருள் வெளிப்படுத் தப்படும். **Psa_49:3-4**, **Psa_92:1-6**,**Psa_39:1-3**, **Jer_20: 7-13**, **1Ch_25:1**,

5-12 சுரமண்டலத்தின் ஏழு வித்தியாசமான சப்த நாதங்கள் அல்லது சுரங்கள் ச-ரி-க-ம-ப-த-னி-ச எழுத்தின் படி இசைக் கருவியில் இசைப்பதுபோல ஆவிக்குரிய இசைக்கருவியான இருதய சுரமண்டலத்தில் ஏழு ஆவிக்குரிய வித்தியாசமான சப்தங்கள் / ஓசைகள் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசனங்களிலும் கோர்வை யாக இரண்டறக்கலந்திருக்கிறது **Job_30:31**, **Psa_57:7-8**,**Psa_108:1-3**,

ஆவிக்குரிய சுரமண்டலத்தில் ஏழு ஆவிக்குரிய வித்தியாச மான சப்தங்கள் / ஓசைகள்

(1) வேதம் (2) சாட்சிகள் (3) கட்டளைகள் (4) பிரமாணங்கள் (5) வழிகள் (6) கற்பனைகள் (7) நீதி நியாயங்கள் இதை சங்கீதங்களின் புஸ்தகம் 19,119, ஆதிகாரங்களிலும் மோசே யின் ஐந்து புஸ்தகங்களிலும், தீர்க்கதரிசன புஸ்தகங்களிலும் மேலே குறிப்பிட்ட ஏழு சப்தங்கள் கோர்வையாக பல இடங்களில் ஒலிக் கிறது. **Psa_49:3-4**, **Psa_19:1-14**,**Psa_119:1-16**,

5-13 வேதமும் சாட்சி ஆகமமும் வெளிப்படுத்துகிற விடியக்காலத்தின் வெளிச்சத்திற்கு முன்னேறுவது:-

தேவனுடைய வார்த்தைகளை பின்பற்றும் சீஷர்களுக் குள்ளே வேதத்தை முத்திரையிட்டு, சாட்சியின் ஆகமம் கட்டப் பட்டிருக்கிறபடியால் சீஷர்களுக்கு விடியக்காலத்து வெளிச்சம் இல்லை / தினந்தோறும் புதிய தரிசனங்கள் தேவனிடமிருந்து கிடைப்பது இல்லை. **Isa_8:16-20**,

**வேதம் :-** உவமைகள் மூலம் வெளிப்படுத்தப்பட்ட தேவனு டைய சத்தியமான வார்த்தைகள்

**சாட்சியின் ஆகமம்:-** இயேசு கிறிஸ்துவின் கிரியைகளின் மூலம் வெளிப்பட்ட சாட்சியின் வார்த்தைகள்

உவமைகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய சத்தியமான வார்த்தைகளையும் இயேசு கிறிஸ்துவினுடைய சாட்சியின் தீர்க்கதரிசன நிறைவேறுதல்களையும் பகுத்தாராய்ந்து, அவைகளில் உள்ள நீதியின் வசனத்தை உணர்ந்து கொள்ளுபவர்களுக்கு; விடியக் காலத்து வெளிச்சம் / அல்லது தினந்தோறும் புதிய தரிசனங்கள் தேவனிடமிருந்து வெளிப்படுத்தப்படும். **Isa_41:21-29**,**Isa_44:6-9**,**Jer_23:21-22**,

### 6-0 கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கையில் நிலைத் திருக்காதவர்கள்:-

6-1 கிறிஸ்துவுடன் விசுவாச உடன்படிக்கை செய்த அநேகருடைய "வாய்க்கு" மட்டும் தேவனுடைய வார்த்தைகள் சமீபமாயிருக்கிறது ஆனால் அவர்களின் இருதயத்திற்கோ வேத னுடைய வார்த்தைகள் துரமாக விலகியிருக்கிறது.

6-2 கிறிஸ்துவுடன் விசுவாச உடன்படிக்கை செய்த அநேகர், விசுவாசத்தினால் வருகிற தேவ நீதியின் ஆவியில் பிழைக்காமல், தங்கள் இருதயத்தின் இச்சையின்படி மாம்சமும் மனசும் விரும்பின வைகளைச் செய்து, இந்த உலகத்திலுண்டான, மாம்சத்தின் இச் சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய இவைகளினால் ஆவி ஆத்துமாவில் பிழைத்து, ஆவி ஆத்துமா சரீரத்தில் தீமையிலிருந்து மேலும் தீமைக்கு முன்னேறுகிறார்கள். **Jo_2:14-17**, **Jer_9:3**, **Psa_73:1-28**, **Job_21:1-18**,

6-3 கிறிஸ்துவுடன் விசுவாச உடன்படிக்கை செய்த அநேகர் விசுவாசத்தினால் வருகிற தேவ நீதியின் ஆவியில் பிழைக்காமலும், நியாயப்பிரமாணத்தின் மூலம் வருகிற சுய நீதியில் அல்லது மனுஷனுக்கு முன்பாக உள்ள மனுஷ நீதியில் ஆவியில் பிழைக்காம லும் இருந்துகொண்டு; தங்களை மனுஷர்களுக்கு முன்பாக நீதிமான் களாக காட்டிக் கொள்ளுகிறார்கள். இவர்கள் தன்னைக்குறித்து எண்ண வேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், அவனவனுக்குத்

தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவர்களாய் எண்ண வேண்டும்; என்கிற அளவுப்பிரமாணத்தின் எல்லைகளை கடந்து இவர்கள் துன்மார்க்களாகி தேவனுடைய கோபாக்கினிக்கு பாத்திர வங்களாக மாறியிருக்கிறார்கள். **Rom_12:3-6**, **2Co_10:12-18**, **1Pe_4:10**, **Mat_6:1**, **Mat_6:5**, **Mat_6:16**, **Luk_16:15**, **Joh_12:43**, **Isa_2:6**,

6-4 கிறிஸ்துவுடன் விசுவாச உடன்படிக்கை செய்த அநேகர் விசுவாசத்தினால் வருகிற தேவநீதியின் ஆவியில் பிழைக்காமலும் நியாயபிரமாணத்தின் மூலம் வருகிற சுயநீதியின் ஆவியில் பிழைக்காமலும் ஆவியில் மரித்தவர்கள்; உங்கள் அன்பின் விருந்து களில் கறைகளாயிருந்து, பயமின்றிக்கூட விருந்துண்டு, தங்களைத் தாங்களே மேய்த்துக்கொள்ளுகிறார்கள்.

இவர்கள் காற்றுகளால் அடியுண்டோடுகிற தண்ணீரற்ற மேகங்களாகவும், இலையுதிர்ந்து கனியற்று இரண்டு தரஞ்செத்து வேரற்றுப்போன மரங்களாகவும், தங்கள் அவமானங்களை நுரை தள்ளுகிற அமளியான கடலலைகளாகவும், மார்க்கந்தப்பி அலைகிற நட்சத்திரங்களுமாயிருக்கிறார்கள், இவர்களுக்காக என்றென்றைக்கும் காரிருளே வைக்கப்பட்டிருக்கிறது. **2Pe_2:1-14**, **2Pe_2:14-22**, **Jud_1:1-13**, **Jud_1:14-25**,

6-5 கிறிஸ்துவுடன் விசுவாச உடன்படிக்கை செய்த அநேகர் தேவனுடைய வார்தைகளை வாசித்து, சிந்தித்து அவைகளின் பொருளை அறிந்து மனந்திரும்பாதபடி, இவர்கள் இருதயம் கொழுத்திருக்கிறது மேலும் இவர்களுக்கு தேவனுடைய வார்த்தை வாய்க்கும், இருதயத்திற்கு தூரமாக விலகியிருக்கிறது. அவர்: நீ போய், இந்த ஜனங்களை நோக்கி, நீங்கள் காதாரக்கேட்டும் உணராமலும், கண்ணாரக் கண்டும் அறியாமலும் இருங்கள் என்று சொல், இந்த ஜனங்கள் தங்கள் கண்களினால் காணாமலும், தங்கள் காதுகளில் கேளாமலும், தங்கள் இருதயத்தினால் உணர்ந்து குணப்படமாலும், நான் அவர்களை ஆரோக்கிய மாக்காமலுமிருக்க, நீ அவர்கள் இருதயத்தைக் கொழுத்ததாக்கி, அவர்கள் காதுகளை

மந்தப்படுத்தி, அவர்கள் கண்களை மூடிப்போடு என்றார். **Isa_6:8-10**, **Mat_13:11-17**, **Act_7:38-43**,

6-6 கிறிஸ்துவுடன் விசுவாச உடன்படிக்கை செய்த அநேகர் விசுவாசத்திலிருந்து பின் வாங்கி; மீண்டும் தங்கள் விட்டு வந்த எகிப்தின் பாவ சந்தோஷங்களுக்கு தங்கள் இருதயத்தில் பின்னிட்டு திரும்பி பார்த்து உப்புதூணாக மாறியிருக்கிறார்கள் **Luk_17:28-33**, **Gen_19:17**, **Gen_19:26**, **Mat_5:13**,

6-7 தேவனுடைய வார்த்தைகள் தங்கள் வாய்க்கும் மட்டும் சமீபமாகயிருந்து தங்கள் இருதயம் தேவனை விட்டு, துரமாக விலகியிருப்பவர்கள்; எப்பொழுது மனந்திரும்பி தங்கள் இருதயத்தை தேவனுடைய வார்த்தைக்கு சமீபமாக கொண்டு வந்து,தங்கள் நற்கிரி யைகளை தேவனுக்கு முன்பாக வெளிப்படுத்துகிறார்களோ அப் பொழுது தேவனுடைய இரட்சிப்பு அவர்களுக்கு சமீபமாயிருக்கிறது.

6-8 கிறிஸ்துவுடன் விசுவாச உடன்படிக்கை / ஊழியர் உடன்படிக்கை செய்த அநேகருடைய வாய்க்கும் மட்டும் தேவனுடைய வெளிப்பாடுகளும், தரிசனங்களும் சமீபமாயிருக்கிறது. ஆனால், இவர்களின் இருதயம் தேவனை விட்டு தூரமாக விலகியிருத்து கொண்டு, தங்கள் மனம் விரும்பின அநேக காரியங்களுக்கு பின் சென்று அவைகளுடன் தேவனுடைய வார்த் தைகளை கலப்படம் செய்தபடியால் தேவனுடைய வார்த்தைகளுக்கு இணையாகவும், எதிராகவும் கற்பனைகளையும் பிரமாணங்களையும் உருவாக்கிக் கொண்டு தீமையிலிருந்து மேலும் தீமைக்கு முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள்.

தேவனுடைய கோபாக்கினிக்கு பாத்திரவான்களாக மாறியிருக்கிற இவர்கள், மற்றவர்களையும் தங்கள் மார்க்கத் தானாக்கும்படி சமுத்திரத்தையும் பூமியையும் சுற்றித்திரிகிறார்கள்; ஒருவனை தங்கள் மார்க்கத்தானான போது அவனை தங்களிலும் இரட்டிப்பாய் கேட்டின் மகனாக்குகிறார்கள்.

6-9 தேவன் தங்களுக்கு கொடுத்த வெளிப்பாடுகளின் தரிச னங்களையும், தங்கள் விட்டு ஜாதிகளுடைய முறைகளையும் கலந்து

ஆராதணை் செய்கிற ஈனமான ஆசாரியர்கள் உருவாக்கின மாயை களினால் தேவனைக் கோபப்படுத்தினார்கள்; ஆகையால் மதிக்கப் படாத ஜனங்களினால் அவர்களுக்கு எரிச்சலை உண்டாக்கி, மதி கெட்ட ஜாதியினால் அவர்களை தேவன் கோபப்படுத்துகிறார்.

6-10 ஈனமான ஆசாரியர்கள் கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்களையும் + மனுஷராலே போதிக்கப்பட்ட கற்பனைகளையும் இணைத்து சபையின் மூல உபதேச வசனங்களாக உருவாக்குகிறார்கள்.

6-11 களங்கமில்லாத ஞானப்பால் புரணமாகக் கிடைக்காத காரணத்தால் கலப்படமான ஞானப்பால்

**Isa_4:1**, **Pro_5:3-14**, **Pro_2:16-22**, **Pro_9:13-18**, **Pro_7:1-5**, **Pro_23:29-33**, **Isa_1:22**, **Son_7:9**, **Zep_1:12**, **1Co_2:4-5**, **1Co_2:13-14**, **Col_2:8**, **2Ti_4:2-5**, **2Co_4:2**, **2Pe_2:1**, **Jud_1:4**, **Jam_3:15**, **1Jo_2:16**, **1Th_2:7-8**, **2Co_2:17**,

6-12 மனுஷராலே போதிக்கப்பட்ட கற்பனைகளின் மூல உபதேச வசனங்கள் / சபையின் மூல உபதேச வசனங்கள்:-

1. இயேசு கிறிஸ்துவின் விசுவாசத்தை வாயினால் அறிக்கை செய்து பாவ மன்னிப்பிற்கு இரட்சிப்பை பெற்றுக்கொள்ளுதல் **Act_2:38,Rom_10:9-10,**

2. ஞானஸ்தானம் பெற்றுக் கொள்ளுதல் **Mar_16:16,**

3. பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுதல் **Act_2:1-4,**

4. சபை ஐக்கியத்தில் கலந்து கொள்ளுதல் **Heb_10:25,**

5. காணிக்கை, தசமபாகம் செலுத்துதல் **Mal_3:8-10,**

மனுஷராலே போதிக்கப்பட்ட கற்பனைகளின் பலமான ஆகாரத்தின் உபதேச வசனங்கள்

6. பரிசுத்த பந்தியில் கலந்து கொள்ளுதல் 1Co_11:23-27Isa_4:1,

7. தேவனுடைய ஊழியத்தில் பங்குகொள்ளுதல் Mar_16:15,

6-13 தேவனுடைய வார்த்தைகளையும் + மனிதனுடைய வார்த்தைகளையும் இணைக்கும்போது = வேற்றுமையான உபதேசங் கள்/விகற்ப்பமான உபதேசங்கள் உருவாகிறது 1Co_2:4-16,, Jer_23:25-40, 1Th_2:3-131Ti_6:3-5, 1Ti_1:3-5,1Ti_4:1,2Ti_4:3-5,Tit_2:8,

6-14 தேவனுடைய கற்பனைகளையும் + மனிதனுடைய கற்பனைகளையும் இணைக்கும் போது = மணல் மேல் கட்டின வீடு வெளிப்படுகிறது/ Isa_29:10-12, Mat_7:24-29, Mat_15:1-9,Mar_7:1-13, Psa_1:4,, Job_21:17-18,

6-15 தேவனுடைய ஆவியையும் + மனிதனுடைய ஆவியையும் = இணைக்கும் போது நயவஞ்சகமுள்ள தந்திரமான ஆவி வெளிப்படுகிறது 1Co_2:4-16 , Pro_5:1-23,

6-16 தேவனுடைய தீர்க்கதரிசன ஆவியையும் + மனிதனுடைய தீர்க்கதரிசன ஆவியையும் இணைக்கும்போது கள்ள தீர்ககதரிசன ஆவி வெளிப்படுகிறது Mat_7:24-29, Eze_13:1-16,Jer_23:14-32,

6-17 லேவிய ஆசரிப்பு முறைகளையும் + ஜாதிகளின் ஆசரிப்பு முறைகளையும் = இணைக்கும் போது எந்தக் காலத்திலும் பொருளுக்கு மாறாத மாயைகளின் ஈனமான ஆசரிப்பு முறைகள் வெளிப்படுகிறது. 1Ki_12:27-33,2Ki_17:6-202Ki_13:8-11, Eze_22:23-31, Eze_44:21-24,

6-18 தேவனுடைய இராஜ்ஜியத்தின் ஆட்சி முறைகளையும் + மனிதனுடைய இராஜ்ஜியத்தின் ஆட்சி முறைகளையும் இணைக் கும்போது = மாயைகளின் ஈனமான இராஜ்ஜியத்தின் ஆட்சி முறை

கள் / மணல் மேல் கட்டின மாளிகை / அரண்மனை வெளிப்படுகிறது **Hos_2:8-15,, Jos_7:23-26Isa_65:8-16, Hos_13:1-16,**

6-19 மாயைகளினால் தேவனுக்கு கோபம் மூட்டுவீர்கள் **Deu_32:19-25,**

6-20 சகல ஜாதிகளைப் போல எங்களுக்கு இராஜா வேண்டும் **1Sa_8:1-9,**

6-21 சகலஜாதிகளைப்போல இஸ்ரவேலராகிய நாங்களும் இருப்போம் **1Sa_8:10-22,**

6-22 தேவன் தங்களை ஆளாதபடி தேவனைத்தள்ளி னார்கள். **1Sa_12:7-25,**

6-23 தேவ நாமம் தரிக்கப்பட்ட ஜனங்கள் சகல ஜாதிகளைப் போல இருக்கிறார்கள் **2Ki_17:13-20 ,**

6-24 தேவனை மறந்து ஜாதிகளைப் பின்பற்றினார்கள். **2Ki_17:7-8 ,**

6-25 சகல ஜாதிகளைப்போல இருப்போம் **Eze_20:32-37,**

6-26 தேவனை தள்ளி மாயைகளை பின்பற்றினார்கள் **Jer_2:4-13,**

6-27 மதிக்கப்படாத ஜனங்களினால் அவர்களுக்கு எரிச்சலை உண்டாக்கி, மதிகெட்ட ஜாதியினால் அவர்களைக் கோபப்படுத்துவேன். **Deu_32:19-25,**

எனக்கு ஜனங்களல்லாதவர்களைக் கொண்டு நான் உங்க ளுக்கு எரிச்சல் உண்டாக்குவேன்; புத்தியீனமுள்ள ஜனங்களாலே உங்களுக்குக் கோபமூட்டுவேன் **Rom_10:19,**

6-28 அவர்கள் ராஜாக்களை ஏற்படுத்திக் கொண்டார்கள், ஆனாலும் என்னாலே அல்ல; அதிபதிகளை வைத்துக்கொண்டார்கள், ஆனாலும் நான் அறியேன்; அவர்கள் வேரறுப்புண்டு போகும்படித்

தங்கள் வெள்ளியினாலும் தங்கள் பொன்னினாலும் தங்களுக்கு விக்கிரகங் களைச் செய்வித்தார்கள். Hos_8:1-6,

6-29 உன்னை இரட்சிக்கும் உன் தேவனாகிய கர்த்தரே உன்னுடைய ராஜாவும், நியாயதிபதியுமாக இருக்கிறார் Hos_13:10-16,

6-30 தேவன் பிரபுக்களை மாயையாக்கி, பூமியின் நியாயாதிபதிகளை அவாந்தரமாக்குகிறார். Isa_40:23-24,

6-31 கர்த்தரைவிட்டுப் பின் வாங்காமல் கர்த்தரை உங்கள் முழு இருதயத்தோடும் சேவியுங்கள். விலகிப் போகாதிருங்கள்; மற்றப்படி பிரயோஜன மற்றதும் ரட்சிக்கமாட்டாததுமாயிருக்கிற வீணானவைகளைப் பின்பற்றுவீர்கள்; அவைகள் வீணானவைகளே. (தேவன் சாலமோன் இராஜாவுக்கு வெளிப்படுத்தின ஞானத்தை மாயைகள் மேற்கொண்டது) 1Ki_11:1-13, 2Ki_23:13-15, 1Sa_12:7-25,

6-32 தேவனுடைய வெளிப்பாடுகளும் + ஜாதிகளின் வெளிப்பாடுகளும் மாயைகளின் திரளான வெளிப்பாடுகளாக கழுத்து வரை வந்து கரைபுரண்டோடி தவறான பாதைகளில் வழி நடத்து கிறது . 1Sa_12:7-25, Deu_32:18-36, Deu_28:36, Isa_8:16-22, Eze_7:14-27, Jer_2:4-13, Job_12:24, Psa_107:40,

6-33 இரண்டு புகைகிற கொள்ளிக்கட்டைகள் சிங்காசனத்திற்கு போராடுகிறது Isa_7:1-9,

6-34 இம்மானுவேல் / தேவன் நம்மோடியிருக்கிறார் என்று சொல்லுகிறார்கள் ஆனால் அவர்கள் சொல்லுகிறபடி தேவன் அவர்களோடு இல்லை Isa_7:10-20, Isa_7:10-20, , Amo_5:14-15,

6-35 மாயைகளின் திரளான வெளிப்பாடுகள் கழுத்து வரை வந்து கரைபுரண்டோடி தவறான பாதைகளில் வழிநடத்துகிறது. Isa_8:1-10, , Isa_30:27-33,

6-36 மெதுவாக ஒடுகிற சீலோவாவின் தண்ணீரைப் போல சியோனின் வெளிப்பாடுகள் Isa_8:11-22, Isa_7:21-25,

6-37 தேவனுடைய வெளிப்பாடுகளும் + ஜாதிகளின் வெளிப்பாடுகளும் இணைந்து வெளிப்படுகிற = மாயைகளின் திர ளான வெளிப்பாடுகளைக் குறித்து தேவனுடைய வெளிப்பாடுகளில் சொல்லப்பட்ட சில தீர்க்கதரிசன வசனங்கள்

1. மாயையின் கயிறுகள் Isa_5:18-25,

2. மாயைகளுக்கு தேவனுடைய நியாயத்தீர்ப்பு Isa_5:26-30,

3. மாயைகளை பின்பற்றுகிறார்கள் Jer_18:15-17,

4. மாயைகளினால் தேவனுக்கு கோபம் மூட்டுகிறார்கள் Jer_8:19-22,

5. நாங்கள் பொய்யை எங்களுடைய அடைக்கலமாக்கி, மாயையின் மறைவிலே வந்து அடைந்தோம் ஆகையால் வாதை பெரு வெள்ளமாய்ப் புரண்டு வந்தாலும் எங்களை அணுகாது Isa_28:14-21, Jer_10:14-15, Jer_51:17-18,

6. மாயையின் திரிக்கதரிசனங்கள் / கள்ளதீர்க்க தரிசனங்கள் Eze_13:16, Eze_13:17-23, Eze_21:25-32, Eze_22:23-31,

7. மாயைகளைப் பின்பற்றுகிறார்கள் Isa_59:4, Jon_2:8, Psa_31:6, Isa_59:4, Lam_2:14, Job_15:31, Psa_24:4, Psa_119:37, Psa_144:11-15, Pro_30:5-9,

## 7 கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கையின் முடிவு

இயேசுகிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கையின் முடிவு கிருபையினால் வெளிப்படாமல் கிரியைகளின் மூலம் வெளிப் படுகிறது. Heb_12:2, Exo_19:5, 2Th_2:3-8, 2Ti_2:12, Rev_1:8, Rev_21:6, Rev_22:13,

7-1 இயேசு கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கை துரோகிகளின் மேல் கீழே குறிப்பிட்ட காரணங்களால் தேவன் அவர்

கள் மேல் நியாயத்தீர்ப்பை அனுப்புகிறார் .Zec_11:5, Zec_11:8-10,2Ti_2:12, Mal_2:1-10, Pro_2:16-17,

7-2 இயேசு கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கையை தங்கள் வாழ்க்கையின் முடிவு வரை காத்திருந்து இரட்சிப்பை பெற்றுக்கொள்ளாமல், உடன்படிக்கையை காலத்திற்கு முன்பாகவே முறித்தபடியால் தேவனுடைய நியாயத்தீர்ப்பு வெளிப்படுகிறது Mat_10:22 Mat_24:13, Mar_13:13, Rev_2:26,

7-3 சத்தியத்தின் மேல் உள்ள அன்பை அங்கீகரித்து தங்களுடைய விசுவாச உடன்படிக்கையின் ஆவிக்குரிய வாழ்க்கையை காத்துக்கொள்ளாமல் போனபடியால் தேவனுடைய நியாயத்தீர்ப்பு வெளிப்படுகிறது 2Th_2:9-10, Dan_8:11-12,

7-4 அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்து விசுவாசத்தை இழந்து போனபடியால் தேவனுடைய நியாயத்தீர்ப்பு வெளிப்படுகிறது Mat_24:12,

7-5 ஒருவன் இயேசு கிறிஸ்துவின் மூலம் விசுவாச உடன்படிக்கை செய்தபோது மரணமடைந்த கேட்டின் மகனாகிய அவனுடைய பாவ மனிதன்; மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டு பாவம் கிரியைகளின் மூலம் வெளிப்படுகிறபோது அவனுடைய விசுவாச உடன்படிக்கை அவனால் முறிக்கப்பட்டு தேவனுடைய நியாயத்தீர்ப்பு வெளிப்படுகிறது. Rom_6:2-11, Rom_8:9-14, Col_2:11-12, 2Th_2:3, Eph_4:22-24,

7-6 இயேசு கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கையை நிலைநிறுத்துகிற பரிசுத்த ஆவியை ஒருவன் துக்கப்படுத்துகிறபோது; தேவன் அவனுடன் செய்து கொண்ட உடன்படிக்கை அவனால் முறிக்கப்பட்டு தேவனுடைய நியாயத்தீர்ப்பு வெளிப்படுகிறது. Zec_11:5, Zec_11:8-10,2Ti_2:12,

7-7 தேவனுடைய வார்த்தைகளின் சத்தியத்தை ஏற்றுக்கொண்டு இரட்சிப்படைய விரும்பாதபடியால் பொய்யை விசுவாசிக்கும்படி பரிசுத்த ஆவிக்கு பதிலாக வஞ்சக ஆவியை தேவன் அவர்

களுக்குள்ளே அனுப்புகிறபடியால் தேவனுடைய நியாயத்தீர்ப்பு வெளிப்படுகிறது. **2Th_2:11-12, 1Sa_16:14, 1Sa_16:16, 1Sa_16:23,**

## அத்தியாயம் ஒன்று

## 1-3 விசுவாசத்தினால் நீதியின் பிரமாணத்தை அடைய முடியாதவர்கள், சீயோனில் இருக்கிற முல்லைக்கல்லில் இடறி விழுகிறார்கள்.

1. நீதிப்பிரமாணத்தைத் தேடின இஸ்ரவேலரோ / கிறிஸ்தவர் களோ நீதிப்பிரமாணத்தை அடையவில்லை.

Rom 9:31 நீதிப்பிரமாணத்தைத் தேடின இஸ்ரவேலரோ நீதிப்பிரமாணத்தை அடையவில்லை. என்னத்தினாலென்றால், அவர்கள் விசுவாசத்தினாலே அதைத் தேடாமல், நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேடின படியால் அதை அடையவில்லை; இடறுதற்கான கல்லில் இடறினார்கள்

**Rom 9:33** இதோ, இடறுதற்கான கல்லையும், தவறுதற்கான கன்மலையையும், சீயோனில் வைக்கிறேன்; அவரிடத்தில் விசுவாசமாயிருப்பவன் எவனோ அவன் வெட்கப் படுவதில்லை என்று எழுதியிருக்கிறபடியாயிற்று.

**1Pe 2:4** மனுஷரால் தள்ளப்பட்டதாயினும் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டதும் விலையேறப் பெற்றதுமாயிருக்கிற ஜீவ னுள்ள கல்லாகிய அவரிடத்தில் சேர்ந்தவர்களாகிய நீங்களும்,

**1Pe 2:5** ஜீவனுள்ள கற்களைப் போல ஆவிக்கேற்ற மாளிகை யாகவும், இயேசு கிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக் கேற்ப பலிகளைச் செலுத்தும் படிக்குப் பரிசுத்த ஆசாரியக் கூட்டமாக வும் கட்டப்பட்டு வருகிறீர்கள்.

**1Pe 2:6** அந்தப்படியே; இதோ, தெரிந்து கொள்ளப்பட்டதும் விலையேறப் பெற்றதுமாயிருக்கிற மூலைக்கல்லைச் சீயோனில்

வைக்கிறேன்; அதின் மேல் விசுவாசமாயிருக்கிறவன் வெட்கப்படு வதில்லை என்று வேதத்திலே சொல்லியிருக்கிறது.

**1Pe 2:7** ஆகையால் விசுவாசிக்கிற உங்களுக்கு அது விலை யேறப்பெற்றது; கீழ்ப்படியாமலிருக்கிறவர்களுக்கோ வீட்டைக்கட்டு கிறவர்களால் தள்ளப்பட்ட பிரதான மூலைக்கல்லாகிய அந்தக்கல் இடறுதற்கேதுவான கல்லும் விழுதற்கேதுவான கன் மலை யுமாயிற்று;

**1Pe 2:8** அவர்கள் திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களா யிருந்து இடறுகிறார்கள்; அதற்கென்றே நியமிக்கப்பட்டவர்களாயும் இருக்கிறார்கள்.

## அத்தியாயம் இரண்டு

2-1 தேவனுடைய வீட்டிலே நடைபெறும் முதலாம் நியாயத் தீர்ப்பை நிறைவேற்றுவதற்காக 1,44,000 ஆண்பிள்ளைகள் தங்களுடைய நெற்றியிலே தேவனுடைய ஏழு முத்திரை அடையளங்களை பெற்றுக் கொள்ளுதல்.

**2-2** தேவனுடைய முத்திரைகளுக்கு விரோதமாக எழும்பும் துன்மார்க்கர்கள், தங்கள் நெற்றியிலும், வலது கையிலும் மிருகத்தின் முத்திரை அடையாளங்களை பெற்றுக்கொண்டு தேவனுடைய வீட்டிலே நடைபெறும் நியாயத் தீர்ப்பில் பங்கடையும் வழிமுறைகள்.

## அத்தியாயம் இரண்டு

***2-1** தங்களுடைய நெற்றியில் தேவ முத்திரையின் அடையா ளங்களை பெற்றுக்கொள்ளும் 1.44.000 ஆண்பிள்ளைகள் தேவனு டைய வீட்டிலே நடைபெறும் நியாயத்தீர்ப்பிலிருந்து தப்பித்துக் கொள்ளும் வழிமுறைகள்.*

முதலாம் அடையாளம்:- பலிபீடத்தின் பிரமாணங்களை பின்பற்றி நடக்க வேண்டும்.

இரண்டாம் அடையாளம்:- புறஜாதிகளின் எந்த முறைகளையும் பின்பற்றக்கூடாது.

மூன்றாம் அடையாளம்:- கர்த்தருடைய பஸ்கா விருத்தை புசிக்க வேண்டும்.

நான்காம் அடையாளம்:- ஓய்வு நாளை பரிசுத்தமாக ஆசரிக்க வேண்டும்

ஐந்தாம் அடையாளம்:- மனச்சாட்சியின் பிரமாணத்திற்கு கீழ்படிய வேண்டும்.

ஆறாம் அடையாளம்:- இயேசுக்கிறிஸ்துவின் சாட்சியைப் பின்பற்றி நடக்கவேண்டும்.

ஏழாம் அடையாளம்:- பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள்ள வேண்டும்.

## அத்தியாயம் இரண்டு

*2-2 தேவனுடைய ஏழு முத்திரைகளுக்கு விரோதமாக எழும்பும் துன்மார்க்கர்கள், தங்கள் நெற்றியிலும், வலது கையிலும் மிருகத்தின் முத்திரை அடையாளங்களை பெற்றுக்கொண்டு தேவ னுடைய வீட்டிலே நடைபெறும் நியாயத்தீர்ப்பில் பங்கடையும் வழிமுறைகள்.*

1. நீதிமான்கள் தேவனுடைய முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியிலும்; துன்மார்க்கர்கள் மிருகத்தின் முத்திரை அடை யாளத்தை தங்கள் நெற்றியிலும் வலது கையிலும் பெற்றுக்கொள் வதின் பொருள், எழுத்திபடி ஆவியின் படி.

*நீதிமான்கள் தேவனுடைய முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியில் பெற்றுக்கொள்ளுவதின் பொருள் எழுத்திபடி:-*

வேத வசனங்களில் நிழலாட்டமாக பின்பற்ற வேண்டிய உடன்படிக்கையின் ஆசரிப்பு முறைகள், ஓய்வு நாளின் ஆசரிப்பு முறைகள் ஆகியவற்றை எழுத்திபடி செய்து அவைகளின் சுத்திகரிப்பு

நாட்களை நிறைவேற்றுதல் **Heb_8:5**, **Heb_9:9-10Heb_9:23**, **Heb_10:1 ,1Pe_3:21Col_2:16-23**, **Col_2:8-10**, **1Th_4:8-11**,

*நீதிமான்கள் தேவனுடைய முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியில் பெற்றுக்கொள்ளுவதின் பொருள் ஆவியின்படி:*

இயேசு கிறிஸ்து பாவத்தையும் மரணத்தையும் ஜெயங் கொண்டதின் மூலம் வேத வசனங்களில் நிழலாட்டமாக பின்பற்ற வேண்டிய உடன்படிக்கையின் ஆசரிப்பு முறைகளும் ஓய்வு நாளின் ஆசரிப்பு முறைகளும் அதன் பொருளுக்கு மாற்றப்படுகிறது. பொரு ளுக்கு மாற்றப்பட்ட தேவனுடைய சத்தியமான வார்த்தைகளை தங் கள் அறிவில் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு புதுசிருஷ்டியாக மாற்றப்பட்டு தேவ சித்தத்தை பூரணமாக நிறைவேற்றும்படி தங்கள் சரீர அவயவங்களில் நற்கிரியைகளை அடையாளங்களாக தரித்துக் கொள்ளுதல்.

2 துன்மார்க்கர்கள் மிருகத்தின் முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியிலும் வலது கையிலும் பெற்றுக்கொள்ளுவதின் பொருளை அறிந்து கொள்ளுவதற்கு உதாரணமாக கிறிஸ்துவினால் சொல்லப்பட்ட ஒரு உவமையின் பொருள் எழுத்தின்படி ஆவியின் படி:- **Mat_24:19**, **Mar_13:17**, **Luk_21:23**,

*கிறிஸ்துவினால் சொல்லப்பட்ட ஒரு உவமையின் பொருள் எழுத்தின்படி:-*

அந்நாட்களில் கர்ப்பவதிகளுக்கும் பால் கொடுப்பவர்களுக்கு ஐயோ! கடைசி நாட்களில் பூமியில் அறிவு பெருகும்போது; பாவங்களும் அக்கிரமங்களும் பூமியில் பெருகி, அதன் பின்விளை வாக கொடிய வியாதிகளும் கொள்ளை நோய்களும் ஜனங்களுக் குள்ளே பரவலாக இருக்கும்.

அப்பொழுது நல்ல மருத்துவ சிகிச்சையும் ஆரோக்கியமான உணவுப்பழக்கமும், அவர்கள் வியாதியின் கொடுமையிலிருந்து அவர்களை விடுவிக்க மாட்டாது; விசேஷமாக கர்ப்பவதிகளுக்கும் தாய்ப்பால் கொடுப்பவர்களுக்கும் ஏற்படும் வியாதியினாலும்

நோயினாலும் அவர்களுக்கு மிகவும் வேதனைகளும் கஷ்டங்களும் பெருகும்.

*கிறிஸ்துவினால் சொல்லப்பட்ட உவமையின் பொருள் ஆவியின்படி:-*

அந்நாட்களில் கர்ப்பவதிகளுக்கும் பால் கொடுப்பவர்களுக்கும் ஐயோ! கடைசி நாட்களில் பூமியில் அறிவு பெருகும்போது தேவ ஊழியர்கள் மத்தியில் கர்த்தருடைய வசனம் கேட்கக் கிடையாத பஞ்சம் இருக்கும், அப்பொழுது அறியாமையினால் பல வாக்குவாதங்களும் சண்டைகளும் ஏற்பட்டு தங்கள் சமாதானத்தை இழந்து வேதனைகளும் கஷ்டங்களும் அவர்களுக்குள்ளே பெருகும்.

விசேஷமாக ஆத்துமாக்களுக்காக கர்ப்ப வேதனைப்பட்டும், கிறிஸ்துவுக்குள் புதிய ஆத்துமாக்களை பெற்றெடுக்க முடியாதவர்களுக்கும், புதிய ஆத்துமாக்களை பெற்றெடுத்தும் அவர்களுக்கு களங்கமில்லாத ஞானப்பாலைக்கொடுத்து ஆவியில் வளர்க்க முடியாதவர்களுக்கு மன குழப்பமும் வேதனைகளும் பெருகும்.

தேவ ஊழியர்கள் மத்தியில் கர்த்தருடைய வசனம் கேட்கக் கிடையாத பஞ்சம் இருக்கிறபடியினாலும் அறியாமையினாலும், கிறிஸ்துவுக்குள் புதிதாக பிறந்த ஆத்துமாக்கள் களங்கமில்லாத ஞானப்பாலைத்தேடி தாய் சபையை விட்டு மற்ற இடங்களுக்கு கடந்து செல்லுகிறது; இதனால் ஆத்துமாக்களுக்காக கர்ப்ப வேதனைப்பட்டு, ஆத்துமாக்களை பெற்றெடுத்தும் அவர்களை ஆவியில் வளர்க்க முடியாதவர்களுக்கு மன குழப்பமும் வேதனைகளும் பெருகும்.

3. மிருகத்தின் முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியிலும் வலது கையிலும் பெற்றுக்கொள்ளுவதின் பொருள் எழுத்தின் படி:-

கணினியின் முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியிலும் வலது கையிலும் மருத்துவ சிகிச்சை மூலம் பெற்றுக்கொண்டு

அதனால் பொருளாதாரம் மற்றும் வாணிபத் தேவைகளுக்கு பயன் படுத்துவது.

4. மிருகத்தின் முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியிலும் வலது கையிலும் பெற்றுக்கொள்ளுவதின் பொருள் ஆவியின் படி:-

அந்திக்கிறிஸ்துவின் விசுவாசத்தையும் கிரியைகளையும் தங்கள் அறிவிலும் கிரியைகளிலும் ஏற்றுக்கொண்டவர்கள், தங்கள் மூன்று தலைவர்களான கள்ளத்தீர்க்கதரிசி, அந்தி கிறிஸ்து, சாத்தான், இவர்கள் வாயிலிருந்து புறப்படும் மூன்று அசுத்த ஆவிகளினால் வஞ்சிக்கப்பட்டு; தேவனுக்கும் தேவனுடைய கற்பனைகளை பின்பற்றுகிறவர்களுக்கும் விரோதமாகவும் இணையாகவும் விசுவாசத்திலும் கிரியைகளிலும் நடப்பார்கள்.

மேலும் தேவனுடைய கற்பனைகளை பின்பற்று கிறவர்களை வஞ்சிக்க முயற்சி செய்வது / உபத்திரவப்படுத்துவது / கொலை செய்வது ஆகிய கிரியைகளை செய்வார்கள், எனவே அந்திக் கிறிஸ்துவின் விசுவாசத்தையும் கிரியைகளையும், தங்கள் அறிவிலும் கிரியைகளிலும் ஏற்றுக் கொண்டவர்களை ஆவியின்படி அடையாளம் கண்டு பிடிப்பவர்கள் மட்டும்; பரலோக தேவனின் சத்தியமான வார்த் தைகளின் ஊழியத்தை பயமில்லாமல் மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ள முடியும்.

*1-1 தேவனுடைய முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியில் பெற்றுக்கொள்ளுபவர்களின் கிரியைகள்:-*

தேவனுடைய முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியில் பெற்றுக்கொள்ளுபவர்கள் தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் அறிவைப் பெற்று தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவார்கள் Rev_14:1-5, Rev_19:9,

*1-2 மிருகத்தின் முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியிலும் வலது கையிலும் பெற்றுக்கொள்ளுபவர்களின் கிரியைகள்:-*

மிருகத்தின் முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியிலும் வலது கையிலும் பெற்றுக்கொள்ளுபவர்கள்; மூன்று அசுத்த ஆவிகளினால் வஞ்சிக்கப்பட்டு தேவனுக்கும் தேவனுடைய கற்பனைகளை பின்பற்றுகிறவர்களுக்கும், விரோதமாகவும் இணையாகவும், விசுவாசத்திலும் கிரியைகளிலும் செயல்படுவார்கள். Rev_19:20,

*2-1 தேவனுடைய முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியில் பெற்றுக்கொள்ளுபவர்களின் கிரியைகள்:-*

கிறிஸ்துவுடன் இருப்பவர்கள் அழைக்கப்பட்டவர்களும் தெரிந்து கொள்ளப்பவட்டவர்களும் உண்மையுள்ளவர்களுமாக இருப்பார்கள் இவர்கள் பரிசுத்த ஆவி, அபிஷேக ஆவி, சத்திய ஆவி, ஆகியவைகளின் கிரியைகளினால் ஒருங்கிணைக்கப்படுவார்கள்.

*2-2 மிருகத்தின் முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியிலும் வலது கையிலும் பெற்றுக்கொள்ளுபவர்களின் கிரியைகள்:-*

மூன்று அசுத்த ஆவிகளின் அற்புதங்களினால் கள்ளத்தீர்க்கதரிசி, அந்திக்கிறிஸ்து, சாத்தான் , ஆகிய இவர்களை பின் தொடர்கிறவர்கள் ஒருங்கிணைக்கப்படுவார்கள் Rev_16:13-15,

*3-1 தேவனுடைய முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியில் பெற்றுக்கொள்ளுபவர்களின் கிரியைகள்:-*

ஒரு ஸ்திரீ சகல ஜாதிகளையும் இரும்புக்கோலால் ஆளுகை செய்யும் ஆண்பிள்ளையை பெறும்படி பிரசவ வேதனையடைந்து வருத்தப்பட்டு அலறுகிறாள். Rev_12:1-5,

*3-2 மிருகத்தின் முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியிலும் வலது கையிலும் பெற்றுக்கொள்ளுபவர்களின் கிரியைகள்:-*

ஒரு ஸ்திரீ பரிசுத்தவான்களின் இரத்தத்தினாலும் இயேசுக்கிறிஸ்துவின் சாட்சிகளுடையவர்களின் இரத்தத்தினாலும் வெறிகொண்டிருக்கிறாள் Rev_17:6, Rev_18:4, Rev_18:24,

*4-1 தேவனுடைய முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியில் பெற்றுக்கொள்ளுபவர்களின் கிரியைகள்:-*

உலகத்தோற்றத்திற்கு முன்னே அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் பெயர்எழுதப்பட்டவர்கள் மிருகத்தின்அடையாளத்தையும் அசுத்த ஆவிகளின் அற்புதங்களையும்தங்கள் அறிவிலும் கிரியைகளிலும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் Rev_13:8, Rev_17:8,

*4-2 மிருகத்தின் முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியிலும் வலது கையிலும் பெற்றுக்கொள்ளுபவர்களின் கிரியைகள்:-*

உலகத்தோற்றத்திற்கு முன்னே அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் பெயர் எழுதப்படாதவர்கள் மிருகத்தை வணங்கி அசுத்த ஆவிகளின் அற்புதங்களை தங்கள் அறிவிலும் கிரியைகளிலும் ஏற்றுக் கொள்ளுவார்கள் Rev_13:8, Rev_17:8,

*5-1 தேவனுடைய முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியில் பெற்றுக்கொள்ளுபவர்களின் கிரியைகள்:-*

தேவன் பரிசுத்தவான்களுக்கு1260 நாள் அளவும் தீர்க்கதரிசனம் சொல்லும்படி அதிகாரங்களைக் கொடுத்தார். பரிசுத்தவான்கள் தேவ வசனத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் சாத்தானை ஜெயித்தார்கள். Rev_11:3, Rev_12:11

*5-2 மிருகத்தின் முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியிலும் வலது கையிலும் பெற்றுக்கொள்ளுபவர்களின் கிரியைகள்:-*

கீழே விழத்தள்ளப்பட்ட சாத்தான் மிருகத்தின் முத்திரையை பெற்றவர்களுக்கு 42 மாதமளவும் பரிசுத்தவான்களோடு யுத்தம் செய்து ஜெயங்கொள்ளும்படி அதிகாரம் கொடுத்தது Rev_13:1,

*6-1 தேவனுடைய முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியில் பெற்றுக்கொள்ளுபவர்களின் கிரியைகள்:-*

பரிசுத்தவான்கள் தங்களுடைய ஊழியத்தில் ஆவிக்குரிய பட்டயமாகிய தேவ வசனத்தைக்கொண்டு கடிந்து கொண்டு உபதேசம் பண்ணும்போது அதை எதிர்ப்பவர்கள் எழுத்தின் படியுள்ள பட்டயத்தைக்கொண்டு வெட்டுவார்கள் ஆனாலும் சமாதானத்தின் சுவிசேஷத்தை உடையவனாயிருந்து தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுகிறவர்கள் எலியாவைப்போல பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள் Rev_13:9-10, Rev_14:12-13,

*6-2 மிருகத்தின் முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியிலும் வலது கையிலும் பெற்றுக்கொள்ளுபவர்களின் கிரியைகள்:-*

ஒருவன் தீமை செய்கிறதிலிருந்து விலகி நன்மை செய்கிறபோது, தேவன் அவன் மேல் வைத்த நியாயத்தீர்ப்பை அவனை விட்டு விலக்குவார்; ஒருவன் பரிசுத்தவான்களுக்கு தீமை செய்யத் திட்டமிடுகிறபோது, அது போலவே தேவன் அவனுக்கு தீமையை திட்டமிட்டுச் செய்வார் Rev_11:5,

*7-1 தேவனுடைய முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியில் பெற்றுக்கொள்ளுபவர்களின் கிரியைகள்:-*

அந்திக் கிறிஸ்துவின் முத்திரைஅடையாளத்தை தங்கள் நெற்றியிலும் வலது கையிலும் பெற்றுக் கொள்ளாதவர்கள் மூன்று அசுத்த ஆவிகளையும் ஜெயங்கொண்டு தேவனுடைய முத்திரை அடை யாளத்தை தங்கள் நெற்றியில் பெற்றுக்கொள்ளுகிறவர்கள் முதலாம் உயிர்தெழுதலில் பங்கடைவார்கள். Rev_20:4-6

*7-2 மிருகத்தின் முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியிலும் வலது கையிலும் பெற்றுக்கொள்ளுபவர்களின் கிரியைகள்:-*

அந்திக் கிறிஸ்துவின் விசுவாசத்தையும் கிரியைகளையும் தங்கள் அறிவிலும் கிரியைகளிலும் ஏற்றுக்கொண்டவர்கள் தேவனுடைய கோபாக்கினையில் பங்கடைவார்கள் Rev_16:1-2, Rev_14:9-11,

*8-1 தேவனுடைய முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியில் பெற்றுக்கொள்ளுபவர்களின் கிரியைகள்:-*

தேவனுடைய முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியில் பெற்றுக்கொள்ளுபவர்கள் முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கடைந்து அக்கினி கலந்த கண்ணாடிக் கடலில் ஞானஸ்தானம்,
பெற்று மகிமையடைவார்கள். Rev_15:2-3, Rev_4:6,

*8-2 மிருகத்தின் முத்திரை அடையாளத்தை தங்கள் நெற்றியிலும் வலது கையிலும் பெற்றுக்கொள்ளுபவர்களின் கிரியைகள்:-*

மூன்று அசுத்த ஆவிகளின் அற்புதங்களினால் கள்ளத்தீர்க்கதரிசி, அந்திக்கிறிஸ்து, சாத்தான், ஆகிய இவர்களை பின் தொடர்கிறவர்கள் அக்கினி நரகத்தில் தள்ளப்படுவார்கள். Rev_19:20, Rev_20:10,

## அத்தியாயம் மூன்று

*3-0 ஸ்திரியாகிய சபையிலிருந்து 1.44.000 ஆண்பிள்ளைகள் தேவனுடைய ஏழு முத்திரையின் அடையாளங்களை பெற்றுக் கொள்ளுவதால் ஆண்பிள்ளைகள் பிறக்கிறது .*

தேவனுடைய வீட்டிலே துவங்கும் நித்திய நியாத்தீர்ப்பின் மூலம் தேவனுடைய ஏழு முத்திரைகளை தங்கள் நெற்றில் அடையாளங்களாகப் பெற்றுக்கொள்ளும் 1.44.000 ஆண் பிள்ளைகளை பெற்றெடுப்பதற்காக சபையானது பிரசவ வேதனையடைந்து வருத்தப்பட்டு அலறுகிறது. 1Pe_4:16-18, Rev_12:1-2, Rom_8:19-22,

தேவனுடைய வீட்டிலே நித்திய நியாயத்தீர்பை துவங்குவதற்காக, எருசலேம் நகரம் எங்கும் உருவப்போய் அதற்குள்ளே செய்யப்படுகிற சகல அருவருப்புகளின் நிமித்தம் தங்கள் இருதயத்தில் பெருமூச்சு விட்டழுகிறவர்களின் நெற்றியில்; தேவனுடைய முத்திரை அடையாளங்களைப்போட்டு, அவர்களின் நடுவிலிருந்து ஆண் பிள்ளைகளை பிரித்தெடுப்பதற்காக பரிசுத்த ஸ்தலத்திலுள்ள மூப்பர்களிடத்திலிருந்து சங்காரம் செய்யத் துவங்கினார்கள். Eze_9:1-11, Eze_11:1-13, Jer_25:29, Isa 66:6-10

### ஆண்பிள்ளைகளை இனம் கண்டறிதல் :-

பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்த அடையாளங்களை போல, தேவனுடைய முத்திரை அடையாளத்தின் வசனங்களின் தேவ அறிவை, ஒருவனுடைய சரீரமாகிய கூடாரத்தில் வாசம் பண்ணும் தலைச்சன் பிள்ளையாகிய ஜென்ம சுபாவ மனிதன் தரித்திருக்கும் போது; அவன் இயேசு கிறிஸ்துவின் விசுவாசத்தின் மூலம் செய்து கொண்ட இரட்சிப்பின் உடன்படிக்கை மரணம் அடையாமல் ஜீவனோடியிருக்கும்.

தேவமுத்திரையின் அடையாளத்தை ஒருவனுடைய ஜென்ம சுபாவ மனிதன் தரித்திருக்கும்போது அவன் முதற்பலனாக / ஆண் பிள்ளையாக / தலைச்சன் பிள்ளையாக பிரித்தெடுக்கப்படுகிறான் இப்படி பிரித்தெடுக்கப்பட்டவர்கள் தேவ சித்தத்தை நிறை

வேற்றுவதின் மூலம் கிறிஸ்துவின் மணவாட்டி சபையாக மாறு கிறார்கள்.

தேவனுடைய முத்திரை அடையாத்தின் தேவ அறிவை கீழே குறிப்பிட்ட நான்கு வழிமுறைகளில் ஏற்றுக்கொள்ளுபவர்கள் எகிப் தின் வாதைகளிலிருந்து காக்கப்படுவது போல ஆவி ஆத்துமாவில் தேவன் அனுப்பும் நியாயத்தீர்ப்பின் மூலம் உண்டாகும் சாபங் களிலிருந்து காக்கப்படுகிறார்கள்.

1. தேவனுடைய ஏழு முத்திரை அடையாளத்தின் தேவ அறிவை தங்கள் அறிவிலும், செயலிலும், எதிர்த்து நிற்காமல் ஏற்றுக்கொண்டு நடைமுறைபடுத்துகிறவர்கள்.

2. தேவனுடைய ஏழு முத்திரை அடையாளத்தின் தேவ அறிவை ஏற்கனவே கொஞ்சம் அறிந்தவர்கள், மேலும் முழுமையாக தேவ அறிவை அறிந்து கொண்டு நடைமுறைபடுத்துகிறவர்கள்.

3. தேவனுடைய ஏழு முத்திரை அடையாளத்தின் தேவ அறி வினால் இயன்றளவு நற்கிரியைகள் செய்துகொண்டு, மேலும் தேவ அறிவை முழுமையாக நடைமுறைப்படுத்த முயற்சியோடு போராடு கிறவர்கள்

4. தேவனுடைய ஏழு முத்திரை அடையாளத்தின் தேவ அறிவினால் நற்கிரியைகள் செய்வதற்காக நல் மனம் உள்ளவர்களாக யிருந்து, நற்கிரியைகள் செய்து முன்னேறுவது; மேலும் தங்களைப் போல உள்ளவர்களுடன் இணைந்து, கிறிஸ்துவின் சரீர அவயவங்களாக நற்கிரியைகளை செய்து தேவ சித்ததை நிறை வேற்றுகிறவர்கள்.

மோசேயின் மூலமாக அறிவிக்கப்பட்ட தேவவார்த்தை களுக்கு இஸ்ரவேல் ஜனங்கள் கீழ்ப்படிந்து எகிப்தின் பத்து வாதை களிலிருந்து காக்கப்பட்டது போல; மேலே குறிப்பிட்ட இந்த நான்கு வகையான ஜனங்கள் தேவ சித்தத்தை நிறைவேற்றும் போது ஆவி. ஆத்துமாவில் தேவன் அனுப்பும் நியாயத்தீர்ப்பின் மூலம் உண்டாகும்

சாபங்களிலிருந்து காக்கப்படுகிறார்கள். Rev_9:1-4, Rev_7:1-4, Rev_7:13-14,

**தேவனுடைய முத்திரையின் அறிவை ஏற்றுக் கொள்ளாத வர்களுக்கு தேவனுடைய நித்திய நியாயத்தீர்ப்பு :-**

தேவனால் முன் குறிக்கப்பட்ட 1,44,000 ஆண்பிள்ளை நாங் கள் தான் என்று யார்? உரிமைகொண்டாடினாலும், அல்லது யார்? 1,44,000 ஆண்பிள்ளைகள் வரிசையில் சேர்ந்து கொள்ள விரும்பி னாலும், அவர்கள் தேவனுடைய ஏழு முத்திரையின் அடையாள மாகிய தேவ வார்த்தையின் தேவ அறிவை பெற்று இருக்கிறார்களா? என்று தயவு செய்து பரிசோதித்துப் பார்த்துக்கொள்ள வேண்டும்; ஏனென்றால் தேவ முத்திரையின் அறிவை சரியாக புரிந்து கொள் ளாமல் அல்லது அறியாதிருக்கும்போது, தேவனுடைய நித்திய நியா யத்தீர்ப்பின் தண்டனையை அடைய நேரிடும்.

பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்த அடையாளங்கள் இல்லாத வீட்டில் தலைச்சன் பிள்ளை மரணமடைந்தது போல, தேவ முத்திரை யின் தேவ அறிவை ஏற்றுக்கொள்ளாத தலைச்சன் பிள்ளையாகிய ஜென்ம சுபாவ மனிதனுடைய கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கை யில் இரட்சிப்பு மரணமடையும்; தேவ முத்திரையின் அறிவை ஏற்றுக்கொள்ளும்போது மீண்டும் தேவனுடைய இரட்சிப்பை பெற் றுக்கொள்ள அநேக வாய்ப்புகள் உள்ளது.

ஒருவன் தேவனுடைய ஏழு முத்திரையின் அடையாள மாகிய தேவ அறிவை ஏற்றுக்கொள்ளாமல் தன்னுடைய சுய விசுவா சத்தை நிலை நிறுத்தும்படியாக மனிதனுடைய அறிவில் முயற்சி செய்யும் போது; அவனுடைய அறியாமையினால் மிருகமாகிய அந்திக் கிறிஸ்த்துவின் முத்திரை அடையாளங்களை தங்கள் நெற்றியிலும், வலது கையிலும் பெற்றுக்கொண்டு அந்திக் கிறிஸ்துவின் மண வாட்டி சபையாக மாறி, தேவனுடைய ஏழு முத்திரை அடையா ளங்களுக்கும் அவைகளை ஏற்றுக் கொண்டவர்களுக்கும் விரோத மாக அறிவிலும் கிரியைகளிலும், செயல்படுவதால் அந்திக்

கிறிஸ்துக்கள் மற்றும் கள்ள தீர்க்கதரிசிகள் ஆகிய இவர்களுடன் நேரடியாக அக்கினி நரகத்தில் தள்ளப்படுவார்கள்.

தேவனால் முன் குறிக்கப்பட்ட 1.44.000 ஆண்பிள்ளை களாகிய மணவாட்டி சபை நாங்கள் என்று உரிமை கொண்டாடுகிற தேவ ஜனமாகிய சீயோன் குமாரத்தியே! உனக்கு கிடைத்த இந்த நாளிலாவது சமாதானத்திற்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயா னால் உனக்கு நலமாயிருக்கும்; முதற்பலனாக / ஆண்பிள்ளையாக / தலைச்சன்பிள்ளையாக 1.44.000 வரிசையில் சேரவிரும்புகிறவர்கள் தேவனுடைய ஏழு முத்திரை அடையாளத்தின் தேவ அறிவை சாந்த மாக ஏற்றுக்கொள்ளுங்கள்.

இந்த தீர்க்க தரிசன தேவ வார்த்தைகளை வாசிக்கிறவன் கேட்கிறவன் இவைகளைக் கைக்கொள்ளுகிறவர்கள் பாக்கிய வான்கள் Rev_1:2-3,

ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன் ; விருப்பமுள்ள வன் ஜீவத் தண்ணீரை இலவசமாய் வாங்கிக் கொள்ளக்கடவன். Rev_22:14-17,

**Rev 22:18** இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்க தரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும், தேவன் சாட்சியாக எச்சரிக்கிற தாவது: ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால், இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளை தேவன் அவன் மேல் கூட்டுவார்.

**Rev 22:19** ஒருவன் இந்த தீர்க்கதரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப் போட்டால், ஜீவ புஸ்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும், இந்தப்புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கை தேவன் எடுத் துப் போடுவார்.

## ஆண் பிள்ளைகளின் விசுவாச நற்கிரியைகள்

Rev_14:1-5 , Rom_7:1-6, 2Th_2:7-12, 2Co_11:2,

1. இயேசு கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கையில் உறுதியாக நிலைத்திருப்பவர்கள்.

2. பிதாவின் நாமமான தேவ வார்த்தையை தங்கள் ஆவியில் ஏற்றுக்கொண்டவர்கள்.

3. இயேசு கிறிஸ்துவின் சாட்சியை பின்பற்றுகிறவர்கள்.

4. தேவனுடைய சத்தியமான வார்த்தைகளிலே கபடமும் கள்ளத் தீர்க்க தரிசனமும் இல்லாமல் தேவனுடைய வார்த்தையை சாட்சியாக அறிவிப்பார்கள்.

5. ஸ்திரியாகிய சபையினால் தங்களை கரைபடுத்திக் கொள்ளாதவர்கள்.

6. அந்திக்கிறிஸ்துவின் சொருபத்தையும் அதன் அறிவையும் ஏற்றுக்கொள்ளாதவர்கள்.

7. மோசேயின் பாட்டையும் ஆட்டுக்குட்டியானவரின் பாட்டையும் கற்றுக் கொண்டு தேவ சுரமண்டலத்தோடு பாடக்குடியவர்கள்.

8. தேவனுடைய வார்த்தைகள், இயேசு கிறிஸ்துவைபற்றிய சாட்சி ஆகிய இவைகளின் தீர்க்கதரிசனங்களை வாசித்தும் கேட்டும், இவைகளை கைக்கொண்டு பாக்கியவான்காளாக மாறுகிறவர்கள். Rev_1:2-3,

9. தேவனுடைய வார்த்தை, இயேசு கிறிஸ்துவை பற்றின சாட்சி ஆகிய இவைகளின் தீர்க்கதரிசன வசனங்களில் காத்திருந்து ஏழு சபைகளின் தேவதரிசனத்தைப் பெற்று ஆவியில் மருரூபம் அடைந்திருப்பவர்கள். Rev_1:9-11,

10. தேவனுடைய சத்தியமான வார்த்தைகள், இயேசு கிறிஸ்துவை பற்றிய சாட்சி ஆகிய இவைகளின் தீர்க்க தரிசன வசனங்

களை புசித்து கிறிஸ்துவை தங்களுடைய இராஜாவாக அங்கிகரித்து அல்லேலூயா; என்று கெம்பீர சத்தமிடுகிறவர்கள் Rev_19:7-10

11. தேவனுடைய கற்பனைகளை பின்பற்றி அவருடன் செய்து கொண்ட விசுவாச உடன்படிக்கையில் உறுதியோடு பொறு மையாக காத்திருப்பவர்கள் மிருகத்தின் முத்திரையை தங்கள் நெற்றி யிலும் வலது கையில் தரித்துக் கொள்ளாலும், மிருகத்தின் சொரு பத்தை வணங்காமலும் இருந்து தங்களை காத்துக் கொள்ளுகிற வர்கள். Rev_14:9-13,

12. தேவனுடைய சத்தியமான வார்த்தைகள், இயேசு கிறிஸ் துவை பற்றிய சாட்சி ஆகிய இவைகளின் தீர்க்க தரிசன வசனங்களை தங்கள் வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தி சாத்தானை ஜெயிப்பவர் கள். Rev_12:7-12,

13. தேவனுடைய சத்தியமான வார்த்தைகள், இயேசு கிறிஸ் துவை பற்றிய சாட்சி ஆகிய இவைகளின் தீர்க்க தரிசன வசனங்களை பின்பற்றி 1.44.000 எண்ணிக்கையில் வருகிறவர்களுடன் வலுசர்ப்பம் 42 மாதம் யுத்தம் செய்தது. இந்த யுத்தத்தில் சிரச்சேதம் பன்னப்படு வது அல்லது மரணத்தை காணமல் உயிரோடு பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவது, தங்கள் விசுவாசத்திற்கும் பொறுமைக் கும் ஏற்றபடி மாறுபடுகிறது. Rev_12:13-17, Rev_13:7-10

14. தேவ வசனத்தின் நிமித்தமும் இயேசு கிறிஸ்துவின் சாட்சியை பின்பற்றிதினாலும் கொல்லப்பட்ட ஆத்துமாக்களை பலி பீடத்தின் கீழ் வந்து சேர்வார்கள். அவர்களுக்கு வெள்ளை அங்கிகள் கொடுக்கப்பட்டு சிறிது காலம் இளைப்பாரிக் கொண்டு இருப்பார்கள். Rev_12:13-17, Rev_13:7-10

15. தேவ வசனத்தின் நிமித்தம் இயேசுகிறிஸ்துவின் சாட் சியை பின்பற்றி, மிருகத்தின் முத்திரையை தரித்துக் கொள்ளாமல் மரித்தவர்கள், அல்லது கொல்லப்பட்ட ஆத்துமாக்கள் முதலாம் உயிர்தெழுதலில் பங்கடைந்து கிறிஸ்துவுடன் ஆயிரம் வருடம் அரசாளுவார்கள். Rev_20:4-6,

அத்தியாயம் நான்கு

4-1 ஆண் பிள்ளைகள் கற்றுக்கொண்ட சீயோனின் புதிய பாடல்கள்

4-2 ஆண் பிள்ளைகள் கற்றுக் கொண்ட சீயோனின் முதலாவது புதிய பாட்டு

4-3 ஆண் பிள்ளைகள் கற்றுக் கொண்ட சீயோனின் இரண்டாவது புதிய பாட்டு

4-4 ஆண் பிள்கைள் கற்றுக்கொண்ட சீயோனின் மூன்றாவது புதிய பாட்டு

அத்தியாயம் நான்கு

*4-1 ஆண் பிள்ளைகள் கற்றுக்கொண்ட சீயோனின் புதிய பாடல்கள்:-*

முதற்பலனாக மீட்டுக் கொள்ளப்படுகிற 1.44.000 ஆண் பிள்ளைகள் மட்டும் கற்றுக்கொள்ளக் கூடிய சீயோனில் பாடும் புதிய பாடல்கள் **Rev_15:2-3**, **Rev_5:10**, **Rev_14:1-5 ,**

சீயோனின் பாடும் புதிய பாட்டைக் கற்றுக் கொள்ள சீயோன் மலைக்கு பல தேசங்களிலிருந்து வருகிறவர்கள். **Isa_35:10**, **Isa_51:11**, **Isa_51:3-4**, **Isa_2:1-5**, **Isa_65:8-16**, , **Jer_50:4-8**, **Zec_8:14-23**, **Jer_31:1-8**, **Jer_31:9-14**, **Mic_4:1-3**, **Psa 137:1-9**,

ஒருவர் தேவனுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களின் மூலம் தங்கள் ஆவி, ஆத்துமாவில் பெற்றுக் கொள்ளும் மகிழ்சியில் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து தேவனுக்குத் துதி செலுத்துவதே, சீயோனில் பாடும் புதிய பாட்டின் சுரமண்டல இராகங்கள். **Rev_15:2-3**, **Rev_5:10**, **Rev_14:1-5 ,**

மோசேயின் மூலம் மனிதனுடன் தேவன் செய்து கொண்ட இரண்டு உடன்படிக்கையின் ஆசீர்வாதங்கள் மோசேயின் இரண்டு

பாட்டு, இயேசு கிறிஸ்துவின் மூலம் மனிதனுடன் தேவன் செய்து கொண்ட ஒரு உடன்படிக்கையின் ஆசீர்வாதங்கள், ஆட்டுக் குடியா னவரின் ஒரு பாட்டு.

**சீயோனில் பாடும் புதிய பாட்டு-ஒன்று**

சீனாய் / ஒரேப் மலையில் மோசேயின் மூலம் மனிதனுடன் தேவன் செய்து கொண்ட உடன்படிக்கையினால் பெற்றுக்கொள்ளும் ஓய்வு நாளின் ஆசீர்வாதங்களின் பாட்டு. **Lev_26:46**, **Lev_26:1**, **Deu_29:1**,

**சீயோனில் பாடும் புதிய பாட்டு- இரண்டு**

மோவாப் தேசத்தில் மோசேயின் மூலம் மனிதனுடன் தேவன் செய்து கொண்ட உடன்படிக்கையினால் பெற்றுக்கொள்ளும் ஆசீர்வாதங்களின் பாட்டு. **Deu_31:19-22**, **Deu_31:30**, **Deu_32:44**, **Mal_3:16-18**, **Mal_4:1-6**,

**சீயோனில் பாடும் புதிய பாட்டு- மூன்று**

இயேசு கிறிஸ்துவின் விசுவாசத்தின் மூலம் மனிதனுடன் தேவன் செய்து கொண்ட உடன்படிக்கையினால் பெற்றுக் கொள்ளும் ஆசீர்வாதங்களின் பாட்டு / ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்தை புசித்ததினால் மணவாட்டி சபையின் கெம்பீரசத்தத்தின் அல்லேலூயா பாட்டு.

## அத்தியாயம் நான்கு

4-2 ஆண்பிள்ளைகள் கற்றுகொண்ட சீயோனின் முதலா வது புதிய பாட்டு சீனாய் / ஒரேப் மலையில் மோசேயின் மூலம் மனிதனுடன் தேவன் செய்து கொண்ட ஓய்வு நாள் உடன்படிக்கை யின் பிரமாணங்களின் மூலம் ஓய்வு நாளின் ஆசீர்வாதங்கள் **Lev_26:1-13**, **Exo_31:16**

**பல்லவி**

1 ***Lev 26:1*** *நீங்கள் உங்களுக்கு விக்கிரகங்களை உண்டாக்க வேண்டாம்:-*

எழுத்தின்படி விக்கிரங்களையும் ஆவியின்படி பொருளாசை யாகிய விக்கிரங்களையும் உண்டாக்க வேண்டாம். **Eph_5:5**

*2. நீங்கள் உங்களுக்கு சுரூபங்களையும் உண்டாக்க வேண்டாம்:-*

எழுத்தின்படி நீங்களே உருவாக்கின சுருப அடையாளங் களையும், ஆவியின்படி நீங்களே திட்டமிட்ட கற்பனைகளையும் உண்டாக்க வேண்டாம். **Isa_2:6-10**, **Isa_2:18-22**,

*3. நீங்கள் உங்களுக்குச் சிலையை நிறுத்தாமலும் இருப்பீர்களாக:-*

எழுத்தின்படி உங்களுக்கு சிலையை நிறுத்தாமலும் ஆவி யின்படி மனிதனால் திட்டமிட்ட கற்பனைகளை பின்சந்தியார் பின் பற்றுவதற்காக அறிவிக்க வேண்டாம். **Eze_14:1-8**,

*4. நீங்கள் உங்களுக்கு சித்திரந்தீர்த்த கல்லை நமஸ் கரிக்கும் பொருட்டு உங்கள் தேசத்தில் வைக்காமலும் இருப்பீர் களாக:-*

எழுத்தின்படி நீங்களே சித்திரந்தீர்த்த கல்லையும் ஆவியின் படி தங்களுடைய விருப்பத்திற்கேற்றபடியுள்ள அக்கிரம சிந்தை களை இருதயத்தில் வைக்க வேண்டாம்.

## அனு பல்லவி

*5. நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்*

உடன்படிக்கையினால் நீங்கள் என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள்,

இளம் வயது நாயகன் = பரிசுத்த ஆவி

இளம் வயது நாயகி / மனைவி = பரிசுத்த ஆவியுடன் உன் ஆவி செய்து கொண்ட உடன்படிக்கை. **Jer_2:2**, **Rev_2:4-5**, **Lev_26:14-15**, **Mal_2:1-16**

*6. Lev 26:2 என் ஓய்வு நாட்களை ஆசரித்து, என் பரிசுத்த ஸ்தலத்தைக் குறித்துப் பயபக்தியாயிருப்பீர்களாக; நான் கர்த்தர்.*

என் ஓய்வு நாட்களை ஆசரித்து என் பரிசுத்த ஸ்தலத்தைக் குறித்துப் பயபக்தியாயிருப்பாயாக மனிதனுக்கும் தேவனுக்கும் மத்தியில் அடையாளங்களாக கொடுக்கப்பட்ட ஓய்வு நாட்களையும், பரிசுத்த ஸ்தலைத்தையும் குறித்து சொல்லப்பட்ட, பிரமாணங்களை கைக்கொள்ள வேண்டும். **Eze_20:12**, **Eze_20:20**,

**சரணங்கள்**

*7. **Lev 26:3** நீங்கள் என் கட்டளைகளின்படி நடந்து, என் கற்பனைகளைக் கைக்கொண்டு, அவைகளின்படி செய்தால், இப்பொழுது சொல்லப்படும் ஆசீர்வாதங்கள் எல்லாம் உன் மேல் வந்து பலிக்கும்.*

*8. Lev 26:4 நான் ஏற்ற காலத்தில் உங்களுக்கு மழை பெய்யப்பண்ணுவேன்;*

ஏற்ற வேளையில் சமயத்திற்கேற்ற வார்த்தைகளை பேசும்படி நான் உன் வாயைத்திறப்பேன்.

**Isa_50:4**, **Zec_10:1-3**, **Amo_4:7**, **Job_29:21-23**, **Deu_32:2**, **Job_28:24-28**, **Pro_12:25**, **Pro_15:23**, **Pro_15:30**, **Pro_16:24**, **Pro_17:22**, **Pro_25:11**, **Pro_25:15**, **Jer_3:3**, **Jer_5:24**, **Deu_28:12**, **Deu_28:24**, **Isa_57:20**, **Pro_15:2**, **Mal_3:7-12**,

*9. பூமி தன் பலனையும், வெளியிலுள்ள மரங்கள் தங்கள் கனியையும் கொடுக்கும்.*

வேத வசனங்களில் மறைபொருளாக உள்ள இரகசியங்களை எளிமையாக புரிந்து கொள்ள முடியும்.

வேத வசனங்களுக்கு வெளியே உள்ள நன்மை, தீமைகளை எளிமையாக புரிந்து கொள்ள முடியும். **Isa_58:11**, **Pro_3:7-8**, **Jer_20:9**, **Lam_1:13**, **Isa_55:10-13**, **Isa_37:30-32**,

*10. Lev 26:5 திராட்சப் பழம் பறிக்குங் காலம் வரைக்கும் போரடிப்புக் காலம் இருக்கும் ;*

திராட்சரசம் போன்ற நல்ல மிருதுவான தேவ ஆலோசனை களின் புத்திமதிகளை ஏற்றுக்கொள்ளும் நாள் வரைக்கும், இருத யத்தில் தேவ வசனத்தை தியானிப்பதினால் கிடைக்கிற நன்மை தீமைகளை பகுத்தறியும் அறிவு இருக்கும் (தேவ ஆலோசனைகளின் புத்திமதிகளை அலட்சியப் படுத்தும்போது இருதயத்தில் நன்மை தீமைகளை பகுத்தறியும் அறிவு ஓய்ந்துபோகும் / குறைந்துபோகும்) **Ecc_9:7**, **Ecc_10:19**,**Pro_3:9-10** , **Psa_104:15** , **Zec_9:17**, **Isa_65:8**, **Joe_1:5**, **Joe_2:23-34**, **Psa_128:3**, **Isa_36:17**, **Gen_49:11**, **Isa_55:1**,

*11. விதைப்புக் காலம் வரைக்கும் திராட்சப் பழம் பறிக்குங் காலம் இருக்கும்;*

தேவ வார்த்தைகளின்படி நற்கிரியைகள் செய்கிற நாள் வரைக்கும் தேவனுடைய புத்திமதிகளின் ஆலோசனைகளை ஏற்றுக் கொள்ளும் மனசாட்சி இருக்கும் **Isa_5:2**, **Isa_1:22** **Jer_2:21**, **Deu_32:33-35**, **Isa_56:12**, **Pro_20:1**

*12. நீங்கள் உங்கள் அப்பத்தைத் திருப்தியாகச் சாப் பிட்டு, உங்கள் தேசத்தில் சுகமாய்க் குடியிருப்பீர்கள்*

தேவன் உங்களுக்கு பகிர்ந்து கொடுத்த விசுவாச அளவுப் பிரமாணத்தில் நிலைத்திருந்து தேவ வார்த்தைகளை நன்றாக

நிதானித்து பகுத்தறிகிறபடியால் தேவன் உங்களுக்கு பகிர்ந்து கொடுத்த ஊழிய அழைப்பின் அளவுப் பிரமாணத்தில் உறுதியாக முழு மனதுடன் நிலைத்திருப்பீர்கள். **2Co_10:12-18**, **Rom_12:2-6**, **Eph_4:7**, **Eph_4:13**, **Eph_4:16**, **1Pe_4:10**, **1Co_12:4**,

*13. **Lev 26:6** தேசத்தில் சமாதானம் கட்டளையிடுவேன்; தத்தளிக்கப்பண்ணுவார் இல்லாமல் படுத்துக்கொள்வீர்கள்;*

உங்கள் ஊழிய அழைப்பின் அளவுப்பிரமாணத்தில் நிலைத் திருந்து நீங்கள் ஊழியம் செய்யும்போது உங்கள் ஊழியத்தில் சமாதா னத்தை கட்டளையிடுவேன்; தேவனுடைய விசுவாசத்தில் கலங்கி இடறல் அடையாதபடிக்கு தேவனுடைய உடன்படிக்கையில் உறுதி யாக நிலைத்திருப்பீர்கள். **Pro_25:26**, **2Th_2:3**, **1Ti_1:19**, **Joh_14:1** , **Rev_2:19**,

*14. துஷ்ட மிருகங்களைத் தேசத்தில் இராதபடிக்கு ஒழியப் பண்ணுவேன்; பட்டயம் உங்கள் தேசத்தில் உலாவுவதில்லை.*

பெருமை, கோபம்,பொறமை போன்ற மிருகத்தனமாக சுபாவங்களை உங்களை விட்டு நீங்கும்படி தேவன் கட்டளை யிடுவார்; நீங்கள் மற்றவர்களை பட்டயக் குத்துக்கள் போல உள்ள வார்த்தைகளைக் கொண்டு பேசமால் இருப்பீர்கள், எனவே மற்றவர் களும் உங்களிடம் ஈட்டியைப்போல உள்ள கசப்பான வார்த்தை களைக் கொண்டு பேசி உங்கள் இருதயத்தை வேதனைப்படுத்த மாட்டார்கள். **Lev_26:22**, **Deu_32:24**, **Deu_7:22**,

*15. Lev 26:7 உங்கள் சத்துருக்களைத் துரத்துவீர்கள் அவர்கள் உங்கள் முன்பாகப் பட்டயத்தால் விழுவார்கள்.*

தேவனுடைய வாயிலிருந்து புறப்பட்ட இருபுறமும் கருக் குள்ள தேவ வார்த்தைகளை நீங்கள் பேசும்போது ;தேவனுடைய விசுவாசத்திற்கு விரோதமாக புற ஜாதிகளிலிருந்து எழும்பும் கள்ள உபதேசம் / விகற்பமான உபதேசம் / நூதன உபதேசம் ஆகியவைகள் விழுந்து நொறுங்கி சிதறடிக்கப்படும்.

*16. Lev 26:8 உங்களில் ஐந்து பேர் நூறு பேரைத் துரத்துவார்கள்:*

நீங்கள் தேவ ஞானத்துடன் பேசும் ஐந்து வார்த்தைகளைக் கொண்டு, மற்றவர்கள் பேசும் நூறு வார்த்தைகளை மேற்கொண்டு மற்றவர்களை துரத்துவீர்கள். **Deu_32:30, Col_4:5-6 , Isa_30:8-24 Eph_6:19-20, 1Co_14:19,**

*17. உங்களில் நூறு பேர் பதினாயிரம் பேரைத் துரத்து வார்கள்; உங்கள் சத்துருக்கள் உங்களுக்கு முன்பாகப் பட்டயத்தால் விழுவார்கள்.*

நீங்கள் தேவ ஞானத்துடன் பேசும் நூறு வார்த்தைகளைக் கொண்டு மற்றவர்கள் பேசும் பதினாயிரம் (1,0,000) வார்த்தைகளை மேற்கொண்டு மற்றவர்களை துரத்துவீர்கள்; தேவனுடைய சத்திய வார்த்தைகளுக்கு விரோதமாக புறஜாதிகள் பேசும் எந்த வார்த்தை களையும் நீங்கள் குற்றப்படுத்துவீர்கள்/ மேற்கொண்டு துரத்துவீர்கள். **Isa_54:17 Job_5:21, Psa_31:20 Jer_15:16-21,**

*18. Lev 26:9 நான் உங்கள் மேல் கண்ணோக்க மாயிருந்து, உங்களைப் பலுகவும் பெருகவும் பண்ணி, உங்களோட என் உடன் படிக்கையைத் திடப்படுத்துவேன்.*

தேவனுடைய உடன்படிக்கையின் பிரமாணத்தின்படி தேவன் உங்கள் மேல் கண்ணோக்கமாயிருந்து; தேவ அறிவு, புத்தி, ஞானம் ஆகிய இவைகளில் பலுகி பெருகி வளர்ச்சியடையும்படி செய்து தேவன் உங்களுடன் செய்து கொண்ட உடன்படிக்கையை நீங்கள் உறுதிப்படுத்துவீர்கள்.

*19. Lev 26:10 போன வருஷத்துப் பழைய தானியத் தைச் சாப்பிட்டு; புதிய தானியத்துக்கு இடமுண்டாகும்படி, பழையதை விலக்குவீர்கள்.*

கடந்து போன பழைய வருஷத்தின் தீர்க்கதரிசன வசனங் களை தேவ ஆவியினால் நிதானித்து பகுத்தறிந்து கொண்டு, நிகழ் கால புதிய வசனங்களை / நித்திய ஜீவ வசனங்களை ஏற்றுக்

கொண்டு புருஷனாகும்படி: குழந்தைகளுக்கேற்ற கடந்த கால / பழைய அறிவை / புளித்தமாவை நீங்கள் உங்களை விட்டு விலக்கு வீர்கள். **1Co_13:9-11**, **Isa_41:21-25**,

*20.* ***Lev 26:11*** *உங்கள் நடுவில் என் வாசஸ்தலத்தை ஸ்தாபிப்பேன்; என் ஆத்துமா உங்களை அரோசிப்பதில்லை.*

சத்திய ஆவியாகிய தேற்றரவாளன் உங்களுக்கு நடுவே வாசம்பண்ணுவார், தேவனுடைய ஆத்துமா உங்களை வெறுப் பதில்லை.

*21.* ***Lev 26:12*** *நான் உங்கள் நடுவிலே உலாவி, உங்கள் தேவனாயிருப்பேன், நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள்.*

பரிசுத்த ஆவியானவர் உங்கள் மத்தியில் அசைவாடி, உங்க ளுக்கு எல்லா காரியத்திலும் பகுத்தறிவை உணர்த்துவார் ஆகையால் நீங்கள் எனக்கு பரிசுத்த ஜனமாயிருப்பீர்கள்.

*22.* ***Lev 26:13*** *நீங்கள் எகிப்தியருக்கு அடிமைகளாயிராத படிக்கு, நான் அவர்கள் தேசத்திலிருந்து உங்களைப் புறப்படப் பண்ணி, உங்கள் நுகத்தடிகளை முறித்து, உங்களை நிமிர்ந்து நடக்கப் பண்ணின உங்கள் தேவனாகிய கர்த்தர்.*

நீங்கள் எகிப்தின் பாவ சந்தோஷத்திற்கு அடிமைகளாயி ராதபடிக்கு, உங்களை விடுதலையாக்கி பாவத்தின் நுகத்தடிகளை முறித்து, உங்களை நித்திய ஜீவ வழியில் நடக்க பண்ணின உங்கள் தேவனாகிய கர்த்தர் நானே.

## அத்தியாயம் நான்கு

4-3 ஆண் பிள்ளைகள் கற்றுகொண்ட சீயோனின் இரண்டா வது புதிய பாட்டு:-

மோவாப் தேசத்தில் மோசேயின் மூலம் மனிதனுடன் தேவன் செய்து கொண்ட உடன்படிக்கையில் பெற்றுக்கொள்ளும் வாக்கு

தந்த தேசத்தின் ஆசீர்வாதங்களின் பாட்டு **Deu_31:19-22**, **Deu_31:30**, **Deu_32:44**, **Mal_3:16-18**, **Mal_4:1-6**,

### *பல்லவி*

*1. **Deu 28:1** இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைகளின் படியெல்லாம் செய்ய நீ கவனமாயிருக்கும்படிக்கு, அவர் சத்தத்திற்கும் உண்மையாய்ச் செவிகொடுப்பாயானால், உன் தேவனாகிய கர்த்தர் பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும் உன்னை மேன்மையாக வைப்பார்.*

இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைகளின் படியெல்லாம் செய்ய, நீ கவனமாயிருக்கும் படிக்கு, அவர் சத்தத்திற்கு உண்மையாய்ச் செவி கொடுப்பாயனால் உன் தேவனாகிய கர்த்தர் பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும் உன்னை மேன்மையாக வைப்பார்.

### *அனு பல்லவி*

*2. Deu 28:2 நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்துக்குச் செவிகொடுக்கும் போது, இப்பொழுது சொல்லப்படும் ஆசீர்வாதங்களெல்லாம் உன்மேல் வந்து உனக்குப் பலிக்கும்.*

நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்ததத்துக்குச் செவிகொடுக்கும்போது, இப்பொழுது சொல்லப்படும் ஆசீர்வாதங்களெல்லாம் உன்மேல் வந்து உனக்கு பலிக்கும்.

### *சரணங்கள்*

*2. Deu 28:2 நீ பட்டணத்திலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய்; வெளியிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய்.*

தேவன் உனக்கு பகிர்ந்து கொடுத்த விசுவாச அளவுப்பிரமாணத்தின் எல்லைகளுக்கு உள்ளும் வெளியேயும் உள்ள காரியங்களிலும் நீ ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய்.

*4. Deu 28:4 உன் கர்ப்பத்தின் கனியும், உன் நிலத்தின் கனியும், ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும்.*

உன் ஆவி, ஆத்துமாவின், சிந்தனை, தியானம், பகுத்தறிவு ஞானமுள்ள வார்த்தைகளை பேசுதல், ஆகிய குணாதிசயங்களும் தேவன் உனக்கு வாக்குத்தத்தமாக பகிர்ந்து கொடுத்த விசுவாச அளவுப்பிரமாணத்தின் கிரியைகளின் எல்லைகளியெல்லாம் நீ ஆசிர்வதிக்கப்பட்டிருப்பாய்.

*5. உன் மாடுகளின் பெருக்கமும், உன் ஆடுகளின் மந்தைகளுமாகிய உன் மிருக ஜீவன்களின் பலனும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும்.*

தேவனுடைய ஆசீர்வாதத்தினால் உன்னுடைய வேலையாட்களின் எண்ணிக்கையும் பெருகியிருக்கும். உன் மூலம் பல குழுக்களாக பிரிந்து செயல்படுகிறவர்களும் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்கள்.

*6. **Deu 28:5** உன் கூடையும், மாப்பிசைகிற உன் தொட்டியும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும்.*

உன் ஞாபகத்தில் சேர்த்து வைத்திருக்கிற அறிவு ஞாபக மறதி இல்லாமல் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும், உன்னுடைய மனசாட்சியில் நன்மை தீமைகளை பகுத்தறியும் அறிவின் திறமை /பெலன் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும்.

*7. Deu 28:6 நீ வருகையிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய், நீ போகையிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய்.*

நீ உன் காரியத்தை தெளிவாக ஆலோசித்து அதை தேவ பெலனால் செய்து முடிக்க முடியும் என்று தீர்மானித்து, அதை தைரியமாக நிறைவேற்றும்படி தொடங்குவதில் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய். தேவ பெலத்தின் உதவியால் உன் காரியங்களை ஜெயமாக செய்து முடித்து ஆசீர்வாதமாக திரும்பிக்கொண்டியிருப்பாய்.

*8. Deu 28:7 உனக்கு விரோதமாய் எழும்பும் உன் சத்துருக் களைக் கர்த்தர் உனக்கு முன்பாக முறிய அடிக்கப்படும்படி ஒப்புக் கொடுப்பார்;*

உனக்கு விரோமாக எழும்பும் உன் சத்துருக்களாகிய புறஜாதி கள், தேவனுடைய சத்திய வார்த்தைகளுக்கு விரோதமாக பேசும் எந்த வார்த்தைகளையும் நீங்கள் குற்றப்படுத்தி; உனக்கு முன்பாக அவர்களை முறிய அடிக்கப்படும்படி தேவன் ஒப்புக் கொடுப்பார்;

*9. ஒரு வழியாய் உனக்கு எதிராகப் புறப்பட்டு வருவார்கள்; ஏழு வழியாய் உனக்கு முன்பாக ஓடிப்போவார்கள்.*

உன் சத்துருக்கள் ஒரு வார்த்தையைக் கொண்டு உன்னை குற்றப்படுத்தும்போது நீ அவர்களை ஏழு பழி சுமக்கும் படி குற்றப் படுத்துவாய்

*10. Deu 28:8 கர்த்தர் உன் களஞ்சியங்களிலும், நீ கை யிடும் எல்லாவேலையிலும் உனக்கு ஆசீர்வாதம் கட்டளையிடுவார்; உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் தேசத்திலே உன்னை ஆசீர்வதிப்பார்.*

நீ சேர்த்து வைத்திருக்கிற உன் அறிவுக் களஞ்சியங்களிலும் பண்டக சாலைகளிலும் உனக்கு ஆசீர்வாதத்தை கட்டளையிடுவார், நீ திட்டமிடும் எல்லா வேலைகளிலும் தேவன் உனக்கு ஆசீர் வாதத்தை கட்டளையிடுவார். தேவன் உனக்கு வாக்குதத்தமாக பகிந்து கொடுத்த விசுவாச அளவுப்பிரமாணத்தின் கிரியைகளின் எல்லைகளிளெல்லாம் நீ ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய்.

*11. Deu 28:9 நீ உன் தேவனாகிய கர்த்தரின் கட்டளை களைக் கைக்கொண்டு, அவர் வழிகளில் நடக்கும் போது, கர்த்தர் உனக்கு ஆணையிட்டபடியே, உன்னைத் தமக்குப் பரிசுத்த ஜன மாக நிலைப்படுத்துவார்.*

நீ உன் தேவனாகிய கர்த்தரின் கட்டளைகளைக் கைக் கொண்டு, அவர் வழிகளில் நடக்கும்போது, கர்த்தர் உனக்கு ஆணை யிட்டபடியே, உன்னை தமக்கு பரிசுத்த ஜனமாக நிலைப்படுத்துவார்.

*12. Deu 28:10 அப்பொழுது கர்த்தருடைய நாமம் உனக்குத் தரிக்கப்பட்டது என்று பூமியின் ஜனங்களெல்லாம் கண்டு, உனக்குப் பயப்படுவார்கள்.*

அப்பொழுது கர்த்தருடைய நாமம் உனக்குத் தரிக்கப்பட்டது என்று பூமியின் ஜனங்களெல்லாம் உன்னைக் கண்டு, உனக்குப் பயப்படுவார்கள்.

*13. Deu 28:11 உனக்குக் கொடுப்பேன் என்று கர்த்தர் உன் பிதாக்களுக்கு ஆணையிட்ட தேசத்தில், கர்த்தர் உன் கர்ப்பத்தின் கனியிலும், உன் மிருக ஜீவன்களின் பலனிலும், உன் நிலத்தின் கனியிலும் உனக்கு பரிபூரண நன்மை உண்டாகக் கட்டளையிடுவார்*

உனக்குக் கொடுப்பேன் என்று கர்த்தர் உன் பிதாக்களுக்கு ஆணையிட்டு, வாக்குதத்தமாக தேவன் உனக்கு பகிர்ந்து கொடுத்த விசுவாச அளவுப்பிரமாணத்தின் எல்லைகளிளெல்லாம்; நன்மை தீமைகளை ஆலோசித்து உன் இருதயத்தில் தீர்மானங்களை முடிவெடுப்பதிலும், அதன் கிரியைகளை நிறைவேற்றுவதிலும் நீ ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய், உன் சரீர அவயவங்களின் ஆரோக்கியத் திலும், உனக்குப் பரிபூரண நன்மை உண்டாக் கட்டளையிடுவார்.

*14. Deu 28:12 ஏற்ற காலத்தில் உன் தேசத்திலே மழை பெய்யவும், நீ கையிட்டுச் செய்யும் வேலைகளையெல்லாம் ஆசீர் வதிக்கவும், கர்த்தர் உனக்கு தமது நல்ல பொக்கிஷ சாலையாகிய வானத்தைத் திறப்பார்.*

இளைப்படைந்தவனுக்கு சமயத்திற்கேற்ற வார்த்தைகளை சொல்ல நான் அறியும்படிக்கு, கர்த்தராகிய ஆண்டவர் எனக்குச் கல்விமானின் நாவைத் தந்தருளினார்; காலை தோறும் என்னை எழுப்புகிறார்; கற்றுக் கொள்ளுகிறவர்களைப் போல, நான் கேட்கும் படி என் செவியைக் கவனிக்கச் செய்கிறார். நான் கையிட்டுச் செய்யும் வேலைகளியெல்லாம் என்னை ஆசீர்வதிக்கவும், கர்த்தர் எனக்குத் தமது நல்ல பொக்கிஷ சாலையாகிய ஞானத்தை கொடுப்பார்.

*15. நீ அநேகம் ஜாதிகளுக்குக் கடன் கொடுப்பாய், நீயோ கடன் வாங்காதிருப்பாய்.*

நீ அநேக ஜாதிகளுக்கு நல்ல ஆலோசனைகளை கொடுப் பாய், ஆனால் உனக்கோ மற்ற அநேக ஜாதிகளின் ஆலோசனையை கேட்க வேண்டிய சந்தர்ப்பம் / அவசியம் உனக்கு இருக்காது.

*16. Deu 28:13 இன்று நான் உங்களுக்கு விதிக்கிற வார்த்தைகள் யாவையும் விட்டு விலகி வேறு தேவர்களைச் சேவிக்கும்படி, நீ வலது புறம் இடது புறம் சாயாமல்.*

இன்று நான் உங்களுக்கு விதிக்கிற வார்த்தைகள் யாவையும் விட்டு விலகி, வேறு தேவர்களைச் சேவிக்கும்படி , நீ வலது புறம் இடது புறம் சாயாமல்

*17. Deu 28:14 இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தரின் கட்டளைகளைக் கைக்கொள்ளவும் அவைகளின் படி நடக்கவும் அவைகளுக்கு செவிகொடுத்து வந்தால், கர்த்தர் உன்னை வாலாக்காமல் தலையாக்குவார், நீ கீழாகாமல் மேலாவாய்.*

இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தரின் கட்டளைகளைக் கைக்கொள்ளவும் அவைகளில் நடக்கவும் அவை களுக்குச் செவிகொடுத்து வந்தால், கர்த்தர் உன்னை வேலக்கார னாக வைக்காமல் அதிகாரியாக வைப்பார் நீ தாழ்ந்த நிலைக்கு தள்ளப்படாமல் மேன்மையான நிலைக்கு உயர்த்துவார்.

## அத்தியாயம் நான்கு

4-4 ஆண்பிள்ளைகள் கற்றுகொண்ட சீயோனின் மூன்றாவது புதிய பாட்டு ஆட்டுக் கூட்டியானவரின் பாட்டு /

இயேசு கிறிஸ்துவின் விசுவாசத்தின் மூலம் மனிதனுடன் தேவன் செய்து கொண்ட உடன்படிக்கையினால் பெற்றுக்கொள்ளும் ஆசீர்வாதங்களின் பாட்டு / ஆட்டுக்குட்டியானவரின் கலியான

விருந்தை புசித்ததினால் மணவாட்டி சபையின் கெம்பீரசத்தத்தின் பாட்டு அல்லேலூயா, அல்லேலூயா, ஆமென், அல்லேலூயா, அல்லேலூயா, **Rev_19:1-9**, **1Th_4:16-17**, **Num_23:21**, **Psa_89:15-16**, **Psa_5:11**, **Job_20:4**, **Pro_11:10**, **Psa_65:8-16**,

**பாட்டு :-** அல்லேலூயா,

**பாடுகிறவர்கள் :-** திரளான ஜனங்கள் (இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பரிசுத்தவான்கள் உள்பட)

**பாட்டின் பொருள்:-** இரட்சிப்பும் மகிமையும் கனமும் வல்லமையும், நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியது

**பாட்டு :-** அல்லேலூயா,

**பாடுகிறவர்கள் :-** திரளான ஜனங்கள் (இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பரிசுத்தவான்கள் உள்பட)

**பாட்டின் பொருள்:-** தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் சத்தியமும் நீதியுமானவைகள். பூமியைக் கெடுத்த மகா வேசிக்கு அவர் நியாயத்தீர்ப்புக்கொடுத்து, தம்முடைய ஊழியக்காரரின் இரத் திற்காக அவளிடத்தில் பழிவாங்கினாரே

**பாட்டு :-** ஆமென், அல்லேலூயா,

**பாடுகிறவர்கள் :-** திரளான ஜனங்கள் (இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பரிசுத்தவான்கள் உள்பட)

**பாட்டின் பொருள்:-** தேவனுடைய ஊழியக்காரரின் இரத்தத்திற்காக அவளிடத்தில் பழிவாங்கினாரே அவளுடைய புகை என்னென்றைக்கும் எழும்புகிறது, தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் சத்தியமும் நீதியுமானவைகள். அப்படியே ஆகக்கடவது நாங்கள் பூமியிலே அரசாளுவோம் என்று புதிய பாட்டைப் பாடினார்கள்.

**பாட்டு :-** அல்லேலூயா,

**பாடுகிறவர்கள் :-** திரளான ஜனங்கள் (இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பரிசுத்தவான்கள் உள்பட)

**பாட்டின் பொருள்:-** சர்வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் ராஜ்யபாரம் பண்ணுகிறார் நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதி செலுத்தக்கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம் பண்ணினாள் என்று சொல்லக் கேட்டேன்.

தேவனுடைய ஊழியக்காரரின் இரத்தத்திற்காக அவளிடத்தில் பழிவாங்கினாரே, அவளுடைய புகை என்றென்றைக்கும் எழும்புகிறது, அப்படியே ஆகக்கடவது நாங்கள் பூமியிலே அரசாளுவோம் என்ற புதிய பாட்டைக் கற்றுக் கொள்ள தேவையான சுரமண்டல இராகங்கள்

1. ஓய்வு நாள் உடன்படிக்கையின் மூலம் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்கள்.

2. வாக்குத்தத்த தேசத்தினுடைய உடன்படிக்கையின் மூலம் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்கள்.

3. இயேசு கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கையின் மூலம் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்கள்

தேவனுடைய இந்த மூன்று உடன்படிக்கையின் மூலம் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களுக்கு பதிலாக, ஒருவன் சாபங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும்போது; அவன் மற்றவர்களுக்கு வருகிற தேவனுடைய நியாயத்தீர்ப்பை பார்த்து எப்படி ? ஆமென், அல்லேலூயா, அப்படியே தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் உங்களுக்கு பழிக்கடவது, நாங்கள் பூமியில் அரசாளுவோம் என்று புதிய பாட்டைப் பாட முடியும்.

நாங்கள் பூமியிலே அரசாளுவோம் என்று புதிய பாட்டைப் பாடுவதற்கு தேவையான அடிப்படைத் தகுதிகள்.

1. தேவ சுரமண்டலங்களை தங்கள் கரங்களில் பிடித்துக் கொண்டிருக்க வேண்டும்.

2. தேவனுடைய ஊழியக்காரனாகிய மோசேயின் பாட்டையும் ஆட்டுக்குட்டியானவருடைய பாட்டையும் பாடுவதற்கு தேவையான தேவ சுரண்மண்டல இராகங்களை அறிந்திருக்க வேண்டும்.

3. தேவனுடைய சிங்காசனத்திற்கும் முன்பாக வந்து புதிய பாட்டைப்பாட வேண்டும்.

4. பிதாவின் நாமம் தங்கள் நெற்றிகளில் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

5. ஸ்திரீகளாகிய சபைகளால் தங்களைக் கறைப்படுத்தாத வர்களாக இருக்க வேண்டும்.

6. தங்கள் வாயிலே கபடமாகிய கள்ளத் தீர்க்க தரிசனங்கள் காணப்படாமல் இருக்க வேண்டும்.

7. மிருகத்தையாவது அதன் சொரூபத்தையாவது வணங்காம லும் தங்கள் நெற்றியிலும் தங்கள் கையிலும் அதின் முத்திரையைத் தரித்துக் கொள்ளாமலும் இருக்க வேண்டும்.

பூமியிலிருந்து மீட்டுக் கொள்ளப்பட்ட இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேரேயல்லாமல் வேறொருவரும் கற்றுக் கொள்ளக் கூடாதிருக்கிற புதிய பாட்டு.

**Rev 14:1** பின்பு நான் பார்த்தபோது, இதோ சீயோன் மலையின் மேல் ஆட்டுக்குட்டியானவரையும், அவரோடேகூட அவருடைய பிதாவின் நாமம் தங்கள் நெற்றிகளில் எழுதப்பட்டிருந்த இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேரையும் நிற்கக் கண்டேன்.

**Rev 14:2** அல்லாமலும், பெருவெள்ள இரைச்சல் போலவும், பலத்த இடிமுழக்கம் போலவும், ஒரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக்கேட்டேன்; நான் கேட்ட சத்தம் சுரமண்டலக்காரர் தங்கள் சுரமண்டலங்களை வாசிக்கிற ஓசையைப் போலிருந்தது.

**Rev 14:3** அவர்கள் சிங்காசனத்திற்கு முன்பாகவும், நான்கு ஜீவன்களுக்கு முன்பாகவும், மூப்பர்களுக்கு முன்பாகவும் புதுப்பாட் டைப் பாடினார்கள்; அந்தப்பாட்டு பூமியிலிருந்து மீட்டுக் கொள்ளப்

பட்ட இலட்சத்து நாற்பத்தி நாலாயிரம் பேரேயல்லாமல் வேறொருவரும் கற்றுக் கொள்ளக் கூடாதிருந்தது.

**Rev 14:4** ஸ்திரீகளால் தங்களைக் கறைப்படுத்தாதவர்கள் இவர்களே ; கற்புள்ளவர்கள் இவர்களே; ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் அவரைப் பின்பற்றுகிறவர்கள் இவர்களே; இவர்கள் மனுஷரிலிருந்து தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் முதற்பலனாக மீட்டுக் கொள்ளப்பட்டவர்கள்.

**Rev 14:5** இவர்களுடைய வாயிலே கபடம் காணப்படவில்லை. இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக மாசில்லாதவர்களாயிருக்கிறார்கள்.

1. சீயோனின் புதிய பாடல்களை தடையின்றித் தெளிவாகப் பாடுகிறவர்கள்.

எருசேலமே, நான் உன்னை மறந்தால் / கர்த்தரின் வசனத்தை நான் மறந்தால் என் வலது கை தன் தொழிலை மறப்பதாக,

எருசலேமே, நான் உன்னை நினையாமலும், என் முக்கியமான மகிழ்ச்சியிலும் அதிகமாக எண்ணாமலும் போனால், என் நாவு என் மேல் வாயோடு ஒட்டிக் கொள்வதாக / கர்த்தரின் வசனத்தை நான் நினையாமலும், என் முக்கியமான மகிழ்ச்சியிலும் அதிகமாக எண்ணாமலும் போனால், என் நாவு என் மேல் வாயோடு ஒட்டிக் கொள்வதாக.

சீயோனின் பாடல்களையும், மங்கள கீதத்தையும் அந்நிய தேசத்தில் இருந்து பாடாமல் ஒருவர் கர்த்தருடைய வேதத்தினிடத்திற்கும் கர்த்தரின் வசனத்தினிடத்திற்கும் வந்து சேர்ந்து கர்த்தரின் வசனத்தை நினைத்து, கர்த்தரின் வசனத்தை அவனுடைய முக்கியமான மகிழ்ச்சியிலும் அதிகமான எண்ணும்போது , அவனுடைய நாவு அவன் மேல் வாயோடு ஒட்டிக்கொள்ளாமல் சீயோனின் புதிய பாடல்களை தடையின்றித் தெளிவாகப் பாட முடியும்.

## அத்தியாயம் ஐந்து

5-1 மகா பாபிலோன் மாநகர வேசியின் புலம்பல் பாடல்கள்

5-2 தேவ முத்திரைகளுக்கு விரோதமாக எழும்பும் துன்மார்கனுக்கு வரும் முதலாவது உடன்படிக்கையின் சாபங்களில் பாட்டு / பாபிலோன் மாநகர வேசியின் முதலாவது புலம்பல் பாட்டு

5-3 தேவ முத்திரைகளுக்கு விரோதமாக எழும்பும் துன்மார்கனுக்கு வரும் இரண்டாவது உடன்படிக்கையின் சாபங்களின் பாட்டு / பாபிலோன் மாநகர வேசியின் இரண்டாவது புலம்பல் பாட்டு.

5-4 தேவ முத்திரைகளுக்கு விரோதமாக எழும்பும் துன்மார்கனுக்கு வரும் மூன்றாவது உடன்படிக்கையின் சாபங்களின் பாட்டு / பாபிலோன் மாநகர வேசியின் மூன்றாவது புலம்பல் பாட்டு.

## அத்தியாயம் ஐந்து

5-1 மகா பாபிலோன் மாநகர வேசியின் புலம்பல் பாடல்கள் / சீயோனுக்கு வராதவர்களுடைய புலம்பல் பாட்டு. தேவனுடன் செய்து கொண்ட உடன்படிக்கை, ஒருவனால் மீறி முறிக்கப்பட்டால், அந்த உடன்படிக்கை துரோகிக்கு தேவனுடைய உடன்படிக்கையின் மூலம் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களெல்லாம் தங்கள் ஆவி, ஆத்துமாவில் சாபங்களினால் வரும் புலம்பல் பாட்டின் சுரமண்டல இராகங்களாக மாறுகிறது. **Isa_65:8-16**, **Hos_2:13**, **Rev_18:1-4**, **Jos_7:23-26**, **2Th_2:7-13**, **Isa_2:1-6**, **Isa_2:7-13**, **Isa_2:18-22**, **Isa_50:10-11**,

மோசேயின் மூலம் மனிதனுடன் தேவன் செய்து கொண்ட இரண்டு உடன்படிக்கைகள் ஒருவனால் மீறி முறிக்கப்பட்டால், அந்த உடன்படிக்கை துரோகிக்கு தேவனுடைய உடன்படிக்கையின் மூலம் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்கள், எல்லாம் தங்கள் ஆவி, ஆத்துமாவில் சாபங்களினால் வரும் இரண்டு புலம்பல் பாட்டாக மாறுகிறது.

இயேசு கிறிஸ்துவின் மூலம் மனிதனுடன் தேவன் செய்து கொண்ட ஒரு உடன்படிக்கை ஒருவனால் மீறி முறிக்கப்பட்டால்,

அந்த உடன்படிக்கை துரோகிக்கு தேவனுடைய உடன்படிக்கையின் மூலம் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்கள், எல்லாம் தங்கள் ஆவி, ஆத்துமாவில் சாபங்களினால் வரும் ஆட்டுக்குடியானவரின் ஒரு புலம்பல், பாட்டாக மாறுகிறது.

*5-2 தேவ முத்திரைகளுக்கு விரோதமாக எழும்பும் துன்மார்க் கனுக்கு வரும் முதலாவது உடன்படிக்கையின் சாபங்களில் பாட்டு / பாபிலோன் மாநகர வேசியின் முதலாவது புலம்பல் பாட்டு.*

சீனாய் / ஒரேப் மலையில் மோசேயின் மூலம் மனிதனுடன் தேவன் செய்து கொண்ட உடன்படிக்கையினால் பெற்றுக்கொள்ளும் ஓய்வு நாளின் ஆசீர்வாதங்களின் பாட்டு; எப்பொழுது ஒருவனால் தேவனுடைய உடன்படிக்கை மீறி முறிக்கப்பட்டாலும் அந்த உடன்படிக்கை துரோகிக்கு தேவனுடைய உடன்படிக்கையின் மூலம் பெற்றுக்கொண்ட ஓய்வு நாளின் ஆசீர்வாதங்கள், எல்லாம் தங்கள் ஆவி, ஆத்துமாவில் சாபங்களினால் வரும் புலம்பல் பாட்டாக மாறுகிறது.

*5-3 தேவ முத்திரைகளுக்கு விரோதமாக எழும்பும் துன்மார்க் கனுக்கு வரும் இரண்டாவது உடன்படிக்கையின் சாபங்களின் பாட்டு / பாபிலோன் மாநகர வேசியின் இரண்டாவது புலம்பல் பாட்டு.*

மோவாப் தேசத்தில் மோசேயின் மூலம் மனிதனுடன் தேவன் செய்து கொண்ட உடன்படிக்கையினால் பெற்றுக்கொள்ளும் வாக்குத்தத்த தேசத்தின் ஆசீர்வாதங்களின் பாட்டு, எப்பொழுது ஒரு வனால் தேவனுடைய உடன்படிக்கை மீறி முறிக்கப்பட்டாலும்; அந்த உடன்படிக்கை துரோகிக்கு தேவனுடைய உடன்படிக்கையின் மூலம் பெற்றுக்கொண்ட வாக்குதத்த தேசத்தின் ஆசீர்வாதங்கள், எல்லாம் தங்கள் ஆவி, ஆத்துமாவில் சாபங்களினால் வரும் புலம்பல் பாட்டாக மாறுகிறது.

*5-4 தேவ முத்திரைகளுக்கு விரோதமாக எழும்பும் துன்மார்க் கனுக்கு வரும் மூன்றாவது உடன்படிக்கையின் சாபங்களில் பாட்டு / பாபிலோன் மாநகர வேசியின் மூன்றாவது புலம்பல் பாட்டு*

இயேசு கிறிஸ்துவின் மூலம் மனிதனுடன் தேவன் செய்து கொண்ட ஒரு உடன்படிக்கை, ஒருவனால் மீறி முறிக்கப்பட்டால் அந்த உடன்படிக்கை துரோகிக்கு; தேவனுடைய உடன்படிக்கையின் மூலம் பெற்றுக்கொண்ட ஆசிர்வாதங்கள், எல்லாம் தங்கள் ஆவி, ஆத்துமாவில் சாபங்களினால் வரும் ஆட்டுக்குட்டியானவரின் ஒரு புலம்பல் பாட்டாக மாறுகிறது.

## அத்தியாயம் ஐந்து

*5-2 தேவ முத்திரைகளுக்கு விரோதமாக எழும்பும் துன்மார்க்கனுக்கு வரும் முதலாவது உடன்படிக்கையின் சாபங்களின் பாட்டு / பாபிலோன் மாநகர வேசியின் முதலாவது புலம்பல் பாட்டு.*

சீனாய் / ஒரேப் மலையில் மோசேயின் மூலம் மனிதனுடன் தேவன் செய்து கொண்ட உடன்படிக்கையினால் பெற்றுக்கொள்ளும் ஓய்வு நாளின் ஆசீர்வாதங்களின் பாட்டு, எப்பொழுது ஒருவனால் தேவனுடைய உடன்படிக்கை மீறி முறிக்கப்பட்டாலும் அந்த உடன்படிக்கை துரோகிக்கு; தேவனுடைய உடன்படிக்கையின் மூலம் பெற்றக்கொண்ட ஓய்வுநாளின் ஆசீர்வாதங்கள், எல்லாம் தங்கள் ஆவி, ஆத்துமாவில் சாபங்களினால் வரும் புலம்பல் பாட்டாக மாறுகிறது. **Lev_26:46**, **Lev_26:1**, **Deu_29:1**,

*பாபிலோன் மாநகர வேசியின் முதல் புலம்பல் பாட்டின் முதல் ஏழு மடங்கு புலம்பலின் பல்லவி*

**Lev_26:14-17**, **Num_6:25-26**, **Psa_89:14-17**, **Lev_17:10**, **Deu_31:17-18**, **Deu_32:20**,

*1. Lev 26:14 -15 நீங்கள் எனக்குச் செவிகொடாமலும், இந்தக் கற்பனைகள் எல்லாவற்றின்படி செய்யாமலும், என் கட்டளைகளை வெறுத்து, உங்கள் ஆத்துமா என் நியாயங்களை அரோசித்து, என் கற்பனைகள் எல்லாவற்றின் படியும் செய்யாத படிக்கு, என் உடன் படிக்கையை நீங்கள் மீறிப் போடுவீர்களாகில் :*

நீங்கள் எனக்குச் செவிகொடாமலும், இந்தக் கற்பனைகள் எல்லாவற்றின்படி செய்யாமலும், என் கட்டளைகளை வெறுத்து,

உங்கள் ஆத்துமா என் நியாயங்களை வெறுத்து என் கற்பனைகள் எல்லாவற்றின்படியும் செய்யாதபடிக்கு, என் உடன்படிக்கையை நீங்கள் மீறிப்போடுவீர்களாகில்.

## அனுபல்லவி

*2. **Lev 26:16** நான் உங்களுக்குச் செய்வது என்னவென்றால், திகிலையும் ஈளையையும் காய்ச்சலையும் உங்களுக்கு வரப்பண்ணவேன்;*

திகில் = பயம் + வெறுப்பு + எரிச்சல் + சந்தேகம். ஈளை (மலையாள வார்த்தை )= சோம்பல் + வறுமை + கஞ்சத்தனம் காய்ச்சல் = தீமையின் குணாதிசயங்கள் திராத வியாதிகள் போல ஒருவனை தொடர்ந்து வருதல், ஆகிய இவைகளை தேவன் உங்களுக்குள்ளே வரும்படி கட்டளையிடுவார்.

## சரணங்கள்

*3. அதனால் நான் உங்கள் கண்களைப் பூத்துப் போகப் பண்ணுவேன்;*

தேவனுடைய நியாயத்தீர்ப்பு ஒருவனை தாக்கும்போது அவனுடைய ஆவிக்குரிய கண்களின் பார்வை மங்கலாகி, தரிசனங்கள் நாளுக்கு நாள் இருளடைந்து அவனுக்கு அறியாமை பெருகிக் கொண்டே வரும்.

*4.அதனால் நான் உங்கள் இருதயத்தைத் துயப்படுத்துவேன்;*

தேவனுடைய நியாயத்தீர்ப்பினால் இருதயம் சோர்வடைந்து வேதனைப்பட்டு, துயரத்தை அனுபவித்துக்கொண்டே இருக்கும்.

*5. நீங்கள் விதைக்கும் விதை விருதாவாயிருக்கும்;*

நீங்கள் விதைக்கும் நற்கிரியைகளின் பயன்கள் விருதாவாயிருக்கும்,

*6. உங்கள் சத்துருக்கள் அதின் பலனைத் தின்பார்கள்.*

உங்கள் நற்கிரியைகளின் பயனை உங்கள் சத்துருக்கள் அனுபவிப்பார்கள்.

*7.* ***Lev 26:17*** *நான் உங்களுக்கு விரோமாக என் முகத்தைத் திருப்புவேன்;*

தேவன் உங்களுக்கு விரோதமாக அவர் முகத்தைத் திரும்பும் போது தேவன் உங்களுக்கு கொடுத்த தரிசனத்தின் வெளிச்சம் / கிருபை, சமாதானம் ஆகியவைகள் உங்களை விட்டு நீங்கப்பட்டு தேவனுடைய கோபாக்கினையின் நியாயத்தீர்ப்பு வெளிப்படுகிறது.

*8. உங்கள் சத்துருக்களுக்கு முன்பாக முறியடிக்கப்படுவீர்கள் உங்களுடைய தீமைகள் உங்களை தண்டிக்கும்*

*9. உங்கள் பகைஞர் உங்களை ஆளுவார்கள்;*

உங்களுடைய தீமைகள் உங்களை மேற்க்கொண்டு அது உங்களை ஆட்சி செய்யும் நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாக இருப் பீர்கள்.

*10. துரத்துவார் இல்லாதிருந்தும் ஓடுவீர்கள்.*

உங்களுக்கு சத்துருக்கள் இல்லாதிருந்தும் நீங்கள் செய்த தீமையான செயலை நினைத்து அதற்கு பயந்து நீங்கள் ஓடுவீர்கள்.

*பாபிலோன் மாநகர வேசியின் முதல் புலம்பல் பாட்டின் இரண்டாவது ஏழு மடங்கு புலம்பலின் பல்லவி*

**Lev_26:18-20**, **Deu_32:36**, **Dan_12:4-8**, **Jer_13:1-11**, **Eze_24:15-27**, **Amo_2:12-16**, **Rev_3:14-22**, **Hos_12:6-8**, **Hos_2:8-16**,

*11.* ***Lev 26:18*** *இவ்விதமாய் நான் உங்களுக்குச் செய்தும், இன்னும் நீங்கள் எனக்குச் செவிகொடாதிருந்தால், உங்கள் பாவங்களினிமித்தம் பின்னும் ஏழத்தனையாக உங்களைத் தண்டித்து,*

**சரணங்கள்**

*12.* ***Lev 26:19*** *உங்கள் வல்லமையின் பெருமையை முறித்து, உங்கள் வானத்தை இரும்பைப்போலவும், உங்கள் பூமியை வெண்கலத்தைப் போலவும் ஆக்குவேன்.*

கீழே குறிப்பிட்டவைகளில் உங்கள் வல்லமையின் பெருமையை முறித்து உங்களுடைய மகிழ்சியை தேவன் உங்களை விட்டு விலக்குவார்:-

1. பெலத்தின் முக்கியமானவைகள் = உங்கள் பெலன்

2. அகங்காரத்தின் மகிழ்சி = பெருமையின் மகிழ்சி

3. கண்களின் விருப்பம் = தரிசனத்தின் விருப்பம்

4. ஆத்துமாவின் விசேஷ வாஞ்சை = சுய இஞ்சைகள்

5. குமாரர்கள் = சபை மூப்பர்கள்

6. குமாரத்திகள் = சபை விசுவாசிகள்

7. பரிசுத்த ஸ்தலத்தை பரிசுத்த குலைச்சலாக மாறுதல் / அன்றாட பலி நீக்கப்பட்டு பாழாக்கும் அருவருப்பு இருதயத்தின் மத்தியில் ஸ்தாபிக்கப்படுதல்.

8. உங்கள் வானத்தை இரும்பைப் போலவும், ஆக்குவேன் :-

உங்கள் சிந்தனைகளை நிதானிக்கும் பகுத்தறிவில் உங்கள் தேவைக்கேற்றபடியுள்ள அறிவை நீங்கள் அறிந்து உணர்ந்து கொள்ள முடியாமல், உங்கள் அறிவின் செயல்பாடுகள் உங்களுக்கு இரும்பைபோல மிக கடினமாயிருக்கும்.

9. உங்கள் பூமியை வெண்கலத்தைப் போலவும் ஆக்குவேன் :-

உங்கள் கைகளின் கிரியைகளை செயல்படுத்த முடியாமல் காரியசித்தியுள்ள உங்கள் செயல் திறமைகள் வெண்கலத்தை போல உங்களுக்கு மிக கடினமாக இருக்கும்.

***13. Lev 26:20*** உங்கள் பெலன் விருதாவிலே செல வழியும்

உங்களுடைய எல்லா கிரியைகளும் உங்களுக்கு எந்த பிரதிப்பலனையும் கொடுக்காமல், அவைகள் ஒழுங்கின்மையும் வெறுமையாக மாறி, உங்களுடைய பணம், பொருள், காலம் ஆகிய இவைகள் வீணாக செலவழிந்து கொண்டேயிருக்கும்.

*14. உங்கள் தேசம் தன் பலனையும், தேசத்தின் மரங்கள் தங்கள் கனிகளையும் கொடுக்கமாட்டாது.*

உங்களுடைய அறிவின் யோசனைகளை நீங்கள் செயல் படுத்தும்போது அது தன்னுடைய நற்கிரியைகளுக்கு மாறாமல் இருந்து, அவைகள் உங்களுக்கு எந்த பிரதிபலனையும் திரும்பக் கொடுக்காது, ஏற்கனவே உங்களுடைய நடைமுறையில் பின்பற்றிக் கொண்டிருக்கிற உங்கள் அறிவின் கிரியைகள் அதன் முழுப்பயனை யும் உங்களுக்கு திரும்பக்கொடுக்காது.

*பாபிலோன் மாநகர வேசியின் முதல் புலம்பல் பாட்டின் மூன்றாவது ஏழு மடங்கு புலம்பலின் பல்லவி* **Lev_26:21-22,**

*15. Lev 26:21 நீங்கள் எனக்குச் செவிகொடுக்க மனதில்லா மல், எனக்கு எதிர்த்து நடப்பீர்களானால், நான் உங்கள் பாவங்களுக் குத்ததக்கதாக இன்னும் ஏழத்தனையாக வாதையை உங்கள் மேல் வரப்பண்ணி,*

*16. **Lev 26:22** உங்களுக்குள்ளே வெளியின் துஷ்ட மிருகங்களை வரவிடுவேன்; அவைகள் உங்களை பிள்ளைகளற்றவர் களாக்கி, உங்கள் மிருக ஜீவன்களை அழித்து, உங்களைக் குறைந்து போகப்பண்ணும் ;*

*உங்களுக்குள்ளே வெளியின் துஷ்ட மிருங்களை வரவிடு வேன்:-*

உங்களுக்குள்ளே தேவ வசனத்திற்கு விரோதமான பெருமை, கோபம், கடினமான சொற்கள், எரிச்சல் ஆகிய துஷ்ட மிருகங்களின் சுபாவங்களை உங்களுக்குள்ளே வரும்படி தேவன் கட்டளையிடுவார் இவைகளினால் நீங்கள் சுபாவ அன்பில்லாதவர் களாக மாறி துஷ்டமிருகங்களைப்போல மாறுவீர்கள்.

*அவைகள் உங்களைப் பிள்ளைகளற்றவர்களாக்கிவிடும்:-*

இந்த துஷ்டத்தனமான உங்கள் கிரியைகள் உங்களை சுபாவ அன்பில்லாதவர்களாக மாற்றுகிறபடியால், நாளுக்கு நாள் உங்கள் நண்பர்கள் உங்களை விட்டு விலகிப்போவார்கள்.

*உங்கள் மிருக ஜீவன்களை அழித்து உங்களைக் குறைத்து போகப்பண்ணும்:-*

துஷ்டத்தமான கிரியைகள் உங்கள் ஆவியில் வெளிப்படும் போது, அவைகளின் பின்விளைவாக உங்கள் மாம்ச சரீரத்தின் ஆரோக்கியம் பெலவீனமடையும் தேவனுடைய ஆசீர்வாதங்களி லிருந்து நீங்கள் எல்லா வகையிலும் தாழ்ந்து, கொஞ்சம், கொஞ்சமாக குறைந்து மிகவும் தாழ்ந்த நிலைக்கு தள்ளப்படுவீர்கள்.

*17. உங்கள் வழிகள் பாழாய்க் கிடக்கும்:-*

நீங்கள் திட்டமிட்ட எல்லா யோசனைகளும் கிரியைகளும், ஒழுங்கின்மையும் வெறுமையுமாக மாறி; எந்த பிரதிபலனையும் கொடுக்காமல் அவைகள் பாழடைந்து கிடக்கும்.

*பாபிலோன் மாநகர வேசியின் முதல் புலம்பல் பாட்டின் நான்காவது ஏழு மடங்கு புலம்பலின் பல்லவி*

**Lev_26:23-26, Deu_32:18-36, Rom_11:8-10, Psa_69:21-28, Psa_109:4-20, Isa_29:8-14**

18. ***Lev 26:23-24*** நான் செய்யும் தண்டனையினால் நீங்கள் குணப்படாமல், எனக்கு எதிர்த்து நடந்தால், நான் உங்களுக்கு எதிர்த்து நடந்து, உங்கள் பாவங்களினிமித்தம் ஏழத் தனையாக வாதித்து,

**சரணங்கள்**

19. ***Lev 26:25*** என் உடன்படிக்கையை மீறினதற்குப் பழிவாங்கும் பட்டயத்தை உங்கள் மேல் வரப்பண்ணி, நீங்கள் உங்கள் பட்டணங்களில் சேர்ந்த பின், கொள்ளை நோயை உங்கள்

நடுவிலே அனுப்புவேன் ; சத்துருவின் கையில் ஒப்புக் கொடுக்கப்படு வீர்கள். **1Ti_6:3-5**, **2Ti_2:16-18**, **Deu_29:11**, **Deu_31:16-22**, **Eze_17:11-19**

*என் உடன்படிக்கையை மீறினதற்குப் பழிவாங்கும் பட்ட யத்தை உங்கள் மேல் வரப்பண்ணுவேன் :-*

தேவனுடைய உடன்படிக்கையை மீறினதற்கு பழிவாங்கும் படி தேவனுடைய நியாயத்தீர்ப்பை தேவன் அவர்ககளுக்குள்ளே அனுப்பும்போது, அவர்கள் தேவனுடைய உடன்படிக்கையினால் பெற்றுக்கொண்ட எல்லா ஆசீர்வாதங்களும் அவர்களுக்கு சாபமாக மாறுகிறது.

*நீங்கள் உங்கள் பட்டணங்களில் சேர்ந்தபின், கொள்ளை நோயை உங்கள் நடுவிலே அனுப்புவேன்:-*

நீங்கள் நினைத்தபடி உங்கள் காரியங்களின் இலட்சியத்தின் இலக்கை நீங்கள் அடைந்த பிறகு அவைகள் ஒழுங்கின்மையும் வெறுமையுமாக மாறுவதற்காக பெருமையையும் தர்கங்களையும் வாக்குவாதங்களின் நோயையும் உங்களுக்குள்ளே வரும்படி தேவன் கட்டளையிடுவார்.

***சத்துருவின் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவீர்கள் :-***

நற்கிரியைகளை முழுவதும் இழந்தபடியால் இப்பொழுது தீமையான கிரியைகளின் கட்டுபாட்டிற்கு முழுமையாக அடிமை யாவதற்கு ஒப்புக்கொடுக்கப்படுவீர்கள்.

*20. Lev 26:26 உங்கள் அப்பம் என்னும் ஆதரவு கோலை நான் முறித்துப் போடும்போது, பத்து ஸ்திரீகள் ஒரே அடுப்பில் உங்கள் அப்பத்தைச்சுட்டு, அதைத்திரும்ப உங்களுக்கு நிறுத்துக் கொடுப்பார்கள் ; நீங்கள் சாப்பிட்டும் திருப்பதியடைய மாட்டீர்கள்.* Isa_3:1-9, Isa_3:15-17, Eze_4:16-17, Eze_5:16-17, Eze_12:17-20, Lam_4:4-8,

*உங்கள் அப்பம் என்னும் ஆதரவு கோலை நான் முறித்துப்போடுவேன்:-*

உங்கள் அத்துமா பிழைப்பதற்கு ஆதாரமாயிருக்கிற தேவனுடைய வாயின் வார்த்தைகளின் அப்பத்தை உங்களுக்கு கிடைக்காதபடி தடைபண்ணுவேன்.

*பத்து ஸ்தீரிகள் ஒரே அடுப்பில் உங்கள் அப்பத்தைச் சுட்டு, அதைத்திரும்ப உங்களுக்கு நிறுத்துக் கொடுப்பார்கள். நீங்கள் சாப்பிட்டும் திருப்தியடையமாட்டீர்கள்:-* **Deu_32:8**, **Zec_8:23**, **Mic_4:1-3**, **Jer_50:4-8**,

பலவிதமான பாஷைக்காரராகிய புறஜாதியாரில் பத்து மனுஷர் ஒரு யூதனுடைய வஸ்திரத் தொங்கலைப்பிடித்துக்கொண்டு தேவன் உங்களோடே இருக்கிறார் என்று கேள்விப்பட்டோம்; ஆகை யால் உங்களோட கூடப்போவோம் என்று சொல்லி, அவனைப்பற்றிக் கொண்டு புறப்பட்டு வந்து ; நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக் கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப் போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலே மிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும் என்று கர்த்தரை பின்பற்றுவார்கள்.

அது போல, பத்து ஜாதிகளிலிருந்து உருவான சபைகள் யூதனுடைய சுத்திகரிப்பின் முறைகளை ஆவியில் பின்பற்றாதவர்கள் தேவனுடைய உடன்படிக்கைகளை முறித்து துரோகிகளாக மாறினவர்கள், தேவன் எங்களோடே இருக்கிறார் என்று சொல்லிக் கொண்டு; தங்களுக்கு விருப்பமான ஒரு மையக்கருத்தை முன் வைத்து அதற்கேற்றபடியுள்ள, நூதன உபதேசம் / விகர்பமான உப தேசம் / நயவஞ்சகமான உபதேசம் ஆகிய உபதேசங்களை தேவ வார்த்தைகளிலிருந்து உருவாக்கி உங்களுடைய விசுவாச அளவின்படி உங்களுக்கு பகுத்து பிரித்து கொடுப்பார்கள், ஆனால் அவைகளை நீங்கள் நடைமுறைப்படுத்தும்போது உங்கள் ஆத்துமா

அவைகளால் திருப்தியடையாமல் இருக்கிறது. **Isa_4:1**,**Jer_7:16-19**, **Jer_44:16-19**

*பாபிலோன் மாநகர வேசியின் முதல் புலம்பல் பாட்டின் ஐந்தாவது ஏழு மடங்கு புலம்பலின் பல்லவி* **Lev_26:27-39**,

*21. Lev 26:27 இன்னும் இவைகளெல்லாவற்றாலும் நீங்கள் எனக்குச் செவிகொடாமல், எனக்கு எதிர்த்து நடந்தால், Lev 26:28 நானும் உக்கிரத்தோடே உங்களுக்கு எதிர்த்து நடந்து, நானே உங்கள் பாவங்களினிமித்தம் உங்களை ஏழத்தனையாய்த் தண்டிப்பேன்.*

**சரணங்கள்**

*22. Lev 26:29 உங்கள் குமாரரின் மாம்சத்தையும் உங்கள் குமாரத்திகளின் மாம்சத்தையும் புசிப்பீர்கள்.*

உங்கள் மூப்பர்கள், சபை விசுவாசிகளின் ஆலோசனை களையும் கேட்டு நடப்பீர்கள்.

*23. Lev 26:30 நான் உங்கள் மேடைகளை அழித்து, உங்கள் விக்கிரகச் சிலைகளை நிர்த்துளியாக்கி, உங்கள் உடல்களை உங்கள் நரகலான தேவர்களுடைய உடல்கள் மேல் எறிவேன்; என் ஆத்துமா உங்களை அரோசிக்கும்.*

*நான் உங்கள் மேடைகளை அழித்து:-*

நீங்கள் மேன்மையாக நினைத்து நடைமுறைபடுத்தி கொண்டிருக்கும் உங்கள் பதவி முறைகளின் ஐக்கியத்தை தேவன் அழித்துப் போடுவார்.

*உங்கள் விக்கிரகச் சிலைகளை நிர்த்துளியாக்குவேன்:-*

பொருளாசையின் அடிப்படையில் நீங்கள் உருவாக்கின உங்கள் திட்டங்களின் சிந்தனைகளை தேவன் சிதறப்பன்னுவார்

*உங்கள் உடல்களை உங்கள் நரகலான தேவர்களுடைய உடல்கள் மேல் எறிவேன்:-*

தங்களுடைய இருதயத்திலிருக்கிற அக்கிரம சிந்தனைகளுடைய தோல்விகளை தாங்களே வெறுக்கும்படி அவைகளை மற்றவர்களுக்கு முன்பாக தேவன் வெளிப்படுத்துவார்.

*என் ஆத்துமா உங்களை அரோசிக்கும் / வெறுக்கும்:-*

இந்த காரியங்களினால் தேவனுடைய ஆத்துமா உங்களை வெறுக்கும்.

*24. Lev 26:31 நான் உங்கள் பட்டணங்களை வெறுமையும், உங்கள் பரிசுத்த ஸ்தலங்களைப் பாழுமாக்கி, உங்கள் சுகந்த வாசனையை முகராதிருப்பேன்.*

நீங்கள் உருவாக்கின கற்பனைகளின் உபதேசங்களை தேவன் ஒழுங்கின்மையும் வெறுமையுமாக்கி, நீங்கள் பரிசுத்தமாக தீர்மானித்தவைகளை தேவன் பாழாக்கி, உங்களுடைய ஆராதனையை தேவன் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

*25. Lev 26:32 நான் தேசத்தைப் பாழாக்குவேன்; அதிலே குடியிருக்கிற உங்கள் சத்துருக்கள் பிரமிப்பார்கள்.*

உங்களுக்கு நன்மைகளை கொடுக்கும் உங்கள் விசுவாச எல்லைகளை தேவன் பாழக்குவார் உங்களுக்கு நன்மைகள் கிடைக்காததைக் கண்ட புற ஜாதிகள் உங்களைக் கண்டு பிரமிப்பார்கள்.

*26. Lev 26:33 ஜாதிகளுக்குள்ளே உங்களைச் சிதற அடித்து, உங்கள் பின்னாகப் பட்டயத்தை உருவுவேன்; உங்கள் தேசம் பாழும், உங்கள் பட்டணங்கள் வனாந்தரமுமாகும்.*

ஜாதிகளின் முறைகளை பின்பற்றி அவர்களுக்குள்ளே சிதறி இருக்கும்படி தேவன் உங்களை ஒப்புக் கொடுத்து உங்களுக்கு பின்னே தேவனுடைய நியாயத்தீர்ப்பை அனுப்புவார்; அதனால் உங்கள் நன்மைகளின் விசுவாசங்களும், உங்கள் கற்பனைகளின் உபதேசங்களும் ஒழுங்கின்மையும் வெறுமையுமாக்கப்படுகிறது.

*27. Lev 26:34 நீங்கள் உங்கள் சத்துருக்களின் தேசத்தில் இருக்கும் போது, தேசமானது பாழாய்க்கிடக்கிற நாளெல்லாம் தன்*

*ஓய்வு நாட்களை இரம்மியமாய் அனுபவிக்கும், அப்பொழுது தேசம் ஓய்வடைந்து, தன் ஓய்வு நாட்களை இரம்மியமாய் அனுபவிக்கும்.*

நீங்கள் உங்களுடைய சத்துருக்களாகிய புற ஜாதிகளின் பிரமாணங்களை கைக்கொண்டிருந்து தேவனை விட்டு விலகியிருக் கும்போது; தேவனுடைய கற்கனைகளை பின்பற்றுவதற்கு ஜனங்கள் இல்லாமல் பாழாய் கிடக்கிற நாளெல்லாம், ஓய்வு நாட்களின் ஆசீர் வாதங்களும் அனுபவிப்பார் இல்லாமல் இரம்மியமாய் ஓய்ந்திருக்கும்.

*28. Lev 26:35 நீங்கள் அதிலே குடியிருக்கும்போது, அது உங்கள் ஓய்வு வருஷங்களில் ஓய்வடையாத படியினாலே, அது பாழாய்க்கிடக்கும் நாளெல்லாம் ஓய்வடைந்திருக்கும்.*

நீங்கள் உங்களுடைய சத்துருக்களாகிய புறஜாதிகளின் பிரமாணங்களை கைக்கொண்டிருந்து தேவனை விட்டு விலகி யிருந்து, ஓய்வு நாட்களின் பிரமாணங்களை பின்பற்றாமல் பாழாய் கிடக்கிற நாளெல்லாம் ஓய்வு நாட்களின் ஆசீர்வாதங்களும் ஓய்ந் திருக்கும்.

***29. Lev 26:36*** *உங்களில் உயிரோடு மீதியாயிருப்பவர்களின் இருதயங்கள் தங்கள் சத்துருக்களின் தேசங்களில் மனத்தளர்ச்சி அடையும்படி செய்வேன்; அசைகிற இலையின் சத்தமும் அவர்களை ஓட்டும்; அவர்கள் பட்டயத்திற்குத் தப்பி ஓடுகிறதுபோல ஓடி, துரத்துவார் இல்லாமல் விழுவார்கள்.*

*உங்களில் உயிரோடு மீதியாயிருப்பவர்களின் இருதயங்கள் தங்கள் சத்துருக்களின் தேசங்களில் மனத்தளர்ச்சி அடையும்படி செய்வேன்:-*

உங்கள் சத்துருக்களாகிய ஜாதிகளின் பிரமாணத்தை பின் பற்றி தேவனை விட்டு விலகியிருக்கும்போது உங்களில் யாராவது தேவனுடைய வார்த்தையின்படி ஆவிக்குரிய காரியங்களில் ஜீவ னோடிருந்தால் அவர்களுடைய இருதயத்தை மனத்தளர்ச்சிய டையும்படி தேவன் கட்டளையிடுவார்.

*அசைகிற இலையின் சத்தமும் அவர்களை ஓட்டும்:-*

ஏதாவது வார்த்தைகளின் சத்தத்தை அவர்கள் கேட்கும் போது, அது தங்களுக்கு விரோதமாக பேசப்படும் வார்த்தை என்று பயந்து ஓடுவார்கள்.

*அவர்கள் பட்டயத்திற்குத்தப்பி ஓடுகிறது போல ஓடி, துரத்துவார்கள் இல்லாமல் விழுவார்கள்:-*

தங்களுக்கு விரோதமாக பேசப்படும் வார்த்தைகளை அவர்கள் செயல்படுத்துவார்கள் என்று பயந்து, பட்டயத்திற்கு தப்பி ஓடுகிறது போல ஓடி; யாரும் அவர்களை துரத்தாமல் அவர்களாகவே பயந்து ஓடி விழுவார்கள்.

***30. Lev 26:37*** *துரத்துவார் இல்லாமல், பட்டயத்துக்கு முன் விழுவது போல், ஒருவர் மேல் ஒருவர் இடறிவிழுவார்கள்; உங்கள் சத்துருக்களுக்கு முன் நிற்க உங்களுக்குப் பெலன் இராது.*

மனுஷர்கள் யாரும் துரத்தாமல், மற்றவர்கள் பேசும் வார்த்தை களுக்கு பயந்து ஒருவன் பயப்படுவதைக் காட்டிலும் தன்னுடன் இருப்பவன் அதிகமாக பயப்பட்டு மற்றவர்களையும் கலங்கச் செய் வான்; இப்படி ஒருவர் மேல் ஒருவர் இடறிவிழுவார்கள் உங்கள் சத்துருக்களாகிய ஜாதிகள் கேட்கும் கேள்விகளுக்கு தேவனுடைய வார்த்தையின்படி மறுமொழி கொடுக்கும் அறிவு உங்களுக்கு இருக்காது.

*31. Lev 26:38 புற ஜாதிகளுக்குள்ளே அழிந்து போவீர்கள்; உங்கள் சத்துருக்களின் தேசம் உங்களைப் பட்சிகும்.*

புற ஜாதிகளின் முறைகளை நீங்கள் பின்பற்றும்போது தேவ ஜனங்கள் என்ற நல்ல நாமம் உங்களை விட்டு நீங்கிப் போகும் நீங்கள் ஜாதிகளின் முறைகளைப் பின்பற்றும்போது தேவனுடைய நியாயத்தீர்ப்பு உங்களுக்குள்ளே பெருகிக் கொண்டே இருக்கும்.

*32. Lev 26:39 உங்களில் தப்பினவர்கள் தங்கள் அக்கிரமங் களினிமித்தமும், தங்கள் பிதாக்களின் அக்கிரமங்களினி மித்தமும், உங்கள் சத்துருக்களின் தேசங்களில் வாடிப்போவார்கள்.*

தேவனுடைய நாமத்தைப் பெற்ற ஜனங்கள் புற ஜாதிகளின் தேசங்களிலே குடியிருக்கும்போது அவர்களில் யாரவது தேவனுடைய வார்த்தையின்படி ஆவியில் பிழைப்பவர்கள் இருந்தால்; அவர்கள் தங்கள் செய்த அக்கிரமத்தினிமித்தம் தங்கள் பிதாக்கள் செய்த அக் கிரமத்தினிமித்தம் தங்கள் சத்துருக்களாகிய புறஜாதிகளின் தேசத் திற்கு வந்து சேர்ந்ததை நினைத்து தங்கள் இருதயங்களில் சந்தோஷ மில்லாமல் சோர்ந்துபோவார்கள்.

பாபிலோன் மாநகர வேசியின் முதல் புலம்பல் பாட்டின் புலம்பல்கள் சந்தோஷப்பட்டாக மாறுவதற்கு பாவ மன்னிப்பின் பாட்டின் பல்லவி.

*33. Lev 26:40 அவர்கள் எனக்கு விரோதமாகத் துரோகம் பண்ணி நடப்பித்த தங்கள் அக்கிரமத்தையும், தங்கள் பிதாக்களின் அக்கிரமத்தையும் அறிக்கையிடுகிறதுமன்றி,* Lev_26:40-46,

முதலாவது அவர்கள் தேவனுக்கு விரோதமாக துரோகம் பண்ணி நடப்பித்த தங்கள் அக்கிரமத்தையும், தங்கள் பிதாக்களின் அக்கிரமத்தையும் அறிக்கையிட வேண்டும்.

*34. Lev 26:41 அவர்கள் எனக்கு எதிர்த்து நடந்த படியினால், நானும் அவர்களுக்கு எதிர்த்து நடந்து, அவர்களுடைய சத்துருக்களின் தேசத்திலே அவர்களைக் கொண்டு போய்விட்டதையும் அறிக்கையிட்டு, விருத்தசேதனமில்லாத தங்கள் இருதயத்தைத் தாழ்த்தி, தங்கள் அக்கிரமத்துக்குக் கிடைத்த தண்டனையை நியாயம் என்று ஒத்துக்கொண்டால்,*

இரண்டாவது, அவர்கள் தேவனுக்கு விரோதமாக எதிர்த்து நடந்தபடியினால், தேவனும் அவர்களுக்கு விரோதமாக எதிர்த்து நடந்து, அவர்களுடைய சத்துருக்களாகிய புற ஜாதியாரின் ஆசரிப்பு முறைகளுக்கு தேவன் அவர்களை ஒப்புக்கொடுத்ததை அறிக்கையிட வேண்டும்.

மூன்றாவது மனத்திரும்பாத தங்கள் இருதயத்தை தாழ்த்தி, தங்கள் அக்கிரமத்திற்கு கிடைத்த தண்டனையை நியாயம் என்று ஒப்புக்கொண்டு அவைகளை அறிக்கையிட வேண்டும்.

**சரணங்கள்**

*35. Lev 26:42 நான் யாக்கோபோடே பண்ணின என் உடன்படிக்கையையும், ஈசாக்கோடே பண்ணின என் உடன்படிக்கை யையும், ஆபிரகாமோடே பண்ணின என் உடன்படிக்கையையும் நினைப்பேன்; தேசத்தையும் நினைப்பேன்.*

அப்பொழுது நான் யாக்கோபோடே பண்ணின என் உன்படிக் கையையும், ஈசாக்கோடே பண்ணின என் உடன்படிக்கையையும், ஆபிரகாமோடே பண்ணின என் உடன்படிக்கையையும் நினைப்பேன்; வாக்குத்தத்த தேசத்தின் ஆசீர்வாதங்களையும் நினைப்பேன்.

*36. Lev 26:43 தேசம் அவர்களாலே விடப்பட்டு பாழாய்க் கிடக்கிறதினாலே தன் ஓய்வு நாட்களை இரம்மியமாய் அனுபவிக்கும்; அவர்கள் என் நியாயங்களை அவமதித்து, அவர்களுடைய ஆத்துமா என் கட்டளைகளை வெறுத்தபடியினால் அடைந்த தங்களுடைய அக்கிரமத்தின் தண்டனையை நியாயம் என்று ஒத்துக் கொள்ளுவார்கள்.*

வாக்குத்தத்த தேசத்தின் ஆசீர்வாதங்கள் அவர்களாலே விடப்பட்டு, பாழாய்க்கிடக்கிறதினாலே அவைகள் தன் ஓய்வு நாட் களை இரம்மியமாய் அனுபவித்துக்கொண்டிருக்கும்; அவர்கள் என் நியாயங்களை அவமதித்து, அவர்களுடைய ஆத்துமா என் கட்ட ளைகளை வெறுத்தபடியினால் அடைந்த தங்களுடைய அக்கிர மத்தின் தண்டனையை நியாயம் என்று ஒத்துக்கொள்ளுவார்கள்.

*37. Lev 26:44 அவர்கள் தங்கள் சத்துருக்களின் தேசத் திலிருந்தாலும், நான் அவர்களை நிர் மூலமாகத்தக்கதாகவும், நான் அவர்களோடே பண்ணின என் உடன்படிக்கையை அபத்தமாகத் தக்கதாகவும், நான் அவர்களைக் கைவிடவும் வெறுக்கவும் மாட் டேன்; நான் அவர்கள் தேவனாகிய கர்த்தர்.*

அவர்கள் தங்கள் சத்துருக்களின் தேசத்திலிருந்தாலும், நான் அவர்களை நிர்மூலமாகத்தக்கதாகவும், நான் அவர்களோடே பண்ணின என் உடன்படிக்கையை அபத்தமாகத்தக்கதாகவும், நான் அவர்களைக் கைவிடவும் வெறுக்கவுமாட்டேன்; நான் அவர்கள் தேவனாகிய கர்த்தர்.

*38. Lev 26:45 அவர்களுடைய தேவனாயிருக்கும்படிக்கு, நான் புறஜாதிகளின் கண்களுக்கு முன்பாக எகிப்து தேசத்திலிருந்து அவர்களைப் புறப்படச்செய்து, அவர்களுடைய முன்னோர்களோடே நான் பண்ணின உடன்படிக்கையை அவர்கள் நிமித்தம் நினைவு கூறுவேன்; நான் கர்த்தர் என்று சொல் என்றார்.*

அவர்களுடைய தேவனாயிருக்கும்படிக்கு, நான் புறஜாதிகளின் கண்களுக்கு முன்பாக அவர்களை பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து புறப்படச்செய்து, அவர்களுடைய முன்னோர்களோடே நான் பண்ணின உடன்படிக்கையை அவர்கள் நிமித்தம் நினைவு கூருவேன், நான் கர்த்ததர் என்று சொல் என்றார்.

*39. Lev 26:46 கர்த்தர் தமக்கும் இஸ்ரவேல் சந்நதியாருக்கும் நடுவே இருக்கும் படி மோசேயைக் கொண்டு, சீனாய் மலையின் மேல் கொடுத்த கட்டளைகளும் நியாயங்ளும் இவைகளே.*

***Eze 20:19-20*** உங்கள் தேவனாகிய கர்த்தர் நானே; நீங்கள் என் கட்டளைகளில் நடந்து, என் நியாயங்களைக் கைக்கொண்டு, அவைகளின் படியே செய்து, என் ஓய்வு நாட்களைப் பரிசுத்தமாக்குங்கள்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று நீங்கள் அறியும்படிக்கு அவைகள் எனக்கும் உங்களுக்கும் அடையாளமாயிருக்கும் என்றேன்.

## அத்தியாயம் ஐந்து

*5-3 தேவனுடைய முத்திரைகளுக்கு விரோதமாக எழும்பும் துன்மார்க்கனுக்கு வரும் இரண்டாவது உடன்படிக்கையின் சாபங்களின் பாட்டு / பாபிலோன் மாநகர வேசியின் இரண்டாவது புலம்பலின் பாட்டு*

மோவாப் தேசத்தில் மோசேயின் மூலம் மனிதனுடன் தேவன் செய்து கொண்ட உடன்படிக்கையினால் பெற்றுக்கொள்ளும் வாக்குத்தத்த தேசத்தின் ஆசீர்வாதங்களின் பாட்டு, எப்பொழுது ஒருவனால் தேவனுடைய உடன்படிக்கை மீறி முறிக்கப்பட்டாலும் அந்த உடன்படிக்கை துரோகிக்கு தேவனுடைய உடன்படிக்கையின் மூலம் பெற்றுக் கொண்ட வாக்குதத்த தேசத்தின் ஆசீர்வாதங்கள், எல்லாம் தங்கள் ஆவி, ஆத்துமாவில் சாபங்களினால் வரும் புலம்பல் பாட்டாக மாறுகிறது.

## பல்லவி

*1. Deu 28:15 இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய எல்லாக் கற்பனைகளின்படியும், கட்டளைகளின்படியும் நடக்கக் கவனமாயிருக்கிறதற்கு, அவர் சத்தத்திற்குச் செவிகொடாதே போவாயாகில்,*

இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய எல்லாக் கற்பனைகளின் படியும் கட்டளைகளின் படியும் நடக்கக் கவனமாயிருக்கிறதற்கு, அவர் சத்தத்திற்குச் செவி கொடாதே போவாயாகில்,

## அனு பல்லவி

*2. இப்பொழுது சொல்லப்படும் சாபங்களெல்லாம் உன்மேல் வந்து, உனக்குப் பலிக்கும்.*

இப்பொழுது சொல்லப்படும் சாபங்களெல்லாம் உன்மேல் வந்து, உனக்குப் பலிக்கும்.

*3. Deu 28:16 நீ பட்டணத்திலும் சபிக்கப்பட்டிருப்பாய், வெளியிலும் சபிக்கப்பட்டிருப்பாய்*

உன் விசுவாச உடன்படிக்கையின் எல்லைகளுக்குள்ளேயும் வெளியே உள்ள எல்லா காரியங்களிலும் சபிக்கப்பட்டிருப்பாய்

*4. Deu 28:17 உன் கூடையும், மாப்பிசைகிற உன் தொட்டியும் சபிக்கப்பட்டிருக்கும்.*

உன் ஞாபகத்தில் சேர்த்து வைத்திருக்கிற ஞானம் ஞாபக மறதியினாலும் உன் மனசாட்சியில் நன்மை தீமைகளை பகுத்தறியும் சக்தி பெலவீனமடைந்தும் சபிக்கப்பட்டிருக்கும்.

*5. Deu 28:18 உன் கர்ப்பத்தின் கனியும், உன் நிலத்தின் கனியும், சபிக்கப்பட்டிருக்கும்.*

உன் ஆவி, ஆத்துமாவில் சிந்தித்து தியானித்து பகுத்தறிவு டன் வார்த்தைகளை பேசும் குணாதிசயங்களும் உன் விசுவாசக் கிரி யைகளும் தேவானல் சபிக்கப்பட்டிருக்கும்.

*6. Deu 28:19 உன் மாடுகளின் பெருக்கமும், உன் ஆடுகளின் மந்தைகளும் சபிக்கப்பட்டிருக்கும்.*

உன் வேலையாட்களின் எண்ணிக்கையும் குறைந்து சபிக்கப் பட்டிருக்கும். உன் மூலம் பல குழுக்களாக பிரிந்து செயல்படு கிறவைகளும் குறைந்து சபிக்கப்ட்டிருக்கும்.

*7. Deu 28:19 நீ வருகையிலும் சபிக்கப்பட்டிருப்பாய், நீ போகையிலும் சபிக்கப்பட்டிருப்பாய்.*

தேவ பெலன் இல்லாதபடியால் நீ உன் காரியத்தை ஜெயமாக முடிக்க இயலாமல் தோல்வியடைந்து திரும்பிக் கொண்டிருப்பாய். நீ உன் காரியத்தை தெளிவாக செய்து முடிக்க முடியும் என்ற நம்பிக்கை கிடைக்காமல் அதை நடைமுறைப்படுத்த துவங்கும் போதும் சபிக்கப் பட்டிருப்பாய்.

*8. Deu 28:20 என்னை விட்டு விலகி நீ செய்து வருகிற உன் துர்க்கிரியைகளினிமித்தம் சீக்கிரத்தில் கெட்டுப்போய் அழியும் மட்டும், நீ கையிட்டுச் செய்கிறதெல்லாவற்றிலும் கர்த்தர் உனக்குச் சாபத்தையும் சஞ்சலத்தையும் கேட்டையும் வரப்பண்ணுவார்.*

*9. Deu 28:21 நீ சுதந்தரிக்கும் தேசத்தில் கர்த்தர் உன்னை நிர்மூலமாக்குமட்டும் கொள்ளை நோய் உன்னைப்பிடித்து கொள்ளப் பண்ணுவார்.*

நீ சுதந்தரித்துக்கொண்ட வாக்குத்தத்த விசுவாச உடன்படிக் கையின் ஆசீர்வாதங்களை நீர்மூலமாக்கும் வரைக்கும் பெருமை, வாக்குவாதம், தர்க்கங்கள், ஆகியவைகளை; கொள்ளை நோயைப் போல உன்னை பிடித்து அவைகள் உன்னை ஆளுகை செய்யும்படி தேவன் அவைகளுக்கு ஒப்புக்கொடுப்பார்.

*10. Deu 28:22 கர்த்தர் உன்னை ஈளையினாலும், காய்ச்சலினாலும், உஷ்ணத்தினாலும், எரிபந்தத்தினாலும், வறட்சி யினாலும், கருக்காயினாலும், விஷப்பனியினாலும் வாதிப்பார்; நீ அழியுமட்டும் இவைகள் உன்னைப் பின் தொடரும்.*

நீ அழியும் மட்டும் / மனத்திரும்பும் வரை / மரணம் வரை கீழே குறிப்பிடும் தேவனுடைய சாபங்கள் உன்னைப் பின் தொடரும்.

1. ஈளை - மலையாள வார்த்தை:- சோம்பல், வறுமை, உதாசினம், அலட்சியம், கஞ்சத்தனம், காலத்தை வீணாக்குதல்,

2. காய்ச்சல் / நோய் / வியாதி :- வாக்குவாதம், பெருமை, தர்க்கம் பண்ணுதல்.

3. உஷ்ணம் :- எரிச்சல் / பொறாமை

4. எரிபந்தம் :- கோபம், கடுங்கோபம்

5. வறட்சி :- அறியாமையினால் அறிவில் வறட்சி

6. கருக்காய்:- கோபத்தில் பட்டயக்கருக்கை போல உள்ள வார்த்தைகளை பதறி / சிதறி பேசுதல்

7. விஷப்பனி :- தேவனுடைய கட்டளைகளுக்கு கீழ்படி யாமல் இருக்கும்போது, ஒருவன் சேர்த்து வைத்திருக்கிற ஞானத்தில், வெள்ளியின் மேல் படரும் களிம்பு போல; ஞாபக மறதி பனி போல படர்ந்து தன்னிடம் உள்ள ஞானத்தை உருவழித்து, சீரழியச் செய் கிறது.

*11. Deu 28:23 உன் தலைக்கு மேலுள்ள வானம் வெண் கலமும், உனக்குக் கீழுள்ள பூமி இரும்புமாய் இருக்கும்.*

உன் அறிவின் சிந்தனைகளை பகுத்தறியாதபடி அவைகள் உனக்கு வெங்கலம் போல மிக கடினமாக இருக்கும் உன் கிரியை களை நடை முறைப்படுத்தாதபடி உன்னுடைய செயல் திறமைகள் இரும்பைப்போல உனக்கு கடினமுள்ளதாக இருக்கும்.

*12. Deu 28:24 உன் தேசத்து மழையைக் கர்த்தர் புழுதியும் மண்ணுமாக பெய்யப்பண்ணுவார்; நீ அழியும் மட்டும் அப்படியே வானத்திலிருந்து உன்மேல் இறங்கி வரும்.*

உன் வாயிலிருந்து புறப்படும் வார்த்தைகள் மற்றவர்களை சபிக்கிறதும், தூஷிக்கிறதுமான அவதூறான வார்த்தைகளை மழையாக பொழிந்து, அதனால் உன்னையே நீ சபித்தும், தூஷித்தும் கொண்டிருப்பாய், நீ முற்றிலும் அழிந்து நாசமாகும் வரை / மனத்திரும்பும் வரை அப்படியே உன்னுடைய அறிவு சிந்தனைகளிலிருந்து புறப்பட்டு உன் வாய் வழியாக வந்து கொண்டே இருக்கும்.

*13. Deu 28:25 உன் சத்துருக்களுக்கு முன்பாக நீ முறிய அடிக்கப்படும்படி கர்த்தர் செய்வார்; ஒரு வழியாய் அவர்களுக்கு எதிராகப் புறப்படுவாய், ஏழு வழியாய் அவர்களுக்கு முன்பாக ஓடிப் போவாய்; நீ பூமியிலுள்ள எல்லா ராஜ்யங்களிலும் சிதறுண்டு போவாய்.* **Num_24:2-9**, **1Sa_8:5-8**, **1Sa_8:19-22**, **Deu_28:36**,

உன் சத்துருக்களாகிய ஜாதிகளின் கேள்விகளுக்கு மறுபடி கொடுக்க முடியாமல் நீ அவர்களுக்கு பயந்து ஓடுவாய், நீ ஒரு வார்த்தையைக் கொண்டு ஜாதிகளை குற்றப்படுத்த ஆயத்த மாகும்போது; அவர்கள் உன்னை ஏழு வார்த்தைகளைக்கொண்டு குற்றப்படுத்தும்போது அவர்களுக்கு பயந்து சிதறி ஓடுவாய். நீ பூமியிலுள்ள எல்லா ஜாதிகளின் ஆசரிப்பு முறைகளைப் பின்பற்றி அவர்களுக்குள்ளே சிதறி உன்னுடைய அடையாளத்தை இழந்து போவாய்.

*14. Deu 28:26 உன் பிணம் ஆகாயத்துப் பறவைகளுக்கும் பூமியின் மிருகங்களுக்கு இரையாகும்; அவைகளை விரட்டு வாரில்லாதிருப்பார்கள்.*

உன் தோல்விகளை மனுஷ ஞானத்தை பெற்றவர்களும் பாவிகளான துன்மார்க்கர்களும் விமர்சனம் செய்து பரிகாசம் செய்து அவமானப்படுத்துவார்கள். இப்படி ஏன் ? அவர்களை பரிகாசம் பண்ணுகிறார்கள் என்று யாரும் அவர்களை தடுக்கமாட்டடார்கள்.

*15. Deu 28:27 நீ குணமாகாதபடி கர்த்தர் உன்னை எகிப்தின் எரிபந்தமான பருக்களினாலும், மூல வியாதியாதியினாலும், சொறி யினாலும், சிரங்கினாலும் வாதிப்பார்.*

நீ குணமடையாதபடி கீழே குறிப்பிட்ட பாவ மனிதனின் வியாதிகளைக் கொண்டு கர்த்தர் உன்னை தண்டிப்பார்.

1. எகிப்தின் எரிபந்தமான பருங்கள்:- பாவ மனிதனின் கோப மான வார்த்தைகள்

2. மூல வியாதி :- காரியத்தின் முடிவில் பிரச்சனைகள்

3. சொறி:- நாள் பட்ட பாவங்களை அடிக்கடி தொடருதல்

4. சிரங்கு - தீராத ஆசையினால் பழைய பாவங்களை மீண்டும் தொடருதல்

*16. Deu 28:28 கர்த்தர் உன்னைப் புத்தி மயக்கத்தினாலும், குருட்டாட்டத்தினாலும், மனத்திகைப்பினாலும் வாதிப்பார்.*

நீ குணமடையாதபடி கீழே குறிப்பிட்ட பாவ மனிதனின் வியாதிகளைக் கொண்டு கர்த்தர் உன்னை தண்டிப்பார்.

1. புத்திமயக்கம் :- பிடிவாதம் / பைத்தியம் / அறிவினால் பெருமை

2. குருட்டாட்டம்:- குறைவான அறிவு

3. மனத்திகைப்பு :- முடிவு எடுப்பதில் திண்டாட்டம் / நன்மை தீமைகளை பகுத்தறிவதில் குழப்பம்.

*17. Deu 28:29 குருடன் அந்தகாரத்திலே தடவித்திரி கிறதுபோல, நீ பட்டப்பகலிலே தடவிக் கொண்டு திரிவாய்;*

பார்வையற்றவன் ஒரு எளிமையான காரியத்தை செய்வதற்கு அந்தக்காரத்திலே தடவித்திரிகிறதுபோல கண்பார்வையிருந்தும் பட்டப்பகலிலே நன்மை, தீமைகளை பகுத்தறிய முடியாத அறியாமையினால் ஒரு காரியத்தை எப்படி செய்து முடிக்கலாம் என்று குருடனைப்போல தொட்டு, தடவிக்கொண்டிருப்பாய்.

*18. உன் வழிகளில் ஒன்றும் உனக்கு வாய்க்காதே போம்;*

நீ திட்டமிடும் ஒரு காரியமும் உன்னால் முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாது.

*19. உதவி செய்வாரில்லாமல் நீ எந்நாளும் ஒடுக்கப்படுகிறவனும் பறிகொடுக்கிறவனுமாய் இருப்பாய்.*

உனக்கு ஒருவரும் உதவி செய்யாமல் நீ மற்றவர்களால் எப்பொழுதும் ஒடுக்கப்பட்டும், கொள்ளையிடப்பட்டும் இருப்பாய்.

*20. Deu 28:30 பெண்ணை உனக்கு நியமிப்பாய், வேறொருவன் அவளுடன் சயனிப்பான்;*

நீ உடன்படிக்கை பண்ணுவாய் ஆனால் அதன் பிரதிபலனை வேறொருவன் அனுபவிப்பான்.

*21. வீட்டைக்கட்டுவாய், அதிலே குடியிருக்கமாட்டாய்; திராட்சத்தோட்டத்தை நாட்டுவாய், அதின்பலனை அனுபவிக்க மாட்டாய்.*

உனக்கு வீடு / தேவனுடைய ஆலயத்தை கட்டுவாய் ஆனால் அதை நீ அனுபவிக்க முடியாது. நீ ஊழியத்தை ஸ்தாபிப்பாய் ஆனால் அதன் ஆசீர்வாதங்களை நீ அனுபவிக்க முடியாது.

*22. Deu 28:31 உன் மாடுகள் உன் கண்களுக்கு முன்பாக அடிக்கப்படும், நீ அதில் ஒன்றும் புசிப்பதில்லை;*

உன் வேலையாட்களின் ஆசீர்வாதங்கள் உனக்கு முன்பாக பங்கிடப்படும், அதன் பலனை ஒன்றும் நீ அனுபவிக்க முடியாது.

*23. உன் கழுதை உனக்கு முன்பாகக் கொள்ளையிட்டுக் கொண்டுபோகப்பட்டு; உனக்குத்திரும்ப அகப்படாமற்போம்; உன் ஆடுகள் உன் சத்துருக்களுக்குக் கொடுக்கப்படும், விடுவிடுப்பார் ஒருவரும் உனக்கு இல்லாதிருப்பார்கள்.*

உன் வேலையாட்களை மற்றவர்கள் கூட்டிக்கொண்டு போவார்கள் அவர்கள் மீண்டும் திரும்ப உன்னிடம் வேலைக்கு வர மாட்டார்கள் உன்னைப் பின்பற்றி வந்தவர்கள், உன் சத்துருக்களை பின்பற்றிச் செல்வார்கள் உன்னுடையவர்களை திரும்ப உனக்கு மீட்டுக்கொடுப்பவர்கள் யாரும் உனக்கு இல்லாதிருப்பார்கள்.

*24. Deu 28:32 உன் குமாரத்திகளும் அந்நிய ஜனங்களுக்கு ஒப்புக் கொடுக்கப்படுவார்கள்; அவர்களைக் காண உன் கண்கள் நாடோறும் பார்த்துப் பார்த்துப் பூத்துப்போம்; உன் கையில் பெல னில்லாதிருக்கும்.*

உன் நம்பிக்கைக்கு பாத்திரமாக இருப்பவர்களும் உனக்கு தகுந்த ஆலோசனையை கொடுப்பவர்களும் உன்னை விட்டு பிரிந்து சென்று மற்றவர்களிடம் ஐக்கியமாக இருப்பார்கள்; அவர்கள் எப் பொழுது உன்னிடம் திரும்ப வருவார்கள் என்று ஒவ்வொரு நாளும் அவர்களை ஏக்கத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பாய், அவர்களை திரும்ப மீட்டுக்கொள்ளுவதற்கான பெலன் உனக்கு இல்லா திருக்கும்.

*25. Deu 28:33 உன் நிலத்தின் கனியையும், உன் பிரயாசத்தின் எல்லாப்பலனையும் நீ அறியாத ஜனங்கள் புசிப்பார்கள்; நீ சகல நாளும் ஒடுக்கப்பட்டும் நொறுக்கப்பட்டும் இருப்பாய்.*

உன் வாக்குத்தத்ததின் ஆசீர்வாதங்களை நீ அறியாத ஜனங்கள் புசிப்பார்கள் இன்நாள் வரை நீ கஷ்டப்பட்டு சேகரித்த எல்லா ஆசீர்வாதங்களையும் நீ அறியாத ஜனங்கள் அனுபவிப் பார்கள் நீ சகல நாளும் குறைவுபட்டும் மற்றவர்களால் குற்றம் சுமத் தப்பட்டும் இருப்பாய்.

*26. Deu 28:34 உன் கண்கள் காணும் காரியங்களினலே மதி மயங்கிப் போவாய்.*

கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்று உனக்கு வெளிப்பட்ட தரிசனங்களினாலே முழு பிடிவாதமாக நம்பிக்கை கொண்டிருந்து அவைகளினாலே மதிமயங்கிப் போவாய்.

*27. Deu 28:35 உன் உள்ளங்கால் தொடங்கி உன் உச் சந்தலை மட்டும் குணமாகாதபடிக்கு, கர்த்தர் உன்னை முழங்கால் களிலும் தொடைகளிலும் கொடிய எரிபந்தப் பருக்களினாலே வாதிப்பார்.*

உன் விசுவாச உடன்படிக்கையின் ஆரம்பம் முதல் உன் விசுவாச கிரியைகளின் முடிவு வரை உள்ள எல்லா காரியங்களிலும் உள்ள உன்னுடைய குறைகளை உணர்ந்து தேவனிடம் பணிந்து, குனிந்து மனத்தாழ்மையாக இருந்து மனந்திரும்பாதபடிக்கு உனக்கு பெருமையையும் கோபத்தையும் தேவன் கட்டளையிடுவார்.

*28. Deu 28:36 கர்த்தர் உன்னையும், உனக்காக நீ ஏற் படுத்திக் கொண்ட ராஜாவையும், நீயும் உன் பிதாக்களும் அறியாத ஜாதிகளிடத்துக்குப்போகப் பண்ணுவார்; அங்கே நீ மரமும் கல்லுமான அந்நிய தேவர்களைச் சேவிப்பாய்.*

தேவன் எங்களோடிருக்கிறார் என்ற பெருமை கொண்ட நீங்களும் நீங்கள் ஏற்படுத்திக்கொண்ட உங்கள் இராஜாவும் / தலை வனும் உங்கள் பிதாக்கள் அறியாத புற ஜாதிகளிடத்திற்கு போக பன்னுவார் அங்கே உன் எளிமையான நற்கிரியைகளை செய்து அவைகளின் மூலம் புற ஜாதிகளிடம் நன் மதிப்பை எதிர்பார்த்துக் கொண்டிருப்பாய் / புற ஜாதிகளின் அன்பையும் ஆதரவையும் பெற்றுக்கொள்ளுவதற்காக அவர்கள் விரும்புகிற சில காரியங்களை தங்களுக்கு கடினமாக இருந்தாலும் அவைகளையும் செய்து அவர் களிடம் உதவியை எதிர்பார்த்துக் கொண்டிருப்பாய்.

*29. Deu 28:37 கர்த்தர் உன்னைக் கொண்டு போய் விடும் எல்லா ஜனங்களுக்குள்ளும் பிரமிப்பும் பழமொழியும் பரியாசச் சொல்லுமாவாய்.*

கர்த்தர் உன்னைக் கொண்டு போய் விடும் எல்லா ஜனங் களுக்குள்ளும் பிரமிப்பும் பழமொழியும் பரியாசச் சொல்லுமாவாய்.

*30. Deu 28:38 மிகுந்த விதையை வயலுக்குக் கொண்டு போவாய் கொஞ்சம் அறுப்பாய்; வெட்டுக்கிளி அதைப்பட்சித்து போடும்.*

திரளான வார்த்தைகளை உன் ஊழியத்தில் பயன்படுத்து வாய் ஆனால் சிறிதளவான ஆசீர்வாதங்களை அறுப்பாய் வெட்டுக் கிளியின் இரண்டு இறகுகள் போல உன் தீமையிலிருந்து துள்ளி வரும் உபயோகமில்லாத வார்த்தைகள் உன் ஊழியத்தில் விளைந்த நன்மைகளை வெட்டி பல துண்டுகளாக மாற்றி சேதப்படுத்திவிடும்.

*31. Deu 28:39 திராட்சத்தோட்டங்களை நாட்டிப்பயிரிடு வாய், ஆனாலும் நீ திராட்சரம் குடிப்பதும் இல்லை, திராட்சப் பழங் களைச் சேர்ப்பதும் இல்லை; பூச்சி அதைத்தின்றுபோடும்.*

நீ அநேகருக்கு தேவனுடைய ஆலோசனைகளை அறிவிப் பாய், ஆனாலும் நீ அந்த தேவனுடைய ஆலோசனைகளை தள்ளி விடுவாய். உனக்கு தேவன் கொடுத்த ஆலோசனைகளை அலட்சியப் படுத்தி அவைகளை மறந்து போவாய்.

*32. Deu 28:40 ஒலிவ மரங்கள் உன் எல்லைகளிலெங்கும் இருக்கும், ஆனாலும் அதின் எண்ணெயை நீ பூசிக்கொள்வதில்லை; உன் ஒலிவமரத்தின் பிஞ்சுகள் உதிர்ந்து போம்.*

நீ அநேகருக்கு அவர்களுடைய தவறுகளை சுட்டிக்காட்டி அவைகளை சீர்படுத்துவாய், ஆனால் உன் தவறுகளை சீர்த் திருத்தும் படி தேவனுடைய எச்சரிப்பின் செய்தியை தள்ளி விடுவாய். உனக்கு தேவன் கொடுத்த எச்சரிப்பின் செய்தியை நீ அலட்சியப் படுத்தி அவைகளை மறந்து போவாய்.

*33. Deu 28:41 நீ குமாரரையும் குமாரத்திகளையும் பெறு வாய், ஆனாலும் அவர்கள் உன்னோடே கூட இரார்கள்; அவர்கள் சிறைப்பட்டுப்போவார்கள்.*

உனக்கு நம்பிக்கையானவர்களும், உனக்கு நல்ல ஆலோசனைகளை சொல்லுக்கிறவர்களும் உன்னுடன் இருப்பார்கள், ஆனால் அவர்கள் உன்னை நம்பமாட்டார்கள் அவர்கள் மற்றவர்களை பின்பற்றிச் செல்வார்கள்.

*34. Deu 28:42 உன் மரங்களெல்லாவற்றையும் உன் நிலத்தின் கனிகளையும் விட்டில் பட்சித்துப் போடும்.*

உனக்கு கிடைத்த அறிவையும், ஆசீர்வாதங்களையும், உன்னிலிருந்து புறப்படும் தீமைகளும், அறியாமையும் உன்னை ஒழுங்கின்மையும் வெறுமையுமாக மாற்றிவிடும்.

*35. Deu 28:43 உன் நடுவிலிருக்கிற அந்நியன் உனக்கு மேற்பட்டு மேன்மேலும் உயர்ந்திருப்பான்; நீ மிகவும் தாழ்த்தப் பட்டுப்போவாய்.*

உன் நடுவிலிருக்கிற அந்நியன் / இடம், மொழி, கலாச்சாரம், பண்பாடு ஆகிய இவைகளிலிருந்து மாறுபட்டவன், உன்னை விட அறிவிலும், செயலிலும் மேற்பட்டு மேலும் மேலும் உயர்ந்திருப்பான்; நீ அவனை விட அறிவிலும் செயலிலும் மிகவும் தாழ்த்தப்பட்டுக் கொண்டிருப்பாய்.

*36. Deu 28:44 அவன் உன்னிடத்தில் கடன்படான், நீ அவனிடத்தில் கடன்படுவாய்; அவன் தலையாயிருப்பான், நீ வாலாயிருப்பாய்.*

அவன் உன்னுடைய ஆலோசனையை கேட்க வேண்டிய அவசியம் அவனுக்கு ஏற்படாது; ஆனால் நீ அவனுடைய ஆலோச னையை கேட்க வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்படுவாய், அவன் உனக்கு தலைவனாக இருப்பான் நீ அவனுடைய சொற்படி நடக்கும் வேலைக்காரனாக இருப்பாய்.

*37. Deu 28:45 உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு விதித்த அவருடைய கற்பனைகளையும் கட்டளைகளையும் கைக்கொள்ளும் படி, நீ அவர் சத்தத்திற்குச் செவிகொடாதபடியினால், இந்தச் சாபங்கள் எல்லாம் உன்மேல் வந்து, நீ அழியுமட்டும் உன்னைத் தொடர்ந்து பிடித்து,*

*38. Deu 28:46 உன்னிலும் உன் சந்நதியிலும் என்றைக்கும் அடையாளமாகவும் அற்புதமாகவும் இருக்கும்.*

*39. Deu 28:47 சகலமும் பரிபூரணமாயிருக்கையில், நீ மன மகிழ்ச்சியோடும் களிப்போடும் உன் தேவனாகிய கர்த்தரைச் சேவி யாமற்போனதினிமித்தம்*

*40. Deu 28:48 சகலமும் குறைவுபட்டு, பட்டினியோடும் தாகத்தோடும் நிர்வாணத்தோடும், கர்த்தர் உனக்கு விரோதமாய் அனுப்பும் சத்துருக்களைச் சேவிப்பாய்;*

சகலமும் குறைவுபட்டு, ஆவி, ஆத்துமாவின் ஆகாரமாகிய ஜீவ அப்பம், ஜீவத்தண்ணீர் இல்லாமல் ஆவி, ஆத்துமாவில் பட்டினி யோடும் தாகத்தோடும் நீதியின் கிரியைகளின் வஸ்திரம் இல்லாமல் நிர்வாணத்தோடும், கர்த்தர் உனக்கு விரோதமாய் அனுப்பும் புறஜாதி களைச் பின்பற்றுவாய்.

*41. அவர்கள் உன்னை அழித்துத் தீருமட்டும், இருப்பு நுகத் தடியை உன் கழுத்தின் மேல் போடுவார்கள்.*

நீ பூமியிலுள்ள எல்லா ஜாதிகளின் ஆசரிப்பு முறைகளைப் பின்பற்றி அவர்களுக்குள்ளே சிதறி உன்னுடைய அடையாளத்தை இழுந்துபோகும் வரைக்கும், உன்னால் முடியாத வேலைகளையும் உன் மேல் சுமத்துவார்கள்.

*42. Deu 28:49 கிழவன் என்று முகம் பாராமலும், வாலிபன் என்று இரங்காமலும் இருக்கும் கொடியமுகமுள்ளதும்,*

*43. Deu 28:50 உனக்குத் தெரியாத பாஷையைப் பேசுகிறது மான ஜாதியை வெகுதூரத்திலுள்ள பூமியின் கடையாந்தரத்தி*

*லிருந்து கர்த்தர் உன்மேல் கழுகு பறக்கும் வேகமாய் வரப் பண்ணு வார்.*

நீங்கள் பெற்றுக்கொண்ட தேவ தரிசனங்களினால் ஆவிக் குரிய நிலையில் நீங்கள் பேசுகிற பாஷையை அறியாத ஜாதியை வெகுதூரத்திலிருந்து பூமியின் கடையாந்தரத்திலிருந்து கர்த்தர் உன் மேல் கழுகு பறக்கும் வேகமாய் வரப்பண்ணுவார். அவர்கள் தேவ வார்த்தைகளின் படியுள்ள ஆசரிப்பு முறைகளின் கலாச்சார பாஷையை தெளிவாக பேச அறிந்தவர்கள்.

*44. Deu 28:51 நீ அழியும் மட்டும் அந்த ஜாதியான் உன் மிருக ஜீவன்களின் பலனையும், உன் நிலத்தின் கனியையும் புசிப் பான்;*

1. உன் மிருக ஜீவன்களின் பலன்கள் :- தேவனுடைய நாமத்திற்காக இந்நாள் வரை சரீர பிராகாரமாக மேற்கொண்ட முயற்சிகள்.

2. உன் நிலத்தின் கனிகள்:- உன் ஊழிய அழைப்பின் படி கிடைத்த ஆசீர்வாதங்கள்.

*45. அவன் உன்னை அழித்துத் தீருமட்டும் உன் தானித் திலும், திராட்சரசத்திலும், எண்ணெயிலும், உன் மந்தைகளிலுள்ள ஆடுமாடுகளிலும் உனக்கு ஒன்றும் மீதியாக வைக்க மாட்டான்.*

1. உன் தானியம் :- உன் வெளிப்பாடுகளின் இரகசியங்கள்

2. உன் திரட்சரசம் :- உன் வெளிப்பாடுகளின் ஆலோசனை கள்

3. உன் எண்ணெய் :- உன் வெளிப்பாடுகளின் எச்சரிப்பின் செய்தி

4. உன் ஆடு :- உன் விசுவாசிகளின் ஆலோசனைகள்

5. உன் மாடு:- உன் மூப்பர்களின் ஆலோசனைகள் ஆகிய இவைகளின் ஆசீர்வாதங்களை வெறுமையாக்கி உன்னுடைய

அடையாளத்தை அழித்துப்போடுவார்கள், உன்னுடைய ஆசீர்வாதம் என்று சொல்லப்படுதற்கு இனி உன்னிடம் ஒன்றும் இருக்காது.

*46. Deu 28:52 உன் தேசமெங்கும் நீ நம்பியிருக்கும் உயரமும் அரணிப்புமான உன் மதில்கள் விழுமளவும், அவன் உன்வாசல்களிலெங்கும் உன்னை முற்றிகைப்போடுவான்;*

உனக்கு கிடைத்த விசேஷ வெளிப்பாடுகளின் மூலம் நல்ல சிறப்பாக வடிவமைக்கப்பட்ட தேவனுடைய இராஜ்ஜியத்தின் ஆட்சி முறையின் இரகசியங்கள், உன் மூலம் உலகெங்கும் உடனே நடை முறைக்கு வரும் என்று நம்புகிற உன் நம்பிக்கை உன்னை விட்டு நீங்கும் வரை; உனக்கு தெரியாத பாஷையைப் பேசும் அந்த அந்நி யன் தேவனுடைய பிரமாணங்களைக் கொண்டு உன்னுடைய பிரமா ணங்களை முற்றுகை போடுவான்.

*47. உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக்கொடுத்த உன்னுடைய தேசமெங்குமுள்ள உன்னுடைய வாசல்கள் தோறும் உன்னை முற்றிகைப்போடுவான்.*

உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு விசேஷ வெளிப்பாடு களின் மூலம் வெளிப்படுத்தின நல்ல சிறப்பாக வடிவமைக்கப்பட்ட உன்னுடைய இராஜ்ஜியத்தின் ஆட்சி முறையின் இரகசிய ஆலோசனைகள் விழுந்துபோகும் வரை தேவனுடைய இராஜ்ஜியத் தைக்குறித்தும் அவருடைய நீதியைக் குறித்தும் சொல்லப்பட்ட, கிறிஸ்துன் மூல உபதேசங்களின் பிரமாணங்களைக் கொண்டு, உன்னுடைய பிரமாணங்களை முற்றுகை போடுவான்.

*48. Deu 28:53 உன் சத்துருக்கள் உன்னை முற்றிகைப் போட்டு நெருக்குங்காலத்தில், உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுத்த உன் கர்ப்பக்கனியான உன் புத்திர புத்திரிகளின் மாம் சத்தைத் தின்பாய்.*

உனக்கு தெரியாத பாஷையைப் பேசும் உன் சத்துருக்களான அந்நியர்கள் கிறிஸ்துவின் மூல உபதேசங்களின் பிரமாணாங்களைக் கொண்டு, உன்னுடைய பிரமாணங்களை முற்றிகைப்போட்டு

நெருக்குங்காலத்தில், உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுத்த உன் கர்ப்பக்கனியான உன் ஆவிக்குரிய பிள்ளைகளான விசுவாசிகள், மூப்பர்கள் ஆகியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பாய்.

*49. Deu 28:54 உன் சத்துருக்கள் உன் வாசல்களிலெங்கும் உன்னை முற்றிகைப்போட்டு நெருக்குங்காலத்தில், உன்னிடத்தில் செருக்கும் சுகசெல்வமுமுள்ள மனிதன் சகலத்தையும் இழந்து, தன் இல்லாமையினாலே தான் தின்னும் தன்பிள்ளைகளின் மாம்சத்திலே,*

*50. Deu 28:55 தன் சகோதரனுக்காகிலும், தன் மார்பில் இருக்கிற மனைவிக்காகிலும், தனக்கு மீந்திருக்கிற தன் மக்களில் ஒருவனுக்காகிலும் கொஞ்சமேனும் கொடாத படி அவர்கள் மேல் வன்கண்ணாயிருப்பான்.*

உன் சத்துருக்கான அந்நியர்கள், தேவனுடைய பிரமாணங்களைக் கொண்டு உன்னுடைய பிரமாணங்களை முற்றுகையிட்டு நெருக்கும் காலத்தில், உங்கள் நடுவே விசேஷ வெளிப்பாட்டை பெற்று எல்லாவித இரகசியங்களையும் அறிந்தவன் என்ற பெயரோடும், புகழோடும் வாழ்ந்த உங்கள் தலைவன்; சகலத்தையும் இழந்து தன் இல்லாமையிலே தன்னுடைய ஆவிக்குரிய பிள்கைளின் ஆலோசனைகளை இரகசியமாக கேட்டு, அவைகளால் ஆவியில் பிழைக்கும் போது தன்னுடன் இருப்பவர்களுடன் செய்து கொண்ட உடன்படிக்கையை நிலைநிறுத்துவதற்காக, அதை மற்றவர்கள் அறிந்து கொள்ளாதபடி தன்னை பின்பற்றுகிற ஒருவராவது கொஞ்சமாகிலும் அறிந்து கொள்ளாதபடி அவர்கள் மேல் வன்கண்ணாயிருப்பான்.

*51. Deu 28:56 உன்னிடத்தில் சுக செல்வத்தினாலும் செருக்கினாலும் தன் உள்ளங்காலைத் தரையின் மேல் வைக்க அஞ்சின செருக்கும் செல்வமுமுள்ள ஸ்திரீ தன் கால்களின் நடுவே புறப்பட்ட தன் நஞ்சுக் கொடியினிமித்தமும், தான் பெற்ற பிள்ளைகளினிமித்தமும், தன் மார்பில் இருக்கிற புருஷன் மேலும் தன் குமாரன் மேலும் தன் குமாரத்தியின் மேலும் வன்கண்ணாயிருப்பாள்;*

உங்களுக்குள்ளே விசேஷ வெளிப்பாட்டின் இரகசியங்களை அறிந்தவர்கள் என்ற பெயரோடும் புகழோடும் சுகபோகமாக வாழ்கிற சபையானது, ஆவியில் பிள்ளைகளை பெற்றேடுப்பதற்காக சபையின் மூலம் நடந்த காரியங்ககளை, சபை பெற்றெடுத்த ஆவிக்குரிய பிள்ளைகள், சபையுடன் செய்து கொண்ட உடன்படிக்கையை நிலைநிறுத்துவதாக; சபை மூப்பர்கள் மற்றும் விசுவாசிகள் யாராவது தன்னுடைய இரகசியங்களை, கொஞ்சமாகிலும் அறிந்து கொள்ளாதபடி சபையானது அவர்கள்மேல் வண்கண்ணாயிருக்கும்.

*52. Deu 28:57 உன் சத்துருக்கள் உன் வாசல்களில் உன்னை முற்றிகைப்போட்டு நெருக்குங்காலத்தில், சகலமும் குறைவுபடு வதினால், அவைகளை இரகசியமாய்த் தின்னுவான்.*

உனக்கு தெரியாத பாஷையைப் பேசும் உன் சத்துருக்களான அந்நியர்கள் கிறிஸ்துவின் மூல உபதேசங்களின் பிரமாணங்களைக் கொண்டு, உன்னுடைய பிரமாணங்களை முற்றிகைப்போட்டு நெருங்குக்காலத்தில், சகலமும் குறைவுபடுவதினால், உன் தேவனா கிய கர்த்தர் உனக்குக் கொடுத்த உன் கர்ப்பக்கனியான உன் ஆவிக் குரிய பிள்ளைகளான விசுவாசிகள், மூப்பர்கள் ஆகியவர்களின் ஆலோசனைகளைக் இரகசியமாய்க் கேட்டு நடப்பாய்.

*53. Deu 28:58 உன் தேவனாகிய கர்த்தர் என்னும் மகிமையும் பயங்கரமுமான நாமத்திற்குப் பயப்படும்படிக்கு, நீ இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற இந்த நியாயப்பிரமாண வார்த் தைகளின் படியெல்லாம் நடக்கக் கவனமாயிராவிட்டால்,*

*54. Deu 28:59 கர்த்தர் நீங்காத பெரிய வாதைகளாலும் நீங்காத கொடிய ரோகங்களாலும் உன்னையும் உன் சந்ததியையும் அதிசயமாய் வாதித்து,*

நீ குணமடையாதபடி கீழே குறிப்பிட்ட பாவ மனிதனின் வியாதிகளைக் கொண்டு கர்த்தர் உன்னை தண்டிப்பார் நீ நிர் மூலமாகும் வரைக்கும் பெருமை, வாக்குவாதம், தர்க்கங்கள் ஆகியவைகள்; கொள்ளை நோயைப்போல உன்னை பிடித்து

அவைகள் உன்னை ஆளுகை செய்யும்படி தேவன் அவைகளுக்கு ஒப்புக்கொடுப்பார்.

நீ அழியும்மட்டும் / மனத்திரும்பும் வரை / மரணம் வரை கீழே குறிப்பிடும் தேவனுடைய சாபங்கள் உன்னைப் பின் தொடரும்.

1. ஈளை:- சோம்பல், வறுமை, உதாசினம், அலட்சியம் கஞ்சத்தனம் காலத்தை வீணாக்குதல்,

2. காய்ச்சல் / நோய் / வியாதி :- வாக்குவாதம், பெருமை, தர்க்கம், பண்ணுதல்.

3. உஷ்ணம் :- எரிச்சல் / பொறாமை

4. எரிபந்தம் :- கோபம், கடுங்கோபம்.

5. வறட்சி :- அறியாமையினால் அறிவில் வறட்சி

6. கருக்காய் :- கோபத்தில் பட்டயக்கருக்கை போல உள்ள வார்த்தைகளை பதறி / சிதறி பேசுதல்.

7. விஷப்பனி :- தேவனுடைய கட்டளைகளுக்கு கீழ்படியாமல் இருக்கும்போது ஒருவன் சேர்த்து வைத்திருக்கிற ஞானத்தில், வெள்ளியின்மேல் படரும் களிம்பு போல, ஞாபகமறதி பனி போல படர்ந்து தன்னிடம் உள்ள ஞானத்தை உருவழித்து, சீரழியச் செய்கிறது.

*55. Deu 28:60 நீ கண்டு பயந்த எகிப்தின் வியாதிகளெல்லாம் உன்மேல் வருவிப்பார், அவைகள் உன்னைப் பற்றிக்கொள்ளும்.*

நீ கண்டு பயந்த பாவ மனிதனின் வியாதிகளெல்லாம் உன் மேல் வருவிப்பார்; அவைகள் உன்னைப் பற்றிக் கொள்ளும்.

1. மூல வியாதி :- காரியத்தின் முடிவிலே பிரச்சனைகள்

2. சொறி :- நாள் பட்ட பாவங்களை அடிக்கடி தொடருதல்

3. சிரங்கு :- தீராத ஆசையினால் பழைய பாவங்களை மீண்டும் தொடருதல்.

4. புத்திமயக்கம் :- பிடிவாதம் / பைத்தியம் அறிவினால் பெருமை.

5. குருட்டாட்டம் :- அறியமை / குறைவான அறிவு

6. மனத்திகைப்பு :- முடிவு எடுப்பதில் திண்டாட்டம் / நன்மை தீமைகளை பகுத்தறிவதில் குழப்பம் ஆகியவைகளைக் கொண்டு கர்த்தர் உன்னை தண்டிப்பார்.

*56. Deu 28:61 இந்த நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதியிராத எல்லாப்பிணியையும் வாதையையும் நீ அழியுமளவும் கர்த்தர் உன் மேல் வரப்பண்ணுவார்.*

*57. Deu 28:62 திரட்சியிலே வானத்து நட்சத்திரங்களைப் போல் இருந்த நீங்கள், உங்கள் தேவனாகிய கர்த்தரின் சத்தத்திற்குச் செவிகொடமற்போனதினால், கொஞ்சம் ஜனமாய்ப் போவீர்கள்.*

திரளாக வானத்து நட்சத்திரங்களைப்போல் இருந்த நீங்கள், உங்கள் தேவனாகிய கர்த்தரின் சத்தத்திற்குச் செவிகொடாமற் போனதினால், கொஞ்சம் ஜனமாக இருப்பீர்கள்.

*58. Deu 28:63 கர்த்தர் உங்களுக்குள் நன்மை செய்யவும் உங்களைப் பெருகப் பண்ணவும் எப்படி உங்கள் மேல் இரம்மிய மாயிருந்தாரோ, அப்படியே கர்த்தர் உங்களை அழிக்கவும் உங்களை அதம் பண்ணவும் இரம்மியமாயிருப்பார்; நீங்கள் சுதந்தரிக்கப் போகிற தேசத்திலிருந்து பிடுங்கிப் போடப்படுவீர்கள்.*

கர்த்தர் உங்களுக்கு நன்மை செய்யவும் உங்களைப் பெரு கப் பண்ணவும் எப்படி உங்கள் மேல் மன மகிழ்ச்சியாயிருந்தாரோ, அப்படியே கர்த்தர் உங்களை அழிக்கவும் உங்களை நிர்மூலம் பண்ணவும் மன மகிழ்ச்சியாயிருப்பார்; நீங்கள் சுதந்தரிக்கப்போகிற ஆசீர்வாதங்களிலிருந்து பிடுங்கிப் போடப்படுவீர்கள்.

*59. Deu 28:64 கர்த்தர் உன்னைப் பூமியின் ஒரு முனை துவக்கி பூமியின் மறுமுனைமட்டும் இருக்கிற எல்லா ஜனங் களுக்குள்ளும் சிதற அடிப்பார்; அங்கே நீயும் உன் பிதாக்களும் அறியாத மரமும் கல்லுமான அந்நிய தேவர்களைச் சேவிப்பாய்.*

கர்த்தர் உன்னைப் பூமியின் ஒரு திசை துவக்கி பூமியின் மறு திசை மட்டும் இருக்கிற எல்லா ஜனங்களுக்குள்ளும் சிதற அடிப்பார்; அங்கே நீயும் உன் பிதாக்களும் அறியாத மரமும் கல்லுமான அந்நிய தேவர்களைச் சேவிப்பாய்.

*60. Deu 28:65 அந்த ஜாதிகளுக்குள்ளே உனக்கு இளைப்பாறுதல் இராது, உன் உள்ளங்கால்கள் தங்கித் தரிக்க இடமும் இராது; அங்கே கர்த்தர் உனக்கு தத்தளிக்கிற இருதயத்தையும், சோர்ந்து போகிற கண்களையும், மனச்சஞ்சலத்தையும் கொடுப்பார்.*

அந்த ஜாதிகளுக்குள்ளே உனக்கு இளைப்பாறுதல் இராது, உன் உள்ளங்கால்கள் தங்கித் தரிக்க இடமும் இராது; அங்கே கர்த்தர் உனக்குத் தத்தளிக்கிற இருதயத்தையும், சோர்ந்து போகிற கண் களையும், மனச்சஞ்சலத்தையும் கொடுப்பார்.

*61. Deu 28:66 உன் ஜீவன் உனக்கு சந்தேகத்தில் ஊச லாடும்; உன் ஜீவனைப்பற்றி நம்பிக்கையில்லாமல் இரவும் பகலும் திகில் கொண்டிருப்பாய்.*

நான் ஏன்? வாழ்ந்து கொண்டிருக்கிறேன் என்று வாழ்க்கை யில் எந்த நம்பிக்கையும் இல்லாமல் உன் ஜீவன் உனக்குச் சந்தேகத் தில் ஊசலாடும்; உன் ஜீவனைப் பற்றி நம்பிக்கையில்லாமல் இரவும் பகலும் திகில் கொண்டிருப்பாய்.

*62. Deu 28:67 நீ பயப்படும் உன் இருதயத்தின் திகிலி னாலும், உன் கண்கள் காணும் காட்சியினாலும், விடியற்காலத்தில் எப்பொழுது சாயங்காலம் வருமோ என்றும், சாயங்காலத்தில், எப்பொழுது விடியற்காலம் வருமோ என்றும் சொல்லுவாய்.*

நீ பயப்படும் உன் இருதயத்தின் திகிலினாலும், உன் கண்கள் காணும் காட்சியினாலும், இரவு பகலாக தூக்கமில்லாமல் வேதனைப் பட்டு விடியற்காலத்தில் எப்பொழுது சாயங்காலம் வருமோ என்றும், சாயங்காலத்தில், எப்பொழுது விடியற்காலம் வருமோ என்றும் சொல்லுவாய்.

*63. Deu 28:68 இனிக்காணதிருப்பாய் என்று நான் உனக்குச் சொன்ன வழியாய், கர்த்தர் உன்னைக் கப்பல்களிலே எகிப்திற்குத் கொண்டு போகப்பண்ணுவார்; அங்கே உங்கள் சத்துருக்களுக்கு வேலைக்காரராகவும் வேலைக்காரிகளாகவும் விற்கப்படுவீர்கள்; உங்களைக் கொள்வாரும் இல்லாதிருப்பார்கள் என்றான்.*

இனிமேல் காணாதிருப்பாய் என்று நான் உனக்குச் சொன்ன வழியாய், கர்த்தர் உன்னைத் திரும்பவும் பாவத்தின் அடிமைத்தனத் திற்கு கொண்டு போகப்பண்ணுவார்; அங்கே உங்கள் சத்துருக்களான புற ஜாதிகளுக்கு வேலைக்காரராகவும் வேலைக்காரிகளாகவும் விற்கப் படுவீர்கள். உங்களுக்கு யாரும் வேலை கொடுப்பவர்கள் இல்லா திருப்பார்கள்.

## அத்தியாயம் ஐந்து

### 5-4 தேவ முத்திரைகளுக்கு விரோதமாக எழும்பும் துன்மார்கனுக்கு வரும் மூன்றாவது உடன்படிக்கையின் சாபங்களின் பாட்டு / பாபிலோன் மாநகர வேசியின் மூன்றாவது புலம்பல் பாட்டு

இயேசு கிறிஸ்துவின் மூலம் மனிதனுடன் தேவன் செய்து கொண்ட ஒரு உடன்படிக்கை, ஒருவனால் மீறி முறிக்கப்பட்டால் அந்த உடன்படிக்கை துரோகிக்கு தேவனுடைய உடன்படிக்கையின் மூலம் பெற்றக்கொண்ட ஆசீர்வாதங்களெல்லாம் தங்கள் ஆவி, ஆத்துமாவின் சாபங்களினால் வரும் ஆட்டுக்குட்டியானவரின் ஒரு புலம்பல் பாட்டாக மாறுகிறது.

**தேவனைக் குறித்து விசாரித்துக் கேளாமல் தேடுகிறவர்களுக்கு நம்பிக்கையின் வாசலாகிய ஆகோரின் பள்ளத்தாக்கின் பாட்டு**

Isa 65:10 நாடோறும் என்னைத் தேடி, என்னைக்குறித்து விசாரித்துக் கேளாதிருக்கிற என் ஜனத்துக்கு நம்பிக்கையின் வாசலாக ஆகோரின் பள்ளத்தாக்கை கொடுப்பேன்; அப்பொழுது அவள் அங்கே, தன் இளவயதின் நாட்களிலும் தான் எகிப்து தேசத்திலிருந்து வந்த நாளிலும் பாடினது போல் பாடுவாள்.

Hos 2:14 ஆயினும், இதோ, நான் அவளுக்கு நயங்காட்டி, அவளை வனாந்தரத்தில் அழைத்துக்கொண்டு போய், அவளோடே பட்சமாய்ப் பேசி,

Hos 2:15 அவ்விடத்திலிருந்து அவளுக்கு அவளுடைய திராட்சத் தோட்டங்களையும், நம்பிக்கையின் வாசலாக ஆகோரின் பள்ளத்தாக்கையும் கொடுப்பேன்; அப்பொழுது அவள் அங்கே தன் இளவயதின் நாட்களிலும் தான் எகிப்து தேசத்திலிருந்து வந்த நாளிலும் பாடினது போல் பாடுவாள்.

Hos 2:16 அக்காலத்தில் நீ என்னை இனி பாகாலி என்று சொல்லாமல், ஈஷி என்று சொல்லுவாய் என்று கர்த்தர் உரைக்கிறார்.

Hos 2:17 பாகால்களுடைய நாமங்களை அவள் வாயிலிருந்து அற்றுப்போகப்பண்ணுவேன்; இனி அவைகளின் பேரைச் சொல்லி, அவைகளை நினைக்கிற நினைப்பும் இல்லாமற் போகும்.

Hos 2:18 அக்காலத்தில் நான் அவர்களுக்காகக் காட்டு மிருகங்களோடும், ஆகாயத்துப் பறவைகளோடும், பூமியிலே ஊரும் பிராணிகளோடும், ஒரு உடன்படிக்கை பண்ணி, வில்லையும் பட்டயத்தையும் யுத்தத்தையும் தேசத்திலே இராதபடிக்கு முறித்து, அவர்களைச் சுகமாய்ப்படுத்துக் கொண்டிருக்கப்பண்ணுவேன்.

Hos 2:19 நித்திய விவாகத்துக்கென்று உன்னை எனக்கு நியமித்துக் கொள்ளுவேன்; நீதியும் நியாயமும் கிருபையும் உருக்க இரக்கமுமாய் உன்னை எனக்கு நியமித்துக் கொள்ளுவேன்.

Hos 2:20 உண்மையாய் உன்னை எனக்கு நியமித்துக் கொள்ளுவேன்; நீ கர்த்தரை அறிந்து கொள்ளுவாய்.

Hos 2:21 அக்காலத்தில் நான் மறுமொழி கொடுப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் வானங்களுக்கு மறுமொழி கொடுப் பேன், அவைகள் பூமிக்கு மறு மொழி கொடுக்கும்.

Hos 2:22 பூமி தானியத்துக்கும் திராட்சரத்துக்கும் எண்ணெய்க்கும் மறுமொழி கொடுக்கும், இவைகள் யெஸ்ரேலுக் கும் மறு மொழி கொடுக்கும்.

Hos 2:23 நான் அவளை எனக்கென்று பூமியிலே விதைத்து, இரக்கம் பெறாதிருந்தவளுக்கு இரங்குவேன்; என் ஜனமல்லாதிருந்த வர்களை நோக்கி நீ என் ஜனமென்று சொல்லுவேன்; அவர்கள் என் தேவனே என்பார்கள் என்றார்.

பாட்டு :- ஆமென், அல்லேலூயா,

பாடுகிறவர்கள் :- இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பரிசுத்த வான்கள்.

பாட்டின் பொருள்:- தேவனுடைய ஊழியக்காரரின் இரத்தத் திற்காக பாபிலோன் மாநகர வேசியினிடத்தில் பழிவாங்கினாரே அவளுடைய புகை என்றென்றைக்கும் எழும்புகிறது தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் சத்தியமும் நீதியுமானவைகள். அப்படி ஆகக்கட வது நாங்கள் பூமியிலே அரசாளுவோம் என்று புதிய பாட்டைப் பாடினார்கள்.

இளவயதின் நாட்களின் பாட்டு:-

நீ எங்களைக் கலங்கப்பண்ணினதென்ன? இன்று கர்த்தர் உன்னைக் கலங்கப் பண்ணுவார் ஆமென், அல்லேலூயா,

பாடுகிறவர்கள் :- இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பரிசுத்தவான்கள்

பாட்டின் பொருள் :- பாபிலோன் மாநகர வேசி உங்களுக்குக் கலந்து கொடுத்த பாத்திரத்திலே இரட்டிப்பாக அவளுக்குக் கலந்து கொடுங்கள்.

Rev 18:4 பின்பு, வேறொரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக் கேட்டேன். அது என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள். Rev 18:5 அவளுடைய பாவம் வானபரியந்தம் எட்டினது, அவளுடைய அநியாயங்களைத் தேவன் நினைவு கூர்ந்தார்.

Rev 18:6 அவள் உங்களுக்குப் பலனளித்தது போல நீங்களும் அவளுக்குப் பலனளியுங்கள்; அவளுடைய கிரியைகளுக்குத் தக்கதாக அவளுக்கு இரட்டிப்பாகக் கொடுத்துத் தீருங்கள்; அவள் உங்களுக்குக் கலந்து கொடுத்த பாத்திரத்திலே இரட்டிப்பாக அவளுக்கு கலந்து கொடுங்கள்.

பாட்டு :- அல்லேலூயா,

பாடுகிறவர்கள் :- திரளான ஜனங்கள் (இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பரிசுத்தவான்கள் உள்பட)

பாட்டின் பொருள்:- சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் ராஜ்யபாரம் பண்ணுகிறார். நாம் சந்தோப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதி செலுத்தக் கடவோம். ஆட்டுக்குட்டியான வருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம் பண்ணினாள் என்று சொல்லக்கேட்டேன்.

## அத்தியாயம் ஆறு :-

6-1 இரண்டு சாட்சிகளின் ஊழிய அழைப்பு

6-2 இரண்டு சாட்சிகளின் ஊழிய அழைப்பை தேவனால் முன் குறிக்கப்பட்ட 1.44.000 ஆண்பிள்ளைகள் கைப்பற்றும் வழி முறைகள்.

6-3 இரண்டு சாட்சிகளின் ஊழிய அழைப்பை பெற்றுக் கொண்டவர்கள் ஆசரிக்கிற மூன்று பிரதான பண்டிகைகள்

6-4 ஊழிய அழைப்பை பெற்றுக் கொண்டவர்களின் குணாதிசயங்களை குத்து விளக்கின் குணாதியசங்களோடு ஒப்பிட்டு அறிந்து கொள்ளுதல்

6-5 ஊழிய அழைப்பை பெற்றுக் கொண்டவர்களின் குணாதி சயங்களை முன்மாரி, பின்மாரி மழையின் குணாதிசயங்களோடு ஒப் பிட்டு அறிந்து கொள்ளுதல்.

6-6 ஊழிய அழைப்பை பெற்று கொண்டவர்கள் தெளிவாக பேசுவதற்கு தடையாக வருகிற சில விசேஷமான காரணங்கள்.

## அத்தியாயம் ஆறு :-

6-1 இரண்டு சாட்சிகளின் ஊழிய அழைப்பு

இரண்டு ஒலிவ மரங்களும் இரண்டு விளக்கு தண்டுகளும், இரண்டு பரிசுத்தவான்கள் அல்ல, இவைகள் இரண்டும் தேவ னுடைய அபிஷேக ஆவியினுடைய இரண்டு ஊழிய அழைப்பின் இரண்டு விசேஷித்த கிருபை வரங்கள் / ஊழிய அழைப்புகள் / ஊழிய அழைப்பின் கிரியைகள் Rev_11:3-4, Rev_11:1-14, Zec_4:11-14, Zec_4:1-14, 1Co_12:4-7,

1. இந்த இரண்டு சாட்சிகளின் பொருள் இரண்டு பரிசுத்தவான்கள் என்று அநேகர் தீர்மானிக்கும் போது அந்த இரண்டு பரிசுத்தவான்கள் எலியா, ஏனோக்கு, என்று குறிப்பிடுகிறார்கள். இதற்கு அவர்கள் குறிப்பிடும் காரணங்கள் இவர்கள் இரண்டு பேரும் மரணத்தைக் காணாமல் உயிரோடு பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டவர்கள், எனவே இவர்கள் மீண்டும் பூமிக்கு வந்து எல்லா மனிதரைப்போல பூமியில் மரித்து பின்பு பரலோகத்திற்கு செல்ல வேண்டும். இப்படிப்பட்ட பிரமாணங்கள் மனுஷர்கள் ஏற்படுத்திக் கொண்டு அவர்களுக்காக இந்நாள் வரை அநேகர் காத்திருக்கிறார்கள்.

2. மனுஷன் ஓய்வு நாளுக்காக உண்டாக்கப்படவில்லை ஓய்வு நாள் மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டது அதுபோல மனுஷன் மரணத்திற்காக உண்டாக்கப்படவில்லை, மனுஷனுடைய பாவத்தினால் மரணம் உண்டானது. இப்படி மரணம் நேரிட்ட போது இயேசு கிறிஸ்துவினால் மரணத்திலிருந்து ஜீவன் உண்டானது. Rom_5:12-21, Rom_6:23, Rom_8:2-13, Joh_11:25-26, 1Co_15:50-57,

Mar 2:27 பின்பு அவர்களை நோக்கி : மனுஷன் ஓய்வு நாளுக்காக உண்டாக்கப்படவில்லை, ஓய்வு நாள் மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டது.

Joh 11:25-26 நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்; உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்.

3. தேவனுடைய ஊழியம் செய்கிறவர்கள், தலை வெட்டப்பட்டு இரத்த சாட்சியாக மரிக்க வேண்டும் பின்பு பரலோகத்திற்கு செல்ல வேண்டும் அல்லது எலியா, ஏனோக்கு தேவனால் நேரடியாக மரணத்தைக் காணாமல் உயிரோடு பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது போல நேரடியாக பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும். இவைகளில் எந்த வழியில் பரலோகத்திற்கு செல்லுவது என்பதைக் குறித்த தீர்மானம் பரிசுத்தவான்களுடைய பொறுமைக்கு விசுவாசத்திற்கும் ஏற்றபடி மாறுபடுகிறது. Rom_13:10,

*Rev 13:10* சிறைப்படுத்திக்கொண்டு போகிறவன் சிறைப்பட்டுப்போவான்; பட்டயத்தினாலே கொல்லுகிறவன் பட்டயத்தினாலே கொல்லப்பட வேண்டும். பரிசுத்தவான்களுடைய பொறுமையும் விசுவாசமும் இதிலே விளங்கும்.

4. பரிசுத்தவான்களுடைய ஊழியத்தில் ஆவிக்குரிய பட்டயத்தின் வல்லமையை பொறுமையுடன் உபயோகிக்கும் போது சமாதானமாக ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தப்படுகிறார்கள். இப்படிப்பட்டவர்களை தேவ துதர்களால் சிறைப்படுத்திக்கொண்டு /

நேரடியாக மரணத்தைக் காணாமல் உயிரோடு பரலோகத்திற்கு எடுத்துக் கொண்டு போவார்கள் பரிசுத்தவான்களுடைய ஊழியத்தில் ஆவிக்குரிய பட்டயத்தின் வல்லமையை அதிகாரத்துடன் உபயோகிக் கும் போது அதை எதிர்ப்பவர்கள் எழுத்தின் படியுள்ள பட்டயத்தின் வல்லமையுடன் அதிகாரத்தோடு கொலை செய்வார்கள்.

5. எலியா, ஏனோக்கு தேவனால் நேரடியாக மரணத்தைக் காணாமல் உயிரோடு பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது போல, இந்த காலத்திலும் அநேக தேவ ஊழியர்கள் மரத்தைக் காணமல் உயிரோடு நேரடியாக பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப் படுவார்கள். Mat_24:40-41, Luk_17:34-36, Rev_13:10,1Co_15:50-57,

யோவான் ஸ்நானகன் எலியா தீர்க்கதரிசியின் ஆவியின் பெலத்தோடு ஊழியம் செய்து, தலை வெட்டப்பட்டு இரத்த சாட்சியாக மரித்தது போல இந்தக் காலத்திலும் அநேகர் தலை வெட்டப்பட்டு இரத்த சாட்சியாக மரித்துக் கொண்டிருப்பார்கள். Luk_1:17,

6. எலியாவைப் பற்றியுள்ள வேத வசனங்களை நாம் சிந்திக்கும் போது, எலியா முதலாவது திரும்ப வரவேண்டும் என்ற நம்பிக்கை இயேசு கிறிஸ்துவின் முதல் வருகைக்கு முன்னே பல ஆண்டுகளாக அநேக பரிசேயரிடம் சதுசேயரிடமும் இருந்தது ஆனால் இவர்களுடைய கேள்விக்கு இயேசு கிறிஸ்து எலியா வந்தாயிற்று என்ற பதிலை கொடுத்தார். Mat_17:10-13, Mat_11:14-15, Mar_9:11-13,

யோவான் ஸ்நானகன் எலியா தீர்க்கதரிசியின் ஆவியின் பெலத்தோடு ஊழியம் செய்து, தலை வெட்டப்பட்டு இரத்த சாட்சி யாக மரித்தார். எலியா தீர்க்கதரிசி யோவான் என்ற பெயரில் மீண்டும் இந்த பூமியில் பிறக்கவில்லை, மாறாக எலியாவிற்கு தேவன் கொடுத்த அபிஷேக ஆவியை யோவான் ஸ்நானகன் மேல் தேவன் அனுப்பி கர்த்தருடைய முதல் வருகைக்கு வழியை ஆயத்தம் பண்ணும் ஊழிய அழைப்பின் கிரியைகளையும், தேவனை

ஆராதிக்கும்படி ஆயத்தப்படுத்தும் ஊழிய அழைப்பின் கிரியைக ளையும், ஆகிய இரண்டு வகையான ஊழிய அழைப்புக்களின் திட்டங்களை தேவன் நிறைவேற்றினார். Luk_1:17,

மேலே குறிப்பிட்டதுபோல இக்காலத்திலும் கர்த்தரின் இரண் டாம் வருகையில் அநேக தேவ ஊழியர்களுக்கு, எலியா, மோசே, ஆகிய இரண்டு தீர்க்கதரிசிகளின் மேல் வைத்த அபிஷேக ஆவியை மீண்டும் தேவன் அனுப்பி கர்த்தருக்கு வழியை ஆயத்தம் பண்ணும் ஊழிய அழைப்பின் கிரியைகளையும், கர்த்தரை ஆராதிக்கும்படி ஆயத்தப் படுத்தும் ஊழிய அழைப்பின் கிரியைகளையும், ஆகிய இரண்டு வகையான ஊழிய அழைப்புகளின் திட்டங்களை தேவன் நிறைவேற்றுகிறார். Mal_4:4-6

7. ஆண் பிள்ளைகள் இரண்டு சாட்சிகளின் ஊழிய அழைப்பை இரட்டு வஸ்திரமுடுத்திக்கொண்டு நிறைவேற்றுதல்:-

இரண்டு ஒலிவ மரங்களும் இரண்டு விளக்கு தண்டுகளும் பரிசுத்தவான்கள் அல்ல, இவைகள் இரண்டும் தேவனுடைய அபி ஷேக ஆவியினுடைய இரண்டு ஊழிய அழைப்பின் இரண்டு விசே ஷித்த கிருபை வரங்கள் / ஊழிய அழைப்புகள் / ஊழிய அழைப்பின் கிரியைகள் Rev_11:3-4, Rev_11:1-14, Zec_4:11-14, Zec_4:1-14, 1Co_12:4-7,

தேவனுடைய நித்திய சத்திய சுபாவத்தை சார்ந்திருக்கும் வலது இடது பக்கத்தின் ஊழிய அழைப்பினால் இரண்டு விசேஷித்த கிருபை வரங்கள் / ஊழிய அழைப்புகள் / ஊழிய அழைப்பின் கிரி யைகள் : 1Ki_17:1, 1Ki_18:15, Hos_12:12-13,Exo_23:20-23, Isa_63:7-14, Zec_4:11-14, Rev_11:3-4,

1. தேவனுடைய நித்திய சத்திய சுபாவத்தை சார்ந்திருக்கும் வலது பக்கத்தின் ஊழிய அழைப்புகள் / ஊழிய அழைப்பின் கிரியை கள், எலியா தீர்க்கதரிசியின் ஆவியின் பெலத்தைப் போல ஒருவரின் விண்ணப்பத்திகேற்றபடி அவனுக்கு இரண்டு மடங்கு அருளப் படுகிறது. 2Ki_2:7-14,

2. தேவனுடைய நித்திய சத்திய சுபாவத்தை சார்ந்திருக்கும் இடது பக்கத்தின் ஊழிய அழைப்பினால் விசேஷித்த கிருபை வரங்கள் / ஊழிய அழைப்புகள் / ஊழிய அழைப்பின் கிரியைகள் :-

கர்த்தரை ஆராதனை செய்யும்படி ஆயத்தப்படுத்துவதற்காக தேவனுடைய அபிஷேக ஆவியினுடைய ஊழிய அழைப்பின் விசே ஷித்த கிருபை வரங்கள் / ஊழிய அழைப்புகள் / ஊழிய அழைப்பின் கிரியைகள் மோசே தீர்க்கதரிசியின் ஆவியின் பெலத்தைப்போல ஒரு வரின் விண்ணப்பத்திற் கேற்றபடி அவனுக்கு எழுபது பங்காக பிரித்து எழுபது பேருக்கு பகிர்ந்து அருளப்படுகிறது. Num_11:11-17, Num_11:24-29,

1. தேவனை ஆராதிக்க ஆயத்தப்படுத்தும் ஊழிய அழைப்பு:-

எகிப்தின் அடிமைத் தனத்திலிருந்து ஜனங்கள் விடுதலையாக்கப் பட்டு சுதந்திரமாக தேவனை ஆராதிக்கும்படி ஆயத்தப்படுத்துவதற்காக தேவனுடைய அபிஷேக ஆவியை மோசேக்கு கொடுத்து அற்புதங்களினாலும், அடையாளங்களினாலும் தேவனுடைய ஊழிய அழைப்பின் திட்டத்தை தேவன் நிறைவேற்றினார். Psa_78:1-12, Psa_78:42-53, Psa_105:23-37, Psa_106:1-12,

2. கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்தும் ஊழிய அழைப்பு:-

எகிப்திலிருந்து மீட்கப்பட்ட ஜனங்களை வனாந்தரத்தின் வழியாக வாக்குத்தத்த தேசத்திற்கு அழைத்துச செல்லும்படி கர்த்தர் காண்பிக்கும் வழியை ஆயத்தப்படுத்து வதற்காக தேவனுடைய அபி ஷேக ஆவியை மோசேக்கு கொடுத்து அற்புதங்களினாலும், அடையா ளங்களினாலும் தேவனுடைய ஊழிய அழைப்பின் திட்டத்தை தேவன் நிறைவேற்றினார். Psa_78:13-41, Psa_78:54-72, Psa_105:38-45, Psa_106:12-30, Psa_106:31-48,

## அத்தியாயம் ஆறு

6-2 இரண்டு சாட்சிகளின் ஊழிய அழைப்பை தேவனால் முன் குறிக்கப்பட்ட 1.44.000 ஆண்பிள்ளைகள் கைப்பற்றும் வழி முறைகள்.

1. தேவனுடைய ஜனங்கள் பாவத்தின் அடிமைத்தனத்தி லிருந்து தேவன் தம்முடைய வல்லமையுள்ள கரத்தால் பிரித் தெடுத்து, தமக்கு ஆராதனை செய்யும்படி தெரிந்து கொள்ளு வதற்காக எகிப்திலே நடந்த பத்து வாதைகளில் ஒன்பது வாதைகளை மோசேயின் மூலம் தேவன் நடப்பித்தார். ஆனால் பத்தாவது வாதை யான தலைச்சன் பிள்ளை சங்காரத்தை தேவனே நிறைவேற்றினார்.

2. பாவம், மரணம் ஆகியவற்றின் அடிமைத்தனத்திலிருந்த தேவ ஜனங்களை விடுதலையாக்கும்படியாக தேவனே தம்முடைய குமரனை பாவ மாம்சத்தின் சாயலாகவும், பாவத்தை போக்கும் பலியாகவும் அனுப்பி மாம்சத்திலே பாவத்தை ஆக்கினிக்குள்ளாகத் தீர்த்தார், இப்படி இயேசு கிறிஸ்துவின் மூலம் தீமையை அல்லது பாவத்தை நன்மையினால் ஜெயங்கொள்ளும் தத்துவ செயல் முறையை தேவன் நமக்கு முன் மாதிரியாக வெளிப்படுத்திக் கொடுத் தார். Rom_8:1-4, Rom_12:21, Pe_3:16-19, 1Co_11:31, Job_9:16, Job_5:5, Job_28:12-19, Job_28:20-28,

3. பஸ்கா ஆட்டுக்குட்டியான இயேசு கிறிஸ்துவின் இரத்த அடையாளங்களின் பொருளை பின்பற்றுகிறவர்களும், புளிப் பிள்ளாத அப்பாமாகிய நித்திய ஜீவ வார்த்தைகளுக்காக துன்பம் அனுபவிக்கிறவர்களும், தீமையை / பாவத்தை நன்மையினால் ஜெயங்கொள்ளும் அனுபவத்தின் மூலம் பாவத்தின் நயவஞ்சகமான தந்திர ஆலோசனைகளை பிடித்து அவைகளை மீண்டும் நன்மைக்கு மாற்றியமைத்துக் கொண்டு மோசேயின் கோலினால் உள்ள ஊழிய அழைப்பின் அளவுப்பிரமாணத்தை கைப்பற்றுகிறார்கள்.

4. பாம்பின் வாலைப்பிடித்து, வால்பகுதியிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக பாம்பின் தலைப்பகுதிக்கு வரும்போது மீண்டும் மோசேயின் கோலாக மாறுவதுபோல, பத்தாவது வாதையிலிருந்து 10,9,8,7,6,5,4,3,2,1 தலைகீழ் வரிசைப்படி தேவனுடைய நியாய

தீர்ப்பை, தேவனை ஆராதிக்க முன் வராதவர்கள் மற்றும் தேவனு டைய இராஜ்ஜியத்திற்கு வழியை ஆயத்தம் பண்ணுவதற்கு முன் வராதவர்கள் ஆகிய இரண்டு பிரிவு ஜனங்களுக்கு மத்தியில் தேவ னுடைய நியாயத்தீர்ப்பை நிறைவேற்றுவதின் மூலம் மோசேயின் கோலினால் உள்ள ஊழிய அழைப்பின் அளவுப்பிரமாணத்தை கைப் பற்றுகிறார்கள்.

5. பஸ்கா ஆட்டுக்குட்டியான இயேசு கிறிஸ்துவின் இரத்த அடையாளங்களின் பொருளை பின்பற்றாதவர்களும் புளிப்பில்லாத நித்திய ஜீவ வார்த்தைகளுக்காக துன்பம் அனுபவிக்காதவர்களும், தீமையை நன்மையினால் ஜெயங்கொள்ள முடியாமல் நன்மை யிலிருந்து தீமைக்கும் தொடர்ந்து தீமையிலிருந்து மீண்டும் தீமைக்கு முன்னேறுகிறபடியால்; அவர்களின் தலைச்சன் பிள்ளை யான ஜென்ம பாவ மனிதனுடைய இரட்சிப்பு, தேவனுடைய நியாயத் தீர்ப்பினால் மரணமடைகிறது. தேவனுடைய வார்த்தையின்படி அவர் கள் இரட்சிப்பை மீண்டும் பெற்றுக்கொள்ளும் வரை எகிப்தின் வாதைகளும், வனாந்தரத்திலே தேவனுக்கு கோபம் மூட்டினபோது ஏற்பட்ட நியாயத்தீர்ப்புகளும் இவர்களை பின் தொடர்ந்து கொண் டேயிருக்கும்.

6. கர்த்தருக்கு வழியை ஆயத்தம் பண்ணும் ஊழிய அழைப்பு, மற்றும் கர்த்தரை ஆராதிக்கும்படி ஆயத்தப்படுத்தும் ஊழிய அழைப்பு, ஆகிய இரண்டு வகையான ஊழிய அழைப்புகளின் திட்டங்களை தேவன் நிறைவேற்றுவதற்காக தேவன் மோசேக்கு கொடுத்த மூன்று அடையாளங்கள்

1. மோசேயின் கோல் தரையிலே போட்டபோது பாம்பாக மாறினது, பாம்பின் வாலை மோசே பிடித்தபோது அது மீண்டும் மோசேயின் கையில் கோலாகமாறினது. Exo_4:1-5,

2. மோசே தன் கையை தன் மடியில் போட்டு வெளியே எடுத்த போது அந்த கையில் குஷ்டரோகம் காணப்பட்டது. குஷ்ட ரோகமாக மாறின அந்த கையை மோசே மீண்டும் தன் மடியில்

போட்டு வெளியே எடுத்த போது அந்த கை முன்போல் குஷ்டரோகமில்லாத மற்ற கையைப் போல மாறினது. Exo_4:6-8,

3. மோசே நதியில் ஓடுகிற தண்ணீரை மொண்டு அதை வெட்டாந்தரையிலே ஊற்றும்பொழுது அது இரத்தமாக மாறினது , இந்த மூன்று அடையாளங்களையும் மோசே ஜனங்களுக்கு முன்பாக செய்து காட்டி தேவன் தனக்கு தரிசனமானார் என்பதை நம்பும்படி செய்தார். Exo_4:28-31, Exo_4:9,

7. மோசேயைப்போல நாங்களும் தேவ தரிசனத்தை பெற்றி ருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு மோசேயின் ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டிருப்பவர்கள், இந்த மூன்று அடையாளங்களை யும் ஆவிக்குரிய நிலையில் ஜனங்களுக்கு முன்பாக செய்து காட்டி தங்களை நம்பவைப்பதற்கு முயற்சி செய்கிறபோது நடைபெறும் கிரியைகள்.

1. மோசேயின் ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டிருப்பவர்கள் ஆவிக்குரிய நிலையில் தங்களுடைய கோலை தரையிலே போடுகிற பொழுது பாம்பாக மாறுகிறது, ஆனால் ஆவிக்குரிய நிலையில் அந்த பாம்பின் வாலைப் பிடித்து அதை மீண்டும் தங்களுடைய கோலாக மாற்ற முடியவில்லை.

2. மோசேயின் ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டிருப்பவர்கள் ஆவிக்குரிய நிலையில் தங்களுடைய கையை தங்கள் மடியிலே போட்டு வெளியே எடுத்தபோது அந்த கையில் குஷ்டரோகம் காணப் படுகிறது, ஆனால் ஆவிக்குரிய நிலையில் குஷ்டரோகாமாக மாறின தங்கள் கையை மீண்டும் தங்களுடைய மடியிலே போட்டு வெளியே எடுத்த போது அந்த கையை முன்போல குஷ்டரோகமில்லாத மற்ற கையைப்போல மாற்ற முடியவில்லை.

3. மோசேயின் ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டிருப்பவர்கள் ஆவிக்குரிய நிலையில் நதியில் ஓடுகிற தண்ணீரை மொண்டு வெட்டாந்தரையிலே ஊற்றும்பொழுது அது இரத்தமாக மாறுகிறது. ஆனால் முன்பு சொல்லப்பட்ட இரண்டு அடையாளங்களையும் மீண்டும் பழைய நிலைக்கு மாறுகிறவைகளாக, ஆவிக்குரிய நிலை

யில் நிறைவேற்ற முடியாத காரணத்தால் இந்த மூன்றாம் அடையாளத்தையும் மீண்டும் பழைய நிலைக்கு மாறுகிறவைகளாக ஆவிக்குரிய நிலையில் நிறைவேற்ற முடியவில்லை.

8. மோசேயின் ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டிருப்பவர்கள், இந்த மூன்று அடையாளங்களையும் ஆவிக்குரிய நிலையில் ஜனங்களுக்கு முன்பாக செய்து காட்டி, மோசேயைப்போல நாங்களும் தேவ தரிசனத்தை பெற்றிருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு; ஜங்களை நம்பவைப்பதற்கு முயற்சி செய்கிறபோது இந்த மூன்று அடையாளங்களையும் ஆவிக்குரிய நிலையில் ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு மாறுகிற முதல் பகுதியை மட்டும் செய்து காட்டுகிறார்கள் ஆனால், இந்த மூன்று அடையாளங்களிலும் மீண்டும் பழைய நிலைக்கு மாறுகிற மறு பகுதியை ஆவிக்குரிய நிலையில் ஜனங்களுக்கு முன்பாக நிறை வேற்ற முடியவில்லை, இருந்தபோதும் இந்நாள் வரை இவைகளினால் ஜனங்களை வஞ்சித்து, தங்களுக்கு பூமிக்குரிய ஆசீர்வாதங்களை தேடிக்கொண்டிருக்கிறார்கள். Mat_23:1-2, Mat_23:25-26,

9. மோசேயை ஜனங்கள் விசுவாசிப்பதற்காக தேவன் கொடுத்த முதலாம் அடையாளம் / மோசேயினுடைய கோல் தரையிலே போட்டபோது பாம்பாக மாறினது ஆவியின் படி பொருள்:-

மோசேயின் கோல் தரையிலே போட்டபோது பாம்பாக மாறினது / மோசேயின் அதிகாரங்கள் நன்மையிலிருந்து தீமைக்கு மாறுகிறது.

பாம்பின் வாலை மோசே பிடித்தபோது அது மீண்டும் மோசேயின் கையில் கோலாக மாறினது / மோசேயின் அதிகாரங்கள் தீமையிலிருந்து மீண்டும் நன்மைக்கு மாறுகிறது.

தேவன் மோசேக்கு கொடுத்த ஊழிய அழைப்பின் அளவுப் பிரமாணங்களும் அதன் நற்கிரியைகளும் அதன் சத்தியத்தின் நிலையிலிருந்து வழி விலகி; பாம்பைப்போல நயவஞ்சகமான தந்திர ஆலோசனைகளை நடப்பிக்கும் படி, நன்மையிலிருந்து தீமைக்கு மாறி பூமிக்குரிய ஆசீர்வாதங்களை தேடிக்கொண்டிருக்கிறது.

10. எகிப்திலுள்ள சாஸ்திரிகள், சூனியக்காரர்கள், மந்திரவாதி கள் ஆகிய இவர்களுடைய கோல்களும் தரையிலே போட்டபோது பாம்பாக மாறினது :-

பூமியில் தோன்றின மதங்களின் சாஸ்திரிகள், சூனியக்காரர் கள், மந்திரவாதிகள், ஆகிய இவர்களின் ஆட்சி அதிகாரங்களும்; அதன் சத்தியத்தின் நிலையிலிருந்து வழி விலகி பூமிக்குரிய ஆசீர்வாதங்களை தேடிக் கொண்டிருக்கிறது.

11. மோசேயைப்போல நாங்களும் தேவ தரிசனத்தை பெற்றி ருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு மோசேயின் ஆசனத்தில் உட் கார்ந்து கொண்டிருப்பவர்களுக்கும், உலக மதங்களின் சாஸ்திரிகள், சூனியக்காரர்கள், மந்திரவாதிகள் ஆகிய இவர்களின் ஆட்சி அதிகாரத் தின் கோலும்; இப்பொழுது சத்தியத்தின் நிலையிலிருந்து வழி விலகி பூமிக்குரிய ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்வதற்காக, பாம்பைப் போல நயவஞ்சகமான தந்திர ஆலோசனைகளை நடப்பிக்கும்படி நன்மையிலிருந்து தீமைக்கு மாறி பூமிக்குரிய ஆசீர்வாதங்களை தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

12. மோசேயின் ஆசனத்தில் உட்கார்ந்திருப்பவர்களும் உலக மதங்களின் ஆசனத்தில் உட்கார்ந்திருப்பவர்களும் ஜனங்களை நம்பவைப்பதற்கு மேற்கொண்ட முயற்சியினால் தங்களுடைய சத்தியமான ஆட்சி அதிகாரத்தின் கோல்கள் பாம்பாக மாறியிருக் கிறது. இந்த நிலையில் இவர்களுக்கு ஆட்சி செய்வதற்கு சத்தியமான ஆட்சி அதிகாரங்களுக்கு பதிலாக நயவஞ்சகமான தந்திர ஆலோச னைகளைக்கொண்டு பூமிக்குரிய ஆசீர்வாதங்களை தேடிக் கொண்டி ருக்கிறார்கள்.

இப்பொழுது சத்தியமான ஆட்சி அதிகாரத்தின் கோலைக் கண்டால் பாம்பைக் காணோம்; பாம்பைக் கண்டால் சத்தியமான ஆட்சி அதிகாரத்தின் கோலைக் காணோம்.

சத்தியமான ஆட்சி அதிகாரங்களைக் கண்டால் நயவஞ்சக மான தந்திரங்களை காணோம்; நயவஞ்சகமான தந்திரங்களை கண் டால், சத்தியமான ஆட்சி அதிகாரங்களைக் காணோம். சத்தியமான

ஆட்சி அதிகாரங்கள் அல்லது நயவஞ்சகமான தந்திரங்கள் என்கிற ஏதாவது ஒரு நிலையில் மட்டும் ஆட்சி அதிகாரங்கள் மற்றவர் களுக்கு வெளிப்படுகிறது.

13. மோசேயின் ஆசனத்தில் இருப்பவர்களின் கோல்கள் பாம்பாக மாறியிருக்கும்போது அது மற்ற பாம்புகளை விழுங்க முடியவில்லை:-

மோசேயின் ஆசனத்தில் உட்கார்ந்திருப்பவர்களிடம் உள்ள பாம்பைப்போல நயவஞ்சகமான தந்திர ஆலோசனைகள், உலக மதங்களின் சாஸ்திரிகள், சூனியக்காரர்கள், மந்திரவாதிகள் ஆகியவர் களிடம் உள்ள பாம்பைப்போல நயவஞ்சகமான தந்திர ஆலோசனை களை விழுங்க / மேற்கொள்ள / ஜெயங்கொள்ள முடியவில்லை.

14. மோசே பாம்பின் வாலை பிடித்தபோது மீண்டும் அது தன் கையில் கோலாக மாறினது; அதுபோல இப்பொழுது மோசேயின் ஆசனத்தில் இருப்பவர்கள் ஜனங்களுக்கு முன்பாக ஓடுகிற எல்லா பாம்புகளையும் அதன் வாலை பிடித்து கோலாக மாற்றவேண்டும், அல்லது அவர்களுடைய பாம்பு மற்ற பாம்புகளை விழுங்க வேண்டும்.

இந்நாள் வரை இந்த இரண்டு காரியங்களும் நடைபெறாமல் எல்லாருடைய கோல்களும் / சத்தியமான ஆட்சி அதிகாரங்களும் பாம்பாக மாறி/ நயவஞ்சகமான தந்திர ஆலோசனைகளாக மாறி ஓடிக்கொண்டிருக்கிறது. இதைக் காண்பவர்கள் அநேகர் பயந்து இங்கும் அங்கும் மதம் பிடித்து அலைந்து கொண்டிருக்கிறார்கள் ஒரு சிலர் சத்தியமானவைகளை நாடி தேடி ஓடுகிறார்கள்.

15. உலக மதங்களின் சாஸ்திரிகள், சூனியக்காரர்கள், மந்திரவாதிகள் ஆகிய இவர்களுக்கு பாம்பின் வாலைப்பிடித்து மீண்டும் கோலாக மாற்றும் தத்துவம் தெரியாது, ஆனால் மோசேக்கு மட்டும் தேவனுடைய ஆலோசனையின்படி இது தெரியும். இந்த நிலையில் மோசே எல்லா பாம்புகளையும் பார்த்து பயப்படாமலிருக் கும் போது மோசேயின் பாம்பு மற்ற எல்லா பாம்புகளையும் விழுங் கிற்று, இப்படி எல்லா பாம்புகளையும் விழுங்கினாலும் அது தன் உரு வத்தால் பெரியதாக மாறுமேயல்லாமல் அது ஒருபோதும் கோலாக

மாறது ஆனால், பாம்பின் வாலைப்பிடிக்கும் போது மட்டுமே அது மீண்டும் கோலாக மாற்ற முடியும்.

பாம்பின் வாலை பிடிப்பது போல, நயவஞ்சகமுள்ள தீமையான தந்திர ஆலோசனைகளை, நன்மையாக மாற்றுகிறவர்கள் மட்டும் மோசே அழைக்கப்பட்டதுபோல கனமான ஊழிய அழைப்பின் அதிகாரங்களை பெற்றுக்கொள்ள / கைப்பற்ற முடிகிறது. தீமையை நன்மையினால் ஜெயங்கொள்ளும் தத்துவத்தின் மூலம் தந்திரமான ஆலோசனைகளை நற்கிரியைகள் செய்வதற்கு பயன் படுத்த முடியும்.

நியாயப்பிரமாணத்தின் கிரியைகளின் மூலம் தீமைக்கு தீமை செய்கிறபோது உதாரணம்: கண்ணுக்கு கண் பல்லுக்கு பல் என்கிற கற்பனையைப் போல தீமைக்கு தீமை செய்கிறபோது / பாம்பின் தலையை பிடிக்க முயற்சி செய்கிறபோது, பாம்பு கடிக்கிறது / பாவம் மரணத்தை கொண்டு வருகிறது; ஆனால் இயேசு கிறிஸ்துவின் உபதேசத்தினால் தீமைக்கு நன்மை செய்யும்போது மட்டும் அது பாம்பின் வாலைப்பிடிக்கிறதற்கு சமமாகிறது, இயேசு கிறிஸ்துவின் உபதேசத்தின் மூலம் நீதியின் கிரியைகளை செய்யும்போது நயவஞ்ச கமான தந்திர ஆலோசனைகளை தேவனுடைய நீதியின் கிரியைகளாக மாற்றியமைத்து கொள்ள முடியும்.

16. மோசேயை ஜனங்கள் விசுவாசிப்பதற்காக தேவன் கொடுத்த இரண்டாவது அடையாளம் / மோசே தன் கையை தன் மடியில் போட்டு வெளியே எடுத்தபோது அந்த கையில் குஷ்டரோகம் காணப்பட்டது ஆவியின்படி பொருள்:-

மோசே தன்னுடைய நற்கிரியைகளை தன்னுடைய தந்திரங் களினால் மறைத்து, தன்னுடைய கிரியைகளை வெளிப்படுத்திக் காட்டுகிறபோது அது மாயைக்காரனின் கிரியைகளாக காணப் படுகிறது / மோசேயினுடைய கையின் கிரியைகள் நன்மையிலிருந்து தீமைக்கு மாறுகிறது.

17. மோசே குஷ்டரோகமாக மாறின அந்த கையை மீண்டும் தன் மடியில் போட்டு வெளியே எடுத்தபோது, அந்த கை முன்போல

குஷ்டரோகமில்லாத மற்ற கையைப்போல மாறினது / மோசே தன்னுடைய மாயைக்காரனின் கிரியைகளை தன்னுடைய தந்திரங் களிலிருந்து வெளியே வந்து, தன்னுடைய கிரியைகளை வெளிப் படுத்திக்காட்டுகிறபோது அது மீண்டும் நற்கிரியைகளாக காணப் படுகிறது / மோசேயினுடைய கையின் கிரியைகள் தீமையிலிருந்து மீண்டும் நன்மைக்கு மாறுகிறது.

முதல் அடையாளத்தை ஜனங்கள் கண்டு உன்னை நம்பாமலும் உனக்கு செவிகொடாமலும் போனால், இந்த இரண்டாம் அடையாளத்தைக் கண்டு உன்னை நம்புவார்கள்.

18. மோசேயின் ஆசனத்தில் இருப்பவர்கள் தங்கள் கையை மடியிலே போட்டு வெளியே எடுத்து, குஷ்டரோகமாக மாற்றியிருக் கிறார்கள் என்பதின் பொருள் ஆவியின் படி:-

மோசேயின் ஆசனத்தில் இருப்பவர்கள் தங்கள் நற்கிரி யைகளை தங்களுடைய தந்திரங்களினால் மறைத்து, தங்கள் கிரியை களை வெளிப்படுத்திக் காட்டுகிறார்கள்; அப்பொழுது அது மாயக் காரனின் கிரியைகளாக வெளிப்படுகிறது.

மோசேயின் ஆசனத்தில் இருப்பவர்கள் குஷ்டரோகமுள்ள தங்கள் கையை மீண்டும் தங்கள் மடியில் போட்டு வெளியே எடுத்து மற்ற நல்ல கையைபோல மாற்ற முடியவில்லை என்பதின் பொருள் ஆவியின்படி:-

மோசேயின் ஆசனத்தில் இருப்பவர்கள் தங்கள் மாயைக்கார னின் கிரியைகளை, தங்களுடைய தந்திரங்களிலிருந்து வெளியே வந்து மீண்டும் நற்கிரியைகளாக மாற்றியமைத்துக் கொள்ள முடிய வில்லை; இந்த காரணங்களினால் மாயக்காரனகிய பரிசேயனே, வேத பாரகனே என்று இந்நாள் வரை மோசேயின் ஆசனத்தில் இருப்பவர் களை மற்றவர்கள் அழைக்கிறார்கள்.

19. மோசேயை ஜனங்கள் விசுவாசிப்பதற்காக தேவன் கொடுத்த மூன்றாவது அடையாளத்தின் பொருள் ஆவியின்படி:-

மோசே நீ நதியில் ஓடுகிற தண்ணீரை மொண்டு அதை வெட்டாந்தரையிலே ஊற்று அப்பொழுது அது இரத்தமாக மாறும்; மோசே நீ உன்னுடைய அறிவில் நதியைப்போல ஓடிக்கொண்டிருக்கிற உன்னுடைய அறிவு சிந்தனைகளை எடுத்து அவைகளை நேரடியாக உன்னுடைய கிரியைகளுக்கு பயன்படுத்து, அப்பொழுது உன் ஆலோசனைகள் கிரியைகளுக்கு மாறமலிருந்து உன்னுடைய ஆலோசனைகள் சிதறி, சிதைத்து உருக்குலைந்து, உருமாறிப் போகிறது.

முந்தின இரண்டு அடையாளங்களை கண்டு ஜனங்கள் உன்னை நம்பாமலும் உன் வாக்குக்கு செவிகொடாமலும் இருப்பார்களாகில் இந்த மூன்றாவது அடையாளத்தை கண்டு  உன்னை நம்புவார்கள்.

இந்த மூன்றாவது அடையாளத்தில் நன்மையிலிருந்து தீமைக்கு எப்படி மாறுகிறது என்கிற ஒரு பக்கத்தின் கிரியைகளை மட்டும் தேவன் வெளிப்படுத்திக் கொடுத்திருக்கிறார்; ஆனால் இந்த மூன்றாவது அடையாளத்தில் தீமையிலிருந்து எப்படி மீண்டும் நன்மைக்கு மாறுவது என்கிற மறுபக்கத்தை தேவன் நேரடியாக வெளிப்படுத்தாமல், மறைமுகமாக இந்த மூன்று அடையாளங்களுக்குள் மறைத்து தேவன் வெளிப்படுத்திக் கொடுத்திருக்கிறார்.

20. பாம்பின் வாலைப்பிடித்து மீண்டும் கோலாக மாற்றுவது, குஷ்டரோகமுள்ள  தன் கையை தன் மடியில் போட்டு வெளியே எடுத்து மீண்டும் நல்ல சதையுள்ள கையாக மாற்றுவது, ஆகிய இரண்டு அடையாளங்களையும் தீமையை நன்மையினால் ஜெயங்கொள்ளும் அனுபவத்தின் மூலம் தேவனுடைய பிரமாணங்களைக் கொண்டு தீமையிலிருந்து நன்மைக்கு மாற்றுகிறவர்கள் மட்டும்; மூன்றாவது அடையாளத்தின் தீமையிலிருந்து மீண்டும் நன்மைக்கு மாறுகிற செயல் முறையின் மறுபக்கத்தை அறிந்து கொண்டு அவைகளை நடைமுறைப்படுத்த முடியும். Exo_4:4-5, Exo_4:7-8, 1Pe_3:8-11, Rom_8:10-13, Rom_12:21, Eze_3:17-19, Eze_18:21-23, Eze_33:14-17,

21. மூன்றாம் அடையாளத்தின் தீமையிலிருந்து மீண்டும் நன்மைக்கு மாறுகிற செயல் முறை:-

நீ நதியின் தண்ணீரை மொண்டு நிலத்தில் ஊற்றுவாயாக, அப்பொழுது நதியில் மொண்ட தண்ணீர் வெட்டாந்தரையிலே இரத்தமாக மாறாமல் அப்படியே தண்ணீராக இருந்து வெட்டாந் தரையை நல்ல செழிப்பான விளை நிலமாக மாற்றும்.

நீ உன்னுடைய அறிவில் நதிப்போல ஓடிக்கொண்டிருக்கிற உன்னுடைய அறிவு சிந்தனைகளை எடுத்து நேரடியாக உன்னுடைய கிரியைகளுக்கு பயன்படுத்தாமல், அவைகளை தேவனுடைய பிரமா ணங்களுக்கு உட்படுத்தி உன் ஆலோசனைகளை நிறைவேற்று; அப்பொழுது வெட்டாந்தரையில் ஊற்றப்பட்ட தண்ணீர் வெட்டாந் தரையை நல்ல செழுமையான விளை நிலமாக மாற்றுவது போல உன்னுடைய ஆலோசனைகள் நல்ல செழுமையான நீதியின் கிரியைகளுக்கு உருமாறுகிறது.

இந்த மூன்றாவது அடையாளத்தின் தீமையிலிருந்து மீண் டும் நன்மைக்கு மாறுகிற செயல் முறையின் மறுபக்கத்தில் ஒருவனு டைய அறிவின் ஆலோசனைகளை / விசுவாசங்களை தேவனுடைய பிரமாணங்களுக்கு உட்படுத்தின பின்பு; அவைகளை கிரியைகளுக்கு நிறைவேற்றும்போது அது நல்ல செழுமையான நீதியின் கிரியைகளாக உறுமாறுகிறது, அல்லது மனிதனுடைய விசுவாசங்களை தேவனுடைய பிரமாணங்களுக்கு உட்படுத்துவதின் மூலம் முதலாவது தேவனுடைய நீதியின் விசுவாசத்திற்கு உருமாறு கிறது, இரண்டாவது தேவனுடையை நீதியின் விசுவாசங்கள் தேவனுடைய நீதியின் கிரியைகளுக்கு உருமாறுகிறது Rom_1:17, Hab_2:4, Gal_3:11, Heb_10:38, Isa_7:9,

22. இந்த மூன்று அடையாளங்களிலும் உள்ள தீமை யிலிருந்து மீண்டும் நன்மைக்கு மாறுகிற மூன்று செயல் முறை களையும் கைக்கொள்ளுபவர்கள், தேவனுடைய நீதியின் விசுவாசத்திலிருந்து கிரியைகளுக்கு முன்னேறி பெலத்தின் மேல்

பெலன் அடைந்து சீயோனுக்கும் எருசலேமிற்கும் வந்து சேர்வார்கள். Psa_84:5-7, Isa_35:10, Isa_51:11,

சீயோனிலும் எருசலேமிலும் தேவ சித்தத்தை நிறைவேற்றுவதின் மூலம் மகிமையின் மேல் மகிமையடைந்து, மறுருபமடைந்து தேவ ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ளுகிறார்கள். 2Co_3:18, 2Co_4:16,

முதல் இரண்டு அடையாளங்களில் உள்ள நன்மையிலிருந்து தீமைக்கு மாறுகிறவர்கள் அவைகளின் தீமையிலிருந்து மீண்டும் நன்மைக்கு முன்னேற முடியாமல்; முதல் அடையாளத்தின் தீமையிலிருந்து இரண்டாம் அடையாளத்தின் தீமைக்கு முன்னேறி மீண்டும் முன்றாம் அடையாளத்தின் தீமைக்கும் முன்னேறுகிறார்கள், இப்படி இவர்கள் மூன்று தீமையிலிருந்து தீமைக்கு முன்னேறி தேவனுடைய நியாயத்தீர்ப்பிலிருந்து மீண்டும் நியாயத்தீர்ப்புக்கு முன்னேறி நித்திய நரகத்தில் தள்ளப்படுகிறார்கள்.

2Pe_2:19-22, Heb_6:4-8, Exo_3:20-21, Exo_18:24-26, Exo_33:13, Exo_33:18, Exo_4:1-3 , Exo_4:6, Exo_4:9, Jer_9:3, 1Th_5:15,

## அத்தியாயம் ஆறு

6-3 இரண்டு சாட்சிகளின் ஊழிய அழைப்பை பெற்றுக்கொண்டவர்கள் ஆசரிக்கிற மூன்று பிரதான பண்டிகைகள்

தேவனால் முன்குறிக்கப்பட்டவர்கள் தேவனுடைய நித்திய சத்திய சுபாவத்தை சார்ந்திருக்கும் வலது இடது பக்கங்களின் இரண்டு சாட்சிகளின் ஊழிய அழைப்பை பெற்றுக்கொள்ளும்போது அவர்கள் ஆசாரிக்கிற மூன்று பிரதான பண்டிகைகள் Exo_23:14-18, Exo_34:18-24, Deu_16:16-17,

1. பஸ்கா பண்டிகை - முதற்பலன்களின் பண்டிகை / இரட்சிப்பை நினைவுகூறும் நாள் / யூதர்களின் பிறந்த நாள். Exo_12:1-14, Exo_12:15-28, Lev_23:1-8, Deu_16:1-8 , Num_28:16-25,

2. பெந்தெகொஸ்தே பண்டிகை - அறுவடைப் பண்டிகை / வாக்குத்தத்த தேசத்தின் ஆசீர்வாதங்களை நினைவுகூறும் நாள் / கிறிஸ்தவர்களின் பிறந்த நாள். Num_28:25-26, Num_28:27-31, Lev_23:9-22 , Deu_16:9-12, Deu_26:1-19, Act_2:1, 1Co_16:8 , Joh_19:14, Joh_19:31,

3. கூடாரப்பண்டிகை - சேர்ப்புக்கால பண்டிகை / பூமிக்குரிய ஆசீர்வாதங்களை விற்று வாக்குத்தத்த ஆசீர்வதங்களை சேகரிக்கிற நாள் / நான் பரதேசி என்று நினைவுகூறும் நாள் Lev_23:23-44, Lev_26:10Num_29:1-12,Deu_16:13-15 Joh_5:35

தேவனுடைய நாமம் தரிக்கப்பட்ட தேவ ஜனங்கள் ஜாதிகளின் தேவர்களை பணிந்து கொள்ளாமலும், ஜாதிகளின் முறைகளைப் பின்பற்றாமலும் அவைகளை உடைத்துப்போட்டு; தேவனுடைய வார்த்தைகளுக்கு கீழ்படிந்து மூன்று பிரதான பண்டிகைகளிலும் தேவனுடைய சமூகத்தில் வந்திருக்கும்போது அவர்கள் பெற்றுக் கொள்ளுகிற விசேஷித்த ஆசீர்வாதங்கள். Exo_23:24-33, Exo_34:23-24, Deu_16:16-17, 2Co_9:7,

1. தண்ணீரையும் அப்பத்தையும் ஆசீர்வாதிப்பார்

*நித்திய ஜீவ தண்ணீரையும் நித்திய ஜீவ அப்பத்தையும் ஆசீர்வாதிப்பார்*

2. வியாதியை உன்னிலிருந்து விலக்குவார்

*வாக்குவாதம் பண்ணுகிற வியாதியை உன்னிலிருந்து விலக்குவார்.*

3. கர்ப்பம் விழுகிறதும் மலடும் உன் தேசத்தில் இருப்பதில்லை

*இருதயத்தில் தேவ வார்த்தைகளை கர்ப்பம் தரிக்கும்போது அவைகள் சீர்குலைந்து போவதுமில்லை, கிரியைகள் இல்லாமல் போவதுமில்லை.*

4. உன் சத்துருக்களை முதுகு காட்டப்பண்ணுவேன்

*உன் சத்துருக்கள் பயந்து நடுங்கி ஓடுவார்கள்.*

5. உன் சத்துருக்களை துரத்திவிட குழவிகளை அனுப்பு வேன்

*உன் சத்துருக்களை துரத்திவிட தேவனுடைய நியாயத் தீர்ப்பின் பயத்தை அனுப்புவேன்.*

6. காட்டுமிருகம் உன்னில் பெருகாதபடி உன் சத்துருக்களை கொஞ்சம் கொஞ்சமாக உன்னைவிட்டு துரத்துவேன்

*காட்டுமிருகமாகிய பெருமை உன்னில் பெருகாதபடி உன் சத்துருக்களை கொஞ்சம் கொஞ்சமாக உன்னை விட்டு விலக்கு வேன்.*

*7. உன் தேசத்தின் எல்லையை பெருகப்பண்ணுவேன் உன்னுடைய ஆசீர்வாதங்கள் நாளுக்கு நாள் பெருகி வளர்ந்து கொண்டே இருக்கும்.*

8. நீங்கள் தேவ சமூகத்தில் நிலைத்திருக்கும் போது உங்கள் தேசத்தை யாரும் இச்சிப்பதில்லை

*நீங்கள் தேவ சமூகத்தில் நிலைத்திருக்கும்போது உங்களு டைய ஆசீர்வாதங்களை யாரும் கொள்ளையிட முயற்சி செய்ய மாட்டார்கள்.*

1. பஸ்கா பண்டிகை - முதற்பலன்களின் பண்டிகை / இரட் சிப்பை நினைவுகூறும் நாள் / யூதர்களின் பிறந்த நாள்:-

Exo_12:1-14, Exo_12:15-28, Lev_23:1-8, Deu_16:1-8 , Num_28:16-25,

புளிப்பில்லா அப்பப்பண்டிகை / பஸ்கா அப்பப்பண்டிகை / முதற்பலன்களின் பண்டிகை என்று அழைக்கப்படுகிறது. பஸ்கா பண்டிகை வருடத்தின் முதல் மாதமாகிய ஆபிப் மாதம் பதினாலாம் தேதி சாயங்கலாந்தொடங்கி மாதத்தின் இருபத்தோரம் தேதி சாயங்கலாம் வரையுள்ள ஏழு நாட்களைக் கொண்டது. இது யூதர்களின் முதலாவது பிரதான பண்டிகை இதை யூதர்களின் பிறந்த நாள் என்று சரித்திர ஆசிரியர்கள் வர்னிக்கிறார்கள் அல்லது கருது கிறார்கள்.

பஸ்கா பண்டிகையின் நியமத்தின்படி எல்லா ஆண்பிள்ளைகளும் விருத்தசேதனம் செய்யப்பட்டு ஒவ்வொரு வீட்டிலும் பண்டிகையை ஆசரித்து முதல்பலனான ஆண்பிள்ளைகள் அவரவர் தகுதிக்கேற்றபடி தேவனுடைய சமூகத்தில் காணிக்கையை கொண்டு வரவேண்டும்.

புளிப்பில்லா அப்பப்பண்டிகை / பஸ்கா பண்டிகையை அதன் நியமத்தின் படி ஆசரித்தவர்கள் மட்டும் இரண்டாவது பிரதான பண்டிகையான பெந்தெகொஸ்தே பண்டிகையை ஆசரிக்க முடியும்.

பஸ்கா பண்டிகையின் நியமத்தை ஆசரிக்காமல் பெந்தெகொஸ்தே பண்டிகையை ஆசரிக்க முயற்சி செய்பவர்கள் அவர்களின் ஆசீர்வாதங்களை அவர்களே சாபமாக மாற்றிக்கொள்ளுகிறார்கள்.

பழைய ஏற்பாட்டின் புளிப்பில்லாத பஸ்கா பண்டிகை இந்த தலைப்பை தேவனுடைய வெளிப்பாடுகளின் மூல உபதேசங்கள் ((THE FIRST PRINCIPLES OF GOD'S REVELATION) இரண்டாவது தலைப்பு 4-3-3-6 என்ற அட்டவணையில் பார்க்கவும்

## புதிய ஏற்பாட்டின் பஸ்கா பண்டிகை

**1.புதிய ஏற்பாட்டில் வீட்டு வாசலில் இரத்த அடையாளங்களின் பொருள்:-**

பழைய எற்பாட்டில் ஒவ்வொரு வீட்டு வாசலின் இரண்டு நிலைக்கால்கள், மேல் குறுக்குசட்டம் ஆகிய இவற்றின் மேல் பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்த அடையாளங்களின் பொருள்: புதிய

ஏற்பாட்டில் ஒவ்வொரு ஆத்துமாவிலும் ஆவியிலும் கிரியைகளில் தேவனுடைய நியாயத்தீர்ப்பின் அறிவை அடையாளமாக தரித்துக் கொள்ளுவது.

புதிய ஏற்பாட்டில் பஸ்கா ஆட்டுக்குட்டியான இயேசு கிறிஸ்து பாவத்தையும் மரணத்தையும் ஜெயங்கொண்டதின் மூலம் பழைய ஏற்பாட்டின் பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்த அடையாளங் களின் ஆசரிப்பு முறைகள் அதனுடைய பொருளுக்கு மாற்றப்படு கிறது

இயேசு கிறிஸ்து பாவத்தையும் மரணத்தையும் ஜெயங்கொள்ளும் படியாக நிறைவேற்றின நியாயத்தீர்ப்பின் தேவ வார்த்தைகளை, தங்கள் அறிவு, புத்தி, ஞானம் இவைகளில் மனப்பூர்வாக ஏற்றுக் கொண்டு புதுசிருஷ்டியாக மாற்றப்பட்டு அவர்கள் நற்கிரியைகளினால் தேவ சித்தத்தை நிறைவேற்றும்படி தங்கள் சரீர அவயவங்களில் அடையாளங்களாக தரித்துக்கொள்ளுவது.

Rom_8:3, Exo_12:7 , 1Pe_4:16, Heb_13:10-13, Deu_6:6-9, Gal_6:15-18, Heb_10:1-9, Heb_8:5, Heb_11:24-26, 1Co_5:6-8,

### *2. புதிய ஏற்பாட்டில் பஸ்கா ஆட்டுக்குட்டியின் மாமிசம் புசிப்பதின் பொருள்:-*

பலமான ஆகரமான நீதியின் பிரமாணத்தை புசிப்பது அல்லது ஏற்றுக்கொள்ளுவது. புதிய ஏற்பாட்டில் பஸ்கா ஆட்டுக்குட்டியான இயேசு கிறிஸ்து, பாவத்தையும், மரணத்தையும் ஜெயங்கொள்ளும் நீதியின் பிரமாணத்தை நிறைவேற்றுவதின் மூலம் பழைய ஏற்பாட் டின் பஸ்கா ஆட்டுக்குட்டியின் மாம்சத்தை புசிக்கும் ஆசரிப்பு முறை கள் அதனுடைய பொருளுக்கு மாற்றப்படுகிறது.

இயேசு கிறிஸ்து பாவத்தையும், மரணத்தையும் ஜெயங்கொள்ளும் நீதியின் பிரமாணத்தை தன்னுடைய ஆத்துமாவில் ஏற்றுக்கொண்டு, அறிவு, புத்தி, ஞானம் இவைகளினால் நிறைவேற்றுகிறபோது பஸ்கா ஆட்டுக்குட்டியின் மாம்சத்தினுடைய ஆசாரிப்பு முறைகளுடைய பொருளுக்கு வரு கிறது. Joh_1:14, Joh_6:48-60, Job_33:15-30, Pro_5:1-14, Luk_24:30-44, Isa_9:19-20, Ecc_5:1-6

3. பழைய ஏற்பாட்டில் புளிப்பில்லா பஸ்கா அப்பம் புசிப்பதின் பொருள்: புதிய ஏற்பாட்டில் நித்திய ஜீவ வார்த்தைகளான பரலோக இராஜ்ஜியத்தின் இரகசியங்களை அறிந்து கொண்டு விசுவாசத் திலிருந்து விசுவாசத்திற்கு பிழைப்பது.

இரண்டு நாளைக்கு பின்பு பஸ்கா பண்டிகை வருமென்று அறிவீர்கள் / இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு பின்பு உயிர்த்தெழுதலின் தொடர்பில் பரலோக இராஜ்ஜியத்தின் இரகசியங்களின் வசனப்பண்டிகை வருகிறது. Mat_26:2, Mar_14:1-2 Hos_6:1-3,Psa_90:4, 2Pe_3:8,

புதிய ஏற்பாட்டில் எழுத்தின்படி பஸ்கா அப்பம் பிட்குதலை கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை நினைவு கூரும் ஆசரிப்பு முறையாக பின்பற்றும்படி கிறிஸ்து நியமித்து, இதன் தொடர்பில் உள்ள பொருள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு பின்பு இயேசு கிறிஸ்துவின் மூலம் தேவனுடைய வார்த்தைகளின் உவமைகள் உயிர்த்தெழுந்து தேவனுடைய இராஜ்ஜியத்தின் இரகசியங்களை அறிந்துகொள்ளு வதின் தொடர்பில், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை நினைவு கூரும்படி கிறிஸ்து நியமிக்கிறார். Mat_26:26-32, Mar_14:22-28, Luk_22:7-20, Joh_6:48-58,

4. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு பின்பு நடைபெறும் உயிர்த்தெழுதலை நினைவு கூறும்படி கிறிஸ்து எழுத்தின்படி பஸ்கா அப்பம் பிட்குதலை நியமிக்கிறார், ஆனால் முதலாம் நூற்றாண்டு அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவின் வார்த்தைகளின் உயிர்த்தெழுதல் வரை; கிறிஸ்துவின் மரணத்தை நினைவு கூறும்படி புதிய

ஏற்பாட்டின் பஸ்கா அப்பம் பிட்குதலை எழுத்தின்படி ஆசிப்பு முறையாக பின்பற்றும்படி நியமிக்கிறார்கள். 1Co_11:23-26,

5. கிறிஸ்துவின் உயிர்தெழுந்த வசனங்களின் மூலம் தேவனுடைய இராஜ்ஜியத்தின் இரகசியங்களை அறிந்து கொண்ட வர்கள், ஜீவ அப்பமாகிய தேவனுடைய நித்திய ஜீவ வார்த்தைகளை புசித்து ஆவியில் பிழைத்து விசுவாசத்திலிருந்து விசுவாசத்திற்கு முன்னேறுகிறார்கள் இவர்கள் கிறிஸ்துவின் உயித்தெழுதலை நினைவு கூர்ந்து கிறிஸ்துவின் உயித்தெழுதலை தெரிவிக்கிறார்கள்.

6. நித்திய ஜீவ வார்த்தைகளினால் ஆவியில் பிழைக்கிற வர்கள் பஸ்கா அப்பம் பிட்குதலை எழுத்தின் படி ஆசரிப்பு முறைகளாக பின்பற்றாமல் நேரடியாகவே அதன் பொருளாகிய நித்திய ஜீவ வார்த்தைகளை புசித்து ஆவியில் பிழைக்கிறார்கள்.

7. எழுத்தின்படி பஸ்கா அப்பம் பிட்குதலை ஆசரிப்பு முறையாக பின்பற்றுகிறவர்கள் இந்நாள் வரை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நடந்த கிறிஸ்துவின் மரணத்தையே நினைவு கூர்ந்து; இப்பொழுதும் கிறிஸ்துவின் மரணத்தை தெரிவிக்கிறார்கள் இவர்கள் மரித்தவர்கள் மத்தியில் ஜீவனுள்ள தேவனை தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

8. எழுத்தின்படி நிழலாட்டமாக கொடுக்கப்பட்ட அப்பம் பிட்குதலையே சிலர் பொருளாக நினைத்து அவைகளையே பின்பற் றிக் கொண்டிருக்கிறார்கள்; இதனால் ஆவி, ஆத்துமாவில் ஆவிக் குரிய மரணம் ஏற்பட்டு ஆவியில் மீண்டும் மரணத்தை சந்திக்கிறார் கள்.

கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாமல் அபாத்திரமாக கர்த்தருடைய அப்பத்தை புசிப்பவர்கள் தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜன பானம் பண்ணுகிறார்கள். Co_11:27-32, Jer_23:22-24, Pro_20:25, Joh_1:14, Joh_6:48-53,

பஸ்கா ஆப்பம் / மாமிசம் புசிப்பது :- தேவனுடைய பிரமா ணங்களை / நித்திய ஜீவ வார்த்தைகளை, தேவ ஆலோசனைகளாக

/ தேவ வார்த்தைகளாக பகுத்து, பிரித்து, சிந்தித்து, தியானித்து அவைகளை தன்னுடைய ஆவிக்குரிய ஆகாரமாக புசித்து ஆவி, ஆத்துமாவில் பிழைப்பது.

**கிறிஸ்துவின் மரணத்தை தெரிவிக்கும் பஸ்கா பண்டிகையினுடைய ஆசரிப்பு முறைகளில், எழுத்தின்படி பிரிவினைகள், மார்கபேதங்கள்.**

1. கர்த்தருடைய பஸ்கா பந்தியிலும் பேய்களின் பந்தியிலும் போஜன பானம் பண்ணி எப்பொழுதுமே இருமனம் உள்ளவர்களாக இருப்பது.

2. கர்த்தருடைய பஸ்கா அப்பத்தை அபாத்திரமாக புசித்த படியால் மனுஷ ஆவியில் உபதேசங்களை உருவாக்கி, மனிதர் களிடம் மகிமையைத் தேடுவதால் அவர்களுக்குள்ளே மார்க்க பேதங்களும், பிரிவினைகளும், வெளிப்படுகிறது.

3. கர்த்தருடைய பஸ்கா அப்பத்தை அபாத்திரமாக புசித்த படியால் அநேகர் பஸ்கா அப்பமாகிய கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளை புசிக்க பெலவீனராக / பெலமில்லாதவர்களாக மாறி தேவனுடைய நியாயத்தீர்ப்பை பெற்றுக்கொள்ளுவது.

4. கர்த்தருடைய பஸ்கா அப்பத்தை அபாத்திரமாக புசித்த படியால் அநேகர் பஸ்கா அப்பமாகிய கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளைக் குறித்து வாக்குவாதம் பண்ணுகிற வியாதிக்கு அடிமைகளாக்கப்பட்டு தேவனுடைய நியாயத்தீர்ப்பை பெற்றுக் கொள்வது.

5. கர்த்தருடைய பஸ்கா அப்பத்தை அபாத்திரமாக புசித்த படியால் அநேகர் ஆவி, ஆத்துமாவில், இரண்டாம் முறை மரணம் அடைந்து, ஆவி ஆத்துமாவில் நித்திரை மயக்கத்தின் தேவனுடைய நியாயத்தீர்ப்பை பெற்றுக் கொள்ளுவது.

6. கர்த்தருடைய பஸ்கா அப்பத்தை அபாத்திரமாக புசித்தபடி யால் அநேகர், யூதாசைப் போல இயேசு கிறிஸ்துவை பணத்திற்கு காட்டிக் கொடுத்து; ஆவிக்குரிய காரியங்களில் தலை கீழாக விழுந்து,

இரண்டாம் முறை மரணம் அடைந்து, ஆவி ஆத்துமாவில் நித்திரை மயக்கத்தின் தேவனுடைய நியாயத்தீர்ப்பை பெற்றுக் கொள்ளுவது.

7. கர்த்தருடைய பஸ்கா அப்பத்தை புசிப்பதற்கேற்ற நீதியின் கிரியைகளாகிய கலியாண வஸ்திரம் இல்லாதபடியால் பஸ்கா பந்தியிலிருந்து புறம்பான இருளாகிய அறியாமைக்கு தள்ளப்படுதல்.

## பெந்தெகொஸ்தே பண்டிகை

பெந்தெகொஸ்தே பண்டிகை / சேர்ப்பு கால பண்டிகை / வாரங்களின் பண்டிகை, அறுவடைப் பண்டிகை / முதற்கனிகளின் பண்டிகை என்கிற பல பொருளை வெளிப்படுத்தும் பண்டிகை. பெந்தெகொஸ்தே என்கிற வார்த்தையின் பொருள் ஐம்பதாவது நாள் இந்த பண்டிகை ஐம்பது நாட்களைக் கொண்டது இது யூதர்களின் பிரதான இரண்டாவது பண்டிகை.

இந்த பண்டிகையை கிறிஸ்தவர்களின் பிறந்த நாள் என்று சரித்திர ஆசிரியர்கள் வர்ணிக்கிறார்கள் அல்லது கருதுகிறார்கள் Lev_23:9-21, Lev_23:15-16,

பஸ்கா பண்டிகை முடிந்த மறுநாளே இந்த பெந்தெ கொஸ்தே பண்டிகை ஆரம்பமாகிறது. இயேசுகிறிஸ்து சிலுவையில் அடிக்கப்பட்ட மறுநாள் முதல் இந்த பண்டிகை ஆரம்பமாகிறது. இயேசு கிறிஸ்து பஸ்கா பண்டிகை அன்று சிலுவையில் அடிக்கப் பட்டார். Joh_13:1, Joh_18:28, Joh_18:39, Joh_19:14,

### புதிய ஏற்பாட்டில் ஆவியின்படி பெந்தெகொஸ்தே பண்டிகையின் பொருள்:-

1. கிறிஸ்துவின் உபதேசங்களை நடைமுறைப்படுத்தி தீமையை நன்மையினால் ஜெயங்கொள்ளுகிறவர்கள் / ஆண் பிள்ளைகள், தங்களுடைய, ஆவி, ஆத்துமா, சரீரத்தில் விளைந்த முதற்கனிகளின் முதற்பலன்களை, தங்கள் மனவிருப்பத்தின்படி தேவனுடைய சமூகத்தில் கொண்டு வந்து காணிக்கை செலுத்தி பிதாவின் வாக்குத்தத்தமான பரிசுத்த ஆவியின் ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக்கொள்ளுதல்.

*பரிசுத்த ஆவியின் ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக்கொள்ள வழிமுறைகள்.*

1-1 பஸ்கா பண்டிகையின் நியமங்களை ஆவிக்குரிய நிலையில் ஆசரித்திருக்க வேண்டும்.

1-2 கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் தரிசனத்தை / ஒலிவ மலையின் தரிசனத்தை பெற்றிருக்க வேண்டும். Act_1:1-5,

1-3 பிதாவின் வாக்குத்தத்தமான பரிசுத்த ஆவியை பெற்றுக் கொள்ளுவதற்காக எருசலேமில் / தேவனுடைய வார்த்தைகளின் படி காத்திருக்க வேண்டும். Act_1:1-5,

1-4 கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் தரிசனத்தை பெற்றுக் கொண்டதிலிருந்து எருசலேமில் / தேவனுடைய வார்த்தைகளின் படி காத்திருப்பதற்காக வந்து சேருவதற்கு, கடந்து செல்ல வேண்டிய ஓய்வு நாள் பிரயாண தூரம் / ஓய்வு நாள் பிரமாணங்களை கடந்து செல்ல வேண்டும். Act_1:12-15,

1-5 எருசலேமில் பெந்தெகொஸ்தே நாளில் பிதாவின் வாக்குத்தத்தமான பரிசுத்த ஆவி அருளப்பட்டது. Act_2:1-5,

1-6 பிதாவின் வாக்குத்தத்தமான பரிசுத்த ஆவியின் ஆசீர்வாதங்கள் 1Co_12:7-12,

1-7 கிறிஸ்துவின் சரீர அவயவங்களில் பரிசுத்த ஆவியின் கிரியைகள் Eph_4:11-16

2. உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கும் தேசத்தில் நீ போய்ச்சேர்ந்து, அதைக்கட்டிக் கொண்டு, அதில் வாசம் பண்ணும்போது, கர்த்தர் நம்முடைய பிதாக்களுக்கு ஆணையிட்ட தேசத்தில் வந்து சேர்ந்தேன் என்று இன்று உம் முடைய தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் அறிக்கையிடுகிறேன் என்பாயாக. Deu_26:1-3,

3. கர்த்தர் நம்முடைய பிதாக்களுக்கு ஆணையிட்ட வாக்கு தத்தமான பரிசுத்த ஆவியின் ஆசீர்வாதங்களை பெற்றுக்கொண்ட

படியால் எனக்கு தேவன் பகிர்ந்து கொடுத்த தேவனுடைய சித்தத்தை அறிந்து கொண்டேன் என்று இன்று உம்முடைய தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் அறிக்கையிடுகிறேன் என்பாயாக.

Deu 26:1 உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கும் தேசத்தில் நீ போய்ச்சேர்ந்து, அதைக் கட்டிக்கொண்டு, அதில் வாசம் பண்ணும்போது,

Deu 26:2 உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் உன் சேதத்தில் நீ பயிரிடும் நிலத்தின் கனிகளிலெல்லாம் முந்தின பலனை எடுத்து, ஒரு கூடையிலே வைத்து, உன் தேவனாகிய கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி தெரிந்து கொண்டிருக்கும் ஸ்தானத்திற்குப்போய்,

Deu 26:3 அந்நாட்களில் இருக்கும் ஆசாரியனிடத்தில் சென்று, அவனை நோக்கி : கர்த்தர் எங்களுக்குக் கொடுக்க நம்முடைய பிதாக்களுக்கு ஆணையிட்ட தேசத்தில் வந்து சேர்ந்தேன், என்று இன்று உம்முடைய தேவனாகிய கர்த்தருடைய சந்தியில் அறிக்கையிடுகிறேன் என்பாயாக.

3. எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து தேவன் என்னை விடுதலையாக்கி பாலும், தேனும் ஓடுகிற இந்த நல்ல தேசத்தை தேவன் எங்களுக்கு கொடுத்தார் :-

*பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து தேவன் எங்களை விடுதலையாக்கி தேவனுடைய வெளிப்பாடுகளின் மூல உபதேசங்களையும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியின் ஆசீர்வாதங்களையும் தேவன் எங்களுக்கு கொடுத்தார். Deu 26:4-9,*

Deu 26:4 அப்பொழுது ஆசாரியன் அந்தக் கூடையை உன் கையிலிருந்து வாங்கி, அதை உன் தேவனாகிய கர்த்தரின் பலி பீடத்திற்கு முன்பாக வைக்கக்கடவன்.

Deu 26:5 அப்பொழுது நீ உன் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் நின்று வசனித்துச் சொல்ல வேண்டியது என்னவென்றால் என் தகப்பன் அழிவுக்கு நேரான சீரியா தேசத்தானாயிருந்தான்;

அவன் கொஞ்சம் ஜனங்களோடே எகிப்துக்குப் போய், அவ்விடத்தில் பரதேசியாய்ச் சஞ்சரித்து? அங்கே பெரிய பலத்த திரட்சியான ஜாதியானான்.

Deu 26:6 எகிப்தியர் எங்களை ஒடுக்கி, எங்களைச் சிறுமைப் படுத்தி, எங்கள் மேல் கடினமான வேலையைச் சுமத்தினபோது,

Deu 26:7 எங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரை நோக் கிக் கூப்பிட்டோம்; கர்த்தர் எங்கள் சத்தத்தைக் கேட்டு, எங்கள் சிறுமையையும் எங்கள் வருத்தத்தையும் எங்கள் ஒடுக்கத்தையும் பார்த்து,

Deu 26:8 எங்களைப் பலத்த கையினாலும், ஓங்கிய புயத்தி னாலும், மகா பயங்கரங்களினாலும், அடையாளங்களினாலும், அற் புதங்களினாலும், எகிப்திலிருந்து புறப்படப்பண்ணி,

Deu 26:9 எங்களை இவ்விடத்துக்கு அழைத்து வந்து, பாலும் தேனும் ஓடுகிற தேசமாகிய இந்தத் தேசத்தை எங்களுக்குக் கொடுத் தார்.

4. தேவன் எங்களுக்கு கொடுத்த ஆசீர்வாதங்களின் முதற் பலன்களை உம்முடைய சமூகத்தில் கொண்டு வந்து சேர்த்தேன் என்று நீயும், லேவியனும், பரதேசியும் உன் வீட்டாரும் சந்தோஷப் படுவீர்களாக

*தேவன் எங்களுக்கு கொடுத்த ஆசீர்வாதங்களின் முதற் பலன்களையெல்லாம் உம்முடைய சமூகத்தில் கொண்டுவந்து சேர்த் தேன்; இவைகள் உம்முடைய சித்தப்படி எங்களுக்கு கொடுத்தீர், எங்களுடைய திறமைகளினால் அல்ல என அறிக்கையிட்டு கர்த் தருக்கு முன்பாக பணிந்து நீயும், லேவியன், பரதேசி உன் வீட்டாரும் சந்தோஷப்படுவீர்களாக Deu_26:10-11,*

Deu 26:10 இப்பொழுதும், இதோ, கர்த்தாவே, தேவரீர் எனக்குக் கொடுத்த நிலத்தினுடைய கனிகளின் முதற்பலனைக் கொண்டு வந்தேன் என்று சொல்லி, அதை உன் தேவனாகிய கர்த்த

ருடைய சந்நிதியில் வைத்து, உன் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் பணிந்து

5. மூன்றாம் வருஷத்திலே, நீ உன் வரத்திலெல்லாம் பத்தில் ஒன்றை எடுத்து வந்து, நான் என் தேவனாகிய கர்த்தரின் சத்தத்திற்குக் கீழ்ப்படிந்து தேவரீர் எனக்குக் கட்டளையிட்டபடி சகலமும் செய்தேன். உம்முடைய கட்டளைகளில் ஒன்றையும் மீறவும் இல்லை மறக்கவும் இல்லை.

தேவனால் முன் குறிக்கப்பட்டு முதலாவது, அழைக்கப்பட்டவர்களின் நிலையைக் கடந்து, இரண்டாவது தெரிந்து கொள்ளபட்டவர்களின் நிலையைக் கடந்து, மூன்றாவது உண்மையுள்ளவர்கள் நிலையைக் வந்தடைந்தவர்கள்; தங்கள் வரத்திலெல்லாம் பத்தில் ஒன்றை எடுத்து வந்து, நான் என் தேவனாகிய கர்த்தரின் சத்தத்திற்குக் கீழ்ப்படிந்து, தேவரீர் எனக்குக் கட்டளையிட்டபடி சகலமும் செய்தேன். உம்முடைய கட்டளைகளில் ஒன்றையும் நான் மீறவும் இல்லை மறக்கவும் இல்லை. Deu_26:12-14,

Deu 26:12 தசமபாகம் செலுத்தும் வருஷமாகிய மூன்றாம் வருஷத்திலே, நீ உன் வரத்திலெல்லாம் பத்தில் ஒன்றை எடுத்து, லேவியனும் பரதேசியும் திக்கற்ற பிள்ளையும் விதவையும் உன் வாசல்களில் புசித்து திருப்தியாகும்படி அவர்களுக்குக் கொடுத்துத் தீர்ந்த பின்பு,

Deu 26:13 நீ உன் தேவனாகிய கர்த்தருடைய சந்தியில் போய் அவரை நோக்கி : தேவரீர் எனக்குக் கொடுத்த எல்லாக் கட்டளைகளின் படியும், நான் பரிசுத்தமான பொருள்களை என் வீட்டிலிருந்து எடுத்து வந்து, லேவியனுக்கும் பரதேசிக்கும் திக்கற்ற பிள்ளைக்கும் விதவைக்கும் கொடுத்தேன்; உம்முடைய கட்டளைகளில் ஒன்றையும் நான் மீறவும் இல்லை மறக்கவும் இல்லை.

Deu 26:14 நான் துக்கங்கொண்டாடும் போது அதில் புசிக்கவும் இல்லை, தீட்டான காரியத்துக்கு அதில் ஒன்றும் எடுக்கவும் இல்லை; இழவு காரியத்துக்காக அதில் ஒன்றும் படைக்கவும்

இல்லை; நான் என் தேவனாகிய கர்த்தரின் சத்தத்திற்குக் கீழ்படிந்து, தேவரீர் எனக்குக் கட்டளையிட்டபடி சகலமும் செய்தேன்.

6. முதல் வருஷத்திலே தானாய் விளைகிறதை சாப்பிடு வீர்கள்; இரண்டாம் வருஷத்திலே தப்பிப்பயிராகிறதை, சாப்பிடுவீர் கள்; மூன்றாம் வருஷத்திலோ விதைத்து அறுத்து, திராட்சத் தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனிகளைப் புசிப்பீர்கள்.

*Rev 17:14 ஆட்டுக்குட்டியானவர் கர்த்தாதி கர்த்தரும் ராஜாதி ராஜவுமாயிருக்கிற படியால்; அவரோடு கூட இருக்கிறவர்கள் அழைக்கப்ட்டவர்களும் தெரிந்து கொள்ளப்பட்டவர்களும் உண்மை யுள்ளவர்களுமா யிருக்கிறார்கள் என்றான்.*

தேவனால் முன் குறிக்கப்பட்டு முதலாவது அழைக்கப் பட்டவர்களின் நிலையிலிருந்தபோது என்னுடைய மனதில் தானாக / சுயமாக வெளிப்பட்ட ஆலோசனைகளையே என் ஆவி ஆத்துமாவின் ஆகாரமாக புசித்தேன்.

இரண்டாவது தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் நிலையி ருந்தபோது, மற்றவர்களுக்கு வெளிப்படாத தேவ ஆலோசனைகளைத் தேடிப்பார்த்து, தெரிந்து கொண்டு அவைகளை என் ஆவி ஆத்துமாவின் ஆகாரமாக புசித்தேன், மூன்றாவது உண்மையுள்ளவர்கள் நிலைமைக்கு வந்தடைந்தபோது என்னுடைய இருதயத்தில் தேவனுடைய சத்தியமான வசனங்களை விதைத்து தேவன் பகிர்ந்து கொடுத்த ஊழிய அழைப்பின் ஆசீர்வாதங்களை அறுத்து, அதன் கனிகளை 30% / 60% / 100% என்கிற அளவுகளில் என் ஆவி ஆத்துமாவின் ஆகாரமாக புசித்தேன் Isa_37:30-32,

உனக்கு அடையாளமாயிருப்பது என்னவென்றால் : இந்த வருஷத்திலே தானாய் விளைகிறதை சாப்பிடுவீர்கள் இரண்டாம் வருஷத்திலே தப்பிப்பயிராகிறதை சாப்பிடுவீர்கள், மூன்றாம் வருஷத்திலோ விதைத்து அறுத்து , திராட்சத்தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனிகளைப் புசிப்பீர்கள். யூதா வம்சத்தாரில் தப்பி மீந்திருக்கிறவர்கள் மறுபடியும் கீழே வேர் பற்றி மேலே கனிகொடுப்பார்கள்.

மீதியாயிருக்கிறவர்கள் எருசலேமிலும், தப்பினவர்கள் சீயோன் மலையிலுமிருந்து புறப்படுவார்கள்; சேனைகளுடைய கர்த்தரின் வைராக்கியம் இதைச் செய்யும்.

7. நான் என் தேவனாகிய கர்த்தரின் சத்தத்திற்குக் கீழ்ப் படிந்து, தேவரீர் எனக்குக் கட்டளையிட்ட படி சகலமும் செய்தேன்.

Deu 26:15 நீர் உமது பரிசுத்த வாசஸ்தாலமாகிய பரலோகத் திலிருந்து நோக்கிப் பார்த்து, உமது ஜனங்களாகிய இஸ்ரவேல ரையும், நீர் எங்கள் பிதாக்களுக்கு ஆணையிட்டபடியே, எங்களுக்குக் கொடுத்த பாலும் தேனும் ஓடுகிற தேசத்தையும் ஆசீர்வதியும் என்று சொல்வாயாக.

நீர் உமது பரிசுத்த வாசஸ்தலமாகிய பரலோகத்திலிருந்து நோக்கிப் பார்த்து, உமது ஜனங்களாகிய ஆவிக்குரிய இஸ்ரவேலராகிய கிறிஸ்தவர்களையும், நீர் எங்கள் பிதாக்களுக்கு ஆணையிட்டபடியே, எங்களுக்குக் கொடுத்த தேவனுடைய வெளிப்பாடுகளின் மூல உபதேசங்களையும் பரிசுத்த ஆவியின் கிரியைகளின் மூலம் தேவன் பகிர்ந்து கொடுத்த ஊழிய அழைப்பின் ஆசீர்வாதங்களையும் ஆசீர்வதியும் என்று சொல்லுவாயாக.

8. பெந்தெஸ்கொஸ்தே பண்டிகையின் நியமங்களை ஆச ரித்து வந்தால் தேவனுக்கு சொந்த ஜனமாயிருப்பாய் / எனக்குப் பரி சுத்த ஜனமாயிருப்பாய் எல்லா ஜாதிகளைப் பார்க்கிலும், புகழ்ச்சி யிலும் கீர்த்தியிலும் மகிமையிலும் உன்னைச் சிறந்திருக்கும்படி செய்வேன்.

Deu 26:16 இந்தக் கட்டளைகளின் படியும் நியாயங்களின் படியும் நீ செய்யும் பொருட்டு, இன்று உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கட்டளையிடுகிறார் ஆகையால் உன் முழு இருதயத்தோடு உன் முழு ஆத்துமாவோடும் அவைகளைக் காத்து நடக்கக்கடவாய்.

Deu 26:17 கர்த்தர் எனக்கு தேவனாயிருப்பார் என்றும், நான் அவர் வழிகளில் நடந்து, அவர் கட்டளைகளையும் அவர் கற்பனைகளையும் அவர் நியாயங்களையும் கைக்கொண்டு, அவர்

சத்தத்திற்குக் கீழ்ப்படிவேன் என்றும் நீ இன்று அவருக்கு வாக்குக்கொடுத்தாய்,

Deu 26:18 கர்த்தரும் உனக்கு வாக்குக் கொடுத்து உனக்குச் சொல்லியிருக்கிறபடி : நீ என்னுடைய கட்டளைகளையெல்லாம் கைக்கொண்டால், எனக்குச் சொந்த ஜனமாயிருப்பாய் என்றும்,

Deu 26:19 நான் உண்டு பண்ணின எல்லா ஜாதிகளைப் பார்க்கிலும், புகழ்ச்சியிலும் கீர்த்தியிலும் மகிமையிலும் உன்னைச் சிறந்திருக்கும் படி செய்வேன் என்றும், நான் சொன்னபடியே, நீ உன் தேவனாகிய கர்த்தரான எனக்குப் பரிசுத்த ஜனமாயிருப்பாய் என்றும், அவர் இன்று உனக்குச் சொல்லுகிறார் என்றான்.

பெந்தெகொஸ்தே பண்டிகையின் நியமங்களின்படி அறுப்புக்கு நியமித்த வாரங்களை எங்களுக்குத் தற்காக்கிற எங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்திருப்போம் என்று அவர்கள் தங்கள் இருதயத்திலே சொல்லுகிறதில்லை. ஆகையால் தேவன் அவர்களுக்கு அந்தந்தப் பருவத்திலே அவர்களுக்கு மழையையும், முன்மாரியையும் பின்மாரியையும் கொடுக்காத படியினால், அவர்களுடைய ஆசீர்வாதங்களை இழந்து போகிறார்கள்.

Jer 5:20 நீங்கள் யாக்கோபின் வீட்டிலே அறிவித்து, யூதாவிலே சொல்லிக் கூறவேண்டியது என்னவென்றால்,

Jer 5:21 கண்கள் இருந்தும் காணாமலும், காதுகள் இருந்தும் கோளாமலுமிருக்கிற அறிவில்லாத ஜனங்களே, கேளுங்கள்.

Jer 5:22 எனக்குப் பயப்படாதிருப்பீர்களோ என்று கர்த்தர் சொல்லுகிறார் ; அலைகள் மோதியடித்தாலும் மேற்கொள்ளாத படிக்கும், அவைகள் இரைந்தாலும் கடவாத படிக்கும், கடக்கப் கூடாாத நித்திய பிரமாணமாகச் சமுத்திரத்தின் மணலை எல்லையாய் வைத்திருக்கிறவராகிய எனக்கு முன்பாக அதிராதிருப்பீர்களோ?

Jer 5:23 இந்த ஜனங்களோ முரட்டாட்டமும் கலகமுமான இருதயமுள்ளவர்கள்; முரட்டாட்டம் பண்ணிப் போய்விடுகிறார்கள்.

Jer 5:24 அந்தந்தப் பருவத்திலே எங்களுக்கு மழையையும், முன்மாரியையும் பின்மாரியையும் கொடுத்து, அறுப்புக்கு நியமித்த வாரங்களை எங்களுக்குத் தற்காக்கிற எங்கள் தேவனாகிய கர்த்தருக் குப் பயந்திருப்போம் என்று அவர்கள் தங்கள் இருதயத்திலே சொல்லுகிறதில்லை.

Jer 5:25 உங்கள் அக்கிரமங்கள் இவைகளை விலக்கி, உங்கள் பாவங்கள் உங்களுக்கு நன்மையை வரவொட்டாதிருக் கிறது.

## கூடாரப் பண்டிகை

கூடாரப் பண்டிகை / சேர்ப்புக்கால பண்டிகை ஏழு நாட்களை கொண்டது, இது யூதர்களின் பிரதான மூன்றாவது பண்டிகை, ஏழாம் மாதம் முதலாம் நாள் தேவனுடைய நியாயத்தீர்ப்பின் எச்சரிப்பின் செய்தியை ஞாகப்படுத்தி, ஏழாம் மாதம் பத்தாம் தேதி தேவ சமூகத் தில் தங்களை தாழ்த்தி பாவ நிவிர்த்தி செய்து; ஏழாம் மாதம் பதி னைந்து முதல் இருபத்தியொன்றாம் தேதி வரை எகிப்தில் கூடாரங் களின் ஏழு நாட்கள் கூடாரங்களில் வாசம் பண்ணவேண்டும் / புதிய ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ளுவதற்காக பழையவைகளை தங் களைவிட்டு விலக்கி, தங்கள் தகுதிக்கேற்றபடி தேவ சமூகத்தில் காணிக்கைகளை கொண்டு வரவேண்டும்.

**புதிய ஏற்பாட்டில் ஆவியில் படி கூடாரப் பண்டிகையின் பொருள் :-**

1. ஓய்வு நாளை பரிசுத்தமாக ஆசாரித்து, ஓய்ந்திருந்து கர்த்தருடைய பண்டிகையாக நினைவு கூறுவாயாக Lev_23:1-3,

2. ஏழாம் மாதம் முதலாம் தேதி தேவனுடைய நியாயத் தீர்ப்பின் செய்தியை எக்காள சத்தத்தால் ஞாபகக் குறியாகக் கொண்டாடுகிற பண்டிகை என்கிற சபை கூடுகிற பரிசுத்த ஓய்வு நாள் Lev_23:23-25, Eze_33:1-7, Hos_8:1-4, Isa_48:1-2, Nag_1:7, 2Ti_2:19, 1Co_8:3,

3. ஏழாம் மாதம் பத்தாம் தேதி உங்கள் ஆத்துமாவை தாழ்மைப்படுத்தி, பாவ நிவர்த்தி செய்யும் விசேஷித்த பரிசுத்த ஓய்வு நாள் Lev_23:26-32, Heb_11:13-16,

4. போன வருஷத்துப் பழைய தானியத்தைச் சாப்பிட்டு, புதிய தானியத்துக்கு இடமுண்டாகம்படி, பழையதை விலக்கி, பின்பு கூடாரப்பண்டிகையை ஆசாரிக்க வேண்டும். Deu_16:13-15, Lev_26:10, Lev_23:39, Exo_23:14-17,

5. ஏழாம் மாதம் பதினைந்தாந்தேதி முதல் ஏழு நாளளவும் கர்த்தருக்கு ஆசரிக்கும் கூடாரப்பண்டிகையாயிருப்பதாக. Lev_23:33-36, Heb_9:8-10,

6. நீங்கள் கர்த்தருக்குப் படைக்கிற உங்கள் எல்லாக் காணிக் கைகளும் பொருத்தனைகளும் உற்சாக பலிகளும் தவிர, நீங்கள் அந்தந்த நாளுக்குத் தக்கதாய்க் கர்த்தருக்குச் சர்வாங்க தகன பலி, போஜபலி, இரத்த பலி, பானபலி முதலானவைகளைச் செலுத்தும் படி சபை கூடி வந்து, பரிசுத்தமாய் ஆசரிப்பதற்காக நீங்கள் கூறவேண்டிய கர்த்தருடைய பண்டிகைகள் இவைகளே. Lev_23:37-38,

7. எகிப்தில் கூடாரங்களின் குடியிருப்பதை உங்கள் சந்ததி யார் அறிந்து கொள்ளும்படி நீங்கள் ஏழு நாட்கள் கூடாரங்களில் வாசம் பண்ண வேண்டும். Lev_23:39-44, Heb_11:13-16, Lev_21:16, Lev_21:24, Lev_22:1,

**அத்தியாயம் ஒன்று**

*6-4 ஊழிய அழைப்பை பெற்றுக் கொண்டவர்களின் குணாதி சயங்களை குத்து விளக்கின் குணாதிசயங்களோடு ஒப்பிட்டு அறிந்து கொள்ளுதல்*

1. குத்து விளக்கு

2. குத்து விளக்கின் ஏழு அகல்கள்

3. நீதிமான்களின் விளக்கு

4. துன்மார்க்கனின் விளக்கு

5. விளக்கிலிருந்து வெளிச்சம் பிரகாசித்தல்

6. விளக்கின் எண்ணையை தாங்கி நிற்கும் கிண்ணம்

7. விளக்கில் ஒலிவ எண்ணையை ஊற்றுதல்

8. விளக்கில் ஒலிவ எண்ணெய் குறைந்து போகுதல்

9. விளக்கை தாங்கி நிற்கும் விளக்கு தண்டு

10. மரக்காளின் கீழ் விளக்கை வைப்பது.

11. பாத்திரத்தின் கீழ் விளக்கை வைப்பது

12. கட்டிலின் கீழ் விளக்கை வைப்பது

13. மறைவிடத்தில் விளக்கை வைப்பது.

1. குத்து விளக்கு :- தேவனுடைய வார்த்தைகள் Lev_10:11-12 (2), Lev_10:16, Joh_1:1-5, 2Pe_1:19, Num_8:1-4, Heb_9:1-2 ,

2. குத்து விளக்கின் ஏழு அகல்கள்:-

தேவ வாத்தைகளின் ஏழு பிரமாணங்களின் மூலம் வெளிப்படுகிற நீதியின் கிரியைகள் மோசேயின் மூலம் வெளிப்பட்டு இயேசு கிறிஸ்துவினால் நிறைவேற்றப்பட்டவைகள். மோசேயின் புஸ்தகங்கள், சங்கீதம் 19,119 அதிகாரங்கள். Psa_19:1, Psa_119:1, Zar_4:2, Lev_24:1-4, Exo_27:20, Exo_39:37,

1. கர்த்தருடைய வேதம்

2. கர்த்தருடைய வழிகள்

3. கர்த்தருடைய நியாயங்கள்

4. கர்த்தருடைய சாட்சிகள்.

5. கர்த்தருடைய கட்டளைகள்

6. கர்த்தருடைய கற்பனைகள்

7. கர்த்தருடைய பிரமாணங்கள்.

3. நீதிமான்களின் விளக்கு :- நீதிமான்களின் தரிசனங்கள். Joh_5:33-39, Psa_18:28, Job_29:3,

4. துன்மார்க்கனின் விளக்கு :-

Pro_20:20, Pro_24:20, Job_18:5-7, Job_21:17-19,

5-1. விளக்கிலிருந்து வெளிச்சம் பிரகாசித்தல் நற்கிரியைகளை செய்தல் Mat_5:14-15, Psa_37:6,

5-2 தேவ தரிசனங்களை உணர்ந்து கொள்ளுதல் Luk_11:33-36, Job_35:13-14, Psa_89:15, Job_37:21-22, Isa_8:18-20, Job_29:3, Mat_10:26-27, Luk_12:2-3, Rev_18:23, Isa_2:1-5, Mic_4:1-3, Isa_51:4,

6. விளக்கின் எண்ணையை தாங்கி நிற்கும் கிண்ணம் :- ஒருவன் அடைந்த இரட்சிப்பின் பாத்திரம் Psa_116:12-14, 2Ti_2:19-21, Mat_25:4-10, Zar_4:2-3, Rom_9:20-23,

7. விளக்கில் ஒலிவ எண்ணையை ஊற்றுதல் :-

கடிந்து கொள்ளுதலை ஏற்றுக்கொண்டு, தன்னை சீர்திருத்திக் கொள்ளும்போது அறிவு, புத்தி ஞானம் மற்றும் இவைகளுடன் கலந்த நற்கிரியைகளும் படிப்படியாக முன்னேறுகிறது. Psa_141:5, Mat_6:17, Ecc_9:8, Rev_6:6, 2Ti_3:16-17, Jam_5:14-16, Isa_58:8-10,

8. விளக்கில் ஒலிவ எண்ணெய் குறைந்து போகுதல் :- கடிந்து கொள்ளுதலை ஏற்றுக்கொள்ளாமல் அலட்சியப்படுத்தும் போது தீமையின் அறிவு, புத்தி ஞானம் மற்றும் இவைகளுடன் கலந்த தீமையின் கிரியைகளும், நற்கிரியைகளின் அறியாமைக்கு / இருளுக்கு படிப்படியாக முன்னேறுகிறது. Exo_27:20, Exo_39:37,

Lev_24:1-4, Isa_42:3, Mat_12:20, Pro_1:23, Luk_10:34, Luk_12:35-37, Luk_13:25-30, Mat_25:4-10, Isa_1:4-6,

9-0 விளக்கை தாங்கி நிற்கும் விளக்கு தண்டு:- ஊழிய அழைப்பின் அளவுப் பிரமாணம்

9-1 பரிசுத்த ஆவியினுடைய ஊழிய அழைப்பின் அளவுப்பிரமாணம்

9-2 அபிஷேக ஆவியினுடைய ஊழிய அழைப்பின் அளவுப் பிரமாணம்

*9-1 பரிசுத்த ஆவியினுடைய ஊழிய அழைப்பின் அளவுப் பிரமாணம்:-*

பரிசுத்த ஆவியினுடைய ஊழிய அழைப்பின் அளவுப்பிர மாணம் / முன்மாரி மழையின் ஊழியங்களின் ஐந்து வகையான ஊழிய அழைப்பின் அளவுப்பிரமாணங்கள் Eph_4:11-13, 1Co_12:4-12, 1Co_12:27-31, 1Pe_4:10-11,

1. அப்போஸ்தலர் 2 தீர்க்கதரிசி 3 போதகர் 4 மேய்ப்பர் 5 சுவிசேஷகர்; பரிசுத்த ஆவியினால் தேவன் பகிர்ந்து கொடுத்த இந்த ஐந்து வகையான ஊழிய அழைப்பில் ஒன்று அல்லது அதற்கு மேற் பட்ட ஊழிய அழைப்பை பெற்றுக்கொண்டவர்கள், கிறிஸ்துவை மையமாகக் கொண்டு ஆயத்தம் என்னும் சமாதானத்தின் வலது, இடது பக்கத்தின் பாதரட்சை போல தரித்துக்கொள்ள கூடிய இரண்டு அடிப்படையான நற்கிரியைகளை தங்களுடைய ஊழிய அழைப்பில் நிறைவேற்றும்படி நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

பரிசுத்த ஆவியினால் பெற்றுக்கொண்ட ஊழிய அழைப்பின் அளவுப் பிரமாணத்தினுடைய நற்கிரியைகள் ஒரு ஜோடியானவை கள், கிறிஸ்துவை மையமாகக் கொண்டு ஆயத்தம் என்னும் சமாதானத்தின் வலது, இடது பக்கத்தின் பாதரட்சை போல தரித்துக் கொள்ள கூடியவைகள்.

1. பரிசுத்த ஆவியினால் பெற்றுக்கொண்ட ஊழியத்தில் ஆயத்தம் என்னும் சமாதானத்தில் வலது பக்கத்தின் பாதரட்சை போல, தரித்துக் கொள்ள வேண்டிய நற்கிரியைகள் :-

கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்தி விருத்தியடைந்து கட்டப்படுவதற்கான ஒவ்வொரு நாளும் சபையின் ஒரு ஊழியராக இருந்து கொண்டு நற்கிரியைகளை ஊழியத்தில் நிறைவேற்றுவது.

2. பரிசுத்த ஆவியினால் பெற்றுக்கொண்ட ஊழியத்தில் ஆயத்தம் என்னும் சமாதானத்தின் இடது பக்கத்தின் பாதாரட்சை போல, தரித்துக் கொள்ள வேண்டிய நற்கிரியைகள்:-

ஒவ்வொரு நாளும் பரிசுத்தத்தில் சீர்பொருந்துவதற்காக தன்னுடைய குறைகளை சீர்த்திருத்திக்கொண்டு, சபையின் ஒரு ஊழியராக இருப்பதற்காக பயிற்சியை எடுத்துக்கொள்வது

Eph 4:12 For the perfecting of the saints, for the work of the ministry, for the edifying of the body of Christ: *(King James Version)*

Eph 4:12 For the training of the saints as servants in the church, for the building up of the body of Christ: *(Bible in basic english 1965)*

9-2 அபிஷேக ஆவியினுடைய ஊழிய அழைப்பின் அளவுப் பிரமாணம்:-

அபிஷேக ஆவியினுடைய ஊழிய அழைப்பின் அளவுப் பிரமாணம் / முன்மாரி, பின்மாரி மழை ஊழியங்களின் இரண்டு வகையான ஊழிய அழைப்பின் அளவுப் பிரமாணங்கள், இவைகள் கிறிஸ்துவை மையமாகக் கொண்டு ஆயத்தம் என்னும் சமாதானத் தின் வலது, இடது பக்கத்தின் பாதரட்சை போல தரித்துக் கொள்ளக் கூடிய ஒரு ஜோடியான ஊழிய அழைப்பின் அளவுப்பிரமாணங்கள்

1. கர்த்தருக்கு ஆராதனை செய்யும்படி ஆயத்தப்படுத்தும் ஊழிய அழைப்பு, தீர்க்கதரிசிகளான மோசே, எலியா இவர்களின் ஊழியங்கள்.

2. கர்த்தருடைய வருகைக்கு வழியை ஆயத்தம் பண்ணும் ஊழிய அழைப்பு, தீர்க்கதரிசிகளான மோசே, எலியா, எலிசா, யோவான், இவர்களின் ஊழியங்கள்; அபிஷேக ஆவியினுடைய ஊழிய அழைப்பின் அளவுப் பிரமாணத்தில் தேவன் ஒரு வகையான ஊழிய அழைப்பு மட்டும் தனியாக பிரித்து / பகிர்ந்து கொடுப் பதில்லை, இவைகள் ஒரு ஜோடியானவைகள், இவைகளை பிரிக்க முடியாதவைகள் Zar_4:2, Zar_4:11-14, Rev_2:5, Rev_11:4, Mal_4:1-6, Mal_3:13-18, 1Ki_18:17-29, 1Ki_18:30-46,

அபிஷேக ஆவியினால் தேவன் பகிர்ந்து கொடுத்த ஒரு ஜோடியான ஊழிய அழைப்பை பெற்றுக்கொண்டவர்கள், கீழே குறிப்பிட்ட ஒரு ஜோடியான நற்கிரியைகளையும் நிறைவேற்றும்படி நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

கிறிஸ்துவை மையமாகக் கொண்டு ஆயத்தம் என்னும் சமாதானத்தின் வலது, இடது பக்கத்தின் பாதரட்சையை போல தரித்துக் கொள்ள கூடிய இரண்டு அடிப்படையான நற்கிரியை களையும் தங்களுடைய ஒரு ஜோடியான ஊழிய அழைப்பின் ஊழியங்களில் நிறைவேற்றும்படி நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

1. அபிஷேக ஆவியினால் பெற்றுக்கொண்ட ஊழியத்தில், ஆயத்தம் என்னும் சமாதானத்தின் வலது பக்கத்தின் பாதரட்சை போல, தரித்துக் கொள்ள வேண்டிய நற்கிரியைகள்:- Rev_11:1-13,

கர்த்தரை ஆராதிக்கும்படி ஆயத்தப்படுத்தும் ஊழிய அழைப்பு, கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துபடுத்தும் ஊழிய அழைப்பு, ஆகிய ஒரு ஜோடியான ஊழிய அழைப்பின் தேவ சித் தத்தை தேவனுடைய இராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்பட்ட நாற்பத்திரண்டு மாதங்களில் நிறைவேற்றுவது.

2. அபிஷேக ஆவியினால் பெற்றுக்கொண்ட ஊழியத்தில் ஆயத்தம் என்னும் சமாதானத்தின் இடது பக்கத்தின் பாதரட்சையை போல, தரித்துக் கொள்ள வேண்டிய நற்கிரியைகள்:- Rev_11:1-13,

தேவ வார்த்தையைக் குறித்தும், இயேசு கிறிஸ்துவின் சாட்சி யைக்குறித்தும் உள்ள தரிசனங்களைப் பின்பற்றி ஒரு ஜோடியான ஊழிய அழைப்பின் நற்கிரியைகளை செய்து தேவனுடைய இராஜ்ஜி யம் ஸ்தாபிக்கப்பட நாற்பத்திரண்டு மாதங்களில் தேவ சித்தத்தின் ஊழிய அழைப்பை நிறைவேற்றுவது.

10. மரக்காளின் கீழ் விளக்கை வைப்பது :- ஊழிய அழைப்பின் அளவுப் பிரமாணம் இல்லாமல் வியாபார நோக்கத்துடன் ஊழியம் செய்பவர்களின் ஊழிய அழைப்பு.

11. பாத்திரத்தின் கீழ் விளக்கை வைப்பது :-

ஊழிய அழைப்பின் அளவுப் பிரமாணம் இல்லாமல் பட்டம், பதவி, ஆகியவற்றின் அடிப்படையில் ஊழியம் செய்பவர்களின் ஊழிய அழைப்பு.

12. கட்டிலின் கீழ் விளக்கை வைப்பது:-

ஊழிய அழைப்பின் அளவுப் பிரமாணம் இல்லாமல் அலட்சியமாக , சோம்பலாக இருந்து கொண்டு ஊழியம் செய்பவர்களின் ஊழிய அழைப்பு.

1. மறைவிடத்தில் விளக்கை வைப்பது:-

ஊழிய அழைப் பின் அளவுப்பிரமாணம் இல்லாமல் தங்களுடைய இரகசியமான திட்டங்களுக்குக் கேற்றபடி ஊழியம் செய்பவர்களின் ஊழிய அழைப்பு Mat_5:14-15, Mar_4:21-25, Luk_8:16-18, Luk_11:33-36,

## அத்தியாயம் ஆறு

*6-5 ஊழிய அழைப்பை பெற்றுக் கொண்டவர்களின் குணாதிசயங்களை, மழை, முன்மாரிமழை, பின்மாரி மழை*

*ஆகியவைகளின் குணாதிசயங்களோடு ஒப்பிட்டு அறிந்து கொள்ளுதல்.*

**1. மழை :-** ஏற்ற வேளையில் பேச வேண்டிய வார்த்தை களை தேவ அறிவு, புத்தி, ஞானம் இவைகளிலிருந்து பகுத்தறிந்து, நிதானித்து , ஞானமாக பேசுதல்

Lev_26:4, Deu_28:12, Isa_50:4, Eze_34:26-27, Isa_30:22-23, Jer_17:7-10, Psa_1:1-6, Deu_32:1-2, Psa_72:6, Psa_68:7-9, Pro_25:23, Psa_84:5-7, Mic_5:7-8, Job_28:20-28, Job_29:21-23, Job_38:27-28, Jer_10:13, Jer_51:16, Mat_5:43-48, 2Sa_23:4, Isa_4:6, Son_2:10-11, Heb_6:7,

**2. மழை இல்லாமை :-** ஏற்ற வேளையில் பேச வேண்டிய வார்த்தைகள் இல்லாதபடியால் தங்களுடைய அறிவு, புத்தி, ஞானம் இவைகளிலிருந்து, அர்த்தமில்லாத / உபயோகமில்லாத வார்த்தைகளை திரளாக பேசுதல்

Zar_14:17, Jer_3:1-5, Jer_14:1-5, Isa_5:6, Mal_3:8-10, 2Ch_7:13, 2Ch_6:26-27, 1Ki_8:35-36, Psa_68:5-6, Jer_17:5-6, Jer_17:11-13, Psa_146:5, Pro_25:13-14,

**3. புழுதி மழை :-** மற்றவர்கள் கேட்க விரும்பாத வார்த்தை களை வெளிப்படையாக சரளமாக திரளாக பேசுதல், கேட்பவர்கள் மனதை வேதனைப்படுத்தும் அவதூறான வார்த்தைகளை சரளமாக பேசுதல் / மற்றவர்கள் கேட்கும்போது முகம் சுழிக்கும் வார்த்தை களை வெளிப்படையாக சரளமாக பேசுதல்

Job_37:6-13, Job_38:22-30, Psa_18:12-14, Psa_147:15-18, Exo_9:18-26, Exo_9:27-34, Exo_10:5-15, Jos_10:11, Isa_28:17, Isa_30:30, Isa_32:19, Eze_13:13, Eze_38:22, Rev_8:7, Rev_11:19, Rev_16:21,

**5. முன்மாரி மழை :-** பரிசுத்த ஆவியினால் தேவன் பகிர்ந்து கொடுக்கிற கிருபைவரங்கள், கிரியைகள் மற்றும் ஐந்து வகையான ஊழிய அழைப்பின் அளவுப்பிரமாணங்கள்

1. அப்போஸ்தலர் 2. தீர்க்கதரிசி 3 போதகர் 4 மேய்ப்பர் 5 சுவிஷேசகன்.

Eph_4:11-16, Eph_2:20-22, 1Co_12:4-11, 1Pe_4:10-11, Rom_12:2-8, 2Co_10:12-18, 2Ti_2:19-21, 1Co_3:10-15,

**6. பின்மாரி மழை:-** தேவனுடைய அபிஷேக ஆவியினால் தேவன் பகிர்ந்து கொடுக்கிற கிருபைவரங்கள், கிரியைகள், மற்றும் இரண்டு வகையான ஊழிய அழைப்பினுடைய அளவுப் பிரமாணங்கள்.

1. கர்த்தரை ஆராதனை செய்யும் படி ஆயத்தப்படுத்து வதற்காக தேவனுடைய அபிஷேக ஆவியினுடைய ஊழிய அழைப் பின் விசேஷித்த அளவுப்பிரமாணங்கள்

2. கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துவதற்காக தேவ னுடைய அபிஷேக ஆவியினுடைய ஊழிய அழைப்பின் விசேஷித்த அளவுப் பிரமாணங்கள் முன்மாரி மழை மற்றும் பின்மாரி மழையின் மூலம் தேவனுடைய ஆவியினால் தேவன் பகிர்ந்து கொடுக்கிற கிரு பைவரங்கள், கிரியைகள் மற்றும் ஊழிய அழைப்புகளினால் தனிப் பட்ட நபர்களுக்கு தேவன் பகிர்ந்து கொடுக்கும் ஆசீர்வாதங்கள்.

Zec_10:1-6, Jer_3:1-5, Pro_16:15, Job_28:20-28, Job_29:21-23, Jam_5:7-9, Hos_6:1-4, Jer_5:23-25, Deu_11:13-17, Act_2:15-21, Joe_2:23, Joe_2:28-32,

**7. அறுவடை / அறுப்புக்காலம் :-**

உலகத்தின் முடிவில் அவரவர் கிரியைகளுக்கு கேற்ப பிரதிபலனை பெற்றுக்கொள்ளும் காலம் Joh_5:35-38, 2Co_9:6-10, Gal_6:7-10,

## அத்தியாயம் ஆறு

*6-6 ஊழிய அழைப்பை பெற்றுக்கொண்டவர்கள் தெளிவாக பேசுவதற்கு தடையாக வருகிற சில விசேஷமான காரணங்கள்*

1. ஊழிய அழைப்பின் அளவுப்பிரமாணங்களை பெற்றுக் கொண்டவர்களுக்கு ஆவி, ஆத்துமாவில் குருட்டுத்தன்மையை உண்டாக்குகிற பொல்லாத ஆவி நீங்கும்போது தேவனுடைய வார்த்தைகளை தெளிவாக பேச முடியும்.

2. ஊழிய அழைப்பின் அளவுப்பிரமாணங்களை பெற்றுக் கொண்டவர்களுக்கு ஆவி, ஆத்துமாவில் செவிட்டுத் தன்மையை உண்டாக்குகிற பொல்லாத ஆவி நீங்கும்போது தேவனுடைய வார்த்தைகளை தெளிவாக பேச முடியும்.

3. ஊழியஅழைப்பின் அளவுப் பிரமாணங்களை பெற்றுக் கொண்டவர்களுக்கு தேவதரிசனங்கள் வெளிப்படுத்தப் படும்போது அவைகளை விசுவாசியாமற் போனால், தரிசனம் நிறை வேறும் காலம் வரை ஊமையாயிருந்து பின்பு தேவதரிசனத்தை எழுதுவதினால் நாவின் கட்டு அவிழ்க்கப்பட்டு தேவனுடைய வார்த்தைகளை தெளி வாக பேச முடியும்.

4. ஊழிய அழைப்பின் அளவுப்பிரமாணங்களை பெற்றுக்கொண்டவர்கள் தேவ அறிவை அடைந்த பிறகு தங்கள் இருதயத்தில் அர்த்தமில்லாத வார்த்தைகளை பிரித்தெடுப்பதால் தேவனுடைய வார்த்தைகளை தெளிவாக பேச முடியும்.

5. ஊழிய அழைப்பின் அளவுப்பிரமாணங்களை பெற்றுக் கொண்டவர்கள் தேவ தரிசனத்தை அடைந்த பிறகு நான் அசுத்த உதடுகள் உள்ள மனிதன் என்று தேவனுக்கு முன்பாக தன்னைத் தாழ்த்தும்போது அவன் உதடுகள் அக்கினியால் பரிசுத்தமாக்கப் பட்டு தேவ வார்த்தைகளை தெளிவாக பேச முடியும்.

6. தேவனால் முன் குறிக்கப்பட்டவர்கள் தேவ சித்தத்தை அறிந்த பிறகு, நாள் சிறுபிள்ளை எனக்கு பேசத் தெரியாது என்று தன்னை; தேவ சமுகத்தில் தாழ்த்தும்போது தேவனே அவர்கள் உதடுகளை தொடுவதினால் அவர்கள் தெளிவாக பேச முடியும்.

7. ஊழிய அழைப்பின் அளவுப்பிரமாணங்களை பெற்றுக் கொண்டவர்கள் தேவனுடைய வார்த்தைகளை புசித்து, கலக வீட் டாருக்கு தேவனுடைய நியாயத்தீர்ப்பை கூறின பின்பு அவைகள் நிறைவேறும் காலம் வரை ஊமையாயிருந்து பின்பு தேவனுடைய நியாயத்தீப்பை தெளிவாக பேச முடியும்.

8. தேவனுடைய ஞானத்தை பெற்றுக் கொள்ளுவதற்காக ஆவியில் எளிமையுள்ளவனாக இருந்து தன்னை தேவனுக்கு முன்பாக தாழ்த்துகிறபோது தேவனுடைய சத்தியாமான வார்த்தை களின் ஞானத்தை தெளிவாக பேசமுடியும்.

*1. ஊழிய அழைப்பின் அளவுப்பிரமாணங்களை பெற்றுக் கொண்டவர்களுக்கு ஆவி, ஆத்துமாவில் குருட்டுத்தன்மையை உண்டாக்குகிற பொல்லாத ஆவி நீங்கும் போது தேவனுடைய வார்த் தைகளை தெளிவாக பேச முடியும்.*

சரீர அவயவங்களில் குருட்டுத்தன்மை குறைபாடு மட்டும் உள்ளவர்கள், மற்றவர்கள் காண்கிற காட்சிகளை தெளிவாகக் காணமுடியாமல் எப்படி நிலைகுலைந்து தடுமாறிப் பேசுகிறார்களோ, அதுபோலவே தங்கள் ஆவி, ஆத்துமாவில் தேவனுடைய தரிசனங் களையும் வெளிப்பாடுகளையும் தெளிவாக காணமுடியாத ஆவிக் குரிய குருட்டுத்தன்மை உள்ளவர்களும் தேவனுடைய வார்த்தை களை மற்றவர்களுக்கு முன்பாக தெளிவாக பேச முடியாமல் நிலை குலைந்து தடுமாறுகிறார்கள்.

குருடனுக்கு குருடன் வழிகாட்டக்கூடுமோ? இருவரும் பள்ளத்தில் விழுவார்கள் அல்லவா? ஆவி ஆத்துமாவில் தேவனு டைய தரிசனங்களையும் வெளிப்பாடுகளையும் தெளிவாக காணமுடி யாத ஆவிக்குரிய குருட்டுத்தன்மையுள்ளவர்கள்; இவர்களைப் போல ஆவிக்குரிய குருட்டுத்தன்மை உள்ள மற்றவர்களுக்கு இவர் கள் எப்படி ஆவி, ஆத்துமாவில் தேவனுடைய தரிசனங்களையும், வெளிப்பாடுகளையும் குறித்துள்ள ஆவிக்குரிய வெளிச்சத்திற்கு வழி நடத்த முடியும், அப்படி வழி நடத்தினால் இருவரும் பள்ளத்தில் / பாதாளத்தில் விழுவார்கள் அல்லவா?

இவர்களுக்கு ஆவி ஆத்துமாவில் குருட்டத்தன்மை நீங்கும் போது தங்கள் ஆவி, ஆத்துமாவில் தேவ தரிசனங்களையும், வெளிப்பாடுகளையும் தெளிவாகக் கண்டும், உணர்ந்து கொண்டும் மற்றவர்களுக்கு தெளிவாக புரிந்து கொள்ளும் வகையில் தேவ தரிசனங்களையும், வெளிப்பாடுகளையும் தெளிவாக பேச முடியும்.

Mat_9:27-28 , Mat_11:5, Mat_12:22 , Mat_15:14 , Mat_15:30-31 , Mat_20:30, Mat_21:14, Mat_23:16-17 , Mat_23:19, Mat_23:24, Mat_23:26, Mar_8:22-23 , Mar_10:46, Mar_10:49, Mar_10:51, Luk_4:18, Luk_6:39Rom_2:19, 2Pe_1:9, Rev_3:17

*2. ஊழிய அழைப்பின் அளவுப்பிரமாணங்களை பெற்றுக் கொண்டவர்களுக்கு ஆவி, ஆத்துமாவில் செவிட்டுத் தன்மையை உண்டாக்குகிற பொல்லாத ஆவி நீங்கும்போது தேவனுடைய வார்த்தைகளை தெளிவாக பேச முடியும்.*

சரீர அவயவங்களில் செவிட்டுத்தன்மை குறைபாடு மட்டும் உள்ளவர்கள் மற்றவர்கள் பேசுவதை சரியாக புரிந்து கொள்ள முடியாமல் எப்படி? மற்றவர்களுக்கு தெளிவாக மறுபடி / பதில் கொடுக்க முடியாமல், தன் வார்த்தைகளில் நிலைகுலைந்து தடுமாறுகிறார்களோ; அது போலவே தங்கள் இருதயத்தில் தேவனுடைய வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாமல் அலட்சியப் படுத்துகிற ஆவிக்குரிய செவிட்டுத்தன்மை உள்ளவர்களுக்கும் தேவனுடைய வார்த்தைகளை மற்றவர்களுக்கு முன்பாக தெளிவாக பேச முடியாமல் நிலை குலைந்து தடுமாறுகிறார்கள்.

காதுள்ளவன் கேட்கக்கடவன் என்று வேதத்தில் குறிப்பிடக் காரணம் இந்த ஆவிக்குரிய செவிட்டுத்தன்மை அநேகருக்கு உண்டு என்பதை தேவன் அறிந்தபடியால்; இப்படி வேதத்தில் எழுதப் பட்டிருக்கிறது. இவர்களுக்கு ஆவிக்குரிய செவிட்டுத்தன்மை நீங்கும் போது, தேவனுடைய வார்த்தைகளை தங்கள் இருதயத்தில் ஏற்றுக்கொண்டு மற்றவர்களுக்கு புரிந்து கொள்ளும் வகையில் தெளிவாக பேச முடியும்.

Mat_9:32-33 , Mat_12:22 , Mat_15:30-31 , Luk_11:14Mat_11:5, Mar_7:32, Mar_7:37, Mar_9:25, Luk_7:22

*3. ஊழிய அழைப்பின் அளவுப்பிரமாணங்களை பெற்றுக் கொண்டவர்களுக்கு தேவ தரிசனங்கள் வெளிப்படுத்தப்படும்போது அவைகளை விசுவாசியாமற்போனால் தரிசனம் நிறைவேறும் காலம் வரை ஊமையாயிருந்து பின்பு தேவ தரிசனத்தை எழுதுவதினால் நாவின் கட்டு அவிழ்க்கப்பட்டு தேவனுடைய வார்த்தைகளை தெளிவாக பேச முடியும்.*

ஊழிய அழைப்பின் அளவுப்பிரமாணங்களை பெற்றுக் கொண்டவர்களுக்கு தேவ தரிசனங்கள் வெளிப்படுத்தப்படும்போது, அவைகளை விசுவாசியாமற் போனால் தேவ தரிசனம் நிறைவேறும் காலம் வரை, அவர்கள் தேவ தரிசனங்களை போசாமல் ஊமையாக இருந்து; அவைகள் நிறைவேறின பின்பு, அந்த தரிசனங்களை எழுத்து பலகையில் எழுதி மற்றவர்களுக்கு வெளிப்படுத்தும்போது அவர்கள் நாவின் கட்டு அவிழ்க்கப்பட்டு தேவ தரிசனங்களை தெளிவாக பேச முடியும். Luk_1:11-20 Luk_1:57-64Luk_1:65-70, Luk_1:71-79,

*4. ஊழிய அழைப்பின் அளவுப்பிரமாணங்களை பெற்றுக் கொண்டவர்கள் தேவ அறிவை அடைந்த பிறகு தங்கள் இருயதத் தில் அர்த்தமில்லாத வார்த்தைகளை பிரித்தெடுப்பதால் தேவனு டைய வார்த்தைகளை தெளிவாக பேச முடியும்.*

Jer 15:16 உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவை களை உட்கொண்டேன்; உம்முடைய வார்த்தைகள் எனக்கு சந் தோஷமும், என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருந்து; சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் எனக்குத் தரிக்கப் பட்டிருக்கிறது.

Jer 15:17 நான் பரியாசக்காரருடைய கூட்டத்தில் உட்கார்ந்து களிகூர்ந்ததில்லை; உமது கரத்தினிமித்தம் தனித்து உட்கார்ந்தேன்; சலிப்பினால் என்னை நிரப்பினீர்.

Jer 15:18 என் நோவு நித்திய காலமாகவும், என் காயம் ஆறாத கொடிய புண்ணாகவும் இருப்பானேன்? நீர் எனக்கு நம்பப்படாத ஊற் றைப்போலவும், வற்றிப்போகிற ஜலத்தைப் போலவும் இருப்பீரோ?

Jer 15:19 இதினிமித்தம் : நீ திரும்பினால் நான் உன்னைத் திரும்பச் சீர்ப்படுத்துவேன்; என் முகத்துக்கு முன்பாக நிலைத்து மிருப்பாய்; நீ தீழ்ப்பானதினின்று விலையேறப் பெற்றதைப் பிரித் தெடுத்தால், என் வாய் போலிருப்பாய்; நீ அவர்களிடத்தில் திரும் பாமல், அவர்கள் உன்னிடத்தில் திரும்புவார்களாக என்று கர்த்தர் சொல்லுகிறார்.

Jer 15:20 உன்னை இந்த ஜனத்துக்கு எதிரே அரணான வெண்கல அலங்காமாக்குவேன்; அவர்கள் உனக்கு விரோதமாக யுத்தம் பண்ணுவார்கள், ஆனாலும் உன்னை மேற்கொள்ள மாட்டார் கள்; உன்னை இரட்சிப்பதற்காவும், உன்னைத்தப்பு விப்பதற்காவும், நான் உன்னுடனே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

Jer 15:21 நான் உன்னைப்பொல்லாதவர்களின் கைக்குத்தப்பு வித்து, உன்னைப் பல வந்தரின் கைக்கு நீங்கலாக்கி விடுவிப்பேன் என்கிறார். (தேவ நாமம் தரிக்கப்பட்ட தேவ ஜனங்கள் தேவ அறிவை அடைந்த பிறகு அர்த்தமில்லாத வார்த்தைகளை தங்கள் இருதயத்தில் பிரித்தெடுத்தால் அதிக விலை மதிப்புள்ள தேவனுடைய வாயின் வார்த்தைகளை அவர்கள் வாயினால் பேசமுடியும்) Heb_5:12-14, Pro_25:4, Pro_10:20,

*5. ஊழிய அழைப்பின் அளவுப்பிரமாணங்களை பெற்றுக் கொண்டவர்கள் தேவ தரிசனத்தை அடைந்த பிறகு நான் அசுத்த உதடுகள் உள்ள மனிதன் என்று தேவனுக்கு முன்பாக தன்னைத் தாழ்த்தும் போது அவன் உதடுகள் அக்கினியால் பரிசுத்தமாக்கப் பட்டு தேவ வார்த்தைகளை தெளிவாக பேச முடியும்.*

ஒருவன் தேவனுடைய இராஜ்ஜியத்தின் தரிசனத்தை பெற்ற பிறகு, நான் அசுத்த உதடுகள் உள்ள மனிதன், அசுத்தமானவை களை பேசுகிற ஜனங்களுக்குள்ளே வாசமாயிருக்கிறவன் என்று தன் னைத் தாழ்த்தி தேவ சமூகத்தில் அறிக்கையிட வேண்டும் அப்

பொழுது பலிபீடத்தின் அக்கினியால் தன் உதடுகள் தொடப்பட்டு அவனுடைய அக்கிரமம் நீங்கி,பாவம் நீவர்த்தியாகும் அதற்கு பின்பு தேவனுடைய வார்த்தைகளை உவமைகளாக / மறைபொருளாக பேசுவதற்கு தேவனால் அனுப்பப்படுகிறான்.

Isa 6:5 அப்பொழுது நான் : ஐயோ! அதமானேன், நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன், அசுத்த உதடுகளுள்ள ஜனங்களின் நடுவில் வாசமாயிருக்கிறவன்; சேனைகளின் கர்த்தராகிய ராஜாவை என் கண்கள் கண்டதே என்றேன்.

Isa6:6 அப்பொழுது சேராபீன்களில் ஒருவன் பலிபீடத்திலிருந்து, தன் கையிலே பிடித்த குறட்டால் ஒரு நெருப்புத் தழலை எடுத்து, என்னிடத்தில் பறந்து வந்து

Isa 6:7 அதினால் என் வாயைத் தொட்டு : இதோ, இது உன் உதடுகளைத் தொட்டதினால் உன் அக்கிரமம் நீங்கி, உன் பாவம் நிவர்த்தியானது என்றான்.

Isa 6:8 பின்பு யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப்போவான் என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத் தைக் கேட்டேன். அதற்கு நான்: இதோ, அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும் என்றேன்.

Isa 6:9 அப்பொழுது அவர் : நீ போய், இந்த ஜனங்களை நோக்கி, நீங்கள் காதாரக் கேட்டும் உணராமலும், கண்ணாரக்கண்டும் அறியாமலும் இருங்கள் என்று சொல்.

Isa 6:10 இந்த ஜனங்கள் தங்கள் கண்களினால் காணாமலும், தங்கள் காதுகளினால் கேளாமலும், தங்கள் இருதயத்தினால் உணர்ந்து குணப்படாமலும், நான் அவர்களை ஆரோக்கியமாக்கா மலுமிருக்க, நீ அவர்கள் இருயத்தைக் கொழுத்ததாக்கி, அவர்கள் காதுகளை மந்தப்படுத்தி, அவர்கள் கண்களை மூடிப்போடு என்றார்.

*6. தேவனால் முன்குறிக்கப்பட்டவர்கள் தேவ சித்தத்தை அறிந்த பிறகு நான் சிறுபிள்ளை எனக்கு பேசத்தெரியாது என்று*

*தன்னை தேவ சமூகத்தில் தாழ்த்தும்போது தேவனே அவர்கள் உதடுகளை தொடுவதினால் அவர்கள் தெளிவாக பேச முடியும்.*

தேவனால் முன் குறிக்கப்பட்ட ஒருவன் தேவனுடைய சித்தத்தை அறிந்து கொண்டபிறகு, எனக்கு தேவ வார்த்தைகளை பேசத்தெரியாது, நான் படித்து அறிந்துகொள்ள வேண்டிய காரியங்கள் அநேகம் உண்டு என்று தேவ சமூகத்தில தனைத்தாழ்த்தும் போது தேவனே அவனுடைய உதடுகளைத் தொட்டு தேவனுடைய வார்த்தைகளை அவனுடைய வாயிலே வைத்து, தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்காக அனுப்புகிறார்.

Jer 1:4 கர்த்ததருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர் :

Jer 1:5 நான் உன்னைத்தாயின் வயிற்றில் உருவாக்கு முன்னே உன்னை அறிந்தேன்; நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படு முன்னே நான் உன்னைப் பரிசுத்தம் பண்ணி, உன்னை ஜாதிகளுக்குத் தீர்க்க தரிசியாகக் கட்டளையிட்டேன் என்று சொன்னார்.

Jer 1:6 அப்பொழுது நான் : ஆ கர்த்தராகிய ஆண்டவரே, இதோ, நான் பேச அறியேன்; சிறுபிள்ளையாயிருக்கிறேன் என்றேன்.

Jer 1:7 ஆனாலும் கர்த்தர் : நான் சிறுபிள்ளையென்று நீ சொல்லாதே, நான் உன்னை அனுப்புகிற எல்லாரிடத்திலும் நீ போய், நான் உனக்குக் கட்டளையிடுகிறவைகளையெல்லாம் நீ பேசுவாயாக. Jer 1:8 நீ அவர்களுக்குப் பயப்படவேண்டாம்; உன்னைக் காக்கும் படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லி,

Jer 1:9 கர்த்தர் தமது கரத்தை நீட்டி, என் வாயைத் தொட்டு : இதோ, என் வார்த்தைகளை உன் வாயிலே வைக்கிறேன். Jer 1:10 பார், பிடுங்கவும், இடிக்கவும், அழிக்கவும், கவிழ்க்கவும், கட்டவும் நாட்டவும் உன்னை நான் இன்றைய தினம் ஜாதிகளின் மேலும் ராஜ்யங்களின் மேலும் ஏற்படுத்தினேன் என்று கர்த்தர் என்னுடனே சொன்னார்.

*7. ஊழிய அழைப்பின் அளவுப்பிரமாணங்களை பெற்றுக் கொண்டவர்கள் தேவனுடைய வார்த்தைகளை புசித்து, கலக*

*வீட்டாருக்கு தேவனுடைய நியாயத்தீர்ப்பை கூறின பின்பு, அவைகள் நிறைவேறும் காலம் வரை ஊமையாயிருந்து பின்பு தேவனுடைய நியாயத்தீர்ப்பை தெளிவாக பேச முடியும்.*

Eze 3:24 உடனே ஆவி எனக்குள்ளே புகுந்து, என்னைக் காலூன்றி நிற்கும்படி செய்தது, அப்பொழுது அவர் என்னுடனே பேசி: நீ போய், உன் வீட்டுக்குள் உன்னை அடைத்துக்கொண்டிரு.

Eze 3:25 இதோ, மனுபுத்திரனே, உன்மேல் கயிறுகளைப் போட்டு, அவைகளால் உன்னைக் கட்டப்போகிறார்கள்; ஆகையால் நீ அவர்களுக்குள்ளே போக வேண்டாம்.

Eze 3:26 நான் உன் நாவை உன் மேல் வாயோடே ஓட்டிக் கொள்ளப்பபண்ணுவேன்; நீ அவர்களைக் கடிந்து கொள்ளுகிற மனுஷனாயிராமல், ஊமையனாயிருப்பாய்; அவர்கள் கலக வீட்டார்.

Eze 3:27 நான் உன்னோடே பேசும் போது, உன் வாயைத் திறப்பேன்; அப்பொழுது கர்த்தராகிய ஆண்டவர் இன்னின்னதை உரைத்தார் உன்று அவர்களோடே சொல்வாய்; கேட்கிறவன் கேட் கட்டும், கேளாதவன் கேளாதிருக்கட்டும்; அவர்கள் கலகவீட்டார்.

Eze 3:25 பின்னும் மனுபுத்திரனே, நான் எந்த நாளிலே அவர்களுடைய பலத்தையும், அவர்களுடைய அலங்காரத்தின் மகிழ்ச் சியையும், அவர்களுடைய கண்களின் விருப்பத்தையும், அவர்களு டைய ஆத்துமாவின் விசேஷித்த வாஞ்சையையும், அவர்களுடைய குமாரரையும் அவர்களுடைய குமாரத்திகளையும் அவர்களை விட்டு எடுத்துக்கொள்ளுகிறேனோ,

Eze 24:26 அந்த நாளிலே தானே தப்பி வந்த ஒருவன் உன்னிடத்தில் வந்து உன் காதுகள் கேட்கச் சொல்லுவான் அல்லவோ?

Eze 24:27 அந்த நாளிலே தானே உன் வாய் திறக்கப்பட்டு, நீ தப்பி வந்தவனோடே பேசுவாய்; இனி மவுனமாயிருக்கமாட்டாய்; இப் படி நீ அவர்களுக்கு அடையாளமாக இருப்பாய்; நான் கர்த்தர் என்று அப்பொழுது அறிந்து கொள்வார்கள் என்றார்.

*8. தேவனுடைய ஞானத்தை பெற்றுக் கொள்ளுவதற்காக ஆவியில் எளிமையுள்ளவனாக இருந்து, தன்னை தேவனுக்கு முன் பாக தாழ்த்துகிறபோது தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் ஞானத்தை தெளிவாக பேச முடியும்.*

Dan 10:14 இப்போதும் கடைசி நாட்களில் உன் ஜனங்களுக் குச் சம்பவிப்பதை உனக்குத் தெரியப்பண்ணும் படிக்கு வந்தேன்; இந்தத் தரிசனம் நிறைவேற இன்னும் நாள் செல்லும் என்றான்.

Dan 10:15 அவன் இந்த வார்த்தைகளை என்னோடே சொல் லுகையில், நான் தலை கவிழ்ந்து, தரையை நோக்கி, பேச்சற்றுப் போனேன்.

Dan 10:16 அப்பொழுது மனு புத்திரரின் சாயலாகிய ஒருவன் என் உதடுகளைத் தொட்டான்; உடனே நான் என் வாயைத் திறந்து பேசி, எனக்கு எதிரே நின்றவனை நோக்கி : என் ஆண்டவனே, தரிசனத்தினால் என் மூட்டுகள் புரண்டன, பெலனற்றுப்போனேன்.

Dan 10:17 ஆகையால் என் ஆண்டவனுடைய அடியேன் என் ஆண்டவனோடே பேசக்கூடுவதெப்படி? இனி என்னில் பெல னில்லை, என்னில் மூச்சுமில்லை என்றேன். Dan 10:18 அப்பொழுது மனுஷ ரூபமான ஒருவன் திரும்ப என்னைத்தொட்டு, என்னைத் திடப்படுத்தி,

Dan 10:19 பிரியமான புருஷனே, பயப்படாதே, உனக்குச் சமாதானமுண்டாவதாக, திடங்கொள், திடங்கொள் என்றான்; இப்படி அவன் என்னோடே பேசுகையில் நான் திடங்கொண்டு அவனை நோக்கி: என் ஆண்டவன் பேசுவாராக ; என்னைத் திடப்படுத்தினீரே என்றேன்.

## அத்தியாயம் ஏழு

*7-0 1,44,000. ஆண் பிள்ளைகள் இரண்டு சாட்சிகளின் ஊழிய அழைப்பின் மூலம் ஜனங்களை கர்த்தருக்கு ஆராதனை செய்ய ஆயத்தப்படுத்தும் ஊழியத்தை நிறைவேற்றுதல்*

தேவ முத்திரையை தங்கள் நெற்றியிலே தரித்துக்கொண்ட ஆண்பிள்ளைகள்: தேவ ஜனங்களை கர்த்தருக்கு ஆராதனை செய் வதற்காக ஆயத்தமாக்கும்படி, ஞானார்த்தமாக சொல்லப்படும் எகிப்து என்றும், சோதோம் என்றும் அழைக்கப்படும் தேவ ஜனங்களுக்கு மத்தியில்; தேவனுடைய வார்த்தையின் கோலால் நியாயத்தீர்ப்பை செலுத்தி தேவ கற்பனைகளின்படி ஆவியோடும் உண்மையோடும், கர்த்தருக்கு பரிசுத்தமாக ஆராதனை செய்யும்படி ஊழியம் செய் வார்கள்.

Rev_11:3-8, Isa_19:1-16, Isa_1:8-20, Jer_23:14, Exo_12:25-31, Joh_4:19-26, Act_24:14-16, Act_17:23-28, Phi_3:3, Heb_12:28, Rom_12:1,

**கர்த்தரை ஆராதிக்காமல் இருப்பவர்களுக்கு தேவனுடைய நியாயத்தீர்ப்பு**

ஆண் பிள்ளைகள் தேவ ஜனங்களை கர்த்தருக்கு ஆரா தனை செய்வதற்காக ஆயத்தப்படுத்தும் ஊழிய அழைப்பை நிறை வேற்றுவதற்கு விரோதமாக, கிரியைகளிலோ, சிந்தனைகளிலோ செயல்படுகிறவர்களுக்கு; மோசேயின் மூலம் எகிப்து தேசத்திலே அறி விக்கப்பட்ட தேவ வார்த்தைகளுக்கு கீழ்படியாதவர்களுக்கு நேரிட்ட வாதைகளும் சாபங்களும் முதலாவது ஆவி, ஆத்துமாவின் கிரியை களில் வெளிப்பட்டு, பின்பு சரீரத்தில் அதன் பின் விளைவுகள் வெளிப்படும். Act_7:38-44, Psa_78:42-53, Psa_78:54-72, Psa_105:23-37, Rev_11:3-8, Rev_9:1-11,

1. இரண்டு சாட்சிகளின் ஊழிய அழைப்பை பெற்றுக் கொள்ளாத ஈனமான ஆசாரியர்கள் தற்போது ஜனங்களை கர்த்தரை ஆராதனை செய்வதற்காக ஆயத்தப்படுத்தும் ஊழிய அழைப்பை

நிறைவேற்றுவதற்காக நடைமுறைப்படுத்திக்கொண்டிருக்கும் ஜாதி களின் முறைகளை கலந்த ஆராதனை முறைகள். Mat_15:1-9, Mar_7:1-13, Isa_29:9-14, Isa_48:1-2, Isa_58:1-5, Eze_33:30-32, Isa_1:10-20,

2. கன்று குட்டியை உண்டாக்கி ஆராதனை செய்தல் 2Ch_29:31, Job_41:16, Exo_32:1-8, Exo_32:17-24, Hos_13:1-6, 1Co_10:1-12, Hos_8:1-6, Act_7:38-44,

3. பெரிய பலிபீடத்தை கட்டி கர்த்தரின் ஆராதனையை நினைவு கூருதல் Jos_22:21-29, Jos_22:9-20, Jos_4:20-24, Deu_27:1-13,

4. ஜாதிகளின் முறைகளை கலந்து ஆராதனை செய்தல்

2Ki_21:4, 2Ki_21:7, 2Ki_17:7-12, 2Ki_13:13-20, 2Ki_13:21-33, 2Ki_13:34-41,

*ஆண் பிள்ளைகள் கர்த்தருக்கு ஆராதனை செய்யும் ஊழிய அழைப்பை நிறைவேற்றுவதற்கு விரோதமாக செயல்படுகிறவர் களுக்கு வரும் வாதைகள்:-*

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டு, வாக்குத்தத்த தேசத்திற்கு கடந்து சென்று ஆராதனை செய்வதற்காக மோசேயின் மூலம் அறிவிக்கப்பட்ட தேவ வார்த்தைகளுக்கு கீழ்ப்படியாமல் போன எகிப்தியருக்கும், பார்வோனுக்கும் எழுத்தின்படி தேவனுடைய பத்து வாதைகளினால் அழிக்கப்பட்டது போல; தேவனுடைய வார்த்தையின் மூலம் வெளிப்பட்ட தேவ முத்திரையின் அடையாளங்களுக்கு கீழ்படிந்து தேவனை ஆராதனை செய்ய முன் வராதவர்களுக்கு, முதலாவது ஆவியின்படி அந்த பத்து வாதைகளினால் ஆவி, ஆத்துமாவின் கிரியைகளில் தண்டிக்கப்பட்டு, இரண்டாவது அவைகள் சரீரத்திலும் பிரதிபலிக்கப்பட்டு தண்டிக்கப்படுவார்கள்.

*ஆண் பிள்ளைகள் கர்த்தருக்கு ஆராதனை செய்யும் ஊழிய அழைப்பை நிறைவேற்றுவதற்கு விரோதமாக செயல்படுகிறவர் களுக்கு வரும் எகிப்தின் பத்து வாதைகள்.* (Exo_7:1-5).

1. இரத்தம் (Exo_7:15-25)
2. தவளைகள் (Exo_8:1-14)
3. பேன்கள் (Exo_8:16-19)
4. வண்டுகள் / குழவிகள் (Exo_8:20-24)
5. மகாகொடிதான கொள்ளைநோய் (Exo_9:1-7)
6. எரிபந்தமான கொப்பளங்கள் (Exo_9:8-14)
7. கல்மழை (Exo_9:13-15)
8. வெட்டுக்கிளிகள் (Exo_10:13-15)
9. காரிருள் (Exo_10:21-23)
10. தலைச்சன் பிள்ளை சங்காரம் (Exo_12:21-29).

தேவனுடைய ஜனங்களை பாவத்தின் அடிமைத்தனத்தி லிருந்து தேவன் தம்முடைய வல்லமையுள்ள கரத்தால் பிரித் தெடுத்து, தமக்கு ஆராதனை செய்யும்படி தெரிந்துகொள்ளுவதற் காக எகிப்திலே நடந்த பத்து வாதைகளில் ஒன்பது வாதைகளை மோசேயின் மூலம் தேவன் நடப்பித்தார்; ஆனால் பத்தாவது வாதையான தலைச்சன் பிள்ளை சங்காரத்தை தேவனே நிறை வேற்றினார்.

பாவம், மரணம் ஆகியவற்றின் அடிமைத்தனத்திலிருந்து தேவ ஜனங்களை விடுதலையாக்கும்படியாக தேவனே தம்முடைய குமரனை, பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தை போக்கும் பலி யாகவும், அனுப்பி மாம்சத்திலே பாவத்தை ஆக்கினிக்குள்ளாக தீர்த் தார்; இப்படி இயேசு கிறிஸ்துவின் மூலம் தீமையை அல்லது பாவத்தை நன்மையினால் ஜெயங்கொள்ளும் தத்துவ செயல் முறையை தேவன் நமக்கு வெளிபடுத்திக்கொடுத்தார்.

பஸ்கா ஆட்டுக்குட்டியான இயேசு கிறிஸ்துவின் இரத்த அடையாளங்களின் பொருளை பின்பற்றுகிறவர்களும், புளிப்

பிள்ளாத அப்பமாகிய நித்திய ஜீவ வார்த்தைகளுக்காக துன்பம் அனுபவிக்கிறவர்களும்; தீமையை / பாவத்தை நன்மையினால் ஜெயங்கொள்ளும் அனுபவத்தின் மூலம் பாவத்தின் நயவஞ்சகமான தந்திர ஆலோசனைகளை பிடித்து அவைகளை மீண்டும் நன்மைக்கு மாற்றியமைத்துக் கொள்ளுகிறவர்கள் மட்டும், மோசேயின் கோலி னால் உள்ள ஊழிய அழைப்பின் அளவுப்பிரமாணத்தை கைப்பற்று கிறார்கள்.

பாம்பின் வாலைப்பிடித்து, வால்பகுதியிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக பாம்பின் தலைப்பகுதிக்கு வரும்போது மீண்டும் மோசேயின் கையில் கோலாக மாறுவது போல பத்தாவது வாதை யிலிருந்து 10-9-8-7-6-5-4-3-2-1 வரிசைப்படி தேவனுடைய நியா யத்தீர்ப்பை, தேவனை ஆராதிக்க முன்வராத ஜனங்களுக்கு மத்தியில் தேவனுடைய நியாயத்தீர்ப்பை நிறைவேற்றி தேவனுயைட ஆசீர் வாதங்களை சுதந்தரித்துக்கொள்ளுகிறார்கள்.

**1. பத்தாவது வாதை தலைச்சன் பிள்ளை சங்காரம் :-** (Exo_12:21-29).

ஜென்ம பாவ மனிதன் பெற்றுக்கொண்ட தேவனுடைய இரட்சிப்பு மரணமடைகிறது /முதற்பலனாகிய ஆண்பிள்ளை/தலைச்சன்பிள்ளை மரணமடைகிறது

தேவ வார்த்தைகளின் விசுவாசத்துடன் உடன்படிக்கை செய்து கொண்டவர்கள் பஸ்கா ஆட்டுகுட்டியான இயேசுகிறிஸ்து வின் இரத்த அடையாளங்களின் பொருளை பின்பற்றாதவர்களாகவும் புளிப்பில்லாத நித்திய ஜீவ வார்த்தைகளுக்காக துன்பம் அனுபவிக் காதவர்களாகவும் இருந்து கொண்டு, தங்கள் விட்டு வந்த ஜாதி களின் முறைகளின் படி நடக்கிறவர்கள்; தீமையை நன்மையினால் ஜெயங்கொள்ள முடியாமல் நன்மையிலிருந்து தீமைக்கும், தொடர்ந்து தீமையிலிருந்து மீண்டும் தீமைக்கு முன்னேறுகிற படியால் அவர்களின் தலைச்சன் பிள்ளையான ஜென்ம பாவமனிதன் தேவனுடைய விசுவாச உடன்படிக்கையினால் பெற்றுக்கொண்ட

தேவனுடைய இரட்சிப்பு தேவனுடைய வீட்டிலே நடைபெறும் நியாயத்தீர்ப்பினால் மரணமடைகிறது.

அதனால் தேவ வார்த்தைகளின் விசுவாசத்துடன் செய்து கொண்ட உடன்படிக்கை முரிக்கப்பட்டு இரட்சிப்பை பெற்ற நாளில் மரணமடைந்த பழைய பாவ ஜென்ம மனுஷன் மீண்டும் உயிர்பிக்கப் பட்டு,தேவனுடைய சாபங்களுக்கும், நித்திய ஆக்கினைத்தீர்ப்புக்கும் நியமிக்கப்படுகிறான் / தகுதியுள்ளவனாக மாறுகிறான், இந்நிலையில் மீண்டும் தேவனுடைய வார்த்தையின் படி இரட்சிப்பை பெற்றுக் கொள்ளவேண்டும்; இல்லையென்றால் இரட்சிப்பின் சந்தோஷம் இல்லாமல் சஞ்சலமும், தவிப்பும் கூக்குரலும், பெருகும், தேவனு டைய வார்த்தையின்படி அவர்கள் மீண்டும் இரட்சிப்பை பெற்றுக் கொள்ளும் நாள் வரை, எகிப்தின் வாதைகளும், நியாயத்தீர்ப்புகளும் இவர்களை தொடர்ந்து கொண்டேயிருக்கும்.2Th_2:1-4

**2. ஒன்பதாவது வாதை காரிருள் :-** (Exo_10:21-23)

ஜென்ம பாவ மனிதன் பெற்றுக்கொண்ட தேவனுடைய இரட்சிப்பு மரணமடைந்தபடியால் வெளிச்சத்திலிருந்து மீண்டும் காரிருளுக்கு / அறியாமைக்கு தள்ளப்படுதல்; இயேசு கிறிஸ்துவின் விசுவாச வார்த்தைகளுடன் உடன்படிக்கை செய்து பெற்றுக் கொண்ட இரட்சிப்பின் சந்தோசத்தின் வெளிச்சம் இருளடைந்து மீண்டும் முன் இருந்த காரிருளின் ஆழத்திற்கு / அறியாமையின் ஆழத்திற்கு தள்ளப்படுதல்.

Rev_16:10-11, 1Sa_2:9, Job_16:16, Job_19:8, Job_38:2, Job_37:19, Mat_6:23, Luk_11:35 , Mat_22:13, Mat_25:30, Joh_12:35, Joh_12:46, 1Jo_2:9,

**3. எட்டாவது வாதை வெட்டுக்கிளிகள் :-** Exo_10:13-15, Rev_9:1-12, Joe_2:1-14,

பாதாளத்தின் காரிருளிலிருந்து வெட்டுக்கிளிகள் புறப்பட்டு வருகிறது.

ஜென்ம பாவ மனிதன் பெற்றுக்கொண்ட தேவனுடைய இரட்சிப்பு மரணமடைந்தபடியால், அறியாமையின் காரிருள் அந்தகார வல்லமைகளிலிருந்து; வெட்டுக்கிளிகள் போல துள்ளி எழும்பும் தீமையான ஆலோசனைகள் அவனுடைய வாயில் வழியாக வார்த்தை களாக துள்ளி வெளிப்பட்டுக்கொண்டிருக்கும்.

இதன் பின் விளைவாக ஏற்கனவே அவனுக்குள்ளே இருக்கிற நல்ல ஆலோசனைகளும், நற்கிரியைகளும் அழித்து தேவனுடைய சாபத்தையும் கோபாக்கினையையும் மிக வேகமாக நிறைவேற்றிக் கொண்டிருக்கும்

எப்படி இரட்சிப்பின் சந்தோசத்தை பெற்றுக் கொண்டபோது சமாதானமும் சந்தோசமும் ஒருவனுடைய இருதயத் தில் துள்ளி வார்த்தைகளாக வெளிப்பட்டதோ அதுபோல தேவனுடைய இரட்சிப்பின் சமாதானமும் சந்தோசமும் இல்லாதபடியால் தீமையான ஆலோசனைகள் ஒருவனுடைய இருதயத்தில் துள்ளி வார்த்தை களாக அவனுடைய வாயின் வழியாக வெளிப்பட்டுக் கொண்டி ருக்கும்.

*பாதாளத்தின் காரிருளிருந்து வெட்டுக்கிளிகளைப் போல துள்ளி எழும்பும் தீமையான ஆலோசனைகளின் குணாதிசயங்கள் :*

1. மனிதனுடைய முகம் போல இருந்து:- மனிதனுடைய அறிவுக்கு எட்டக்கூடிய தீமையான ஆலோசனைகள்.

2. ஸ்திரீகளின் கூந்தல் போல இருந்தது:-

திரளான ஆலோசனைகளைக்கொண்ட தீமையான சிந்த னைக்கருத்துக்கள்

3. சிங்கத்தின் பற்கள் போல இருந்தது:-

மனிதன் மேல் ஆதிகாரம் செலுத்தும் வல்லமையுள்ள தீமையான சிந்தனைக் கருத்துக்கள்.

4. யுத்தத்திற்கும் ஆயத்தம் பண்ணப்பட்ட குதிரையைப் போல இருந்தது:-

மனிதனுடன் போராடி மேற்கொள்ளக்கூடிய வல்லமையுள்ள தீமையான சிந்தனைக் கருத்துக்கள்.

5. தலையில் பொண் மயமான கீரிடம் இருந்தது:-

மனிதன் மேல் ஆதிகாரம் செலுத்தும் விசேஷ ஞானத்தை யுடைய தீமையான சிந்தனைக் கருத்துக்கள்.

6. இரும்பு மார்கவசங்கள் தரித்திருந்தது :-

மனிதனால் சுயமாக எதிர்த்து நிற்க முடியாத தீமையான சிந்தனைக் கருத்துக்கள்.

7. வால்கள் தேள்களின் கொடுக்கு போல இருந்தது :-

தீமையான சிந்தனைக் கருத்தக்களுடைய கிரியைகளின் முடிவு தேள் கொட்டும் வேதனையிலும் அதிகமான வேதனையை இருதயத்தில் கொடுக்க கூடியவைகள்.

ஜென்ம பாவ மனிதன் பெற்றுக்கொண்ட தேவனுடைய இரட்சிப்பு தேவனுடைய வீட்டிலே நடை பெறும் நியாயத்தீர்ப்பினால் மரணமடைந்தபடியால், அறியாமையின் காரிருளின் அந்த கார வல்லமைகளுக்கு அடிமைப்பட்டு தேவனுடைய சாபத்தையும் கோபாக்கினையையும் அனுபவித்துக் கொண்டிருக்கிறவர்கள்; அவைகளிலிருந்து தப்பித்துக்கொள்ள கீழே குறிப்பிட்டுள்ள ஏதாவது ஒரு நன்மையான காரியத்தை பின்பற்றி பின்பு படிப்படியாக முன்னேறி தேவனுடைய முத்திரை அடையாளத்தை முழுமையாக தங்களுடைய நெற்றியில் தரித்துக்கொள்ளுவதின் மூலம் தேவனுடைய சாபத்தையும் கோபாக்கினையையும் தப்பித் துக்கொள்ள முடியும்.

1. தேவனுடைய ஏழு முத்திரை அடையாளத்தின் தேவ அறிவை தங்கள் அறிவிலும், செயலிலும் எதிர்த்து நிற்காமல் ஏற்றுக்கொண்டு செயல்படுவது.

2. தேவனுடைய ஏழு முத்திரை அடையாளத்தின் தேவ அறிவை ஏற்கனவே அறிந்திருக்கிறவர்கள் அவைகளுக்கேற்ற படியுள்ள நற்கிரியைகளை நிறைவேற்றுவது

3. தேவனுடைய ஏழு முத்திரை அடையாளத்தில் தேவ அறி வினால் தங்களால் இயன்ற அளவு நற்கிரியைகளை நிறைவேற்றுவது.

4. தேவனுடைய ஏழு முத்திரை அடையாளத்தின் தேவ அறிவினால் நற்கிரியைகளை நிறைவேற்றுவதற்காக நல்ல மனம் இருந்து தீமை செய்யாமல் விலகியிருப்பது.

**4 ஏழாவது வாதை கல்மழை:-**

Exo_9:13-35 , Exo_9:20-21, Rev_16:17-21,

இடி, மின்னல், காற்று, அக்கினி இவைகளோடு கலந்த கல்மழை

தேவனுடைய நியாயத்தீர்ப்பின் செய்திகள் மூலம் அறிவிக் கப்படும் தேவனுடைய ஏழு முத்திரை அடையாளத்தின் வேத வசனங்களுக்கு ஒருவன் கீழ்படியாமல் எதிர்த்து நிற்கும்போது, அவனுடைய சரீரத்தில் மேல் கல்மழை விழும்போது எப்படி வேதனைகளை உண்டாக்குகிறதோ? அது போல உள்ள வேதனை களை அவனுடைய ஆவி, ஆத்துமாவில் ஏற்படுத்திக்கொண்டே யிருக்கும் மேலும் அவனை தேவனுடைய வார்த்தைகளுக்கு கீழ் படியும்படி கட்டாயப்படுத்திக்கொண்டேயிருக்கும்.

**5. ஆறாவது வாதை எரிபந்தமான கொப்பளங்கள்:-** (Exo_9:8-14)Rev_16:2, Rev_16:8-11,

சூளையின் சாம்பலில் இருந்து எரிபந்தமான கொப்பளங்கள்/ ஏற்கனவே தேவனுடைய நியாயத்தீர்ப்பை பெற்றதினால் சூளையின் சாம்பலைப்போல மாறினவர்களின் சரித்திர சம்பவங்களை வேத புஸ்தகத்திலிருந்து எடுத்து அவர்களுக்கு தேவன் நிறைவேற்றின நியாயத்தீர்ப்பின் வழி முறைகளை வரிசையாக விவரித்துக்காட்டி,

தேவனுடைய ஏழு முத்திரை அடையாளத்தின் அறிவை ஏற்றுக் கொள்ள எதிர்த்து நிற்பவர்களாகிய உங்களுக்கும் இதுபோல சம்பவிக் கும் என்று அவைகளை மீண்டும் அவர்களுக்கு அறிவிப்பதின் மூலம்; அவைகளை கேட்பவர்களுக்கு அக்கினியின் அணலினால் எரிபந்தமான கொப்பளங்கள் உண்டாவது போல தங்கள் ஆவி, ஆத்துமாவில் எரிச்சலும் கோபமும் கொப்பளித்து வெளிப்பட்டுக் கொண்டேயிருக்கும்.

**6. ஐந்தாவது வாதை மகாகொடிதான கொள்ளை நோய்:-**

(Exo_9:1-7) Exo_9:13-15,

தேவனுடைய ஏழு முத்திரை அடையாளத்தின் அறிவை ஏற்றுக்கொள்ள எதிர்த்து நிற்பவர்களுக்கும் தேவனுடைய வார்த் தைகளுக்கு கீழ்படியயாமல் இருப்பவர்களுக்கும் சரீரம் கொள்ளை நோயினால் உடனே மரணம் அடைவது போல அவர்களுடைய ஆவி, ஆத்துமாவின் கிரியைகளின் மூலம் அவர்களுக்கு நன்மைகளையும் ஆசீர்வாதங்களையும் கொண்டு வருகிற எல்லா காரியங்களிலும் கொள்ளை நோயைப்போல, உடனே தோல்விகளை உண்டாகும்படி தேவன் கட்டளையிடுவார்; ஏனென்றால் எல்லா காரியத்திற்கும் தேவ னுடைய செயலும் சமயமும் நேரிட வேண்டும்.

**7. நான்காவது வாதை வண்டுகள் / குழவிகள் :-**

(Exo_8:20-24) Exo_23:27-28, Deu_7:17-23, Jos_24:12-18,

தேவனுடைய ஏழு முத்திரை அடையாளத்தின் அறிவை ஏற்றுக்கொள்ள எதிர்த்து நிற்பவர்களுக்கு, தேவனுடைய நியாயத் தீர்ப்பின் நன்மை தீமைகளின் செய்தியை அறிவிக்கும்போது ஒருவனுடைய சரீரத்தை வண்டுகள் / குழவிகள் தாக்க வரும்போது எப்படி? பயப்படுகிறானோ அது போல, அவன் தேவனுடைய நியாயத் தீர்ப்பின் தண்டனைக்கு பயந்து நடுங்குவான். தேவனுக்கு பயந்து தேவனுடைய ஏழு முத்திரை அடையாளத்தின் அறிவை தங்கள் அறிவில் ஏற்றுக்கொண்டவர்கள் ஏற்கனவே தேவனுடைய நியாயத் தீர்ப்பின் தண்டனையிலிருந்து விடுதலையாயிருக்கிறபடியால் சந்

தோசமாகயிருக்கிறார்கள்; இப்படி கர்த்தருக்கு பயப்படுகிறவர்களுக்கும் கர்த்தருக்கும் பயப்படாதவர்களுக்கும் உள்ள வித்தியாசங்களை மற்றவர்களுக்கு முன்பாக தேவன் வெளிப்படுத்திக் காட்டுகிறார்.

8. **மூன்றாவது வாதை பேன்கள் :-** பூமியின் புழுதியிலிருந்து பேன்கள் (Exo_8:16-19) Rev_18:19, Isa_11:4,

தேவனுடைய வார்த்தைகளின் மூலம் தேவனுடைய நியாயத் தீர்ப்பின் செய்தியை அறிவிக்கும்போது தேவனுடைய ஏழு முத்திரை அடையாளத்தின் அறிவை ஏற்றுக்கொள்ள எதிர்த்து நிற்பவர்களுக்கு, தேவனுடைய சாபங்களும் கோபாக்கினையையும் ஒன்றன் பின் ஒன்றாக தொடர்ந்து வந்து கொண்டேயிருக்கும் அதனால் தங்கள் தலையின் மேல் பேன்கள் கடிக்கும் போது தலையை சொரிந்து கொண்டிருப்பது போல தங்கள் ஆவி, ஆத்துமாவின் கிரியைகளில் அழுது துக்கித்து புலம்பி ஓலமிடுவார்கள்.

9. **இரண்டாவது வாதை தவளைகள் :-** (Exo_8:1-14) தண்ணீரிலிருந்து தவளைகள் தேசமெங்கும் பரவுகிறது.

தேவனுக்கு பயந்து தேவனுடைய வார்த்தைகளுக்கு கீழ்படிகிறபோது ஒருவனுடைய ஆவி, ஆத்துமாவின் அறிவு சிந்தனைகளுக்குள்ளே மட்டும் தன் கட்டுப்பாட்டில் அடங்கியிருக்க வேண்டிய அசுத்த ஆவியின் கிரியைகள், அவனுடைய ஆவி, ஆத்துமா தேவனுடைய வார்த்தைகளுக்கு கீழ்படியாமல் இருக்கும் போது; அவனுடைய அறிவு சிந்தனைகளின் கட்டுப்பாட்டின் எல்லையை விட்டு மீறி வெளியே வந்து அவனுடைய அசுத்த ஆவியின் கிரியைகள், தவளைகள் நினைத்த இடங்களிலெல்லாம் துள்ளித்திரிகிறது போல கீழே குறிப்பிட்டுள்ள பல இடங்களின் மற்றவர்களுக்கு முன்பாக அசுத்த ஆவிகளின் கிரியைகள் வெளிப்படுகிறது .

1. தேசமெங்கும் - எல்லா ஜனங்களுக்கும்
2. வீடு - குடியிருக்கும் இடம்
3. படுக்கை அறை - குடும்ப வாழ்க்கை

4. மஞ்சம் - பட்டம் பதவி

5. வேலைக்காரன் - மனிதனுடைய வேலைகள்

6. அடுப்பு - ஆவி, ஆத்துமாவின் சிந்தனைகள்

7. மாவு பிசைகிற தொட்டி - நன்மை தீமைகளை பகுத்தறிகிற இருதயம்.

**10. முதல் வாதை இரத்தம் :-** தண்ணீர் இரத்தமாக மாற்றப் படுகிறது (Exo_7:15-25)Rev_11:6, Rev_16:3-6,

ஒருவனுடைய ஆவி ஆத்துமாவில் தண்ணீரைப்போல மிக திரளாக ஓடுகிற தேவனுடைய வார்த்தைகளை தேவனுடைய பிரமாணங்களுக்கு உட்படுத்துவதன் மூலம் அவனுடைய ஆவி, ஆத்துமாவின் சிந்தனைகளுக்கேற்ற படியுள்ள கிரியைகளை நிறைவேற்ற முடியும், ஆனால் அவனுடைய ஆவி, ஆத்துமாவில் நதியைப்போல ஓடுகிற அறிவு சிந்தனைகளை அவன் தன் இச்சையாக எடுத்து நேரடியாக அவனுடைய தேவைகளுக்கு பயன்படுத்தும்போது; அவன் தன் இச்சையாக எடுத்துக்கொண்ட அவனுடைய அறிவு சிந்தனைகள் பல துண்டுகளாக சிதறி, சிதைந்து உருக்குலைந்து உருமாறிப்போகிறது, இதனால் அவனுடைய அறிவு சிந்தனைகள் கிரியைகளாக உருமாறாமல் உருக்குலைந்து போகிறது மேலும் அவனுடைய அறிவு சிந்தனைகள் நிலைகுலைந்து தடுமாறுகிறது.

## அத்தியாயம் எட்டு

*8-0 1.44.000 ஆண்பிள்ளைகளை இரண்டு சாட்சிகளின் ஊழிய அழைப்பின் மூலம் ஜனங்களை கர்த்தருடைய இரண்டாம் வருகைக்கு வழியை ஆயத்தம் பண்ணும் ஊழியத்தை நிறைவேற்றுதல்.*

தேவ முத்திரையை தங்கள் நெற்றியில் தரித்துக்கொண்ட ஆண்பிள்ளைகள், தேவ ஜனங்களை கர்த்தருடைய இரண்டாம்

வருகைக்கு வழியை ஆயத்தமாக்கும்படி ஞானார்த்தமாக சொல்லப் படும் எருசலேம் என்றும், சீயோன் என்றும் அழைக்கப்படும் தேவ ஜனங்களுக்கு மத்தியில் வனாந்தரத்திலே கூப்பிடுகிற சத்தமாக முழங்கி, தேவனுடைய வார்த்தையின் கோலால் நியாயத்தீர்ப்பை செலுத்தி; மோசேயின் மூலம் ஆசரிப்பு முறைகளாக வெளிப்பட்டு பின்பு இயேசுக்கிறிஸ்துவின் மூலம் பொருளுக்கு மாறின தேவ பிரமா ணங்களையும் திட்டங்களையும் எலியாவின் ஆவியின் பெலத்தோடு, கோணலானவைகளை நேராக்கி, கரடுமுரடானவைகள் சமாக்கப் பட்டு, பள்ளமெல்லாம் உயர்த்தப்பட்டு, சகல குன்றுகளும் தாழ்த்தப்பட்டு, மீண்டும் பூர்வ பாதையின் நிலைக்கு கொண்டு வந்து, கர்த்தருக்கு பரிசுத்தமான / உத்தமமான வழியை ஆயத்தம் பண்ணும் ஊழியத்தை நிறைவேற்றுவார்கள்.

Mal_4:4-6, Mal_3:13-18, Mal_4:1-6, Mic_3:8-11, Isa_57:14-15, Isa_62:10, Isa_62:1-12, Luk_1:13-17, Mat_3:1-10, Mar_1:1-8, Luk_3:2-9, Joh_1:15-28, Isa_40:1-11,

*கர்த்தருடைய இரண்டாம் வருகைக்கு வழியை ஆயத்தமாக்காமல் இருப்பவர்களுக்கு தேவனுடைய நியாயத்தீர்ப்பு.*

ஆண்பிள்ளைகள் தேவ ஜனங்களை கர்த்தருடைய இரண் டாம் வருகைக்கு வழியை ஆயத்தமாக்கும் ஊழிய அழைப்பை நிறை வேற்றுவதற்கு விரோதமாக, கிரியைகளிலோ, சிந்தனைகளிலோ செயல்படுகிறவர்களுக்கு; மோசேயின் மூலம் வனாந்தரத்திலே அறி விக்கப்பட்ட தேவ வார்த்தைகளுக்கு கீழ்படியாதவர்களுக்கு நேரிட்ட வாதைகளும் சாபங்களும் முதலாவது ஆவி, ஆத்துமாவின் கிரியை களில் வெளிப்பட்டு பின்பு சரீரத்தில் அதன் பின்விளைவுகள் வெளிப் படும்.

*இரண்டு சாட்சிகளின் ஊழிய அழைப்பை பெற்றுக் கொள்ளாத ஈனமான ஆசாரியர்கள் தற்போது ஜனங்களை கர்த்த ருடையை இரண்டாம் வருகைக்கு வழியை ஆயத்தம் பண்ணும் ஊழியத்தை நிறைவேற்றுவதற்காக நடைமுறைப்படுத்திக் கொண் டிருக்கும் சில கோணலான வழிகாட்டு முறைகள்.*

1.கர்த்தருடைய பூர்வ பாதையான நல்ல வழிகளை / பெரும் பாதையான பரிசுத்த வழிகளை காட்டாமல், மனிதனால் உண்டாக் கப்பட்ட வழிகளை காட்டுகிறார்கள்.

2. கர்த்தருடைய பூர்வ பாதையான நல்வழிகளை அறியாத ஆவிக்குரிய குருடர்கள், கர்த்தருடைய பூர்வபாதையான நல்லவழிகளை தேடிக்கொண்டிருக்கிற ஆவிக்குரிய குருடர்களுக்கு வழிகளை காட்டுகிறார்கள்.

3. கர்த்தருடைய பூர்வபாதையான பரிசுத்த வழிகளை அறியாத ஆவிக்குரிய குருடர்கள் பள்ளமான வழியை காட்டுகிறார்கள் / பள்ளமெல்லாம் உயர்த்தப்பட்டு சமமாக்கப்படாத வழியை காட்டுகிறார்கள்.

4. கர்த்தருடைய பூர்வ பாதையான பரிசுத்த வழிகளை அறியாத ஆவிக்குரிய குருடர்கள் சகல மலைகளிலும் வழியை காட்டுகிறார்கள் / சகல மலைகளும் தாழ்த்தப்பட்டு சமமாக்கப்படாத வழியை காட்டுகிறார்கள்.

5. கர்த்தருடைய பூர்வ பாதையான பரிசுத்த வழிகளை அறியாத ஆவிக்குரிய குருடர்கள் சகல குன்றுகளிலும் வழியை காட்டுகிறார்கள் / சகல குன்றுகளும் தாழ்த்தப்பட்டு சமமாக்கப்படாத வழியை காட்டுகிறார்கள்.

6. கர்த்தருடைய பூர்வ பாதையான பரிசுத்த வழிகளை அறியாத ஆவிக்குரிய குருடர்கள் கோணலான வழியை காட்டு கிறார்கள் / கோணலானவைகள் செவ்வையாக்கப்படாமல் உள்ள வழியை காட்டுகிறார்கள்.

7. கர்த்தருடைய பூர்வ பாதையான பரிசுத்த வழிகளை அறியாத ஆவிக்குரிய குருடர்கள் கரடுமுரடான வழியை காட்டு கிறார்கள் / கரடுமுரடானவைகள் சமமாக்கப்படாமல் உள்ள வழியை காட்டுகிறார்கள்.

Jer_6:16-19, Jer_18:15, Eze_18:24-32, Mal_2:1-9, Isa_59:8, Jer_5:1-5, Jer_7:1-12, Jer_35:15, Eze_36:1-7, Mat_15:13-14, , Mat_23:16, , Mat_23:24, Luk_6:39, Rom_2:19-20,

*ஆண் பிள்ளைகள் கர்த்தருடைய இரண்டாம் வருகைக்கு வழியை ஆயத்தம் பண்ணும் ஊழியத்தை நிறைவேற்றுவதற்கு விரோதமாக செயல் படுகிறவர்களுக்கு வரும் வாதைகள்*

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டு வாக்குத்தத்த தேசத்திற்கு கடந்து செல்லும் வழியை ஆயத்தம் பண்ணும் ஊழியத்தை நிறைவேற்றுவதற்காக மோசேயின் மூலம் அறிவிக்கப்பட்ட தேவ வார்த்தைகளுக்கு கீழ்ப்படியாமல் போன இஸ்ரவேலருக்கும் அவர்களுடன் கலந்து வந்த புற ஜாதிகளுக்கும் எழுத்தின்படி தேவனுடைய பத்து வாதை களினால் அழிக்கப்பட்டது போல, தேவனுடைய வார்த்தையின் மூலம் வெளிப்பட்ட தேவ முத்திரையின் அடையாளங்களுக்கு கீழ்ப் படிந்து கர்த்தருடைய இரண்டாம் வருகைக்கு வழியை ஆயத்தம் பண்ணும் ஊரியத்தை நிறைவேற்றுவதற்கு முன் வராதவர்களுக்கு; முதலாவது ஆவியின் படி அந்த பத்து வாதைகளினால் ஆவி, ஆத்துமாவின் கிரியைகளின் தண்டிக்கப்பட்டு இரண்டாவது அவை கள் சரீரத்திலும் பிரதிபலிக்கப்பட்டு தண்டிக்கப்படுவார்கள்.Co_10:1-12, Heb_3:7-19, Heb_4:1-11, Rev_11:3-8, Rev_9:1-11,

*ஆண் பிள்ளைகள் கர்த்தருடைய இரண்டாம் வருகைக்கு வழியை ஆயத்தம் பண்ணும் ஊழியத்தை நிறைவேற்றுதற்கு விரோதமாக செயல்படுகிறவர்களுக்கு வரும் வனாந்திரத்தின் பத்து வாதைகள்* Num_14:22-35

1. சிவந்த சமுத்திரத்தின் ஓரத்திலே கலகம் பண்ணினார்கள். Exo_14:10-13

2. மாராவின் தண்ணீர் கசப்பாயிருந்ததினால் முறுமுறுத்தார் கள். Exo_15:23-26

3. அப்பத்திற்காக முறுமுறுத்தார்கள் (Exo_16:1-3);

4. ஓய்நாளை கைக்கொள்ள மதில்லாதிருந்தார்கள். Exo_16:4-5,

5. தண்ணீருக்காக முறுமுறுத்தார்கள் Exo_17:1-3

6. இஸ்ரவேலருக்கு வழியை ஆயத்தம் பண்ணுவதற்கு ஒரு கன்றுக்குட்டியை உருவாக்கி அதற்கு ஆராதனை செய்தார்கள். Exo_32:1-6

7. அந்நிய அக்கினியை கர்த்தருடைய சந்நிதியில் கொண்டு வந்தார்கள். Lev_10:1-7

8. இறைச்சியைப் புசிப்பதற்காக மிகுந்த இச்சையுள்ளவர்களா னார்கள். Num_11:4-5

9. மோசேயின் ஊழிய அழைப்பிற்கு விரோதமாக எழும்பி னார்கள். Num_12:1-2

10. துர்ச்செய்தியினால் சபையார் முறுமுறுப்பதற்கு காரண மானவர்கள் கர்த்தருடைய சந்நிதியின் வாதையினால் செத்தார்கள். Num_14:1-4. Num_14:22-35. Num_14:37.

## முடிவுரை

மனச் சாட்சியின் மூலம் தேவனை அறிந்தவர்கள் அவருக்கு துதி, கனம், மகிமை ஆகியவைகளை செலுத்தி ஆவியில் பிழைப் பார்கள். Rom_1:17-21, Gal_3:10-12, Eze_20:11, Rom_10:6, Lev_18:5,

மனச்சாட்சி மூலம் தேவனோடு தொடர்பு கொள்ளும் வழி முறைகளிலிருந்து திசை மாறி, தேவனுக்கு துதி, கனம், மகிமை செலுத்தாதவர்களுக்கு நியாயப்பிரமாணத்தில் சொல்லப்படட் எல்லா சாபங்களும் வந்து அவர்களுக்கு பலிக்கும். Rom_1:22-32Eph_4:17-19,

தேவனுடைய கற்பனைகளை கைக்கொள்ளாதவர்கள் மற்றும் தேவனுடைய சித்த்தை விட்டு வழிவிலகுகிறவர்கள் வஞ்சிக் கிற ஆவிகளுக்கும் பிசாசின் உபதேசங்களுக்கும் அடிமைப்பட்டு தேவ ஆசீர்வாதங்களை இழக்கிறார்கள். 1Ti_4:1-9, 2Ti_2:7-19,

வழிகளிலே நின்று, பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து, நல்ல வழி எங்கே என்று பார்த்து, அதிலே நடவுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைபாறுதல் கிடைக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவர்களோ, நாங்கள் அதிலே நடக்கமாட்டோம் என்கிறார்கள்.

நான் உங்கள் மேல் காவலாளரையும் வைத்து, எக்காள சத்தத்துக்குச் செவி கொடுங்கள் என்றும் சொன்னேன்; அவர்களோ, நாங்கள் கேட்கமாட்டோம் என்கிறார்கள். ஆகையால் ஜாதிகளே கேளுங்கள்; சபையே, அவர்களுக்குள் நடக்கிறதை அறிந்து கொள். பூமியே, கேள்; இந்த ஜனங்கள் என் வார்த்தைகளைக் கேளா மலிருந்து, என் நியாயப்பிரமாணத்திற்குச் செவிகொடாமல் அதை வெறுத்து விடுகிறார்கள்; அவர்கள் மேல் நான் அவர்கள் நினைவு களின் பலனாகிய தீங்கை வரப்பண்ணுவேன். Jer_6:16-19,

இயேசு கிறிஸ்துவின் விசுவாச வார்த்தைகளின் மூலம் தேவனுடன் உடன்படிக்கை செய்து இரட்சிப்பை பெற்றவர்களின் மூன்று நிலைகள்.

1-0 தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்

2-0 தேடுகிறவர்கள்

3-0 மற்றவர்கள் Rom_11:7,

1-0. தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் :-

தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் தேவ நீதியை அடைந்திருக்கிறார்கள். 1Co_8:3, 2Co_16:9, 2Ti_2:10, 2Ti_2:19, Tit_1:3, Rom_8:28-33, Rom_9:6-30 ,Joh_6:39

2-0. தேடுகிறவர்கள் :-

தேவ நீதியை தேடுகிறவர்கள் கிழே குறிப்பிடுகிற பல காரணங்களினால் ஆவிக்குரியவைகளில் இடறி விழுந்து கொண்டிருக்கிறார்கள்.

1. தேவ நீதியைத் தேடாமல் தங்கள் சுய நீதியை நிலை நிறுத்த முயற்சி செய்தல். Mat_6:33 Rom_10:1-3,

2. நியாயப்பிரமாண நீதியின் கிரியைகளின் மூலம் நீதிப் பிரமாணத்தை தேடுவது. Rom_9:31-33,Gal_5:4-6,

3. முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடாமல், பரலோகத்தில் வாசல் கதவுகளை தொடர்ந்து தட்டிக்கொண்டிருப்பது. Luk_13:23-30,

4. தேவனுடைய சித்தத்தை செய்யாமல் தங்களது தேவைகள் சந்திக்கப்பட்ட தேவனிடம் கேட்பது. Mat_7:22-23, Isa_1:10-15,

5. முதலாவது தேவனுடைய நீதியைத்தேடாமல் தங்கள் சுய விருப்பங்களை தேடி அவைகளை அடையும் படி தேவனை நோக்கி

கேட்பது. 1pe_2:6-8, Rom_9:32-33, Isa_8:11-16, Isa_28:14-15, Mat_21:44, Luk_20:18, Jer_5:1-5,

6. மூலைக்கல்லில் இடறுவதற்கு அறியாமைதான் மூலக்காரணம் ஏனென்றால் அவர்கள் தேவ அறிவை வெறுத்தார்கள். Hos_4:6, 1Sa_5:13-14, Mal_2:1-9, Jer_23:22, Mat_22:29, Mar_12:24, 1Co_8:1-2, Ecc_1:18, Ecc_12:12,

7. ஆவிக்குரிய வாழ்க்கையில் நற்கிரியைகள் இல்லாத பொழுது அறியாமையின் ஆழத்திற்கு செல்வது. Gal_5:6, Jam_2:17-26, Mat_25:24-30, Luk_19:20-27, Mat_22:9-14,

8. இயேசு கிறிஸ்துவின் விசுவாச வார்த்தைகளின் உடன் படிக்கையின் மூலம் நற்கிரியைகள் செய்யும் போது அவைகள் எந்த ஒரு மனிதனையும் எந்த சூழ்நிலையிலும் தேவ நிதியை அடைய வழி நடத்தும்.

3-0 மற்றவர்கள் :- Rom_11:8-10, Psa_69:21-28, Act_1:16-20, 1Pe_2:1, 1Pe_3:1, Jud_1:1,

சூதும் வஞ்சகமுமான தந்திரமுள்ள போதகமாகிய பல விதமான காற்றுகளைப் பின்பற்றாமல், அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவைப் பற்றிக்கொண்டு, தேவன் ஒவ்வொரு அவயவங்களுக்கும் பகிர்ந்து கொடுத்த விசுவாச அளவுப் பிரமாணத்தில் நிலைத்திருந்து, முழு சரீர வளர்ச்சியை ஏற்படுத்தி தேவ சித்தத்தை நிறைவேற்றுவதினால் தேவ ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொள்ள முடியும் Eph_4:14-16,

இரு மனமாகிய சந்தேக காற்றை பின்பற்றாமல் ஒரு மனமாகயிருந்து முழு விசுவாசத்துடன் நற்கிரியைகள் செய்து தேவ ஞானத்தை சுதந்தரித்துக்கொள்ள முடியும் Jam_1:5-8, Jud_1:12,

இந்த நாள் வரைக்கும் காட்டுக் கழுதைகள் போல தங்கள் மதவெறியின் போதகத்தை பின்பற்றி தன் இச்சையாக திரிந்து கொண்டிருப்பவர்கள் தங்களுடைய ஆவி, ஆத்துமாவில், அறிவு,

புத்தி, ஞானம், இவைகளைக் கொடுத்து, தங்களை வழி நடத்துகிற உன்னதமான தேவனுடைய வார்த்தைகளுக்கு கீழ்படிந்து அன்புடன் சத்தியத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். Jer_2:24, Jer_14:6, Hos_8:9, Job_39:5-8,

இந்நாள் வரைக்கும் இவர்கள் தேவ நீதிக்கு கீழ்ப்படியாமல் தங்கள் மனதை கடினப்படுத்தியிருக்கிறார்கள், இவர்கள் நியாத் தீர்ப்புக்கு தப்புவதில்லை இவர்கள் தேவனுடைய வார்த்தைகளுக்கு கீழ்படிந்து எப்பொழுது தீமை செய்வதிலிருந்து மனந்திரும்பு கிறார்களோ அப்பொழுது அவர்கள் மீண்டும் தேவனுடைய இரட்சிப்பை பெற்றுக் கொள்ள முடியும். ஆமென். Jer_2:24, Jer_14:6, Hos_8:9, Job_39:5-8.



இந்து முறைப்படி பூசாரி வம்சத்தில் பிறந்து பெற்றோர் என் சிறுவயதிலே மரணமடைந்ததால், வறுமையின் காரணமாக கோவையில் உள்ள ஒரு அநாதை இல்லத்தில் கிறிஸ்தவ முறைப்படி வளர்க்கப்பட்டு, கடந்த முப்பது வருடங்களாக தேவ வார்த்தைகளைக் கண்டு, கேட்டு, உணர்ந்துகொண்டபடியால் ; பரலோக இராஜ்ஜியத்தின் உவமைகளின் இரகசியங்களின் நன்மை தீமைகளை பகுத்தறிவதின் மூலம் தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்தை புசித்து ஆவி, ஆத்துமாவில் மறுரூபடைந்தேன்.

## தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து புஸ்தகங்களின் தலைப்புகள்

**1. பாழாக்குகிற அருவருப்பு பரிசுத்த ஸ்தலத்தில் நின்று கொண்டிருக்கிறது**

**2. தேவனுடைய வீட்டிலே நியாயத்தீர்ப்பு துவங்குகிறது**

**3 தேவனுடைய இரட்சிப்பின் நற்செய்தி**

**4. கிறிஸ்துவின் ஜீவ அப்பங்களை புசிக்கும் மூன்றுவகையான ஜனங்கள்**

**5. ஆவி,ஆத்துமாவின் மறுபிறப்பும் சரீரத்தின் உயிர்தெழுதலும்**

**6. நித்திய ஜீவ வார்த்தைகளினால் தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து**

**7. தேவனுடைய வெளிப்பாடுகளின் மூல உபதேசங்கள்**

**8. தேவனுடைய வெளிப்பாடுகளின் நீதியின் உபதேசங்கள்**

**9. பூமியின் நான்கு திசைகளிலிருந்து நான்கு வகையான விசுவாசங்கள்**

**10. இந்த மனுஷகுமாரன் யார்?**

**11. ஆவிக்குரிய இஸ்ரவேலர்களின்/யூதர்களின் அடையாளங்கள்**

**12 . தேவனும் மனிதனும் கேட்ட எட்டு கேள்விகள்**

இந்த தேவனுடைய வார்த்தைகளின் தலைப்புக்களின் மூலம் தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து சமைக்கப்பட்டு இந்த புஸ்தகத்தில் புசிக்க ஏற்றபடி / அவரவர் உட்கொள்ளும் அளவுக்கேற்றபடி / தன்மைக்கேற்றபடி பரிமாறப்படுகிறது. இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் தேவனுடன் விசுவாச உடன்படிக்கை செய்த அநேகர் இந்த விருந்தை புசிக்க அபாத்திராக போனார்கள். ஆனால் தேவனால் முன் குறிக்கப்பட்டவர்கள் ஒரு சிலர் இயேசு கிறிஸ்து ராஜாவாக முடிசூட்டப்படும் பட்டாபிஷேக விழாவில் கலந்து கொண்டு இந்த தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்தை பல ருசியுள்ள தேவ வார்த்தைகளின் தலைப்புகளாக புசித்து, அதன் சுவைகளை உணர்ந்து கொண்டபடியால், ஆவி, ஆத்துமாவில் மறுரூபமடைந்து, தங்களுக்கு கொடுத்த தேவ சித்தத்தை நிறைவேற்றுவதின் மூலம் ஜெயங்கொள்கிறவர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்துகிறார்கள்.

அவர்கள் தங்களுக்கு வைக்கப்பட்டுள்ள ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொண்டு பரலோக இராஜ்ஜியத்தின் ஆட்சி அதிகாரங்களை பகிர்ந்து கொடுக்கும் மணவாளனாகிய கிறிஸ்துவுடன் தேவனுடைய இராஜ்ஜியத்தில் ஆட்சி அதிகாரத்தை பகிர்ந்து கொள்ளுகிறார்கள்.